சேறைக் கவிராசபிள்ளை

இயற்றிய

# வாட்போக்கி

என்னும்

# இரத்தினகிரியுலா

எஸ். ஸ்ரீநிவாசையர் B. A.,
எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி
முதலியவற்றுடன்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர்: சென்னை - 600 041.
1980

சேறைக் கவிராசபிள்ளை

இயற்றிய

# வாட்போக்கி

என்னும்

# இரத்தினகிரியுலா

எஸ். ஸ்ரீநிவாசையர் B.A.,
எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி
முதலியவற்றுடன்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர்: சென்னை - 600 041
1980

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்-61

முதற் பதிப்பு-1980—1000 பிரதிகள்

(c) மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல்நிலையம், திருவான்மியூர், சென்னை - 600 041.

விலை ரூ. 7-50

Printed at :—
NOVEL ART PRINTERS
MADRAS—600 014.

1985

# இப் புத்தகத்தில் அடங்கியவை


| | |
|---|---|
| பதிப்பாளர் குறிப்பு | |
| முகவுரை | i |
| நூலாசிரியர் வரலாறு | vi |
| முன்னுரை | viii-xlvii |
| உலா இலக்கியம் பற்றிய செய்திகள் | viii-xxvii |
| வாட்போக்கி | xxviii-xlvii |
| வாட்போக்கி உலாவின் பொருட் சுருக்கம் | xlvii-lvi |
| நூலின் சிற்றாராய்ச்சி | lvii |
| நூலில் வரும் புராணக் கதைகள் சில | lxi |
| Appendix I | lxv |
| Appendix II | lxvii |
| மேற்கோள் நூற் பெயர்களின் முதற் குறிப்பகராதி | lxviii |
| வாட்போக்கி உலா—மூலமும் உரையும் | 1-77 |
| பிற்சேர்க்கை 1 to 4 | 78-92 |

# பதிப்பாளர் குறிப்பு

டாக்டர் ஐயரவர்கள் சேமித்து வைத்துள்ள தமிழ்க் கருவூலத்தினின்றும் அரிய தமிழ் நூல்களை வெளியிடுவதையும், ஐயரவர்கள் செய்து வந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்வதையும் அவர் பேரால் விளங்கும் இந்த நூல்நிலையம் கடமையாகக் கொண்டுள்ளது.

இந்த நூல்நிலையத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் அவ்வப்போது ஆராய்ந்து இதுவரை 60 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றுள் ஐயரவர்கள் வெளியிட்டுள்ள 93 நூல்களும், நூல்நிலையத்தின் உரிமைபெற்று. மறுபதிப்பாக அவ்வப்போது வெளியிடப் பெற்று வருகின்றன. இவற்றில் பல நூல்கள் கைவசம் இல்லை. 53 நூல்களே இப்போது கிடைக்கின்றன. இவைகளை எல்லாம் மறுபதிப்புச் செய்து உலகில் எல்லாருக்கும் தடையின்றிக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது நூல்நிலையத்தினரின் ஆசையாகும். இவற்றுக்குரிய மூலதனம் இன்மையால் இப்பதிப்பு வேலை மெல்ல மெல்ல நடைபெற்று வருகிறது.

மூவருலா, திருக்குற்றாலநாதர் உலா, குலசை உலா, சங்கர ராசேந்திர சோழனுலா ஆகிய உலா நூல்களை நூல்நிலையம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

'வாட்போக்கி உலா' என்னும் இந்த நூல் இப்போது வெளியிடப் பெறுகின்றது. 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சேறைக் கவிராச பிள்ளை என்பவர் இதன் ஆசிரியராவார். 1890ல் இந்நூலின் மூலம் மட்டும் வெளியிடப் பெற்றது. இந்த நூலை விரிவான முன்னுரை குறிப்புரைகளுடன் இப்போது வெளியிடும் வாய்ப்பை நூல் நிலையம் பெற்றுள்ளது.

நூல்நிலைய நிர்வாகக் குழு அங்கத்தினரும், நீண்டகாலமாகத் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக அச்சங்கத்தின் முன்னேற்றங்களுககு உறுதுணையாக உள்ளவரும், சிறந்த தமிழறிஞரும் அபிமானியுமான ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசையரவர்கள் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்று இந்நூலுக்குச் சிறந்த முன்னுரை, குறிப்புரை, நூலாசிரியர் வரலாறு, வாட்போக்கி வரலாறு ஆகியவற்றை எழுதியுள்ளார்கள். அவர்கள் உழைப்பையும், ஆராய்ச்சியின் தன்மையையும் நூலைப் படிப்பவர்கள் உணரலாம். அவர்களது இந்தப் பணிக்கு நூல்நிலையம் பெரிதும் நன்றி செலுத்துகின்றது.

உரிய காலத்தில் நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த நாவல் ஆர்ட் அச்சகத்துக்கு நூல்நிலையம் நன்றி செலுத்துகிறது.

இந்நூல் வெளிவரப் பலவகையில்உதவிய அறிஞர் பெருமக்களுக்கு நன்றி செலுத்த நூல்நிலையம் கடமைப்பட்டுள்ளது.

மெல்லவே ஆயினும் தொடர்ந்து பல நூல்கள் நூல்நிலைய வாயிலாக வெளிவரல்வேண்டும் என்பது நூல்நிலையத்தின் நோக்கமாகும்.

திருவான்மியூர்
15—1—1980

மு. கோ. ராமன்
கௌரவப் பாதுகாவலர்
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

2 1 ... 1985
MADRAS

# முகவுரை

இதுவரையில் அச்சில் வெளிவராத தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுவது போன்றே, முன்பு அச்சிடப் பெற்றும் இன்று கிடைப்பதற்கு அரிதாகவுமுள்ள நூல்களைச் சீரிய முறையில் அச்சிட்டு வெளியிடுதலும் மிகமிக இன்றியமையாப் பணியாகும். சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் அச்சிடப் பெற்ற பல நூல்கள், இந்நூற்றாண்டினர்க்குக் காண எளிதில் கிட்டாத அரும் புதையல்களாக உள்ளன. இத்தகைய நூற் புதையல்களிலிருந்து அகழ்ந்தெடுத்த அருந்தனமாய் விளங்கும் நூல்களுள் ஒன்று இப்பொழுது வெளியிடப்பெறும் இரத்தினகிரி உலா.

இந்த உலாவின் அச்சுப் பிரதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் நூல் தொகுப்புகளுள் ஒன்றாய், காகிதம் முதலியன மக்கி, ஏடுகள் சிதைந்துள்ள நிலையில் காணப் பெற்றது. இப்பிரதியின் முதற்பக்கத்தில்

''வாட்போக்கியென்னும் இரத்தினகிரியுலா

பூவை, அஷ்டாவதானம்

கலியாண சுந்தர முதலியாரால் பார்வையிடப்பட்டு

திரிசிரபுரம் சராப் ம.ா.ா.ஸ்ரீ. ஒண்டிமுத்தையப்பிள்ளையவர்கள் குமாரரும் மணப்பாறை டிப்டிதாசில்தார் ஆபீஸ் கிளார்க்குமாகிய ம.ா.ா.ஸ்ரீ ஒ. முத்தையபிள்ளையவர்களால் இவரது ஆன்மார்த்த நண்பர் காஞ்சி நாகலிங்க முதலியாரது சென்னை இந்து தியலாஜிகல் யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. விகிர்தி ௵ புரட்டாசி ௴ 1890" என்று காணப் பெறுகின்றது. 90 ஆண்டுகளுக்கு முன் அச்சான இப்பிரதியில் 408 கண்ணிகளுடன் நூல் முழுவதும் பூர்த்தியாக இருந்தும் இந்நூலின் மூலம் அச்சான பிறகு இதன் இதர பதிப்புகளோ, உரையுடன் கூடிய வேறு பதிப்புகளோ வெளி வந்ததாகத் தெரியவில்லை.

இரத்தினகிரி எனப்பெறும் வாட்போக்கித் தலசம்பந்தமாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய கலம்பகத்தைக் குறிப்புரை முதலியவற்றுடன் மறு பதிப்பிட்ட இந்த நூலகம் இத்தலத்திற்குரிய உலாவையும் அச்சிடக் கருதியது. இது சேறைக்கவிராசபிள்ளை பாடிய உலா நூல்களுள் ஒன்றாய் சொல்

நயம், பொருள் நயம், வாய்ந்ததாய் உள்ளமைகண்டு, மூலமாயுள்ள இந்நூலை உரைக்குறிப்பு முதலியவற்றுடன் நூலகத்தார் வெளியிட விரும்பினர். அதன் விளைவே உரையுடன் கூடிய இப்பதிப்பு.

தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும், சிறப்பாகச் சைவநூல்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் பெரும் புலமை வாய்ந்து விளங்கும் காஞ்சிபுரம் மகாவித்துவான் திரு. அருணை வடிவேல் முதலியார் அவர்களை அணுகி இதற்கு உரைவகுத்துத் தர நூலகத்தார் கேட்டபோது, அவர்கள் மனமுவந்து அரியதோர் குறிப்புரை எழுதி வழங்கினார்கள். இந்தக் குறிப்புரையை மேலும் சற்று விரிவுபடுத்தி, தலசம்பந்தமான வரலாறுகளையும் உடன் சேர்த்து வெளியிடின் பயனுடையதாகும் என நூலகப் பதிப்புக் குழுவினர் கருதினர். இப்பணி என்னிடம் ஒப்படைக்கப் பெற்றது.

நான் இதனைப் பரிசோதித்தபோது ஒரு சில விளங்காத இடங்களை அறிய முயன்றேன். சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி விரிவுரையாளர் வித்துவான் திரு. மு. சண்முகம் பிள்ளையவர்களை அணுகி இந்நூலை விரிவானமுறையில் பதிப்பிக்கும் நோக்கம் பற்றிக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் நூல் முழுமையும் படித்துப் பார்த்து நான் கருதியபடி செய்வது பொருத்தமாகும் என்று கூறினார்கள். நாங்கள் இருவரும் நூலை முழுமையும் திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் ஏற்கனவே எழுதியுள்ள குறிப்புரையின் துணையுடன் கூர்ந்து வாசித்து ஆராய்ந்தோம். அதன் பயனாகக் குறிப்புரை மேலும் விரிவுபெற்றது. இடையிடையே, உரை தரப்படாதிருந்த சில முக்கிய பகுதிகளுக்கும் உரைக்குறிப்புகள் சேர்க்கப்பட்டன ஆயினும் இந்நூலில் விளங்காத சில இடங்கள் இன்னும் விளக்கம் பெறவில்லை. உலா இலக்கணம் பற்றிய விரிவான முன்னுரையொன்றும், இரத்தினகிரி தலவரலாறு, சிற்பச் சிறப்புகள், கல்வெட்டுகள் இவைகளடங்கிய ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டன.

ஏற்கனவே குறிப்புரை எழுதியுதவிய திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்களுக்கும், புதுக்குறிப்புகளையும் உரை விளக்கங்களையும் சேர்த்துச் செம்மையாக்குவதற்கு உதவிய திரு.மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும் என்னுடையவும் நூலகத்தாருடையவும் நன்றி உரித்தாகிறது.

இந்நூலை வெளிக் கொணரவேண்டும் என்று என்னைப் பணித்து, அவ்வப்பொழுது எனக்கு உற்சாகமளித்த நூலகக் காப்பாளர் திரு. க. சுப்பிரமணியன் அவர்களுக்கு எனது மனம்கலந்த நன்றி. இந்நூலைப் பதிப்பிக்குங்கால் என் உடனிருந்து உரை முழு

வதையும் மறு முறை விரிவாக ஆராய்ந்து அவ்வப்போது அரிய கருத்துக்களைச் சொல்லி என்னை இப்பணியில் ஆழ்த்திய நூல் நிலைய உதவிக் காப்பாளர் திரு.மு.கோ. ராமன் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

ஆர்வத்தால் பொழுதுபோக்காகத் தமிழ் பயின்றுவரும் என்னையும் இத்தகு பெரிய பதிப்புப் பணியில் ஈடுபடுத்திய இரத்தினகிரி நாதரின் திருவருளை எண்ணியெண்ணி மன மொழி மெய்களால் வணங்கிப் போற்றுகிறேன். உலா இலக்கிய வரிசையில் சிற்சில தனிச்சிறப்புகளைக் கொண்டு திகழும் இரத்தினகிரி உலாவையும் அறிஞர் உலகம் கற்று இன்புறுவதாக.

இந்நூலைப் படிக்கும் அன்பர்கள், குறிப்புரையில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பின் அவற்றையும், இந்நூலில் விளக்கம் பெறாத வரலாறுகள் தெரியவரின் அவற்றையும் அன்பு கூர்ந்து நூல் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினால் அடுத்த பதிப்பில் அவைகளை நன்றியறிவோடு சேர்த்துக் கொள்ள உதவும்.

ஆகஸ்டு, 1979 — எஸ். ஸ்ரீநிவாசன்
திருவான்மியூர் — (தில்லித் தமிழ்ச் சங்கம்)

7 FEB

# நூலாசிரியர் வரலாறு

**பெயர்**

இந்நூலாசிரியர் சேறைக்கவிராச பிள்ளை என்பவர். இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. வீரைக் கவிராச பண்டிதர், செங்கோட்டைக் கவிராச பண்டாரம் என்னும் பெயர்களை நோக்குங்கால் பண்டைக் காலத்தில் சிலருக்குக் கவிராசர் என்றே இயற்பெயர் இருந்ததாகத் தெரிகின்றது.

**ஊர்**

சேறைக்கவிராசபிள்ளை என்று இவர் பெயர் வழங்குதலால் இவருடைய ஊர் சேறை என்று தெரிகின்றது. சேறை என்பது சோழநாட்டில் உள்ளதும் தேவாரப் பாடல் பெற்றதுமாகிய திருச்சேறை என்பதோ அல்லது சேற்றூர் என்பதன் மரூஉவோ தெரியவில்லை. சோழ நாட்டில் பல ஊர்கள் சேறை என்னும் பெயருடையன. அவற்றுள் இவர் வாழ்ந்து வந்தது எவ்வூர் என்று துணிதற்கில்லை. இவர் ஒரு சமயம் பாண்டிய நாட்டினரை நோக்கி 'இந்த தேசப்புலவர் மனத்துக்கு இடியென வந்தேன்காண்' என்று கூறியிருத்தலின் பாண்டி நாட்டினர் அல்லர் என்று கருதப்படுகிறது.

**குடி**

இவர் தொண்டைநாட்டுக் கருணீகர் மரபில் கடிகையர் குடியில் பிறந்தவர். ஊராட்சிபுரியும் மகாசபைக்குக் கடிகை என்ற வழக்கு சாஸனங்களில் உண்டு. ஆயினும், இச்சொல் அரசர்க்கு மங்கலக் கவி பாடுவோர், நாழிகைக் கவி கூறுவோர் என்ற பொருள்களில் முன்னூல்களிலே பயில்கின்றது. 'கருணேசன் சேறைக் கவிராசராசன்' என்பதனாலும், தமிழ் நாவலர் சரிதை (238) இவரைக் 'கடிகையார் கோலாகலன்' என்று கூறப்படுவதாலும் இவர் கருணீகர் என்பதை உணரலாம். கருணீகர் என்பார் கணக்கர். கணக்கர்களுக்குப் பிள்ளைப்பட்டம் உண்டு.

**சமயம்**

இவர் சைவ சமயம் பூண்டொழுகியவர். முருகக் கடவுளை உபாசித்து மந்திரசித்தி பெற்றவர்.

**புலமை**

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களிலும், சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும், சிவ புராணங்களிலும் மிக்க பயிற்சி உள்ளவர். சொல்லினிமை பொருளினிமை வாய்ந்து அதிவிசித்திரகரமான செய்யுட்கள் செய்தலில் வல்லவர். சிலவற்றில் சிலேடை, மடக்கு,

திரிபு முதலியன அமைந்திருக்கும். இவருடைய செய்யுட்கள் செம்பாகமானவை. இவர் இத்தகைய புலமை உள்ளவர் என்பது இவருடைய நூல்களுள் ஏதேனும் ஒரு பாகத்தைப் படித்து அறிபவர்களுக்கு நன்கு புலப்படும். திரு. பிள்ளையவர்களுக்குத் தமிழ் மொழியினிடத்துள்ள பற்றினைத் திருக்காளத்தி நாதர் உலாவில் அவர் அம்மொழியினைப் பற்றிக் கூறுங்கால் 'ஓங்கு தமிழோர்' (199) என்றும், 'செந் தமிழ் சேர்ஆலவாய்' (280) என்றும், 'சுருதித் தமிழ் பாடி' (305) என்றும் புகழ்ந்து பாடுவதுகண்டு உணரலாம்.

இவர் தமிழ்ப்புலவர்கள் பால் மிக்க வணக்கம் உடையவர். ஆயினும் வாதுக்கு வந்தோரை வென்று அடக்கும் ஆற்றலுடையவர். இவரை இவரையொத்த புலவர்கள் புகழ்ந்து பாராட்டிப் பாடியுள்ளனர். அந்தகக்கவி வீரராகவ முதலியார் தாம் பாடிய *சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில்* 'கவிராசன் இப்பிரான்மிசை செய்த திருவுலாக் கவிவெள்ளைக் கற்றுருகலாம்' என்றும், திருவண்ணாமலைப் பரமேசுவரப் புலவர் 'கண்ணோர் மதிக்கும் கவிராச சிங்கம்' என்றும், பெயர் தெரியாத புலவர் ஒருவர் 'வீறுபுகழ் தேறு கவிராசராசன்' என்றும் புகழ்ந்துள்ளமை இவர் புலமைக்குச் சான்று பகரும்.

செய்யுட்களை விரைந்து செய்யும் ஆற்றல் உடையவராய் இருந்தமையின் 'ஆசுகவிராசர்' என்றும், அங்ஙனம் பாடும் புலவர் பலரினும் மேம்பட்டு விளங்கினமையின் 'ஆசுகவிராசராசர்' என்றும், 'ஆசு கவிராச சிங்கம்' என்றும் புகழப் பெற்றவர். சேயூர் முருகன் உலாவின் இறுதியில் நூலை ஒரே நாளில் பாடியதாக, 'வெற்றிக் கருணேசன் சேறைக் கவிராசராசன், ஒருநாளிற் சொன்ன உலா' என்று கூறியிருப்பதிலிருந்தும் இவர் ஆசுகவி என்பதை உணரலாம். வண்ணம் பாடுதலில் மிக்க ஆற்றல் உடையவராய் இருந்தமையின் 'வண்ணக் களஞ்சியம்' என்றும் இவர் அழைக்கப்பட்டார். இவர் வண்ணம் பாடுதலில் மிக்க ஆற்றல் உடையவர் என்பதற்கு 'சிலைக்காமன் உடலெரிய' என்னும் திருவண்ணாமலையார் வண்ணத்தில், இரண்டாம் கலையில், சிவஸ்தலப் பெயர்களை அடைமொழியின்றி அமைத்திருத்தலே போதிய சான்றாக உள்ளது. இத் திருத்தலப்பெயர்களில் 'திருஅரதைப்பதி' என்று இரத்தினகிரி என்ற வாட்போக்கியைக் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஆதரித்தவர்கள்

திருக்காளத்தியில் இருந்தவரும், செங்குந்தர் மரபினரும், சிவ பக்திச்செல்வம் வாய்ந்தவருமாகிய வேங்கடராச முதலியார் என்னும் பிரபுவின் அருமைப் புலவராக இருந்து அவரால் அன்

புடன் ஆதரிக்கப் பெற்று, அந்தத் தலத்தில் பெரும்பாலும் தங்கிக் காலங்கழித்தவர். அவர்பால் மிக்க நன்றியறிவுடையவர். 'தக்கிணகைலையில் வாழ் செங்குந்தக் குல வேங்கடராயன் திருவாசற்புலவன்' எனத் தம்மை இவர் புலப்படுத்தியிருத்தலால் இதனை உணரலாம். திருக்காளத்தி நாதர் உலாவைச் செய்வித்தவர் மேற் கூறிய பிரபுவாகவே இருக்க வேண்டும் என்றும் இதனால் தெரிகிறது. இவர் அந்தப் பிரபுவினாலும் பிற கொடையாளிகளாலும் பல்லக்கு வரிசை முதலியனவும் மிக்க பரிசில்களும் அளிக்கப் பெற்றவர்.

பாண்டி நாட்டிலிருந்த சீவிலி மாறருடைய பரம்பரையைச் சார்ந்தவரும் இராம பாண்டியர் என்று பெயர் பெற்றவருமாகிய சிற்றரசர் ஒருவரிடம் சென்று, விரைவாகப் பாடும் தம்முடைய ஆற்றலைப் புலப்படுத்தி அவரை வியப்புறச் செய்து பல பரிசில்களைப் பெற்று மீண்டவர்.

திருவண்ணாமலைநாதர் மீது வண்ணம் பாடிக் கொண்டு அரங்கேற்றுதற்காக அத்தலத்திற்கு இவர் பல சிறப்புடன் சென்றார் என்றும், அக்காலத்தில் அவ்வூரிலிருந்த உண்ணாமுலை எல்லப்ப நயினார் என்னும் தமிழ்ப் புலவர் இவர் வரவைக்கண்டு ஒதுங்கி மறைந்தார் என்றும், அது தெரிந்த பரமேசுவரப் புலவர் என்பவர் அவரை (எல்லப்ப நயினார்) அவமதித்துக் கூறினர் என்றும் தெரிகின்றன.

காலம்

இவர் காலம் 16-ஆம் நூற்றாண்டு என்பர். அந்தகக் கவி வீரராகவ முதலியார் தாமியற்றிய சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில் (அம்புலி-10) 'தவிராத' என்னும் செய்யுளில் இவர் செய்த சேயூர் முருகன் உலாவைப் பாராட்டிக் கூறியிருத்தலால் இவருடைய காலம் அவருடைய காலத்திற்கு முந்தியதென்று தெரிகின்றது. தமிழ் நாவலர் சரிதையில் அம்முதலியாருடைய செய்யுட்களுக்கு முன்னே இவருடைய செய்யுட்கள் வைக்கப் பெற்றிருத்தலும் இதனை வலியுறுத்தும்.

இவர் தென்பாண்டி நாடாண்ட சீவலமாறன் என்ற பாண்டியனை 'இந்தத் தேசப் புலவர் மனத்துக்கு இடியெனவந்தேன் காண் இராமா சீவலமாறு* பாண்டிய ராச வரோதயனே' (தமிழ்நா-239) என்று பாடியிருத்தலின் அப்பாண்டியன் காலத்தவர் இவர் என்பது

* 'சீவிலிமாறு' என்றும் பாடம். சீவலம், சீவிலி, என்பன 'சீவல்லபன்' என்பதன் திரிபு.

தெரியலாம். அவ்வரசன் பட்டம் பெற்றது கி.பி. 1564-ஆம் ஆண்டாகும்.

*நூல் நயம்*

தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் கவிஞர் பெருமான் என்று புகழ்படைத்து விளங்கிய வீரராகவ முதலியார் மேற் கூறிய செய்யுளில் திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தபுராணமாகிய இவற்றின் வரிசைகளில், இவர் இயற்றிய சேயூர் முருகன் உலாவின் பெயரை வைத்திருத்தலன்றி, 'கவிராசன் இப்பிரான்மிசை செய்த திருவுலாக் கலிவெள்ளை கற்றுருகலாம்' என்று அருமையாகப் பாராட்டிக் கூறியிருத்தல் இவருடைய வாக்கின் உயர்வையும் அதன் நடையின் இனிமையையும் அதில் அமைந்துள்ள பக்திச் சுவையையும் விளங்கச் செய்கின்றது.

மேற்கூறிய சேயூர் முருகன் உலாவில், 'சேறைக் கவிராசன் சொன்னவுலாப் படித்துச் சோதிபெறத் தாலாட்டி' (கண்ணி 152) என்று கூறியிருத்தலையும், திருக்காளத்தி நாதர் இட்ட காமிய கட்டளைக் கலித்துறை மாலையில் 'செவிராசியம்' என்னும் 77-ம் செய்யுளில் 'புவிராச பாண்டியன் சித்தத்துக்கேற்பப் புகன்ற சித்ர கவிராசராச கயிலாபுரேசநங் காளத்தியே' என்று துதித்திருத்தலையும், பிற செய்யுட்களில் இங்ஙனம் கூறியிருத்தலையும் நோக்குகையில் தம்முடைய வாக்கில் தம்முடைய பெயரையும் தம்முடைய செய்யுள் நயத்தையும் எந்தவகையாகவாவது எடுத்துக் காட்டும் ஒருவகை வழக்கம் இவருக்கு இருந்தது என்று தெரிகிறது.

*சமகாலப் புலவர்கள்*

திருவண்ணாமலைப் பரமேசுவரப் புலவர், உண்ணாமுலை எல்லப்ப நயினார் முதலியோர்கள் இவர் காலத்திருந்த புலவர்கள்.

*இவர் செய்த நூல்கள்*

திருக்காளத்தி நாதர் உலா, *திருக்காளத்தி நாதர் இட்டகாமிய கட்டளைக்கலித்துறை மாலை, சேயூர் முருகன் உலா, திருவண்ணாமலையார் வண்ணம், திருவாட்போக்கி நாதர் உலா ஆகிய நூல்களும் சில தனிப் பாடல்களும் இவரால் செய்யப் பெற்றன.

சேய்த் தொண்டர் புராணத்தில் இவரைப்பற்றிய வரலாற்றைத் தேனூர் வரகவி சொக்கலிங்கனார் அவர்கள் 22 பாடல்களில் கூறியுள்ளார்.

---

* இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

# முன்னுரை

தமிழ்மொழியில் தொல்காப்பியம் முதலான இலக்கணங்களும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய இலக்கியங்களும் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையானவை. தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர் இலக்கிய வகைகள் மேலும் மேலும் வளர்ச்சியுற்றிருக்கின்றன. தொகை நூல்களையடுத்து, பதினெண் கீழ்க் கணக்கு, ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள், சிற்றிலக்கியங்கள் எனப்பலவகையான இலக்கியங்களைப் புலவர் பெருமக்கள் தமிழ் அன்னையின் திருமேனிக்கு அணிகலன்களாகச் செய்து அணிவித்துள்ளார்கள். பிற்காலத்துத் தோன்றிய இலக்கியங்களுக்கும் தொல்காப்பியர் முன்னரே 'விருந்து' என்று இடம் வகுத்து இலக்கிய நெறிக்குப் பெருவழி செய்துள்ளார். தமிழ் மொழிக்கு உரியவாகக் கூறப்படும் தொண்ணூற்றுறு வகைச் சிற்றிலக்கியங்கள் அல்லது பிரபந்தங்களில் பெரும் பாலானவை அவ்விருந்தில் அடங்கிவிடுகின்றன.

*உலாவின் இலக்கணம்*

உலாவென்பது தமிழ் மொழிக்குரிய தொண்ணூற்றுறு* வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்படுதலின் இது இப்பெயர் பெற்றது; உலா—பவனி. இந்தப் பிரபந்தம் உலாப்புறம் எனவும் உலாமாலை எனவும் வழங்கும். இது கலிவெண்பாவால் இயற்றப்படும். இளமைப்பருவமுடைய தலைவன் வீதியில்† பவனி வருகையில் அவனுடைய குலம் குடிப்பிறப்பு, பரம்பரை முதலியவற்றால் இத்தகைச் சிறப்புள்ளான் என்பது தோன்றக் கூறி, அவ்வீதியில் உள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈறான ‡ஏழுபருவப் பொது மகளிரும் அவனைக் கண்டு காமுற்றதாகப் பாடப்படுவது.

தமிழ் மொழியின் முதல் நூலாகிய தொல்காப்பியத்தில் புறத்திணை இயல் சூத்திரம் 30—ல் 'ஊரொடு தோற்றமும் உரித்து என

* பிற்சேர்க்கை—I

† வீதி என்றது உருத்திர கணிகையர் உறையும் வீதி என உரைப்பர். இதனை மடவார் வளாகம் என்பர்.

‡ பேதை முதல் எழு பருவ மகளிர்கள் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்பவர்கள்.

மொழிய' என்று வருகிறது. ஓர் ஆடவன் ஊரினிடத்தே உலா வருதல் உண்டு என்னும் இவ்விலக்கணம் அக்காலத்திலேயே மன்னர் போன்ற பெருங் குடித்தலைவர் சிற்சில சமயங்களில் ஊரினகத்தே பெண்டிர் காண எழில்மிகு தோற்றத்துடன் தோன்றுதல் வழக்கில் இருந்தது என்பதைப் புலப்படுத்தும். இப்போதும் அரசியல் தலைவர்களும், துறவிகளும், பிற நாட்டுப் பெருமக்களும் ஒரு நகரத்துக்கு விஜயம் செய்யுங்கால் அவர்களைப் பவனியாக அழைத்து வருவதுண்டு. இதனைப் பட்டணப் பிரவேசம் என்பர். இதுவும் ஒருவகை உலாவே.

இச் சூத்திரத்துக்கு உரை கண்ட நச்சினார்க்கினியர் 'பக்கு நின்ற காமம் ஊரில் பொது மகளிரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண் திணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர்; தோற்றமும் என்றது அக்காமம் தேவரிடத்தும், மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை; அது பின்னுள்ளோர் எழு பருவமாகப் பகுத்துக் கலிவெண் பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்' என்றும், அடுத்த சூத்திர உரையில் 'ஊரொடு தோற்றமும் பரத்தையர்க் கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாது' எனவும் எழுதியுள்ளார்.

பிரபந்த உருவத்தில் பின்னெழுந்த உலாக்களில் இக்கருத்து வலியுறுத்தப் படவில்லை. எந்த உலாவிலும் அழகுடைய பெருமகன் ஒருவன் உலாவருதலும், அதைக் கண்டு ஏழுவகைப் பருவ மாதரும் காமத்தால் மயங்கும் செய்தியொன்றே பேசப்படுகிறது. கட்டழகுக் காளையரைக் காணுந்தோறும், பருவ மகளிர் ஒருதலைக் காமம் எய்துதல் அறமன்று என்னும் மனத்தவராய், இது மாதர்க்குத் தகாது என்னும் கருத்தினராய் அச்செயல்களைக் குலப்பெண் அல்லாத கணிகையருக்கு உரிமையாக்கினர்; தலைவன்பவனி சென்றது உருத்திர கணிகையர் வீதியாம் என்று முடிவு கட்டி சிலர் அமைதி காண முயன்றனர். இது இழிவுடைப்பரத்தையர் செயல் என்று கழிப்பதைக் காட்டிலும், அம்மாதராரை உயர்குலமும் நற்பண்பும் உற்றவராகவே கொண்டு, அவர்களை மையலுறும்படித் தூண்டியவனாய் வீதியில் உலா வரும் தலைவன் தருமத்திருவுடம்பு டைய தனிப்பரம் பொருள் என்பது சிந்தையிற் செறியுமாயின் பின் இவ்வுலாப்பிரபந்தங்களில் இழிவும் இடரும் இல்லாமை விளங்கும்.

மேலும், இறைவன் ஒருவனே புருஷன், மற்றையவரெல்லா ருமே பெண்டிர் என்னும் நாயக—நாயகி பாவத்தில் நின்று இதை நோக்கில் உலாவரும் பெருமகனைப் பார்க்கவரும் ஆடவரும் பெண் டிரும் நிறையழிதல் இழுக்கு என்பது தோன்றாது.

அச்சில்வராத பிரபந்த தீபத்தில் உலாவின் இலக்கணம் 15-வது நூற்பாவில் 'உலாவென்ப துரைக்கில் ஒப்பில் தலைவன், எழுவகைப் பருவத் தேழையர் பணிய குலம், குடி பிறப்பு, குணம், எழில் தோன்ற, பற்பல பாவையர் பரவும் பாதையில், உலாவந்த தாய்க் கலி வெள்ளையா லுரைத்தலே' என்று கூறப்பெறுகிறது.

சங்க நூல்களையடுத்து, 6-வது நூற்றாண்டில் தோன்றிய முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களில் சில பாடல்களில் மன்னன் உலாவருதலையும், அதனைக்கண்டு மகளிர் மையலுறுவதையும் பற்றிக் கூறப்படுகின்றது.

''தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—ஆய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு''

''வழுவில்எம் வீதியுள் மாறன் வருங்கால்
தொழுதேனைத் தோள்நலமுங் கொண்டான்''

''துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயான் நின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலும்எம்
சாலேகம் சார நட''

''எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅல் நெடுநல் வேல் மாறன்—உலாஅங்கால்
பைய நடக்கவும் தேற்றுயால்...''

''குடத்து விளக்கே பால் கொம்பனார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்
ஆபுகு மாலை யணிமலையில் தீயேபோல்
நாடறி கௌவை தரும்''

''திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடின் பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பின் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு''

பவனிவரும் அரசன் அல்லது இளவரசனைக் கண்டு மையலுறுபவர்களெல்லாம் மங்கைப் பருவப் பெண்டிர் என்றே நினைக்க இடமிருக்கிறது; பேதையும் பெதும்பையும் பேரிளம்பெண்ணும் இங்கு

குறிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இப்படி மன்னன் உலாவருதலும் அதைக் காணும் பெண்கள் மையலுறுதலும் ஆகிய செய்திகள் பிற்காலத்தில் தோன்றிய உலாப்பிரபந்தங்களின் கரு என்று கொள்ள இடமிருக்கிறது

*பக்தி இலக்கியங்களில் உலாச் செய்திகள்*

தொல்காப்பியத்தில் வரும் இலக்கணம் ஓர் ஆடவன் உலா வருவதைச் சிறப்பித்துப்பாடும் வழக்கு இருந்ததை உணர்த்தியது என்று பார்த்தோம். பின்னர் எழுந்த தேவாரம், திருவிசைப்பா போன்ற நூல்களிலும் தலைவன் உலாவருவதும் அப்போது மகளிர் அவனைக் கண்டு காமுறுவதுமான காட்சிகளைக் காணலாம்.

சிவபெருமானின் திருவாதிரைத் திருநாளில் திருவாரூர் வீதிகள் தோறும் பக்தர்கணம் புடைசூழ எழுந்தருளி, காட்சி தந்தமையைத் திருநாவுக்கரசர் திருவாரூர்ப் பதிகம் ஒன்றில்

''முடிகள் வணங்கி மூவாதார் கண்முன் செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடும்தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்''. (4:21:9)

என்று அழகுறச் சித்திரித்துள்ளார். விழா நாளில் இறைவன் இடப வாகனத்தில் எழுந்தருளி வருதலையும் இவர் தமது திருத்தாண்டகப் பாடல் ஒன்றில்

'மால்விடைமேல் நெடு வீதிப்போதக் கொண்டார்' (6:96:7)
என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் தேரில் இறைவன் திருவீதி உலா வருதலும் உண்டு.

'பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்' (1:27:7)
'தேராரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராரும் சடையானுக் கென்நிலைமை நிகழ்த்தீரே' (1:60:5)

எனவரும் திருஞானசம்பந்தர் வாக்குகளில் தேர்த் திருவிழாக் காட்சிகள் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

திருக்குறுக்கை வீரட்டானத்தில் ஏழு நாட்கள் (பிரதமை முதல் அட்டமி வரை) தொடர்ந்து திருவிழா அந்நாளில் நடைபெற்றதும் அப்போது இறைவன் திருத்தாண்டவக் கோலத்தோடு வீதியில் திருவுலா வந்ததும் நாவுக்கரசரின் தேவாரப் பாடல் ஒன்றினாலும் தெரியவருகின்றது.

"ஆத்தமாம் அயனும்மாலும் அன்றிமற் றொழிந்ததேவர்
சோத்தமெம் பெருமான்என்று தொழுதுதோத் திரங்கள்
சொல்லத்
தீர்த்தமாம் அட்டமிமுன் சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கைவீ ரட்டனாரே"
(4:50:2)

இவ்வாறு இறைவன் வீதியில் உலாவரும் போது மைந்தரும் மகளிரும் வணங்கி வழிபடுதல் இயல்பே. மங்கையர் பக்திக்காதல் மேவிட மயக்கம் கொள்கின்றனர் என்னும் குறிப்பையும் திருநாவுக்கரசர்

'செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்' (4:21:7)

என்று பாடுகின்றார்.

இவ்வாறு மங்கையர் கூடி இறைவன் உலாக் கண்டு காதல் கொள்ளுதலைச் சித்திரிக்கும் முறையில் 'உலா' என்னும்தனி இலக்கியம் பின்பு பிறந்தது.

கருவூர்த் தேவர் தாம் பாடிய திருவிசைப்பாவில் 'இறைவன் உலாக்கண்டு தொழுது அழுது இரங்கும் பெண்ணுக்கு அருள் செய்யலாகாதா?' என்று கேட்கிறார்.

"நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய
சுந்தரனே" (9: திரைலோக்கிய சுந்தரம்: 2)

இவ்வாறாகத் திருமுறைப் பாடல்களில் இறைவன் திருவீதி உலா வருதல், பக்தர்கணம் சூழ்ந்து பரவுதல், பக்திக் காதலால் மயக்கமுற்றுப் புலம்புதல் என்று இப்படிப்பட்டச் செய்திகள் வருதல் உலா இலக்கிய வளர்ச்சியில் மற்றும் ஒரு படி என்று கருதலாம்.

திருமுறை இலக்கியங்களில், 11-ம் திருமுறையில் பிரபந்த ரூபமாக அமைந்த உலா இலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் காணுகின்ற உலாக்கள் தான் முதன்முதல் தோன்றிய உலாப் பிரபந்தங்கள். சேரமான் பெருமாள் நாயனார் பாடிய திருக்கயிலாய ஞானவுலா தான் ஆதியுலாவாகும்.

தொல்காப்பியர் உணர்த்தியுள்ள குறிப்பு, முத்தொள்ளாயிரம், தேவாரம், திருவிசைப்பா போன்ற நூல்களில் முளைவிட்டு, பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய பெருங்காவியங்களில் தலைமகன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடப்படும்

இடங்களில் கிளைத்துப் பிற்காலத்தே உலா எனத் தனித்ததொரு சிற்றிலக்கியமாகத் தழைத்தது எனக் கொள்ளலாம்.

### காவியங்களில் உலாச் செய்திகள்

பெருங்காவியங்களில் காவியத் தலைவனும் பிறரும் வீதியில் உலர்வரும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. உலாவியல் இல்லாத காவியங்களே இல்லை என்று சொல்லும் வண்ணம் உலாவியல் நிகழ்ச்சி காவியங்களின் ஓர் அங்கமாகவே அமைந்துவிட்டது என லாம்.

சிலம்பை இசைத்த இளங்கோவடிகளும், பெருங்கதை பாடிய கொங்குவேளிரும், சிந்தாமணி இயற்றிய திருத்தக்கதேவரும், இராமாவதாரம் பாடிய கம்பநாடரும், திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமானும் தத்தம் நூல்களில் தலைமக்கள் உலாப் போந்ததாக வருணித்துச் சென்றமையை அறியலாம்.

### சிலப்பதிகாரம்

சேரன் செங்குட்டுவன் வடநாட்டரசரை வென்று வாகை சூடித் தன் தலைநகர் மீண்டான். மாலைசூடிய வெண்கொற்றக் குடையின் கீழ், பட்டத்து யானையின் மேல் அழகு பெற அமர்ந்து சேரன் வந்து கொண்டிருந்தான். யானைக் கூட்டங்கள் புடைசூழ வஞ்சி நகர் மக்கள் எல்லாம் திரள்திரளாகச் சென்று அவனை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு வரவேற்றுப் போற்றினர்கள். நகரம் விழாக் கோலம் பூண்டு விளங்கிற்று. அப்போது

'மாலைவெண் குடைக்கீழ் வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து
குஞ்சர வொழுகையிற் கோநகர் எதிர்கொள
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட்டுவன்'
(வஞ்சி: நீர்ப்படை 253-256)

நகர மாந்தர், யானைமீது ஏறி ஊரின்கண் தோன்றிய தங்கள் மன்னன் செங்குட்டுவனை எதிர் கொண்டனர்; அவனும், மக்கள் மகிழ்வுறப் பவனிவந்து தன் அரண்மனையை அடைந்தான் என்று பாடுகிருர் இளங்கோவடிகள்.

### மணிமேகலை

காவிரிப்பூம்பட்டினத்து அரசன் நெடுமுடிக்கிள்ளியின் மகனுகிய உதய குமாரன் தேரேறி அப்பட்டினத்து வீதிகளில் சென்ற நிகழ்ச்சிகள் உள்ளன. ஒருமுறை, மதம் கொண்ட யானை ஒன்று

தெருத்தெருவாக மக்களை வருத்தித் துரத்தியபோது, இளவரசன் அதை அடக்குகிறன். பின்னர், அவன் தேரேறிப் படை வீரர் கள் சூழ வீதி வழியே திரும்புகின்றன். இங்கே, உதய குமாரனின் பவனி வருகை விரிவாகக் குறிக்கப்படாவிடினும், வீதியில் குழுமி யுள்ள மக்கள் போற்ற அவன் உலா வந்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

“கடுங்கண் யானையின் கடாத்திறம் அடக்கி
அணித்தேர்த் தானையொடு அரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்பன் அல்லன் என்பது
ஆரங் கண்ணியில் சாற்றினன் வருவோன்”
(மணி: பளிக்கறை: 46-50)

எனச் சாத்தனர், தேர்மிசை ஏறி உதயகுமாரன் வீதிவழியே வந்த போது அழகாலும் ஆண்மையாலும் அவன் முருகக் கடவுள் என் றெண்ணி மக்கள் மயங்க, கடப்ப மாலையின்மையானும், ஆத்தி மாலையுண்மையாலும் அவனைச் சோழன் மகனே என்று அவர்கள் துணிந்தனர் என்று, அவன் தெருவின் கண் பவனி வந்ததைக் குறிப்பிடுகிறர்.

*பெருங்கதை*

பெருங்கதைத் தலைவன் உதயணன், சயந்தி நகரில் வாசவதத் தையை மணக்கிறன். மணநாள் அன்று தேவாலயம் சென்று வணங்கித் திருநகரையும் வலஞ்செய்து வரவேண்டும் என்னும் முறைப்படி, அவன் அருகதேவன் கோட்டம் சென்று வணங்கு கிறன். பிறகு, நகரில் உள்ள பல்வேறு திறத்தினரும் பாராட்டி மகிழும்படி மணமக்கள் நகரை வலமாய் வந்தனர். இந்நிகழ்ச் சியை இக்காவியம் ‘நகர்வலம்கண்டது’ என்னும் பகுதியில் அமைத்துச் சித்திரிக்கின்றது. இவர்கள் நகர்வலம் வந்தபோது மக்கள் வாழ்த்துப் பாடுகின்றனர். மகளிரும் மைந்தரும் வீதிகளின் இருமருங்கும் உலாக்காண வந்து திரண்டனர். பேதை, பெதும்பை முதலிய வெவ்வேறு பருவநிலையுடையவர்களும் அம் மகளிரிடையே காணப்பட்டனர். இவையெல்லாம் அந்நாளில் வாழ்ந்த அரசர் முதலியோரின் வாழ்க்கையையும் பழக்க வழக்கங் களையும் புலப்படுத்துகின்றன.

*சீவக சிந்தாமணி*

இடையர் சேரியிலுள்ள ஆநிரையை வேடர்கள் கவர்ந்து சென்ற போது அதனை மீட்டு வென்றிப் பெருமிதத்துடன் சீவகன்

வீதியுலா வருவதைச் சிந்தாமணிக் காவியம் குறிப்பிடுகிறது. (கோவிந்தையார்.49-64) சீவகன் வீதியில் உலாவரும் காட்சியைக் காண மகளிர் விரைந்து வந்து இருமருங்கும் நெருங்கி நிற்கின் றனர்.

'இன்னமு தனைய செவ்வாய் இளங்கிளி மழலை யஞ்சொற்
பொன்னவர் சுணங்கு பூத்த பொங்கிள முலையி னார்தம்
மின்னிவர் நுசுப்பு நோவ விடலையைக் காண ஓடி
அன்னமும் மயிலும் போல அணிநகர் வீதி கொண்டார்.'

இம்மகளிரின் கண்கள் எல்லாம் 'கதிரவன் ஒளிநோக்கித் திரும்பும் நெருஞ்சிப் பூப் போல' சீவகவழுதி செல்லும் கோலத்தையே நோக்கி நின்றன என்று தேரின் மீது அமர்ந்து சீவகன் உலா வந்த காட்சியை நம் மனம் மகிழ்வுறும் வண்ணம் காட்டுகின்றனர் திருத் தக்க தேவர். ஏனைய சூளாமணி, நாக குமார காவியம் போன்ற சிறு காப்பியங்களிலும் உலா பற்றிய கூறுகள் இல்லாமல் இல்லை.

*கம்பராமாயணம்*

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் தனது இராமாயணத்தில் சீதையைத் திருமணங் கொள்ள இராமன் மிதிலைக்குச் செல்லு வதைக் கூறும் பொழுது 'உலாவியற் படலம்' என்ற பெயரில் இராம பிரான் உலா வரும் செய்திகளைக் கூறுகின்றார்.

தம்பியர் குதிரைமீதேறி உடன்வர, இராமன் தேரில் ஏறி, சங்கும் முரசும் முழங்க மிதிலை நகர வீதிகளில் உலாவருகின்றான். மானினம் போன்றும், மயிலினம் போன்றும், மீனினம் போன்றும் மாதர்கள் நெருங்கி நின்று இராமன் வடிவழகைக் கண்டு மகிழ் கின்றனர். தெரிவைப் பருவத்துப் பெண்ணொருத்தி, பயிர்ப்பென் னும் பெண்மைக் குணத்தையும், ஆடையையும், வளையலையும், வெட்கத்தையும் துறந்து நின்று இராமனது அழகைப் பருகுகிறாள். ஒரு பெண் நெற்றியில் வியர்வை அரும்ப, உடலிலே பசலை விம்ம மனம் சோர்வடைய நின்று இராமன் திருவழகைக் கண்டுகளிக் கிறாள். இராமனைக் கண்ணால் கண்டு களிப்பெய்திய மற்றொருத்தி 'என் கண்வழியே இராமன் புகுந்துவிட்டான்; அவன் தப்பிச் செல்லாதவாறு என் விழிகளை மூடிக் கொண் டேன்; படுக்கைக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகிறாள். தான் மட்டுமே இராமனுடைய திரு வழகைப் பருக வேண்டும் என்று எண்ணம் கொண்ட பெண் ணொருத்தி இராமனை நோக்குகின்ற மற்றப் பெண்டிரைக் கண்களில் எரியெழ விழித்து நோக்குகின்றாள். இங்ஙனம் பெண்டிர் பலர் கூடி இராமனழகைச் சுவைத்த போதிலும், இராமனின் பூரணப் பொலி

வையும் முழுதும் சுவைத்தாரில்லை. தோள் அழகைக் கண்டவர்கள் அத்தோளின் அழகுக்கு ஓர் எல்லையின்மையால், பிற உறுப்புக் களைக் காணவியலாது தோளையே பார்த்துக் கொண்டிருந்தனர். தாமரை போன்ற இராமனது திருவடியைக் கண்டவர்கள் அவற்றையே நோக்கினர். இராமனது தடக்கைகளைக் கண்டவர் களும் அவற்றையே நோக்கினர். ஆனால் இராமனின் வடிவழகை முழுதும் கண்ட வாள்நெடுங்கண்ணார் எவருமே அங்கு இல்லை. இங்ஙனம் இராமபிரான் வீதிஉலாவருகின்ற சிறப்பைக் கம்பர் செந் தமிழால் பாடி மகிழ்கின்றார்.

மண்ணுலகத்து மாதரன்றி விண்ணுலகத்து மாதரும் இராமனி டத்துக் காதல் கொண்டமையைக் கூற வந்த கம்பர் வானுலகத்து மங்கையரும் இராமனைக் கண்டபோது மன்மதபாணத்துக்கு இலக் காயினர் என்று இவ்வளவு சொல்ல இயலுமேயல்லது மற்றைப்படி அவர்கள் பட்டபாட்டைத் தம்மாற் சொல்ல இயலாது என்கிறார். (உலாக்காண வந்த மங்கையர் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள ஏழு பருவத்தினர் என்பதை உலாவியல் தொடக்கத் திலேயே குறிப்பிடுகிறார்). மேலும், கம்பன் வாரங்கல் நாட்டு அரசன் பிரதாபருத்திரன்பேரில் பாடிய தனிப்பாடலிலும்

"அவனி முழுதுண்டும் அயிரா வதத்துன்
பவனிதொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்"

என்று வருதலிலிருந்து அரசன் யானைமேல் பவனி வருவதும் பருவ மங்கையர் கண்டு காமுறுவதும் புலனாகும்.

இவ்வாறு, பிற நூல்களில் உட்பகுதியாய், சுருக்கமாகக் கூறப் பட்ட உலாச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு விரிவாக அமைந்த ஒரு சிற்றிலக்கியமே உலாப்பிரபந்தமாகும். உலாப் பிரபந்தத்தில் தலைவன் தன்னை அலங்கரித்துக் கொண்டு உலாப் புறப்படுவதும், அவனுடன் பலர் வருவதும், அந்தக் காட்சியைக் கண்டு மகளிர் குழாங்கள் ஈடுபட்டு மயல்கொள்வதும், பேதை முதலிய ஏழு பருவமாதர்கள் தனித்தனியே தலைவனைக் கண்டு தம் தம் இயல்புக்கு ஏற்ப மால் கொள்வதும் விரிவாகச் சொல்லப் பெறும்.

*பிரபந்தங்களின் வகை*

பிரபந்தங்கள் இத்தனை வகைப்படும் என்ற வரையறை பிரபந்தங்கள் தோன்றிய காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில்தான் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறுவகை என்ற கணக்குச் சில இடங்களில் காணப்படுகிறது. 'சிவந்தெழுந்த

பல்லவராயன் உலா'வில் 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள்' என்ற தொடர் வருகிறது. 'பிரபந்த மரபியல்' என்னும் நூலில் 'பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறுத் தொண்ணூற்றாறெனும் தொகையதாம்' என்று பேசப்படுகிறது. 'பிரபந்தத் திரட்டு' என்னும் இலக்கண நூலில் 'தொண்ணூற்றாறான தொகைசேர் பிரபந்தம்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

பிரபந்த இலக்கணங்களைக் கூறும் நூல்களைப் 'பாட்டியல்கள்' என்று சொல்வார்கள், இப்போது கிடைக்கும் பாட்டியல் நூல்களில் பழமையானது 'பன்னிருபாட்டியல்'. பின்னர் எழுந்த நூல்கள் வச்சணந்தி மாலை என்ற வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த மரபியல் என்ற அச்சான நூல்களும், பிரபந்தத் திரட்டு, பிரபந்ததீபம் என்னும் அச்சில் வராத நூல்களும் ஆகும். இவ்வாறுள்ள பாட்டியல் நூல்களில் 'தொண்ணூற்றாறு பிரபந்தங்கள்' என்ற வரையறை இல்லை. முற்கூறிய எந்தப் பாட்டியலிலும் 96க்கும் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய பிரபந்தங்களே குறிக்கப்படுகின்றன. அச்சில் வராத பிரபந்தத்திரட்டிலும் பிரபந்த தீபத்திலும் 96க்கும் மேலான பிரபந்தங்கள் கூறப்பட்டுள்ளன.

பிரபந்தங்களைச் 'சிறு பிரபந்தங்கள்' எனவும் அவை தொண்ணூற்றாறு வகை எனவும் பின்னர் வந்த நூலாசிரியர்கள் கூறுவர். 'நவநீதப் பாட்டியல்' என்னும் நூல் 13, 14-ம் நூற்றாண்டில் நவநீதன் என்பவரால் இயற்றப்பெற்றது. இந்நூல் 44 சிறு பிரபந்தங்களைப் பற்றித் தான் கூறுகிறது. அதற்கு முன் பிரபந்தங்களின் எண்ணிக்கை 40, 50 என்றே குறிப்பிடப்பட்டு வந்தன. 96 என்ற வகைப் பிரிவு, கி.பி. 16-வது நூற்றாண்டில்தான் உருவாயிற்று என்பர். பழங்காலத்தில் தோன்றிய பிரபந்தவகையில் ஒன்று ஆற்றுப்படை. அதற்குரிய இலக்கணம் தொல்காப்பியத்தில் இருக்கிறது. தொகை நூலாகிய பத்துப்பாட்டில் ஐந்து பாட்டுகள் ஆற்றுப்படைகளாக உள்ளன. 96 வகைப் பிரபந்தங்களில் ஆற்றுப்படையையும் ஒன்றாகச் சேர்த்திருக்கின்றனர். மேலும் பாட்டியல்களில் கூறப்பெறும் இலக்கணம் எல்லாவற்றிற்கும் உரிய இலக்கியங்கள் கிடைக்கவில்லை. பிரபந்தத்திரட்டு என்ற நூலில் வேறு பாட்டியல்களில் இல்லாத துனிவிசித்திரம், லட்சுமி விலாசம், கூடன் மாலை, குலோதய மாலை முதலிய பிரபந்தங்களுக்குரிய இலக்கணங்கள் இருக்கின்றன. அத்தகைய பிரபந்தங்கள் தமிழில் வழங்கினவா என்பதே ஐயமாயுள்ளது.

தெளிவான, வரையறுக்கப்பட்ட, இலக்கணத்துடன் உலா என்னும் பிரபந்தம் ஒன்பதாம் நூற்றாண்டில்தான் முதன் முதலாக

எழுந்தது என்று கொள்ளலாம். தமிழ் மொழியில் தோன்றிய பல உலாக்களுள் சேரமான் பெருமாள் நாயனுர் இயற்றிய திருக்கயிலாய ஞானவுலாவே முதலில் தோன்றிய உலாவாகும். அந்த உலாவை 'ஆதியுலா' என்று வழங்குவர்.'ஆதியந்த வுலா ஆசுபாடிய சேரர்' (திருப்புகழ்). அதனை 'ஞானவுலா' எனவும் அழைப்பர். பதினேராம் திருமுறையில் அது சேர்க்கப்பட்டுள்ளது. பிற்கால உலா நூல்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. அந்த உலா சிறந்த ஓசை நயமும், உயர்ந்த கருத்துக்களையும் உடையது. இறைவனுடைய திருவுருவத்தின் பேரழகையும் மாட்சியையும் கூறுவது. திருக்கயிலாயத்துறைகின்ற சிவபிரான் திருமுன்னே சேரமான் பெருமாள் இவ்வுலாவை அரங்கேற்றினதாகக் கூறப்படுகிறது.சேரமான் பெருமாள் நாயனுர் சுந்தரர் காலத்தவர்(840-865); ஆகவேதமிழில் முதன் முதலில் பிரபந்தவடிவில் உலாத்தோன்றிய காலம் 9-ம் நூற்றுண்டின் முற்பகுதி எனக் கொள்ளலாம்.

உலாக் கொள்வதற்குரியோர்

உலாக் கொள்வதற்குரியோர் கடவுள், அரசன், அறிவுடையோர் முதலியவர்கள் எனப் 'பன்னிருபாட்டியல்' (235,236) வரையறை செய்துள்ளது. இவ்வரையறையை யொட்டிக் கடவுளரைப் பற்றியும், வேந்தரைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் வள்ளல்களைப் பற்றியும், பிற்காலத்தில் உலாக்கள் தோன்றியுள்ளன. அதையடுத்து, தலபுராணங்கள் மிகுதியாக எழுதப்பட்டகாலத்தில், ஒவ்வோரிடத்திலும் கோயில் கொண்டுள்ள கடவுளரின் பெருமையினைப் பலவாருக விரித்துக் கூற வாய்ப்பு ஏற்பட்டது. பெருந் திருவிழாக்கள் நடத்துங்காலையில், இறைவனைத் தேர் மீதேற்றி உலாக் கொள்ளுங்காலத்தில் அவ்விறைவன் மீது உலாப்பாடி மகிழ்ந்த செய்தி அத்தல புராணங்களிலும் தனிப்பாடல்களிலும் காணப்படுகின்றது. "வீடு பெற்ற வாதவூர்வித்தகனுர் தேரிழுக்கும், மாடு பெற்ற பேறு பெற மாட்டுவரோ" என வேம்பத்தூர் பிச்சுவையர் பாடலால் அறியலாம்.

ஊர்தி

தலைவன் முடிசூடியோ, மணம்புரிந்தோ, வெற்றி பெற்றோ தன் தலைநகரில் பவனி வருவான். தேர்மீதோ, களிறு, பிடி, குதிரை, விடைபோன்ற பிற ஊர்தி மீதோ உலாவருவதாகப்பாடுவதுண்டு. ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலாவிலும், சங்கர ராசேந்திர சோழன் உலாவிலும் களிற்றின் மேல் உலா வருவதாக இருக்கிறது. 'ஆதியுலா' இறைவன் விடையின் மேல் உலா வந்ததாகக் கூறுகிறது. இறைவன் கோயில் கொண்ட தலங்களைப் பற்றிய உலாக்களில் அவ்விறைவன் தேர் மேல் எழுந்தருளியதாகப் புலவர்கள் பாடியுள்

ளார்கள். பிற்காலத்தில் பல தலமூர்த்திகளைச் சிறப்பித்துப் பல புலவர்கள் உலாப் பாடியிருக்கின்றனர். தில்லை உலா, ஏகாம்பர நாதர் உலா, திருவானைக்கா உலா, திருவாரூர் உலா முதலியவை தல சம்பந்தமான உலாக்களாகும். அவற்றிலெல்லாம் இறைவன் தேர்மீது உலாவந்ததாகவே பாடியிருப்பதைக் காணலாம். 'மதுரைச் சொக்கநாதர் உலா' வில் உலாப்போந்த ஏழு நாட்களிலும் இறைவன் தேர், வெள்ளையானை, வேதக்குதிரை, திருமாலாகிய இடபம், தருமவிடை, கற்பகத்தரு, இந்திரவிமானம் ஆகிய ஏழுவகை ஊர்திகளில் பவனி வந்ததாகக் கூறப்படுகிறது. தேரில் பவனி வரும் பொழுது அந்தத் தேரை மனிதர் இழுக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. ஆயினும் உலாப்பிரபந்தங்களில் பெரும்பாலும் குதிரை பூட்டிய ரதங்களிலேயே தலைவன் பவனி வருவதாகக் கூறப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மாணிக்க வாசகர் பவனியில் ரிஷபங்கள் பூட்டிய ரதத்தில் அவரை உலாவரச் செய்யும் செய்தியைக் காண்கிரோம். ஆனந்தத் கூத்தன் உலா விலும் "தன்கொடியில் ஏறும் தவம்பொருந்தும் ஏறென்ன, வன்பு பொலி ஒரிரண்டு வாலெருது—முன்புபுரி,புண்ணியத்தின் பேறெனவே பொன்மலையாம் தேரீர்க்கும்"(கண்ணி 297-98)என்பதிலிருந்து எருதுகள் பூட்டிய ரதத்தில் இறைவன் உலாவருதலை உணரலாம்.

உலா வரும் நாட்களில் இறைவன் பல திருக்கோலங்களைக் கொண்டருளுவதும் உண்டு. இலஞ்சி முருகன் உலாவில் ஆறு நாட்களிலும உலாத்தலைவன் முதல் நாளில் பிரமதேவராகவும், இரண்டாம் நாள் திருமாலாகவும், மூன்றும் நாள் உருத்திர மூர்த்தியாகவும், நான்காம் நாள் ஈசுவரனுகவும், ஐந்தாம் நாள் சதாசிவ மூர்த்தியாயும் ஆறும் நாள் வெள்ளிமயில் வாகன ஆருடராகவும் திருக்கோலங்கொண்டு உலாவந்தார் எனக் குறிக்கப்பட்டுள்ளது. (கண்ணி 84-89)

*பவனி நாட்கள்*

உலாத் தலைவன் பவனி வரும்போது அந்த வீதியில் வாழும் பேதை முதல் பேரிளம்பெண் ஈருன ஏழு பருவ மகளிரும் தலைமகனைக் கண்டு காமங் கொண்டு மயங்கி, அழகு குலைய, வளைகழல, மனநிறையழிய, தலைமகனின் கடைக்கண் நோக்குத் தன்மேல் விழுமோ விழாதோ என இரங்கி நிற்பதாகக் கலிவெண்பாவினுல் பாடப்படுவது உலாவின் இலக்கணமென்று 'பன்னிரு பாட்டியல்' கூறும் (பன். 132: வெண்:27) இப்படிப் பவனிவருங்கால் ஒரே நாளில் ஏழு பருவ மகளிரும் உலாத்தலைவனைத் தரிசித்ததாகச் சில

உலாக்கள் கூறும் ஏழு பருவ மகளிரும் தனித் தனியாக ஒவ்வொரு நாளில்-மொத்தம் ஏழுநாட்களில் - இறைவனைத் தரிசித்ததாக வும், அதற்கேற்ப உலாத் தலைவன் தினமும் ஒரு வாகனமாக ஏழு வகை வாகனங்களில் வந்ததாக 'மதுரைச் சொக்கநாதருலா' உரைக்கின்றது. இறைவன் உலா வரும் தேர் அல்லது ஊர்தி பல வீதிகளில் பவனி வருவதாகக் கூறுவது மரபாகவுள்ளது.

## யாப்பு

தனித்தனியே உள்ள, பல்வேறு பட்ட பொருள்களைக்கொண்ட செய்யுட்களாலாகிய தொகுதிபோலன்றி, தொடர்ந்த பொருளுடை யதாய் ஒரே நெடும் பாட்டால் பல கண்ணிகளைக் கொண்டு தொ டுத்து ஆக்கப்படுதலின் இதை உலாமாலை என்று சொல்வது பொ ருத்தமாகும். ஆகவே, சிறு காப்பிய வரிசையில் வைத்து எண்ணு தற்கு ஏற்ற தகுதிகள் இதன்பால் உள்ளன.

உலாப்பிரபந்தங்கள் கலிவெண்பாவில், ஓர் எதுகை அமைந்த ஈரடிகளைக் கொண்டு இயற்றப்படும். ஒவ்வோர் இரண்டடியையும் 'கண்ணி' என்றல் மரபு.

> 'முன்நா யகரின்அவன் மூதுலாக் கண்ணிதொறும்
> பொன்ஆ யிரம்சொரிந்த பூபதியும்'(சங்கரசோழனுலா- 26

என்னும் கண்ணியாலும், '—கூடல்

> நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்(கு)
> ஓராயிரம் பொன்ஈந்த உலாவும்,' (தமிழ்விடுதூது 58-59)

என்னும் கண்ணியாலும் அறியப்படும்.

ஒவ்வொரு நூலின் இறுதியிலும் ஒவ்வொரு வெண்பா அமைந் துள்ளது. குலோத்துங்க சோழன் உலாவில் மட்டும் கட்டளைக்கலித் துறை ஒன்றும் சேர்ந்துள்ளது. சங்கரராசேந்திர சோழன் உலா விலும், திருக்காளத்தி நாதர் உலாவிலும் இறுதி வெண்பா காண வில்லை. சேறைக் கவிராச பண்டிதர் இயற்றிய சேயூர் முருகனுலா வின் இறுதியில் இரண்டு வெண்பாக்கள் உள்ளன.

சில உலாக்களின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் இடம்பெற வில்லை. திருக்காளத்திநாதர் உலா, சங்கர ராசேந்திர சோழன் உலா,இரத்தினகிரி உலா, சேயூர் முருகனுலா,தஞ்சைப் பெருவுடை யார் உலா போன்ற பல உலாக்களில் நேரிசை வெண்பாவில் ஒரு காப்புச் செய்யுள் உள்ளது. திருக்குற்றாலநாதர் உலாவில் விநாயகர், சரஸ்வதி, சமயகுரவர் நால்வர் பேரில் மூன்று வெண் பாக்கள் காப்பாக வந்துள்ளன. சில உலாக்களில் (திருவேங்கட

உலா) காப்பு வெண்பாவும், அவையடக்க வெண்பாவும் காணப்படு கின்றன.

*எல்லை*

உலாப்பிரபந்தங்களின் சிற்றெல்லையும் பேரெல்லையும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. திருக்கயிலாய ஞான உலா 196 கண்ணிகளையும், விக்ரம சோழன் உலா 342 கண்ணிகளையும், இரண்டாம் குலோத்துங்க சோழன் உலா 387 கண்ணிகளையும், இரண்டாம் ராசராச சோழன் உலா 391 கண்ணிகளையும், சங்கர ராசேந்திர சோழன் உலா 389 கண்ணிகளையும் உடையன. திருக்காளத்திநாதர் உலா 578 கண்ணிகளைக் கொண்டது. திருவேங்கட உலா 607 கண்ணிகளைக் கொண்ட நெடிய உலாவாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய திருவிடை மருதூர் உலா 721 கண்ணிகளைக் கொண்டன. அண்மையில் (1958) கனகராசய்யரால் இயற்றப்பட்ட 'ஆனந்தக் கூத்தன் உலா' 1008 கண்ணிகளை ஏற்று நிற்கிறது. ஆதியுலாவிலும் குறைந்த 105 கண்ணிகள் கொண்ட உலா கொடுமளப்பதி ஞான உலாவாகும். இரத்தினகிரி உலாவோ 408 கண்ணிகளையுடையது. எல்லாவற்றையும் நோக்க இது பெரிதும் சிறிதுமன்றி அளவடியென்றாற் போல ஒரு அளவில் அமைந்துள்ளது.

*இரு நிலைகள்*

முதல் நிலை, பின்னெழுநிலை என இரு பிரிவாகி இவ்வுலா நூல்கள் விளங்கும் (பன்: 131). முதல் நிலையில் பொதுவாகப் பாட்டுடைத் தலைவனுடைய குடிப்பிறப்பு, பெருமை, பள்ளியெழுதல், நீராடி அலங்காரம் செய்து கொள்ளல், அப்பால் தத்தமக்குரிய ஊர்திகளில் பவனிவரல், உடன் வருவோர், தசாங்கங்கள், பல வகைக் குழாங்கள் அவரைத் தரிசிக்கக் காத்திருந்து பின் தரிசனம் செய்து காமுறுதல் ஆகிய இச்செய்திகள் கூறப்படும் (பன். 133).

பின்னெழு நிலையில் முறையே, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மகளிரின் இயல்புகளும், உணர்ச்சிகளும், செயல்களும், விளையாட்டுக்களும், அவர்கள் தலைவரைத் தரிசித்தலும், அதனால் உண்டான விளைவுகளும், உலாத்தலைவர்கள் அருள் செய்தலும் கூறப்படும்.

தலைவன் உருவத்தைக் கிழியில் வரைதல், பந்து, அம்மானை, கழங்குஆடல், விறலி தலைவன் பெருமையைப் பாடுதல், மதுவை அருந்துதல், தலைவன் நிறத்திற்கேற்பத் தாம் உடுத்தல், ஆபரணம் பூணல், பூக்கொய்தல், நீராடல், சிற்றில்

இழைத்தல், பாவை, ஊசல், கிளி, யாழ், பொழில் விளையாட்டு ஆகிய இவற்றையும் பிற்பகுதியில் காணலாம்.

இந்தப் பொது அமைப்பைக் கருத்தில் கொண்டு உலாப் பிரபந்தம் பாடுவோர், அவர்களுக்கே உரிய நடையின் அமைப்பிலும், காலப்போக்கில் உண்டான கருத்துக்களிலும் வேறுபாட்டைப் புகுத்தித் தங்கள் நூலை இயற்றினர். இவ்வேறுபாட்டு நலமே எத்தனை உலாக்களைப் படித்தாலும் சலிப்பு உண்டாகாமல் இருப்பதற்குக் காரணமாகின்றது.

மேற்சொன்ன இரண்டு நிலைகளுக்குள்ளே, தலைமகனுடைய நாடு, நகரம், ஊர், மலை, ஆறு, பெயர், ஊர்தி, படை, முரசு, தார் ஆகிய அரசியல் அங்கங்களில் சிறப்பாகிய இப்பத்தும் (தசாங்கம்) கூறப்படுதல் வேண்டும் என்பது மரபு. திருவானைக்கா உலாவில் மட்டும் பாட்டுடைத் தலைவனுடைய தசாங்கம் கூறப்படவில்லை. இவையெல்லாம் புலவர்கள் தம்தம் அறிவாற்றலுக்கேற்பச் செய்துள்ள சிறுசிறு மாற்றங்களே யாகும்.

மேற்கூறிய இலக்கணத்தோடு பொருந்தி வரும் உலாக்களில் தலைமகனுடைய இயற்பெயர் உணர்த்தப்படும். ஆனல் காமுறும் பெண்களுடைய இயற்பெயர்கள் உணர்த்தப்படா. மேலும், நங்கையர்கள் தலைமகன்பால் காதலுற்றுத் தம்குறைகளைக் கூறி முறையிடுவதாகவே புலவர்கள் பாடியுள்ளார்கள். இந்தக்காதல் ஒருதலைக் காமம் என்றே கொள்ளும்படி அமைந்திருக்கும்; தலைவன் அவர்களிடம் காதலுறுவதாகக் கூறும் மரபு இல்லை. ஆனல் ஒட்டக்கூத்தர் பாடிய உலாக்களில் தலைவனும், தன்னைக் காணவந்த மகளிரைப் போலவே வேட்கைமீதூர்ந்தான் என்றும், அவர்களுக்கு மாலைகளையும், பலவகைப் பரிசுகளையும் அளித்தான் என்றும் கூறப்படுகிறது. இம்மூவருலாவைப் பின்பற்றியே சங்கர ராசேந்திர சோழன் உலா ஆசிரியரும், தலைவனும் மகளிரும் அன்பு கொள்வதைச் சொல்லுகிறார். ஆக, உலா நூல்களில் பெரும்பாலும் தலைவனுடைய இயற்பெயர் மட்டும் குறிக்கப்படுதலினலும், இருபாலாருள் ஒரு பாலாரிடத்து மட்டும் தோன்றுவதான ஒரு தலைக்காமம் பேசப்படுதலினலும் உலாவினைப் புறப்பொருளைச் சேர்ந்த பெண்பாற் கைக்கிளை என்று சொல்லுவர்.

*ஏழு பருவப் பெண்கள்*

இவ்வுலாக்களில், பாட்டுடைத் தலைவனின் பவனிகாணவரும் ஏழு பருவ மகளிருடைய உடலுறுப்புகளின் தோற்றம், வளர்ச்சி, அவற்றிற்கேற்ப உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி வேறுபாடுகள், அவை கண் முதலிய உறுப்புகளின் வாயிலாகப் புலப்படும் மெய்ப்பாடு

கள் ஆகியவற்றை உவமைகளாலும்,உருவகங்களாலும், வெவ்வேறு கற்பனைத் திறங்களாலும் ஆசிரியர்கள் நயம்பட விளக்கிக் கூறும் முறைகளைப் பலவிடத்தும் காணலாம். வேட்கை பிறவாப்பருவத்து மகளிர், வேட்கை பிறக்கின்ற பருவத்து மகளிர், வேட்கை பிறந்த பருவத்து மகளிர் என முத்திறத்தார் ஆகிய மகளிருள் உலகியல் ஒன்றும் அறியாத பேதைப் பருவத்தையும் அறிவறிந்த மங்கை முதலிய பருவங்களையும் அழகாகப் பாடுதல் எளிது. ஆனால் அறிவும் அறியாமையும் மயங்கும் வேட்கை பிறக்கின்ற பருவத்து மகளிரான பெதும்பைப் பருவத்தின் இயல்புகளைப் பாடுதல் அரிதும் சிறப்புடையதுமாயிற்று. இதுபற்றியே 'பேசும் உலாவில் பெதும்பை புலி' என்று புலவர் கூறுவாராயினர். உலாப்பிரபந்தம் பாடும் புலவர்கள் இப்பெதும்பைப் பருவத்தைச் சிறந்த கற்பனை செறிந்த தாகப் பாடுவர்.

இனி இப்பருவமகளிரின் செய்கைகளைப் பொதுவாகப் பார்ப்போம். மகளிர்க்கு 5 ஆண்டு முதல் 7 ஆண்டு வரை உள்ள பருவம் பேதைப் பருவம்,8 முதல் 11 ஆண்டு வரையில் பெதும்பைப் பருவம்,12-13ஆண்டுகள் மங்கைப் பருவம், 14 முதல் 19 ஆண்டு வரை மடந்தைப்பருவம், 20 முதல் 25 ஆண்டுவரை அரிவைப் பருவம், 26 முதல் 32 ஆண்டுவரை தெரிவைப் பருவம், 33 முதல் 40 ஆண்டுவரை பேரிளம்பெண் என்று கூறுவர். சில உலாக்களில் இந்தக் கணக்கில் வேறுபாடுகாணப்படும். "ஆயினும் உலகியலை அறியாத இளம் பருவம் பேதைப் பருவம் என்றும், உலகியலை ஒருவாறு உணர்ந்தும் உணராமலும் உள்ள நிலை பெதும்பைப் பருவம் என்றும், காம நுகர்ச்சிக்கு ஏற்புடையது மங்கைப்பருவம் என்றும், அந்நுகர்ச்சியில் பயின்றது மடந்தைப் பருவம் என்றும், முதிர்ந்தது அரிவைப்பருவம் என்றும், மகப் பேற்றையுடைய நிலை தெரிவைப் பருவம் என்றும், காம உணர்ச்சி தளரும் நிலை பேரிளம்பெண் பருவமென்றும் ஒருவாறு அவற்றின் இயல்புகளைக் கூறலாகும்" என்று திருக்கழுக்குன்றத்துலா முக வுரையில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கருத்து தெரிவித்துளார்கள்.

மகளிரைப் பருவ வகையால் பிரித்துரைக்கும் பெயர் வழக்கம் சங்க காலத்திலேயே தோன்றியுள்ளது என்பதை

"பேதை அல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினைப் புறத்து (அகநா.7)

என்னும் பகுதியால் உய்த்துணரலாம்.

ஏழு பருவ மகளிரை வர்ணிக்கும்போது அவரவர்களின் பருவத்துக்கேற்ற இயல்புகளையும் செயல்களையும் எடுத்துரைப்பது

புலவர்களின் வழக்கம். தத்தமக்குரிய ஆடல்களில் அப்பெண்கள் ஈடுபட்டதாகப் பாடுவார்கள்:

“சிற்றில் பாவை கழங்கு அம்மனையே
பொற்புறும் ஊசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க் குரிய ஆகும் என்ப”

என்று பன்னிருபாட்டியல் (137) மகளிரின் ஆடல்களைச் சொல்லுகிறது. இவற்றில், இன்ன பருவத்தினர்க்கு இன்ன விளையாடல் என்ற வரையறை இல்லை. சிற்றில் என்பது மட்டும் பேதைக் குரியது. மற்றவை எல்லாப் பருவப் பெண்களுக்கும் உரியனவாக வரும். இச்சூத்திரத்தில் காணப்பெறாத வேறுவகை ஆடல்களும் சில உலாக்களில் வந்துள்ளன. பாட்டுடைத் தலைவனுடைய தசாங்கம் உலாவில் வரவேண்டும் என்று 'பிரபந்தத் திரட்டு' என்ற இலக்கண நூல் வகுக்கின்றது

### உலாத் தலைவனுக்கு வயது வரம்பு

உலாக்காணும் மகளிரின் வயது வரையறைபோல, உலாப் பிரபந்தம் கொள்ளும் தலைவனுக்கும் வயது வரம்பு இன்னதென்று பன்னிருபாட்டியல் கூறுகிறது. 16 வயது முதல் 48 வயது வரையுள்ள ஆடவர்களுக்கு மட்டுமே உலாப்பாடுதல் மரபு என்பதனை

“நீடிய நாற்பத் தெட்டின் அளவும்
ஆடவர்க் குலாப்புறம் உரித்தெனமொழிப”(பன்: 136)

ஆனால், இவ்வயது வரையறை மானிடர்க்கேயன்றி தெய்வங்களுக் கில்லை. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையின் உலாத் தலைவர் 16 வயதுக்குட்பட்டவராயினும் அவர்பேரில் நம்பியாண்டார் நம்பி உலாப் பாடியது ஆளுடைய பிள்ளையாரும் தெய்வத்தின் அவதாரம் எனக்கொண்டு தெய்வங்களுக்கு வயது வரையறை இல்லை என்று கருதிப் பாடினார் எனக் கொள்ள வேண்டும். பெண் தெய்வங்கள் தனித்தோ, பெருங்குடிப் பெண்மக்களோ உலாவந்ததாக வழக்கில் இல்லை.

### வேறு பெயர்கள்

தலைமகனுடைய இரக்கம், கொடைத்தன்மை, வீரம் முதலியன கூறப்படுதலின், திணைகளுள் இவ்வுலாவகைப் பாடாண் திணைக் குரியது என்பர். இதனால் உலாவினை உலாப்புறம் என்பர்(பன். 131) புறத்தே உலா வருதலைக் குறித்தலின் புறஉலா என்ற பெயரும்

இதற்குண்டு. 'திருக்கயிலாய ஞானப் புறவுலா திகழ்விற்பாடி' என்று புழலை திருநாவுக்கரசு முதலியார் எழுதிய உரைச்சிறப்புப் பாயிரம் கூறும். (திருக்கயிலாய ஞானவுலா பு.பா. இரத்தினசபாபதி நாயகர் விருத்தியுரை, உரைச் சிறப்புப்பாயிரம் 1936). தலைவன் பவனி வரும் செய்தியைப் பாடிவருதலின் பவனி உலா என்ற மற்றொரு பெயரும் இதற்குண்டு. இதனைப் 'பொற்கழுக் குன்றீசர் பவனித் திருவுலாப்பாட' என்ற அடி வலியுறுத்தும். பல கண்ணிகளைக் கொண்டு மாலையாகத் தொகுக்கப்பெற்றமை யால் உலாமாலை என்றும் இதனைக் கூறுவர். நம்பியாண்டார் நம்பி 'ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை' என்று பாடியதனுலும், இலஞ்சி முருகன் உலாவில் 'குருபரன் மேல் சீர் கொண்டு உலா மாலை சேர்க்கவே' என்று வருதலினுலும், உலாமாலை என்ற பெயர் இதற்கு உண்டு எனத் தெரிகின்றது. திருக்குறுங்குடி நம்பியுலா வில், 'நம்பியெங்கள், மாமால் பவனியுலா மாலைக்கு' என்று வரு வதையும் காணலாம்.

*பிற உலாக்கள்*

தமிழ் மொழியில் தோன்றிய பல உலாக்களுள், சேரமான் பெருமாள் நாயனர் இயற்றிய திருக்கயிலாய ஞான வுலாவே முதலில் தோன்றிய உலாப் பிரபந்தம் என்று பார்த்தோம் பக்தி நெறியில் நின்று வழிவழி அடிமை செய்தொழுகிய சுந்தரமூர்த்தி நாயனரை ஏற்றுக்கொண்டது போலவே, வழிவழி அடிமை செய்து பழசாத புத்தடியாராகிய தம்மையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற உட்கருத்துடன் கூடியது அவ்வுலா. பக்தி நெறியில் பழகுவோர் பலதிறத்தாரையும் ஏழுவகையுள் அடக்கி, அவ்வெழு திறத்தா ரையும் ஏழு பருவமாதராக்கி, அவ்வெழுவகையோரும் பக்குவத்தில் வேறுபாடு உடையரேனும், இறைவன் பால்கொண்ட அன்பில் குறைவில்லாதவர் என்பதை உணர்த்தி, பக்குவம் மிகுந்த சுந்தரமூர்த்தி நாயனரைப் பேரிளம்பெண்ணுகவும், பக்குவம் அடையாத தன்னைப் பேதைப் பெண்ணுகவும் உட்கொண்டு, பேரிளம்பெண்ணைப் பக்குவ முதிர்ச்சி கண்டு ஏற்றுக்கொண்டது போல, பக்குவம் சிறிதும் பேருத பேதைப் பருவத்தாளையும் ஏற்றுக்கொள்வதே முறை என்பதைச் சேரமான் பெருமாள் நாயனர் உணர்த்துவதற்காகவே எழுந்தது அவ்வுலாவாகும்

அதனையடுத்து வருவது நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த 'ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை'. இது திருஞான சம்பந்தர் மீது பாடப் பெற்றது. இந்த உலாவில், ஏனைய உலாக் களில் பருவ மகளிரின் செயல் தனித்தனியே கூறப் பெறுவதைப் போல் அல்லாமல், பேதை முதல் பேரிளம்பெண் ஈருக உள்ள ஏழு

பருவமகளிரின் செயல்கள் சேர்த்துப் பாடப்பெற்றுள்ளன. இவ்வுலா சொல்லழகும் பொருள் நயமும் பொருந்தியது. பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. நம்பியாண்டார்நம்பி ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்.

மூன்றாவதாக வருவது மூவருலா. இது, விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா, ஆகிய மூன்று உலாக்களைத் தன்னகத்தே கொண்டது. இம்மூவருலாவை இயற்றியவர் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தராவர். இவருடைய காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று அறிஞர் கூறுவர். இவர் உலாப்பாடுவதில் இணையற்றவர் என்பதை 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்ற பழம் பாடல் அடியொன்று சான்று பகரும். இம்மூவருலா, சோழ மன்னர்களின் குலப் பெருமை, வரலாற்றுச் சிறப்பு, சரித்திரக் குறிப்புக்கள், பாட்டுடைத் தலைவனின் பெருமை, தலைவன் பள்ளியெழுந்து நீராடித் தன்னை ஒப்பனை செய்துகொண்டு பட்டத்து யானைமேல் பவனி வருதல், உடன் வருவோர், குழாங்கள், குழாங்களின் கூற்று, ஏழு பருவப் பொதுப் பெண்டிரின் உள்ளக் கிளர்ச்சி, அதனால் நிகழும் செயல்கள், பல்வேறு விளையாட்டுக்கள் ஆகியவை பற்றி விரிவாகக் கூறுகிறது. ஏழு பருவப் பெண்களும் பவனிவரும் அரசனை நோக்கிக் காமுற்று நிற்பதைப் புலவர் மிகச் சுவைப்பட எடுத்து இயம்புகின்றார்.

மூவருலாவையடுத்து எழுந்தது சங்கர ராசேந்திர சோழன் உலா. இதுவும் மூவருலாவை ஒட்டியே பாடப்பட்டதாகும். மூன்றாம் குலோத்துங்கனின் தம்பியாகிய சங்கர ராசேந்திர சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இது பாடப் பெற்றது. இதன் ஆசிரியரைப் பற்றியவிவரங்கள் தெரியவில்லை.

பின்னர் இரட்டைப் புலவர்கள் ஏகாம்பரநாதர் உலாவைச் செய்துள்ளார்கள். திருவானைக்காவில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது காளமேகப் புலவர் ஓர் உலா இயற்றியுள்ளார். 17-ம் நூற்றாண்டில் தத்துவராயர் தமது ஞானாசிரியர் (சொருபானந்த சுவாமிகள்மீது) இரு உலாப் பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். அந்தகக்கவி வீரராகவ முதலியார் திருவாரூர் உலாவும், திருக்கழுக்குன்றத்து உலாவும், கயத்தாற்றிலிருந்த தமிழ்ப் புலமைமிக்க அரசனைப்பற்றிய ஓர் உலாவும் இயற்றியுள்ளார்.

இதற்குப்பின் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல உலாப் பிரபந்தங்கள் வெளிவரலாயின. அவற்றின் பெயர்களையும் ஆசிரியர்

பெயர்களையும் தொகுத்துத் தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது. (பிற்சேர்க்கை 3, 4)

இங்ஙனம், பாட்டுடைத் தலைவனின் பெருங் கருணைத் திறத்தையும், வள்ளன்மையையும், அவனுடைய பிறசிறப்புக்களை யும் இவ்வுலா நூல்களில் நாம் ஒருசேரக் கண்டு களிக்கின்றோம். இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப் பெற்ற உலா நூல்களில், இறைவன் எழுந்தருளியுள்ள தலத்தின் சிறப்பும், தீர்த்தச் சிறப்பும், அத்தலத்தோடு தொடர்புடைய வேறு தலங் களின் அருமை பெருமைகளும், அத்தலங்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும், அத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்ற மெய்யன்பர் களுடைய சிறப்பும் அமைந்து ஆராய்ச்சியாளர்களுக்குச் சிறந்த கருவூலங்களாக அமைந்து விளங்கும் நிலைமையைக் காண் கிறோம். வள்ளல்கள், மன்னர்கள், ஆகியோரைப் பாட்டு டைத் தலைவராக வைத்து எழுதப்பட்ட நூல்களில் அத்தலைவனு டைய பெருமை, அவனது நாட்டின் சிறப்பு முதலிய செய்திகள் சுவைபடக் கூறப்படுகின்றன.

ஏழு பருவ மகளிரின் செயல்கள், அவர்களின் பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள் முதலியவை ஒவ்வொரு நூலிலும் மாறுபட்டும் சுவையோடும் அமைந்துள்ளன. இவ்வாறு ஏழு பருவ மகளிரின் வெவ்வேறுபட்ட செயல்கள் உலாக்களில் விரவி வந்துள்ளமை பற்றிய டாக்டர் ஐயரவர்களின் குறிப்பு பிற்சேர்க்கையாக(2) அகரவரிசைப்படுத்தி இணைக்கப்பெற்றுள்ளது. இந்த அமைப்பு முறை எல்லா உலா நூல்களுக்கும் பொதுவானதாயினும், அவ்வந் நூலாசிரியரும் தத்தமக்குரிய கவிதை வளத்தோடும், கற்பனைத்திறனோடும், நடையின் நலத்தோடும் வேறுபட்டுப் புதுமையுடன் பாடியிருக்கும் சிறப்பினால் எத்தனை உலா நூல்களைப் படித்த போதிலும் அவற்றின் ஒவ்வொன்றிலும் புதிய புதிய சுவை களைக் காண்கிறோம். ஆகவே 'உலா என்பது தொடர்ந்த பொருளு டைய ஒரு நெடும் பாட்டால் இயங்குகின்றதாதலின் இதனைத் தொடர்நிலைச் செய்யுள்களுள் ஒன்றாகக் கருதுவதும் சிறு காப்பிய வரிசைகளுள் ஒன்றாக வைக்கத்தகுவதும் ஏற்புடைத்தாகும்' என்று அறிஞர்கள் கருதுவதும் சிந்திக்கற்பாலது. (திருக்குற்றால உலா—முன்னுரை)

# வாட்போக்கி

### *கோயிலும் இருப்பிடமும்*

தமிழ் நாட்டில் இறைவன் எழுந்தருளியுள்ள கோயில்கள் பலவாகும். அவற்றுள் சிவனூர் உறையும் சிவன் கோயில்களும், திருமால் குடிகொண்ட வைஷ்ணவ ஆலயங்களும், முருகன் தங்கி யுள்ள கோயில்களும், ஜைன பௌத்த விகாரங்களும் உள்ளன. சைவசமயத் தலைவர்களால் தேவாரப்பதிகம் பாடப்பெற்ற தலங்கள் 274. இவற்றையல்லாமல் ஊர்ப்பெயர் மட்டும் குறிக்கப் பெற்ற வைப்புத்தலங்களும், புலவர்களால் புராணம் பாடப்பெற்ற புராணத்தலங்களும், பிற அன்பர்களால் அவ்வப்போது கட்டப் பெற்ற அபிமானத் தலங்களும் உள்ளன. இவ்வாறு ஏற்பட்ட பல தலங்களுள்ளும் தேவாரம் பெறப்பட்ட 274 கோயில்களுள்ளும், வாட்போக்கி என்னும் பெயரைக் கொண்ட சிவாய மலைக்கோயில் ஒன்று உள்ளது. இது திருச்சிராப்பள்ளி ஜில்லா, குழித்தலை தாலுக்காவில், காவிரி நதிக்குத் தென்கரையில், இனும் சத்திய மங்கலத்தைச் சேர்ந்ததாய் குளிர்தண்டலை என்னும் குழித்தலையி லிருந்து மணப்பாறைக்குச் செல்லும் சாலையில் 5-வது மைலில் உள்ளது. குழித்தலை புகைவண்டி நிலையத்திலிருந்து பேருந்துகள் மூலமாகவும், தனிவண்டிகள் மூலமாகவும் இவ்வூரை அடையலாம். இவ்வூர் நடுவில் உள்ள செங்குத்தான மலை, சுற்றியுள்ள சுமார் இருபது மைல் வட்டாரம் வரையில் தன் தோற்றத்தைக் காட்டிக் கொண்டு நிற்கின்றது. இவ்வூரில் மலைகண்ட வேளாளர், பன்னி ரண்டாம் செட்டியார் என்னும் இருவகுப்பினர் உள்ளனர்.

### *தலத்தின் வேறுபெயர்கள்:*

இம்மலைக்குச் சிவாயமலை இரத்தினகிரி, இரத்தினசலம், ஐயர்மலை, மணிகிரி, வாட்போக்கி, தென்சிவதை (236) முதலிய பெயர்கள் வழங்குகின்றன. பிரணவப் பொருளாகிய 'ஓம்' என்னும் எழுத்தைப்போல் படிகளும் பிரகாரங்களும் அமைந்திருப்பதாலும் சிவாயமலை என்னும் பெயர் வழங்குகின்றது. நவரத்தினங்களில் மாணிக்கம் போன்று விளங்குவதாலும், ஆரிய மன்னனுக்கு இரத்தினம் கொடுத்த காரணத்தாலும் இரத்தினகிரி, இரத்னசலம், மணிகிரி முதலிய பெயர்கள் இதற்கு இடப்பட்டுள்ளது. யாவர்க்கும் தலைவனாகிய பெருமான் வீற்றிருக்கும் காரணத்தால் ஐயர்மலை என்றும் இது அழைக்கப்படுகின்றது. ஆரிய அரசன் பெருமானது முடியில் வாளை வீசித் தழும்பு உண்டாக்கிய காரணத்தால் வாட் போக்கி என்றும் இது கூறப்படுகின்றது. கல்வெட்டுகளில் திருமாணிக்கமலை என்று காணப்படுகின்றது. இதைச் சார்ந்த பகுதியில் உள்ளவர்கள் 'இரத்தினம்' என்று முடியும் பெயர்களை

வைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. இராச ரத்தினம், அரங்கரத்தினம், சேதுரத்தினம், கணேசரத்தினம் என்பன போன்ற பெயர்களை உடையவர்கள் பலர்.

*கோயிலின் அமைப்பு*

இரத்தினகிரி (The Ruby Hill) என்னும் இம்மலை சிவாயம் என்னும் ஊரின் நடுவில் செங்குத்தாய் அமைந்துள்ளது. 1178 அடி உயரமுடையதாய் 952 படிகளைக் கொண்டுள்ளது. கி.பி. 1783-ம் ஆண்டில் இப்படிகள் கட்டப்பட்டன*. அடிவாரத்தில் ஒரு பெரிய மண்டபம் உண்டு. அதில் கிழக்கு நோக்கிய வைரப்பெருமான் சந்நிதியும், வடக்கு நோக்கிய கருப்பண்ண சுவாமி சந்நிதியும் உள்ளன. மலையின்மேல் சிறிது தூரம் ஏறிச் சென்றால் பொன்னிடும் பாறை என்ற இடம் உள்ளது. இவ்விடத்தில் பெருமான் சுந்தரர்க்குப் பொன் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இடைவழியில் விநாயகர் கோயிலும், சப்த கன்னியர் கோயிலும் உள்ளன. அதற்கு அருகாமையில் உள்ள ஒரு மண்டபத்தில் வசந்த காலத்தில் பெருமானை எழுந்தருளச் செய்து ஊஞ்சல் விழா நடத்தப் படுகிறது. இந்த இடத்துக்கு 'ஒன்று பாதி' என்ற பெயரும்உண்டு. மலைப்பாறையின் கோயிலுக்கும் மலை அடிவாரத்துக்கும் சரிபாதி யான இடத்தில் அமையப் பெற்றுள்ளதால் இப்பெயர் வழங்குகின்றது.

மேலே செல்லச் செல்ல படிகள் வளைவாய் அமைக்கப் பட்டுள்ளன. படிக்கட்டுகளின் இடையில் அங்கங்கே பல நிழல் தரும் மரங்கள் மலை ஏறுபவர்கள் தங்கிச் செல்ல நிழலைத் தந்து உதவுகின்றன. இடையிடையே பல நீர்ச் சுனைகள் உள்ளன. இந்த மலையின் அடிவாரத்தின் சுற்றளவு மூன்று மைல்கள். மலையைச் சுற்றி வந்தால் மலையின் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வகையாகக் காட்சியளிக்கும். ஒருபுறம், நீண்ட சிறுசிறு வறட்டுப் பாறைகள் சிவபெருமான் சடைமுடி போலவும், மற்றொருபுறம் செடி கொடி மரங்கள் நிறைந்த பகுதிபசுமை நிறத்துடன் அன்னை பார்வதி தேவி வடிவம் போலவும் காட்சி தருவனவாக வுள்ளன. இரத்தினகிரீசுவரர் கோயில் மலை உச்சியில் எட்டுப் பாறைகளுக்கு நடுவே ஒன்பதாவது பாறையில் அமைந்துள்ளது. இங்கு சிவபெருமான் சுயம்புலிங்க மூர்த்தியாக முடித்தழும்புடன் காட்சியளிக்கின்றார்.

---

*Madras District Gazetteers 1907-Trichinopoly-By F. R. Hemingway I. C. S. page 284-see Appendix-I.

பல படிகளைக் கடந்து சென்றால் எதிரில் காணப்படுவது அம்மன் கோயில்; இதுகிழக்கு நோக்கியுள்ளது. முன்னேயுள்ள மண்டபத்திலிருந்து நோக்கினால் ஆகாய விமானத்திலிருந்து பார்ப்பது போல் சுற்றுப்புறங்கள் அழகான காட்சியளிக்கும். இனிய தென்றல் காற்று வீசும். வெய்யோனின் வெப்பம் தோன்றாது. இவ்விடத்திலும் மலையின் பிற இடங்களிலும் குரங்கினங்கள் கூட்டங் கூட்டமாய் வசிக்கின்றன.

அம்மன் கோயிலுக்கருகில் வேப்பமரம் ஒன்றுண்டு. இதுதான் தலவிருட்சம். இன்னும் சற்று மேலே சென்றால், வருகின்றவர்களை வரவேற்பதுபோல் தக்ஷிணாமூர்த்தி சந்நிதி உள்ளது. அதன் வழியே உட்சென்றால் சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியிருப்பதைக் காணலாம். சுவாமி சந்நிதிக்குக் கீழே ஒரு பிரகாரமும், மேலே ஒரு பிரகாரமும் உள்ளன. கீழ்ப்பிரகாரத்தில் அறுபத்து மூவர் சந்நிதியும், மேல்பிரகாரத்தில் வைரப்பெருமாள், விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், ஆரியராசன், நவக்கிரகம் முதலிய சந்நிதிகளும் உள்ளன. மலையின்மேல் ஒரு மணி மண்டபம் இருக்கிறது. பூஜை நேரங்களில் மணியடிக்கப்படுகிறது. சுவாமி சந்நிதிக்கு மேற்கில் ஒரு சிறிய ஜன்னல் ஒன்பது துவாரங்களைக் கொண்டுள்ளது. அதன்வழியே காற்று பீறிட்டுக் கொண்டு வருவதைக் உணரலாம்.

மகாமண்டபத் தூண்களில் சில சிலைகள் காணப்படுகின்றன. இவை இம்மண்டபங்களைக் கட்டுவித்தவர்களுடைய சிலைகளாய் இருக்கலாம். மண்டபத்தின் மேல்வட்டத்தில் மீன் சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. பாண்டிய மன்னர்களின் அடையாளமாயிருக்கலாம். மூலத்தானத்திற்குள்ளே பெருமான் லிங்க உருவத்தில் காட்சியளிக்கின்றார். லிங்கம் என்பது அருவமும் உருவமும் கலந்த அடையாளம். ஆரிய மன்னன் வாளைப் போக்கியதால் உண்டான தழும்பு தெரியும்படி லிங்கத்தின் முடியில் அடையாளமிருப்பதைக் காணலாம்.

*மூர்த்திகளின் பெயர்கள்*

இம்மலையிலுள்ள பெருமானுக்கு இரத்தின கிரீசுவரர், வாட்போக்கிநாதர், இராசலிங்கர், முடித்தழும்பர், மலைக்கொழுந்தீசர், சொக்கர், தெய்வசிகாமணி முதலிய பெயர்கள் வழங்குகின்றன. இரத்தினகிரியில் எழுந்தருளியிருப்பதால் இரத்தினகிரீசுவரர் (The Lord of the Ruby Hill) என்றும், ஆரிய மன்னன் வாளைப் போக்கியதால் வாட்போக்கி நாதர் என்றும், ஆரிய ராசனால் பூசிக்கப் பெற்றதால் இராசலிங்கர் என்றும், மலையினுடைய

கொழுந்தே லிங்கமாய் இருப்பதால் மலைக்கொழுந்தீசர் என்றும், அழகு பொருந்தியிருப்பதால் சொக்கர் என்றும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

அம்பிகைக்கு, சுரும்பார் குழலி, ஹரவட்சேசுவரி, அராளகேசாம்பிகை, வண்டார் குழலம்மையார் என்ற பெயர்கள் வழங்குகின்றன. வண்டுகள் மொய்க்கும்படியான கூந்தலையுடையவள் என்பது இதன் பொருள். கல்வெட்டுக்களில் பெருமானுக்குத் திருமாணிக்க மலை உடைய நாயனுர், திருமாணிக்கமலை மகாதேவர் முதலிய பெயர்களும், அம்மனுக்கு ஹரவட்சேசுவரி என்னும் பெயரும் காணப்படுகின்றன.

*தீர்த்தங்கள்*

இத்தலத்திற்கு முக்கிய தீர்த்தம் காவிரி. தினந்தோறும் காவிரி நதியிலிருந்து தண்ணீர் அபிஷேகத்திற்காகக் கொண்டுவரப்படுகிறது. இம்மலையைச் சுற்றிலும் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. அவை சிவாய தீர்த்தம், இந்திர தீர்த்தம், வாயுதீர்த்தம், நாகதீர்த்தம், சூரிய தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம் உரோமச தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், துர்க்கா தீர்த்தம் என்பன. சிவாய தீர்த்தமென்பது ஊரின் நடுவில் உள்ள தெப்பக் குளமாகும். இது பஞ்சாக்ஷர தீர்த்தம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த நவதீர்த்தங்களைக் குறிக்கும் வகையில் சுவாமி சந்நிதிக்கு மேற்கே ஒன்பது துவாரங்களைக் கொண்ட ஜன்னல் ஏற்பட்டது போலும்.

*தலப்பெருமை*

இத்தலத்தின் பெருமைகள் மிகப் பலவாகும். மூலலிங்கம் சுயம்பு வடிவம். இத்தலத்தைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. 'காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்திதிரு ஈங்கோய்நாதர்' என்பது. அதாவது காலையில் காவிரிக் கரையில் உள்ள கடம்பர் கோயில் பெருமானையும், மத்தியானப் பொழுதில் இரத்தினகிரியிலுள்ள சொக்கப் பெருமானையும், மாலையில் திருஈங்கோய் மலையிலுள்ள பெருமானையும் ஒரே நாளில் தரிசனம் செய்தல் விசேடம் என்று கூறுவர். இதனுல் இத்தலப் பெருமானுக்கு மத்தியான சுந்தரர் என்னும் பெயரும் வழங்குகிறது.

இறைவன், வடக்கேயிருந்து வந்த ஆரிய மன்னனுக்கு இரத்தினமும், சுந்தரருக்குப் பொன்னும் கொடுக்கப் பெற்ற இடம் இது வாகும். ஆரிய மன்னனுடைய பரம்பரையினர் என்று சொல்லப்படும் திருமஞ்சனப் பண்டாரங்களாலும், அந்தணர்களாலும், இன்றுகூட

காவிரியிலிருந்து குடங்களில் அபிஷேகத்திற்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகின்றது. ஆரியமன்னன் வாளால் வெட்டியதால் உண்டான தழும்பு இறைவன் திருமுடியில் அமையப் பெற்றது. ஆரிய அரசனின் உருவச்சிலையும் பிரகாரத்தில் உள்ளது. அபிஷேகத் திற்காகக் கொண்டுவந்த பாற்குடத்தைக் கவிழ்த்த காகம் எரிக்கப் பெற்றது. குறிப்பிட்ட எல்லைக்குமேல் இங்கு காகம் பறப்பதில்லை யாம். இதனால் இம்மலைக்குக் 'காகம் அணுகாமலை' என்ற பெயரும் வழங்குகின்றது. 'காகம் மேவுறில் கடுந்தழல் வீசிடு பறம்பு' என்றும் சொல்லப்படுகிறது. காக்கையின் வரலாற்றைப் புலப் படுத்த குடங்களின்மேல் காகத்தின் வடிவம் பொறிக்கப் பட்டுள்ளது.

ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நிகழ்ந்த போட்டியில் மேரு மலையினின்றும் சிதறிய பாறைத் துண்டு விழப்பெற்ற இடம் இது என்பர். சிவநேசச் செல்வர்களாகிய வணிகர்களிடமிருந்து சிவபெருமான் பன்னிரண்டாவது பங்கை வருவாயாகப் பெற்றது. காஞ்சிபுரத்திலிருந்து வந்த வைரப்பெருமாள் என்னும் பக்தன் தன் தலையைப் பலியிட்டு வழிபட்ட பெருமையை உடையது.. சுவாமி சந்நிதி பிரகாரத்திலும் அடிவாரத்திலும் வைரப் பெரு மாளின் சந்நிதி உள்ளது. சுவாமிக்குத் தீப ஆராதனை முடிந்தபின் வைரப் பெருமாளுக்கும் ஆராதனை நடைபெறுகின்றது. இவர்க்கு வீரவாகு தேவர் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இவரே இம் மலைக்குக் காவல் தெய்வமாகப் போற்றப்படுகிறார்.

இம்மலையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடிக் கடவுள் பூசிப்பதாகச் சொல்லப் பெறுகின்றது. அகத்தியர் முதலியோரால் பூசிக்கப் பெற்ற பெருமையுடையது. இம்மலையில், பாம்புகளால் தீண்டப் பெற்றோர்க்கு, விஷம் ஏறுவதில்லை என்று சொல்லப் பெறுகின்றது. இயற்கை யழகும் செயற்கை யழகும் செறிந்த தலம் இது. மேலும், வெளி யூர்களில் உள்ள பல வகுப்பினரும் தங்கள் குலதெய்வமாக வழி படும் பெருமையுடையது. இத்தலம் சோழர், பாண்டியர் விஜயநகர மன்னர், ஹொய்சல மன்னர் ஆகியோரால் ஆதரிக்கப் பெற்றது. பல கல்வெட்டுச் செய்திகளை நாம் இங்கே காணலாம். இத்தலத்தில் கல்யாணச் சடங்குகள் நடைபெறுகின்றன. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளிலும், தைப்பூச நாளிலும் விசேஷ ஆராதனைகள் நடைபெறும். எனவே இம்மலையின் பெருமைகள் மலை போன்றனவாகும்.

***வழிபட்டோர்***

**இத்தலத்துப் பெருமானை இந்திரன், சூரியன், இடிக்கடவுள், வீரசேனன், ஆதிசேடன், அகத்தியர், துர்க்கை முதலியோர்**

வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார்கள் என்று இத்தலபுராணம் கூறும். அவர்களுடைய பெயர்களால் ஏற்பட்ட தீர்த்தங்களும் உள்ளன. ஆரிய மன்னன், வைரப்பெருமாள் வழிபட்டதற்கு அடையாள மாக அவர்களுடைய சிலைகளும் உள்ளன. சப்த கன்னியரும் வழிபட்டுள்ளனர். திருநாவுக்கரசர், சுந்தரர் அருணகிரிநாதர் முதலி யோர் வழிபட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்கள். ஆண்டுதோறும் சூரியன் மேடராசியில (சித்திரையில்) இருக்கும் காலத்தில் வரும் பௌர்ணமியில் சூரியன் பிற்பகலில் தன் கிரணங்களால் பெருமானைப் பூசிக்கின்றான். இன்றும் பல அன்பர்கள் வெளியூர் களிலிருந்து வந்து இத்திருநாளில் பெருமானை வழிபட்டுச் செல் கின்றார்கள்.

*சிற்பச்சிறப்புகள்:*

மலைக்குச் செல்வதற்குரிய படிகளில் சில பாறையிலும், சில அடுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. சுவாமி சந்நிதிக்கு மேலும் கீழும் உள்ள பிரகாரங்கள் சங்கு சுழிப் போலவும், பிரணவம் போலவும் அமைந்துள்ளன. சுவாமி சந்நிதியின் மண்டபத்தில் பழங்காலத்துச் செய்யப்பெற்ற உலோகத்தாலான இரண்டு பாவைகள் விளக்கேந்திய வண்ணமாய் நிற்கின்றன. அவை களில் ஒன்று சகம் 1726ல் (கி.பி 1804) கோயிலுக்குத் தானம் செய்யப்பட்டதாக தெரிகிறது. இந்த பாவைகள் அழகிய வேலைப் பாடுகளுடன் விளங்குகின்றன. அக்காலத்து நாகரிகத்தை அறி விக்கும்படியான பல அணிகளைக் கொண்டுள்ளன. சடையணிகள், காதணிகள், மூக்கணிகள், கழுத்தணிகள், ஆரங்கள், கை வளையல்கள், காலணிகள் முதலியன முற்காலத்திருந்த பழக்க வழக்கங்களைத் தெரிவிக்கின்றன. ஒரு பாவையின் காதுகளில் ஜிமிக்கி என்னும் காதணிகள், அசைத்தால் அசையும் தன்மை யுடையனவாய் அமைந்துள்ளன. தக்ஷிணாமூர்த்தியின் சிலை இனிய முகத்தோற்றத்தோடு விளங்குகின்றது. இம்மலையில் கோயில் கொண்டிருக்கும் பெருமானுக்கு, காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அபிஷேகங்கள் காவிரி நீராலாயே செய்யப்பெறுகின்றன. இதற் காக ஆறு மைல் தூரத்திலுள்ள காவிரி ஆற்றிலிருந்து தினமும் திருமஞ்சனப் பண்டாரங்கள், வேளாளர்கள், அந்தணர்கள், ஆகியோர் நடந்து சென்று குடங்களில் தண்ணீர் எடுத்து வரு கின்றனர். ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு குடங்களுக்குக் குறை யாமல் தண்ணீர் எடுத்து வரப்பெறுகிறது. இந்த ஏற்பாடானது இந்தக் கோயிலின் ஒரு தனிச் சிறப்பாகும். இத்திருமஞ்சனப் பண்டாரங்கள் ஆரியராசனின் வழிவந்தவர்கள் எனப்படு கின்றனர். காலைப்பூசை பகல் பதினொரு மணிக்கும், உச்சிப்பூசை

இரண்டு மணிக்கும், மாலைப்பூசை ஆறு மணிக்கும் நடைபெறுகின்றன. இவைகளுக்காகத் தனித்தனியே கட்டளைகள் ஏற்பட்டுள்ளன. காலைச் சந்திக்கட்டளை பன்னிரண்டாம் செட்டியார்களாலும், உச்சிக் காலக்கட்டளை வீரப்பூர் ஜமீன்தாராலும் விசுவகர்மாக்களாலும், மாலைப்பூசை தேவஸ்தானத்தாராலும் நடைபெறுகின்றன. கோயிலில் உள்ள சிலா மூர்த்திகளின் அபிஷேகங்களுக்கு வேண்டிய பாலுக்காக பன்னிரண்டார் சமூகம் பசுமடம் ஒன்றினை நிறுவிப் பசுக்களைப் பராமரித்து வருகின்றனர்.

### திருவிழாக்கள்

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் மலைப்பெருமானுக்குப் பெருவிழா நடைபெறும். மலைமேலுள்ள உற்சவமூர்த்தி கீழே வந்து வாகனங்களில் காட்சி தந்து கடைசி நாளில் தேரோட்டம் நிகழும். சங்கிலிகொண்டுதேர் இழுக்கப்படுகிறது. பன்னிரண்டார் சமூகம் அளித்த தேரில் இரத்தினகிரீசர் பவனி வருகிறார். தைப்பூச நாளில் இறைவன் கடம்பர்கோயில் துறைக்குச் சென்று கடம்பர்கோயில், ராஜேந்திரம், வெட்டு வாய்த்துறை,* கருப்பத்தூர், திருஈங்கோய் மலை., முசிரி, வெள்ளூர் முதலிய தலங்களிலிருந்து வந்துள்ள மூர்த்திகளுடன் தங்கியிருந்து மறுநாள் புறப்பட்டு ஊர்வந்து சேர்வான். பங்குனி உத்திர நாளில் குழித்தலையில் உள்ள தெப்பக்குளத்தில் தெப்பவிழா நடைபெறும். அன்றைய தினம் காலையில் சுவாமி புறப்பட்டுப் போய் இரவில் தெப்பத்தில் காட்சி கொடுத்து மறுநாள் திரும்பும். இவற்றைத் தவிர மாதாந்திர விழாக்களும் அவ்வப் போது நடை பெறுவதுண்டு.

### பிறகோயில்கள்

ஐயர்மலைக்குத் தெற்கில் சுமார் 1½ மைல் தூரத்தில் உள்ள சிவாயம் என்னும் ஊரில் ஒரு பெரிய சிவன் கோயில் உள்ளது. நான்கு பக்கங்களிலும் பெரிய மதில்களையும், கீழ்ப்புரம் ராஜ கோபுரத்தையும் கொண்டு இது விளங்குகின்றது. ஐயர்மலையில் இருந்தபடியே இக்கோயிலைத் தரிசிக்கலாம். இதுவே பழமையான கோயில் என்று சொல்லப்படுகிறது. முற்காலத்தில் சிவபாத சேகரபுரம் என்னும் பெயரால் இவ்வூர் வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. கோயிலுக்குள்ளே இரண்டு பிரகாரங்கள் உள்ளன. சுவாமி அம்மன் சந்நிதிகள் கிழக்கு நோக்கி உள்ளன. சுவாமிக்குச் சிவபுரீஸ்வரர் என்றும், அம்மனுக்குப் பெரியநாயகி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. கோயில் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. சிவாயம் கோயிலில் மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளைக் குறித்துப் பத்து நாட்கள்வரை விழா நடை பெறும்.

---

* இப்போது இவ்வூர் பட்டவர்த்தலை என்று வழங்கப் பெறுகிறது.

*புராண வரலாறுகள்*

இத்தலத்தின் மகிமைகளை இரத்தினசல மான்மியம், திருவாட்போக்கிப் புராணம் என்னும் இருநூல்கள் விரிவாகக் கூறும். இரத்தினசல மான்மியம் யாழ்ப்பாணம் தாமோதரம் பிள்ளையால் உரைநடையில் ஆக்கப்பெற்றது. வாட்போக்கிப் புராணம் முதல் பத்து சருக்கங்கள் திருவாரூர் வைத்தியநாத தேசிகராலும், ஆரியராச சருக்கமும் சிற்ருயர் அருள்பெறு சருக்கமும் கடம்பர் கோயில் திருவாவடுதுறை ராமலிங்கத் தம்பிரான் அவர்களாலும், வயிரப் பெருமாள் மலைகாவல் பெறு சருக்கம் சைவ சிரோமணி யாகிய முத்துச்சாமி சுவாமி என்னும் திருப்புகழ் குகன் அடிமை யாலும் செய்யப்பட்டன. பொன்னிடும் பாறைச் சருக்கம் திரிசிர புரம் சிவாநந்த சாகர யோகீஸ்வரர் அவர்களால் இயற்றப்பட்டது.

இவ்வரலாறுகளை உள்ளடக்கிக் கூறும் புராணப் பாடல்கள் வருமாறு:

> ‘‘நலங்கொள் ஆரணிய மென்னும் நைமிசம் ஆனவாறும்
> இலங்குமா ணிக்கக் குன்றம் இருநிலத்தடைந்தவாறும்
> துலங்கும் அக்குன்றம் மேவும் தொல்புகழ்ச் சிறப்பினோடும்
> சலங்கொளும் வாயுசேடன் சார்ந்(து)அருச் சித்தவாறும்,
>
> இந்திரன் பணிந்தவாறும் இடியருச் சித்தவாறும்
> செந்தமிழ் முனிவன்பூசைச் சிறப்பொடு ரோமசப்பேர்
> அந்தமில் முனிவன் பூசித்(து) அரன் அருள் பெற்றவாறும்
> சந்திர காசம்கொண்டு தடவரைப் பிளந்தவாறும்’’

இவ்வரலாறுகளில் சில மேலே சுருக்கிக் கூறப்பட்டுள்ளன.

### இத்தலத்தைப் பற்றிய புராண வரலாறுகள்

*மாணிக்க மலையின் தோற்றம்*

ஒரு காலத்தில் வாயு தேவனுக்கும் ஆதிசேடனுக்கும் பெரும் போர் உண்டாயிற்று. இருவரும் தம்தம் வலிமையைக் காட்ட முயன்றனர். அப்போது வாயுதேவனால் மேருமலையினின்றும் ஐந்து சிகரங்கள் பெயர்த்தெறியப்பட்டு அவ்வைந்தும் ஐந்து சிவஸ்தலங்களாயின. அவைகளில் ஒன்று மாணிக்கமலை என்னும் இரத்தினசலம். மற்றவை பாண்டி நாட்டில் தாமிரபர்ணிக்கரையில் உள்ள நீலாசலமும், காவிரிநதிக்கு மேற்கரையில் உள்ள சுவேதாசலமும், காவிரிநதிக்கு வடகரையில் உள்ள மரகதாசலம் என்னும் திரு ஈங்கோய்மலையும், தொண்டைநாட்டில் உள்ள கந்தமா நதிக்கரையில் உள்ள அருணசலமும் ஆகும்.

### வாயுவும் ஆதிசேடனும் பூசித்தது

மேருமலைச் சிகரத்தைப் பெயர்த்த குற்றத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு வாயுதேவன் பரமசிவனைச் சரணமடைந்து அவரது கட்டளைப்படி இரத்தினகிரியை அடைந்து, அதன் கீழ்பால் ஒரு தீர்த்தம் (வாயுதீர்த்தம்) உண்டாக்கி அந்நீரால் இரத்தினகிரீசருக்கு அபிடேகம் செய்து துதித்தான். பாவமும் நீங்கியது.

இவ்வாறு வாயுதேவன் இரத்தினகிரிக்கு எழுந்தருளி அங்குள்ள ஈசனை வழிபட்டுத் தன் பாவத்தை நீக்கிக்கொண்டதை அறிந்த ஆதிடேசன், உடனே நாகலோகத்திலிருந்து பூலோகத்தையடைந்து, பல தலங்களைத் தரிசித்துப் பின்னர் இரத்தினகிரிக்கு வந்து அங்கொரு தீர்த்தம் (நாக தீர்த்தம்) உண்டாக்கி, அதில் ஸ்நானம் செய்து அந்நீராலேயே சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்து தன் பாபத்தைப் போக்கிக் கொண்டான்.

### இந்திரன் பூசித்தது

தேவேந்திரன் கௌதமருடைய பத்தினியான அகலிகையின் பால் இழைத்த அபசாரத்திற்காக அம்முனிவரால் சபிக்கப்பட்டான். அந்தச் சாப நிவர்த்தியின் பொருட்டுத் தன்னுடைய குரு பிரகஸ்பதியின் கட்டளைப்படி பூலோகத்தை அடைந்து அநேக சிவக்ஷேத்திரங்களைத் தரிசித்தும் சாபம் நீங்கப் பெறுமையால் கடைசியாக மாணிக்கமலையைக் கண்டான். கண்ட அளவில் இரு கரங்களையும் சிரமேற் கூப்பி வணங்கி அம்மலையிலேயே தன் வச்சிராயுதத்தால் ஒரு தீர்த்தம் (வச்சிர தீர்த்தம்) உண்டாக்கி, அதிலிருந்து தீர்த்தம் எடுத்து ஈசனுக்கு அபிஷேகம் செய்து பூசித்து வந்தான். இந்திரனுடைய பக்தியைக் கண்டு மகிழ்ந்து இறைவன் அவனுடைய உடலில் சாபத்தால் ஏற்பட்ட குறிகள் எல்லாம் ஆபரணங்களாகக் காண வரமளித்தார்.

### இடிக்கடவுள் பூசித்தது

சூரியன் உதயமாகும் உதயகிரியின் சமீபத்தில் மந்தேகம் என்னும் ஒரு தீவு உள்ளது. அதில் மிக்க தவவலிமை பெற்ற அசுரர் அநேகர் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் சூரியனோடு அடிக்கடி அமர் செய்வது வழக்கம். ஒரு சமயம் அவ்வசுரர்களை எதிர்த்துப் போர் புரிய ஆற்றுதவனுன சூரியன் புறங்காட்டி ஓடினன். அவனைக் கண்ட தேவர்கள் ''சூரியனே ஏன் இவ் வசுரர்களுக்குப் பயந்து ஓடவேண்டும். இவர்களை வெல்ல ஓர்

உபாயம் இருக்கின்றது. ஜம்பூத்வீபத்தில் காவேரி நதியின் தென்கரையில் ஒரு மலையிருக்கிறது. அது மேருமலையிலிருந்து சிதறிய சிகரங்களுள் ஒன்று. அம்மலை மேலுள்ள லிங்கத்திற்கு இரத்தினலிங்கம் என்று பெயர். நீ அங்கு சென்று இரத்தினலிங்கேசுவரரைப் பூசிப்பாயாகில் அசுரர்களை வெல்லுதற்குரிய ஆற்றலைப் பெறுவாய்'' எனக் கூச்சலிட்டார்கள். அதைக் கேட்ட ஆதித்தன் அங்கு தான் எவ்வாறு சென்று பூசிப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் நாரத முனிவர் அங்கு எழுந்தருளி "நீ உன் சகோதரனாகிய அசனி எனப்படும் இடியை அழைத்து அம்மலைக்கு ஏகக் கட்டளை இடுவாயாக'' என்றார். சூரியன் அவ்வண்ணமே இடியை அழைத்து இரத்தின கிரிக்குச் சென்று அங்கு ஒரு தீர்த்தம் உண்டாக்கும்படி பணித்தான். இடியும் அதை ஏற்று அங்கு சென்று சூரியன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கிப் பரமசிவனைப் பூசித்தான். ஈசன் இடியின் பூசைக்கு உகந்து, காட்சி தந்து சூரியனுக்கு அசுரர்களை வெல்லும் ஆற்றலைக் கொடுத்தருளினார். அவ்வரம் பெற்ற அசனி மீண்டும் சூரியன்பால் வந்து களிப்புடன் அவ்வரலாற்றை வெளியிடலும் அது கேட்ட சூரியன் அன்றுமுதல் அசுரர் பயமின்றி வாழ்ந்து வந்தான். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கே இடிக் கடவுள் பூசிப்பதாக ஒரு வழக்கு உண்டு.

### *அகத்தியர் பூசித்தது*

அகத்திய முனிவர் பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டே யாத்திரை செய்கையில் இரத்தின கிரியை அடைந்தார். அங்குள்ள வேப்ப மரத்தடியிலிருந்து வேதம் ஓதும் வேதியரைத் தரிசித்து வணங்கியபின் மேற்புறத்தில் ஒரு தீர்த்தத்தை (அகத்திய தீர்த்தம்)த் தனது பிரம்ம தண்டத்தினால் உண்டாக்கினார். அதில் நீராடி அந்நீரையெடுத்து இரத்தினாசலப் பெருமானுக்கு அபிடேகம் செய்து வணங்கி நின்றார். அப்போது இறைவன் இடப வாகனத்தில் உமையோடும் எழுந்தருளிக் காட்சியளித்தார். அவரைக் கண்டு அகத்தியர் வணங்கித் தனக்குப் பஞ்சாக்கர மந்திரோபதேசம் செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வண்ணமே இரத்தின கிரீசரும் அவர் கேட்ட வரத்தைத் தந்தருளி லிங்கத்தில் மறைந்தருளினார்.

### *உரோமசர் பூசித்தது*

முன்னாளில் சமரவேல் என்னும் அரசன் உலகம் முழுவதையும் மனுவைப்போல அரசாண்டு வந்தான். ஒருநாள் ஒரு காபாலிகன் அவனிடம் வந்தான். அரசன் அவனை வரவேற்று உபசரித்துத் தன்

அரண்மனையில் சிலநாள் தங்கும்படி வேண்டினான். அக் காபாலிக னும் அதற்கிசைந்து அங்கு தங்கிவரும் நாளில் அவன் அரசனுக்கு லோகாயத மதத்தை உபதேசித்து வரலானான். ''அரசனே! நீ சாஸ்திரங்களை உணர்ந்தும், அநேக வேள்விகளைச் செய்தும் விரதங்களை அனுஷ்டித்தும் தெய்வம் தொழுதும் இதுவரையில் யாது பயன் கண்டாய்?'' என்று பலபடியாகப் பலநாள் போதித்து அரசனைச் சாருவாக மதம் என்னும் படுகுழியில் ஆழ்த் தினான். அரசனும் அத்தீயவனுடைய போதனைப்படியே நடந்து கடைசியில் காலனுக்கு இரையாய்க் கொடிய நரகத்தில் வீழ்த்தப் பட்டான். அவன் பல துன்பங்களை அனுபவித்துப் பிசாசாகி விந்திய மலையின்கண் எங்கும் திரிந்து வரலானான்.

ஒருநாள் அவன் அம்மலைச் சாரலில் வசித்துவந்த தபோதன ராகிய உரோமச மகாமுனிவரைச் சந்தித்தான். அவரைக் கண்டதும் ஞானம் வரப்பெற்று அவரைப் பணிந்து தன்னைக் காத்தருள வேண்டுமென்று வேண்டினான். அதற்கிணங்க அம் முனிவர் பிசாசு உருக்கொண்ட அரசனுடன் பல சிவஸ்தலங்களைக் கண்டு தரிசித்தும் அநேக புண்ணிய நதிகளில் ஆடியும் வந்து கடைசியில் காவேரி நதியை அடைந்தார்.

உரோமசர் தம்முடன் வந்த அரசனை அப்பொன்னி நதியில் மூழ்கச் செய்து தாமும் மூழ்கி அந்நதியின் தென்கரையில் உள்ள கயிலாயம் ஒத்த மாணிக்க மலையை அடைந்து அம்மலைக்குக் கீழ்ப்பக்கத்தில் ஒரு தீர்த்தம் (உரோமேசர் தீர்த்தம்) உண்டாக்கி அவ்வரசனை அதில் மூழ்குவித்தார்.. அரசனும் தன் பேயுருவம் நீங்கப் பெற்று எழிலுருவம் பெற்றான்.

பிறகு உரோமசர் அவ்வரசனுடன் மலையின்மீது ஏறி, அங்கு வீற்றிருந்த ஈசனையும் தேவியையும் பணிந்து துதிசெய்தார். ஈசனார் லிங்கத்தினின்றும் வெளிப்பட்டு அவ்வரசனை இந்த நாவலந் தீவுக்கெல்லாம் அரசனாகிப் பின் தேவேந்திரனுமாகிக் கயிலாய மலையின்மீது வாழவும் வரமளித்தார். அரசன் திருவருள் புரிந்த அம்முனிவரையும் ஈசனையும் போற்றி விடைபெற்றுச் சென்றான். முனிவர் அந்தப் புண்ணியப் பொருப்பிலேயே தங்கி ஈசனைப் பூசித்து வரலானார்.

**துர்க்கை பூசித்தது**

முற்காலத்தில் சூரியவன்னி என்னும் ஓர் அவுணன், பலவரங்கள் கைவரப் பெற்றவனாய், ஜனங்களைக் கொடிய துன்பத் துக்கு உள்ளாக்கி வந்தான். அந்த அவுணனை அடக்க முடியாமல்

அரசன் கயிலாயம் உற்றுச் சிவனைத் துதித்துத் தானும் தன் குடிகளும் உய்யுமாறு அருள் புரிய வேண்டினான். பரமசிவன் துர்க்கையை அனுப்புவதாகச் சொல்லி அரசனைத் தன் நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

பார்வதி தேவியாரும் துர்க்கை வடிவம் கொண்டு பூமியில் வந்து அவ்வசுரனுடன் பல நாட்கள் போர் புரிந்து அவனைக் கொன்று உலகத்தாரைக் காப்பாற்றினாள். ஆயினும் அவனைக் கொன்ற பிரும்மஹத்தி தோஷம் தேவியைத் தொடரவே, அவளும் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு பொன்னி நதியடைந்து அதில் மூழ்கி மாணிக்க மலைக்குச் சென்று மலைக் கொழுந்தீசரைத் துதித்தலும், அவர் தோஷம் போக்கவல்ல சந்திரகாசம் என்ற வாளை ஈந்து, ''இந்த வாளால் மலையைப் பிளப்பாயாக'' என்றார். அப்படியே அவள் மலையைப் பிளக்க அது இருபிரிவுகளாயிற்று. பிரும்மஹத்தி தோஷமும் நீங்கி எல்லோருக்கும் அனுக்கிரகித்து வருகின்றாள்.

பொதுவாகவே இத்தலம் தேவர்கள்பலராலும்பூசிக்கப்பெற்றது. வராகரூபம் கொண்ட மகாவிஷ்ணுவும், இப்பூமியைத் தன் மருப்பில் ஏந்திய இன்னலை ஒழிக்கும் பொருட்டு இம்மலையின் மேற்றிசையில் ஒரு தீர்த்தம் (வராக தீர்த்தம்) உண்டாக்கினார். பரத்துவாச முனிவர் ஈசான திசையில் ஒரு தீர்த்தம் (பரத்துவாச தீர்த்தம்) உண்டாக்கியிருக்கிறார்.

### ஆரியராசன் பூசித்தது

ஆரிய நாட்டில் மங்கல மாநகரில் ஆரியராசன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். மனுநீதி வழுவாமல் இவன் ஆண்டு வந்த நாளில் ஒருநாள் அவனுடைய விலை மதிக்கப்படாத நவரத்ன கிரீடத்தின் சிகரத்தைச் சிவபெருமான், காவேரி நதியில் அவனை நீராட்டுவிக்க எண்ணியோ அல்லது அரசனின் பக்தியை உலகிற்கு உணர்த்த விரும்பியோ, எடுத்து மறைத்தருளினார்.

கிரீடம் மறைந்த செய்தியை மந்திரிகள் வாயிலாக அறிந்த அரசன் மிக்க கவலையுற்று அதை எங்கு தேடியும் காணமல் ஒரு தனியறையில் அமர்ந்து ஈசனைப் பலவாறும் பிரார்த்தித்தான். கவலை அதிகரிக்க அவன் அரசு பதவியையும் வெறுத்து, ஒன்றிலும் ஈடுபடாமல் இருந்து வந்தான். ஒருநாள் தன் அறையின் கதவைத் திறக்கும் சமயத்தில் சிவபெருமான் ஒரு கிழ அந்தணன் போல் வேடம் பூண்டு அரசன் எதிரே தோன்றினான். அதிசயமுற்ற மன்னனை அந்தணன் பார்த்து, அவனது முடிச்சிகரம் இரத்தின

கிரியில் கோயில் கொண்டிருக்கும் ஈசனிடத்தில் இருக்கக் கண்ட தாகவும், அவனிடம் போய்ப் பெற்றுக்கொள்ளும்படியும் பணித்து மறைந்தான்.

அந்தணர் மறைந்ததும் ஆரியராசன் தன் பரிவாரங்களுடன் தன் நகரைவிட்டுப் புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு, காவேரிநதிக்கரையில் உள்ள மாணிக்க மலையைச்சென்று சேர்ந்தான். அங்கு அடிவாரத்தில் உள்ள மண்டபத்தில் தங்கி பௌராணிகர்களிடம் அத்தலப் பெருமையையும் தீர்த்தங்களின் சிறப்பையும், அங்கு வந்து இறைவனைப் பூசித்த முனிவர்கள் வரலாற்றையும் கேட்டு மகிழ்ந்து மனம் ஒன்றி நின்றான். 'மலைமீது வருக' என ஆகாயவாக்கு ஒன்று எழுந்தது. அதைப் பின்பற்றி மலைமீது ஏறி ஈசன் சந்நிதிக்குச் சென்று வணங்கி நிற்க, வேதியர் உருவம் கொண்ட இறைவன் அவன் இன்னரெனக் கேட்டறிந்து அவன் வந்த காரியத்தையும் தெரிந்துகொண்டான். அங்குள்ள ஒரு கொப்பரையைச் சுட்டிக்காட்டி குளிப்பதற்கு அது நிறை யும்படி காவிரிநீர் கொண்டுவந்து கொட்டினல் ஈசன் வைப்பறை யில் உள்ள மணிமுடியை அவன் திரும்பப் பெறலாம் என்று சொன்னன்.

அந்தப் பணியை உடனே செய்வதாகச் சம்மதித்துக் குடங்குட மாகக் காவிரிநீர் கொணர்ந்து ஆரியராசன் அக்கொப்பரையில் ஆயிரம் குடம் கொட்டினன். அப்படியும் அக்கொப்பரை நிரம் பாமல் நீர் வெளியே கசிந்து ஒழுகுவதுபோல் காணப்பட்டது. இன்னும் நூறுகுடம் கொட்டினல் கொப்பரை நிறையுமென்று அந்தணன் சொல்ல அவ்வாறே அரசனும் மேலும் நூறு குடம் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றினன். கொப்பரை நிறையவில்லை. இன்னும் பத்து குடம்தான் குறைகிறது என்று அந்தணன் சொல்ல அதையும் கொணர்ந்து நிரப்பியும் ஒரு உழக்கு நீர் குறைந்து காணப்பட்டது. அந்தணனே நீர்முழுவதும் கொணர்ந்து கொட் டினலன்றி மணிமுடியைக் கொடேன் என்ருன். அரசன் அது கேட்டு வெகுண்டு தன் உடைவாளை உருவி வேதியன் முடியில் வெட்டினன். அவ் வேதியன் அக்கணத்திலேயே சிவலிங்கத்தில் மறைந்தருள, ஆரியராசனின் வெட்டு சிவலிங்கத்தின் முடியில் விழுந்தது.

வெட்டு விழுந்ததும் லிங்கத்தின் முடியிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாயத் தொடங்கியது. அது கண்டு அஞ்சி அரசன் சிவ லிங்கத்தைத் தன் இருகையாலும் அணைத்து, மெய் பதைத்துக் கண்ணீர் சொரிய தனது ஆடையால் பரமனது முடியினின்று

ஒழுகும் இரத்தத்தைத் துடைத்தான். அப்படியும் இரத்தம் அடங்காது பெருகிக் கொண்டிருந்ததைக் கண்டு மலையெங்கும் அலைந்து, பல பச்சிலைகளை எடுத்து வந்து அவற்றின் சாற்றைப் பிழிந்து சிவபிரான் முடியில் பூசினான். பூசியும் ரத்தம் நிற்காதது கண்டு மிகத் துயரமுற்று அங்கிருந்த கல்லில் தன் தலையை மோதிக் கொண்டான். உடனே சிவபெருமான் அவனைத் தடுத்து நிறுத்தி, அவனது தலைமீது தான் எடுத்து வந்த மணிச் சிகரத்தைப் பொருத்தி விடை கொடுத்தனுப்பினான். மன்னனும் பிரியா விடை கொண்டு ஆரிய நாட்டையடைந்து முன்போல் அரசு செலுத்த லானான். ஆரியராசன் தன் வாளைப் போக்கி ஈசன் தலையில் தழும்பு ஏற்படச் செய்த காரணத்தால் இறைவனுக்கு வாட் போக்கிநாதர், முடித்தழும்பர், இராசலிங்கம் என்னும் பெயர்கள் ஏற்பட்டன. அவனால் நீர் நிரப்பப்பட்ட கொப்பரை இன்னும்இருப்ப தாகச் சொல்லப்படுகிறது,

*சிற்றாயர் அருள் பெற்றது*

இரத்தினகிரியை அடுத்துள்ள குழித்தண்டலை என்னும் ஊரில் ஆயர் குலத்தில் ஒரு சிவ பக்தர் தோன்றினார். அவர் எப்போதும் மாணிக்க மலைக்குத் தம்முடைய பசுக்களை ஓட்டிக் கொண்டு அங்குள்ள சாரலில் மேய்த்து வருவது வழக்கம். மாலையில் ஒவ்வொரு நாளும் ஒரு பெருங்குடத்தில் பாலைக் கறந்து அப்பாலைச் சுமந்து கொண்டு மலைமீதேறிச் சிவபிரானுக்கு மெய்யன்புடன் அபிடேகம் செய்துவந்தார்.

ஒருநாள் அவ்வண்ணமே ஒரு பால் குடத்தை எடுத்துச் சென்று வழியில் அதை வைத்துவிட்டு, வேறொரு வேலையிலிருந்து குடத்தின் அருகே திரும்புகையில் ஒரு காகம் அந்தக் குடத்தைக் கவிழ்த்துவிட்டுப் பறந்து போய்விட்டது. அதைக் கண்ட சிற்றாயனார் பயந்து தரையிற் புரண்டழுது ஈசனைப் பார்த்து "ஐயனே! உனக்கு அபிடேகம் ஆட்டுவிக்க வைத்திருந்த பாலைக் காகம் கவிழ்த்து விட்டதே; நான் என் செய்வேன்" என்று ஏங்கி அழுதார். ஆயனார் மீது இரக்கங்கொண்ட மாணிக்கநாதர் முன்னம் மன்மதனைக் காய்ந்தது பேல் பிழைத்தற்கரிய பிழை செய்த காகத்தைத் தமது செங்கண்ணால் நோக்க அக்கணமே அது எரிந்து தரையில் வீழ்ந்தது. "இம்மலை முழுதும் என் மேனியே யாதலால் இந்த வெற்பில் சிந்திய பால் வீணாகவில்லை. அதை நீ செய்த அபிடேகமாகவே ஏற்றுக் கொண்டேன்" என்று சொல்லி அவரைத் தேற்றி அருளினார். சிற்றாயனாரும் ஈசன் அருள் பெற்று மகிழ்ந்தார். இப்போதும் இம்மலையில் ஒரு மட்டத்திற்கு மேல் காக்கை பறப்பதில்லை, 'காகம் அணுகாமலை' என்றே அம்

மலைக்குப் பெயராயிற்று. இங்கே அபிடேக நீரைப் பூசிக்கும் குடங்களில் காகத்தின் வடிவம் பொறிக்கப் பெற்றிருக்கும். இந்த வரலாற்றை நினைப்பூட்ட இந்த வழக்கம் இருந்து வருவதாகத் தெரிய வருகிறது.

*வயிரப் பெருமாள் மலைக்காவல் பெற்றது*

தொண்டை நாட்டிலுள்ள காஞ்சி மாநகரத்தில் ஆயர் குலத்தில் ஒரு சிவபக்தர் இருந்தார். அவருக்கு உத்தமியான ஒரு தங்கையிருந்தாள். அவளை அவளுடைய மாற்றுள் அவமதித்துப் பேசி மலடி என்று இகழ்ந்தாள். இது பொருது அவள் தன் அண்ணனிடம் முறையிட அவரும் தன் தங்கைக்கு ஒரு மகவு உண்டாக ஈசனை வேண்டி, பலதலங்களையும் தரிசித்துப் பின்னர் மாணிக்க மலையை அடைந்து அந்த ஈசனைப் பலநாள் துதித்துத் தன் சகோதரிக்கு ஓர் ஆண் மகவு வேண்டும்,அதற்குக் காணிக்கையாக "என் தலையையே தருகிறேன்'' என்று பிரார்த்தித்துக் கொண்டு பின் தனது இருப்பிடம் வந்து சேர்ந்தார். வந்ததும் தன் சகோதரியிடம் தான் கண்டு வந்த காட்சிகளை விவரித்து மாணிக்க மலையானின் பிரசாதத்தையும் அளித்தார்.

அவ்வம்மையாரும் இடைவிடாமல் அவ்வீசனையே தியானித்து உரிய காலத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். பிரார்த்தனைக்கேற்ப ஆயனும் மறுபடியும் தன் தங்கை சுற்றத்தார் புடை சூழ மாணிக்க மலையை அணுகி, ஒரு வாளால் தன் தலையை அரிந்து ஈசனுக்கு அர்ப்பணம் செய்தார். இது கண்ட அவருடைய உறவினர் யாவரும் அதிசயமும் துக்கமும் கொண்டு தங்கள் நகரத்துக்குத் திரும்பினர். அந்த ஆயரின் தலை அங்குள்ள வேம்பின் கீழ் ஒரு லிங்கமாயிற்று. அதற்கு அன்று முதல் எப்போதும் தீபாராதனை நடந்து வருகிறது. இவருக்கு வீரவாகு தேவர் என்ற பெயரும் வழங்குகின்றது. இவருடைய சிலை சுவாமி சந்நிதியிலும் அடிவாரத்திலும் உள்ளது. அவரையே அம்மலைக் காவலனாக இருக்கவும் ஈசன் பணித்தார். அவரது வைராக்கியத்தின் உறுதியையும் வயிரம் போன்ற மனத்திண்மையையும் கருதி அவருக்கு வயிரப் பெருமாள் என்ற பெயரும் உண்டாயிற்று.

*பொன்னிடும் பாறை வரலாறு*

திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரிலிருந்து தன் தோழரான சேரமான் பெருமாளைக் காணக் கொடுங்கோளூர் என்னும் நகரத்துக்குச் செல்லக் கருதி, அடியார்களுடன் புறப்பட்டுப் பல சிவஸ்தலங்களைத் தரிசித்துப் பின்னர் மாணிக்க மலையை அணுகினார். அம்மலையின் அருகே சென்றதும் அது ஒரு ஜோதி லிங்க

மாகக் காணப்பட்டமையால் சுந்தரமூர்த்தி நாயனர் திகைத்து நின்று, தமிழ்ப் பாப்புனைந்து ஈசனைத் துதித்துத் தமக்குப் பொன் வேண்டுமெனப் பிரார்த்தித்தார். ஈசனும் அவருக்கு அருள் புரியக் கருதி தமது பூதகணங்களை ஏவி, அம்மலைப் பாறையில் பொன்னைக் கொணர்ந்து சொரியக் கட்டளையிட்டார். அவ்வாறே சொரியப் பட்ட பொன்னை நாயனர் எடுத்துக் கொண்டு பதிகம் ஒன்று பாடித் துதித்தார். ஈசனும் அங்குள்ள ஒன்று பாதி என்னும் இடத்தில் சுந்தரர்க்குக் காட்சி அளித்தார். சுந்தரரும் அங்கிருந்தே மலைநாடு ஏகினர். (சுந்தரர் பாடிய இப்பதிகம் இப்போது கிடைக்க வில்லை.)

*பன்னிரண்டாம் பங்கு பெற்றது*

தஞ்சையை ஆண்டு வந்த சோழ மன்னன் ஒருவன் காவிரிப் பட்டினத்தில் வாழ்ந்து வந்த செட்டி குலத்தைச் சேர்ந்த பெண்ணை மணக்க நினைத்தான். இதை அனுமதிக்கமுடியாத நிலையில் காவிரிப்பட்டினமே தீக்கு இரையாக்கப்பட்டது. அந்த ஊரிலிருந்து தப்பி வந்தவர்கள் பதினெரு செட்டி குலத்தினைச் சேர்ந்தவர்கள்.

அவர்கள் தங்களுடன் எடுத்து வந்த பொருட் செல்வங்களை இரத்தினகிரி மலையில் வைத்துத்தான் பங்கு வைத்தார்கள். ஆளுக்கொரு பங்காக பதினெரு பங்காகப் பிரித்தனர். ஆனல் செல்வம் பன்னிரண்டு பங்குகளாகத் தானகவே பிரிந்தது. எத்துணை முறை பாகம் பிரித்த போதிலும் அத்துணை முறைகளிலும் மீண்டும் மீண்டும் பன்னிரண்டு பங்குகளாகவே பிரிந்தது. இதனல் வியப்புற்று நின்ற அவர்கள்முன் இறைவன் தோன்றி "என் இடத்தில் வைத்துச் செல்வங்களைப் பிரிக்கும் நீங்கள் எனக்கும் ஒரு பங்கு தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அது முதல் அவர்களுக்குப் 'பன்னிரண்டாம் செட்டியார்கள்' என்ற பெயர் வழங்கலாயிற்று.

இந்த வகுப்பினர் பல ஊர்களில் பரவி இருக்கின்றனர். இச் சமூகத்தினர் மேற்கூறிய இரத்தினகிரீசுவரர் மலையில் இன்றளவும் காலைச்சந்தி கட்டளையினைச் சிறப்புற நடத்தி வருகின்றனர். அழகிய நந்தவனம் ஒன்றை அமைத்துப் புஷ்பத்தொண்டு செய்தும், பால் அபிஷேகத்துக்காகப் பசுமடம் ஒன்று நிறுவிப் பால் வழங்கியும் இறைவர்க்குத் தாங்கள் பங்காளர் என்பதை இன்றும் காட்டி வருகிறர்கள். 'கொண்டாடும் பன்னிருவர் கூட்டம் பணி செய்ய என்றும், (198) 'பன்னிருவர் பாலுகந்த பன்னிருவர் போற்றியது பன்னிருவர் வாழ்த்தவே, பன்னிருவர் என்னுடனே என்று வருநாடன்' (393) என்ற அடிகளில் பன்னிரண்டாம்

செட்டியார்களின் தெய்வப் பணிகளை உலாவாசிரியர் பாராட்டியுள்ளார். அக்கால முதல் இன்றும் அவர்கள் ஈட்டிய பொருளில் பன்னிரண்டில் ஒரு பாகத்தை இறைவனுக்குக் காணிக்கையாக்கி வருகிறார்கள். தங்கள் முன்னோர்களிடம் பங்குபெற்ற அவ்விறைவர் அதற்கு நன்றியாக, விழாக்காலங்களில் தாம் தேர்மீதமர்ந்து பவனிவருவது போல அவர்களும் தங்கள் கலியாண காலங்களில் தேர்மீதேறி பவனிவரும் சிறப்பை நல்கியுள்ளனர். அம்மாணிக்க வெற்பன் தங்களுக்கருளிய பேரருளின் ஞாபகார்த்தமாக அப்பெருமானுடைய தேரைப் புதிய முறையில் முன்னையோர்கள் செய்தமைத்தார்கள். அந்தத் தேரில்தான் இரத்தினிகிரி ஆண்டவர் அன்றும் பவனிவந்தார், இன்றும் பவனி வருகிறார்—இந்தச் செயல்கள் யாவும் உலாவாசிரியரால் அழகுறப் பேசப்படுகின்றன. *

"கூட்டுபதி னென்றுன கோநகரத்தார் முன்போய்
நாட்டுமிதில் நாமோர் நகரமென—தேட்டமதாய்
ஈசனார் சொல்ல இசைவுகொண்ட நாள்முதலாய்
மாசிலா (து) ஓங்கும் மகிமையுடன்—தேசமேல்
பன்னிரு வராகிப் பலதிசையும் கீர்த்திசெல
மன்னியே வாழும் வணிகர் அன்பாய்—பின்னியற்றும்
செம்பொன் மணித்தேரேறித் தேவியுடன் "

பவனி வருகின்றார் என்பது அந்த உலாக் கண்ணிகள் (119—123)

*கல்வெட்டுகள்*

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுகளில் இரத்தின கிரியில் 50 கல்வெட்டுகளும், சிவாயம் கோயிலில் 7 கல்வெட்டுகளும் உள்ளன. இவை தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 1914 ஆம் ஆண்டில் 144 முதல் 191 எண்களாகவும்; 1892 இல் 102, 103 எண்களாகவும்; சிவாயம் கோயிலில் உள்ளவை 1913 ஆம் ஆண்டில் 44 முதல் 50 வரையில் உள்ள எண்களாகவும் பதிவு செய்யப் பட்டுள்ளன.

இவை சுவாமி அம்மன் கோயில்களில் உள்ள சுற்றுச் சுவர்களிலும், மலையின் பாறைகளிலும் வெட்டப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளால் பழமையான பல செய்திகள் தெரிய வருகின்றன.

*கல்வெட்டுச் செய்திகளின் சுருக்கம்*

இம்மலை, மாணிக்கமலை, வாட்போக்கி என்றும் சுவாமிக்குக் குன்றம் உடையார், திருமாணிக்க மலை உடைய தம்பிரானார்,

---

* பன்னிரண்டாம் செட்டிமாரைப் பற்றிய வரலாற்றை Appendix II பக்கம் 1—2ல் பார்க்க.

மகாதேவர், நாயனார், வாட்போக்கி மகாதேவர் என்றும்; அம்மனுக்கு ஹரவட்டேஸ்வரி (ஹரவக்ஷேஸ்வரி) என்றும்; இவ்வூர்ப் பகுதி தென்கரை ராஜகம்பீர வளநாட்டைச் சேர்ந்த குறுநகர் நாடு என்றும் பெயர்கள் வழங்கி வந்திருப்பனவாகத் தெரிய வருகிறது.

கி. பி. 1783-ல் மலைமேல் உள்ள கோயில் மண்டபங்கள் கட்டப் பட்டதும், 13-வது நூற்றாண்டில் ஹொய்சள மன்னனாகிய வீரசோமேஸ்வரனது ஆட்சியில் இந்நாட்டின் பெரும் பகுதி இருந்து வந்ததும் புலனாகின்றன. இவன் பெயரால் சோமேஸ்வரன் பேட்டை (சோம சரம்பேட்டை) என்ற ஊரும் இருப்பதை அறியலாம். அது இப்போது சோமரசம் பேட்டை என வழங்கி வருகிறது.

சுவாமி சந்நிதிக்குப் போகும் மூன்று வரிசைப் படிக்கட்டுகள் ராசிங்க தேவன் என்பவனால் கட்டப் பட்டதாகத் தெரிகிறது. சிவபாத சேகரபுரம் என்னும் பகுதியில் இருந்தவர்கள், இக் கோயிலுக்குப் பல தானங்களைச் செய்து உள்ளார்கள். ராஜ ராஜ சோழதேவன், ஜடாவர்மன், சுந்தரபாண்டியன், விஜயநகர மன்னர்களான சதாசிவ மகாராயர், வீரநரசிம்ம புஜபல மகாராயர், விருப்பண்ண உடையார், கோனேரிமேக் கொண்டான் (கோன் - நேர் - இன்மை கொண்டான்,) குலோத்துங்க சோழர்கள், விக்கிரம சோழன், ஹொய்சள மன்னன் வீரராமநாத தேவன் முதலான அரசர்களின் ஆட்சிக் காலங்களில் கோயில் பூஜைக்கும், விளக்கிடுவதற்கும், காவிரி யிலிருந்து குடங்களில் நீர்கொண்டு வருவதற்கும், திருவிழாக்கள் நடத்துவதற்கும், வெற்றிலை பாக்கு நைவேத்தியத்திற்கும் நிலங் களும் பொற்காசுகளும் பணமும், துலையுறை செம்பொன்னும் தனித்தனியே தானம் செய்யப்பட்டுள்ளன.

161 - வது எண் கல்வெட்டுப்படி, சிற்றம்பருடையான் என்ப வனால் தக்ஷிணாமூர்த்தி சிலையும், திருப்படிகளும் அமைக்கப் பட்டுள்ளன. வெவ்வேறு அரசர்களின் காலங்களில் வெவ்வேறு திருப்பணிகள் நடை பெற்றுள்ளன. அவ்வப்போது கோயிலுக்கு ஏற்பட்ட தான தருமங்கள், அறச்செயல்கள், ஆகியவைகளைப் பற்றிச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பேர்வரி, சில்வரி, வெட்டிவேதினை, குலைதாம்பு, செய்நீர் வெட்டி, முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. காசு, ஆனைஅச்சு, துலைஉறை செம்பொன் முதலிய பெயர்கள் அக் காலத்து நாணயங்களைத் தெரிவிக்கின்றன. கருங்கீழ்ப்பள்ளி

எதிரிலி சோழநல்லூர், வீரசோழ சதுர்வேதி மங்கலம், சிவபாத சேகரபுரம். வல்லட மங்கலம், சாத்த மங்கலம், சோழபாண்டிபுரம் முதலிய ஊர்ப்பெயர்கள் சொல்லப்படுகின்றன.

*இத்தலத்தைப் பற்றிய நூல்கள்*

அரதனமலை, காகம் பறவாமலை, வாட்போக்கிமலை, சிவதைபுரி, பஞ்சாக்கரமலை, சொக்கர் மலை எனப் பல திருநாமங்களால் அழைக்கப்படும். இம்மலைவாழ் இறைவன் இறைவியரைத் திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரத்தில், 'திருவாட்போக்கி திருக்குறுந் தொகை'யில் பத்து பாக்களால் பாடியிருக்கிறார். அவர் பாடிய திருத்தாண்டகமும் உள்ளது. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் இத்தலம் பற்றிய இருபாடல்கள் உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவக்ஷேத்திர சிவநாமக்கலி வெண்பா என்னும் நூலில் இத்தலத்தைக் குறிப்பிடுகிறார். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலம் பற்றி ஒரு கலம்பகம் இயற்றியுள்ளார். அதற்கு வாட்போக்கிக் கலம்பகம் என்று பெயர். 1910, 1925 – ல் டாக்டர் ஐயரவர்கள் வெளியிட்ட மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டின் பகுதியில் மூலமும், 1976-இல் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலையத்தாரால் தனியே குறிப்புரையுடனும் வெளியிடப் பெற்றது. 'சிவஸ்தல மஞ்சரி' என்னும் நூலில் இத்தலம் பற்றியும் காவிரி தீர்த்தம் தலபுராண வரலாறு காணப்படுகிறது. 'இரத்திரைசல மான்மியம்' என்னும் நூல் யாழ்ப்பாணம் தாமோதரம் பிள்ளையால் உரைநடையில் இயற்றப்பட்டது. திருவாரூர் வைத்தியநாத தேசிகர் முதலியோரால் செய்யுளில் செய்யப் பெற்ற 'திருவாட்போக்கி புராணம்' ஒன்றுள்ளது. இது நைமிசசருக்கம் முதல் பொன்னிடும் பாறைச் சருக்கம் வரை 14 சருக்கங்களைக் கொண்டது. 1911 - ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. புராணக் கதைகளை எளிதில் தெரிந்து கொள்ளும் பொருட்டு அலகறை வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரால் வசன ரூபமாக எழுதப்பட்ட வசன சுருக்கங்களும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மாணிக்கமலை நாதர் பேரில் 'திருத்தொண்டர் சதகம்' திருப்பாண்டிக் கொடுமுடி மலைக்கொழுந்து கவிராயர் பாடியது. அச்சானது. வெண்பாப்புலி தி. சு. வேலுசாமிப் பிள்ளையவர்கள் 'தேவார சிவதலவெண்பா' என்னும் நூலில்,

'முன்பான் முலைச்சுவடு மோலிமேல் வாட்டழும்பு
பின்பாற் பிரம்புவடுப் பெற்றவனை - அன்பார்ந்த
வாட்போக்கி யானைநன்கு வாழ்த்தாமலேவாளா
நாட்போக்கி யானின்றனன்.'

என்ற அழகிய பாடலைத் தந்துள்ளார். திரு. வே. முத்துசாமி ஐயரும் கவிராச பண்டித கனகராஜ ஐயரும் சேர்ந்து பாடிய 'வாட்போக்கீசர் இரட்டை மணிமாலை' என்னும் நூலும் உள்ளது (1934). சிவாயமலைக் கோயில் வரலாறு என்னும் நூல் R. பஞ்சநதம் பிள்ளையவர்களால் 1950 - ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ளது. 1968 - ல் 'வாட்போக்கி வெண்பா அந்தாதி என்னும் நூலும் திருவாசக மணி K. M. பாலசுப்பிரமணியன் அவர்களால் இயற்றப்பட்டது.

## வாட்போக்கி உலாவின் பொருட் சுருக்கம்

இவ்வுலாவில் முதல் ஒன்பது கண்ணிகளில் சிவபெருமான் பெருமை கூறப்படுகிறது. அவன் தெய்வங்களுக்கெல்லாம் மேலானவன் (தெய்வப்பராபரன்); அவனே காண்பானும் காட்சியுமாய் விளங்குகிறான்; ஆனந்தமும் அறிவும் அவனே; அவன் அந்தமில்லாத் தனிமுதல்; காலத்தின் எல்லை கடந்தவன்; ஓங்காரமாகி நின்றவன்; உருவமும் அருவமுமாகிநின்றவன்.

10—ஆவது முதல் 32ஆம் கண்ணிவரை, வாட்போக்கித் தலச் சிறப்பு கூறப்பெறுகிறது. இத்தலத்தை அணுகிப் பேறு பெற்றோர் வரலாறு காணப்படுகிறது. இத்தலத்து ஈசன் சூரிய மண்டலம் ஒத்த ஒளிவீசும் மாணிக்க வெற்பை இடமாகக் கொண்டவன். அவன் தன் பெயரையும் வாட்போக்கி என்றே அமைத்துக் கொண்டான். உரோமச முனிவருக்கும் சமரவேல் என்னும் அரசனுக்கும் அருளியவன்; செங்கதிரோன் அசுரர்கள் செய்கின்ற தீமையினின்று விடுபட இத்தலத்தையடைந்து தன் இடர் நீங்கப் பெற்றான்; இடிக் கடவுள் துதிக்க அவனுக்கு வரமளித்தான்; இந்திரன், அகத்தியர், ஆரிய அரசன் இவர்களுக்கு அருளியவன். துர்க்கையின் பிரம்மகத்தி தோஷத்தை நீக்கியவன் ; தொண்டர்கள் தவம் செய்ய பஞ்சாக்கரக் குகையை நிருவியவன். நேரியர்கோன் பெண்டிருக்குப் பொன்னாரம் காட்டியவன்; வாயு தேவன் பூசிக்க அவனுக்கு வரம் கொடுத்தோன்; முருகேசன் எனும் பக்தனளித்தத் தூண்டா விளக்கை ஏற்றருளியவன் என்று பலவிதமாக இத்தலத்து ஈசனின் பெருமை கூறப்படுகிறது.

33—வது முதல் 45—ஆம் கண்ணிவரை தீர்த்தச் சிறப்பு சொல்லப்படுகிறது. அவைகள் வருமாறு: சதாகதி, தீர்த்தம், குலிச தீர்த்தம், நாக தீர்த்தம், சூரிய தீர்த்தம், கஜ தீர்த்தம், உரோமச தீர்த்தம், துர்க்கா தீர்த்தம், பரத்துவாச தீர்த்தம் என்பவை எட்டுத்

திக்குகளிலும் உள்ளன. இவைதவிர, பஞ்சாக்கரச்சுனே, தெய்வச் சுனே, வராகச்சுனே இவைகளும் இங்கு உள்ளன.

மேலும், இத்தலத்து ஈசன் வேப்பமரத்தைத் தலவிருக்ஷமாகக் கொண்டவன்; நீலகண்ட சோழன் ஆற்றிய பணிவிடையை ஏற்று அவனுக்கு நற்கதியருளியவன்; முனிவர் எண்மருக்கு வரம் ஈந்தவன்; சிற்றுயனுர்க்குத் தன்னேயே தியாகம் செய்தவன்; யாவர் அணுகினும் வரையாது வரமளிப்பவன்.

46—ஆவது கண்ணிமுதல் 57—ஆம் கண்ணிவரை, காகம் அணுகாக் கனகிரியான், காவேரி ஆற்றினன்; குன்று சூழ் நாட்டினன்; சிவாயநகரினன்; யோகக் குதிரையான்; மெய்ஞ் ஞான ஆனேயான்; பொன்னிதழி மாலேயான்; நாத முரசினன்; ஏற்றுக் கொடியினன்; அஞ்செழுத்தின் ஆணேயான் என இறை வனுக்குரிய பத்து அங்கங்களும் பேசப் பெறுகின்றன.

58-ஆம் கண்ணி முதல் 71—ஆம் கண்ணிவரை இரத்தினகிரி ஈசனின் பெரும் புகழ் பேசப்படுகின்றது. இங்கு, முதல் நான்கு கண்ணிகளும் மடக்கு என்னும் அணியில் அமைக்கப்பட்டுள்ளன. பின்னர், பஞ்சாங்கங்களில் நட்சத்திரம் ஒழிந்த திதி வார யோக கரணம் என்னும் நான்கும் கூறப் பெறுகின்றன; சித்திரை முதல் பங்குனி வரை பன்னிரண்டு மாதங்களின் பெயருடன் இணேத்து இறைவன் புகழ் பேசப்படுகிறது. சித்திரை மாதத்தில் தேரோட்டுத் திருநாளில் ஈசன் பவனி வருகிறுன்.

72—ஆவது முதல் 74—ஆம் கண்ணிவரை சூரிய மண்டலம் போல் பிரகாசிக்கும் மண்டபத்தில் வீற்றிருந்து காப்பணிந்து, கொடியேற்றி வீதிகுலவும் செய்தி சொல்லப்படுகிறது.

75—ஆவது கண்ணிமுதல் 117-ஆம் கண்ணிவரை கேசாதி பாதமாக இறைவன் அணிந்த அணிகளின் வகை குறிக்கப்படு கின்றன. நெற்றியில் திருச்சாந்து திலகம், மார்பில் வெண்பட்டு, கொன்றை மாலே, சந்தனக் குழம்பு, முனிவர்கள் வெண்சாமரை வீசுதல்; பெண்கள் பல கீதம் பாடல்; தென்றல் உலவுதல்; நிலவு எறித்தல்; மாதவர்கள் சூழ்ந்து புகழ்ந்துவரல்—இவ்வித அலங்கார விசேஷங்களுடன் ஈசன் பள்ளியறை சேர்தலும் திருப்பள்ளி எழுச்சியும் 75 முதல் 90 வரையுள்ள கண்ணிகளில் கூறப்படு கின்றன.

பின்னர், பொன்னி நீர் ஆடிய திருச்சடை, செம்பொன் ஆடை, ஆதிசேடன் உதரபந்தனம், மும்மூர்த்திகளும் ஒருங் கிணேந்தாற் போன்ற முப்புரிநூல், மணிமகுடம், நுதற்பட்டம்,

காதிற் பொற்குழையும் தோடும், மார்பில் பொன்மாலை வேய் முத்துக்கண்டசரம், தோளில் கேயூரம், தோள் வளையம், மணிப் பதக்கம், மணிமாலை, கைகளில் மழு, மான், துடி, இவைகள் வர்ணிக்கப்படுகின்றன (91—108)

இறைவன் சிவிகையேறியபோது தலைமாலை ஆடியது, சடை யும் பிறையும் அலைமோதி ஆடின, கொன்றை மாலை துவண்டாடி யது, சங்கம் அதிர்ந்தது, தடாரி, முழவு, முரசுத் தொகை இவை அதிர்ந்தன. ஈசன் திருவாடுதண்டேறி வருகையில் சிலர் வெண் குடை நிழற்றவும், சிலர் வெண்சாமரை அசைக்கவும், சிலர் ஆல வட்டம் வீசவும், சிலர் காளாஞ்சி ஏந்தி வரவும் சிலர்செம்பொற் பிரம்புஏந்தி வரவும், ஆகிய நிகழ்ச்சிகள் சொல்லப்படு கின்றன.(109—117)

இவ்வாறு சிவிகையேறி, பிரகாரத்தில் உலாவந்த ஈசன் கோபுர வாசல் அடைந்து பொன்னிடு பாறைக் கருகில் பன்னிரெண்டாம் செட்டிமார் அமைத்துத்தந்த, செம்பொன் மணித்தேர் ஏறுதலை 118—123 கண்ணிகள் குறிக்கின்றன.

தேரேறி ஈசன் அமர்ந்தவுடன் தடாரி, துடி, திமிலை, தண் ணுமை, கைத்தாளம், முரசு, மணி, மேளம், குடமுழா, சங்கு, திமிரி, தவில், நாகசுரம், மங்கல கீதம், வாத்தியங்கள் முழங்கினமையை 124, 125-ஆம் கண்ணிகள் வர்ணிக்கின்றன.

126, 127-ஆம் கண்ணிகளில் பிச்சம், துவசம், சந்திரவட்டை முதலான சின்னங்கள் சூழ்ந்து வருதல் குறிக்கப்படுகிறது.

இரத்தினகிரி ஈசர் பவனி வருதலைக் காண பிரமன் முதலி யோர் தம்தம் வாகனங்களில் வருதலை 128-137 கண்ணிகள் குறிப்பிடுகின்றன. பிரமன் அன்னத்தின்மேலும், திருமால் கருடன் மேலும், வீரபாகுதேவன் இடபத்தின் மேலும், தேவர்கள் விமானத் தேர்களிலும், விநாயகன் பெருச்சாளி வாகனத்திலும், முருகன் மயில் மீதும், எண் திசைக் காவலர்கள் மா, மறி, கடா, பூதம், மீன், மான், புஷ்பரதம், காளை இவைகளிலும், காளி சிங்கத் தின் மேலும், பைரவர் நாய் ஊர்தியிலும், சாத்தன் யானை மேலும் வந்து குழுமுகின்றனர். சப்த கன்னிமார், எட்டு முனிவர், பதி னொரு ருத்திரர்கள், அசுவினித் தேவர் இருவர் இவர்கள் தத்தம் விமானத்தில் ஏறி வருகின்றனர். வித்யாதரரும் கந்தர்வரும் வந்து சேர்ந்து கொள்கின்றனர். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சண்டேசர் ஆகியோரும் சிவிகையில் ஊர்ந்து வந்து சேருகின்றனர்.

தேரில் ஏறிவரும் இறைவனைச் சூழ்ந்து ஆதிசைவக் குருமார், பணியாளர்கள் இவர்கள் தொடர்ந்து வருதலை 138 முதல் 146 வரையுள்ள கண்ணிகள் கூறுகின்றன.

சுந்தரமூர்த்தி நாயனாரின் வழிவந்த சிவாயநகர் கோயிலிடத்து உறையும் வாட்போக்கிப் பண்டிதரும், தியாக விநோதக் குருவும், மாணிக்கவாசக தேசிகரும், பிரமனைப் போன்ற தட்சிணாமூர்த்திப் பண்டிதரும், ஸ்தானிகரும், ஓதுவாரும், மறையோரும் திரண்டுவர, கம்பையன் என்னும் அதிகாரி செங்கோல் ஏந்தி முன்செல்ல, மாத வரும், வேலாயுதம் என்ற வள்ளலும், ஆரிய அரசனின் வழிவந்த திருமஞ்சனப் பண்டாரரும், கோயில் பணியாளரும், கணக்கர்களும், செட்டிமார்களும், நிருத்தம் இசைஇரண்டும்கூட்டி தேவனின்முன் நித்தம் சேவை செய்யும் ஆடல் மகளிரும் சூழ்ந்து வருகின்றனர்.

147 முதல் 150-ஆம் கண்ணிவரை திருச்சின்னங்கள் கட்டியம் கூறலைக் குறிப்பிடுகின்றார். இங்கு மாணிக்க மலை ஈசனை சுருதி முடி (வேதாந்தம்) க்கு எட்டாத சிவன், தினகர் சகாயன், ஆரியனுக்கு அருளிய அரன், மாணிக்க மலைக் கொழுந்தன், முடித் தழும்பன், சிவாய நகர் ஆதியான், கொன்றையணிந்தவன், நெற்றிக் கண்ணன் என்றெல்லாம் வர்ணிக்கிறார்.

151-ஆவது கண்ணி முதல் மகளிர் குழாங்களைப் பற்றிய செய்திகள் கூறப்படும். இப்பகுதியில் ககன மடந்தையர் முதலியோர், மானிடப் பெண்களின் வடிவமெடுத்து, குழாங் கொண்டு வாட்போக்கி இறைவனைத் தரிசித்து அவனை முன்னிலைப் படுத்தித் தமக்கு அருள் செய்ய வேண்டுமென்று வேண்டித் துதிப்பது காணப்படும்.

172-ஆவது முதல் 204-ஆம் கண்ணிவரை பேதையின் அவயவ வருணனையும், பின்னர் அவள் பருவத்திற்கேற்பச் செய்யும் செயல்களும் கூறப்படும். பேதையைக் காமக்குருத்து, அபரஞ்சி, ஆடா மடமஞ்ஞை, வாசம் தொடுக்கா மலர்க் கண்ணி, மாலை புகுதா மருக்கொழுந்து குளிர்தென்றல், கடல் படியா ஆரமுதம், வேயிற் பிறவா விளை முத்தம், கூட்டி முடியாக் குழலினாள், கொலை சிறிதும் கல்லர் நிலை படைத்த கண்ணினாள், குயிலும் ஒவ்வா மழலையாள், செத்துப் பிழைக்கும் தெய்வங்கள்போல விழுந்து மீண்டும் முளைக்கும் எயிற்றினாள், சூதுபெறத்தோன்றும் துணை முலையாள் என்றெல்லாம் வருணிக்கிறார்.

பேதையின் செயல்களைப் பற்றிக் கூறுங்கால் அணி புனைய எனக்கு வண்ண முலையைக் காட்டுங்கள் என்பாள்; தன் நிழலையே ஒரு பாங்கி என நினைத்து மனைபுகுந்து தேடுவாள்; தான் சிற்றி

விடைச் சமைத்த மணற் சோற்றை அருந்த ஈசனை வாவென்றழைப்பாள்; என் அருகில் இவர் வாராரோ என்பாள். அப்போது அன்னையர் அவளைப் பார்த்து ஈசனுர் அமரர்க்கு அன்று அமுதத்தையே படைத்தளித்தவன்; இன்று உன் மணற் சோற்றை விரும்பி வருவானே; அச்சோறு அவனேறும் விடைக்கே (திருமால்) உரியது என்பார்; சிவபெருமான்பால் எத்தகைய அன்புணர்ச்சியும் இல்லாதிருந்தும் அன்னையர்கள் அஞ்சலிப்பது கண்டு தானும் அஞ்சலித்தாள் என்று கூறுமுகத்தால் பேதையின் தன்மையை நன்கு விளக்குகிருர் ஆசிரியர்.

205-ஆம் கண்ணி முதல் பெதும்பையின் அவயவ வருணனையும் அவள் நிலா முற்றத்தில் தோழியர்கள் சூழக் கழங்காடுதலும் கூறப்படுகின்றன.

அறிந்தும் அறியாப்பருவத்தினள் ஆதலின் பக்குவமாய்ப் பன்னும் முகையன்ன பருவத்தாள் என்கிருர். இப்பருவம் அன்பு அரும்பினும் அது முற்றுப் பருவமாதலின் அதற்கேற்ப முகை என்றும், மன்மதன் செங்கோல் செலுத்தற்கு இளவரசாய் வைத்து அபிடேகம் செய்யக் கூடிய வனப்பினுள் என்றும், அகத்திய முனிவரால் ஆழ்த்தப்பட்ட விந்தமலை, அவர் போய்விட்டாரா என்று சற்றே தலைநிமிர்ந்து பார்ப்பது போல் தோன்றும் தனத்தாள் என்றும், அன்று மதுரையில் மேகங்கள் கூடினபோல் இன்று கூட்டி முடியக் கூடிய குழலாள் என்றும், கடற்கண்ணினுள், அன்ன நடையினுள், மயிலை ஏய்க்கும் சாயலாள், குயிலைப் பழிக்கும் மழலையாள் என்றும் வர்ணிக்கிருர்.

219-ஆம் கண்ணிமுதல் 228 வரை பெதும்பை கழலாடல் கூறப்பெறுகிறது. 229 முதல் 237 வரை கோட்டையின் உறுப்புகள் சொல்லப்படுகின்றன; பின்னர் ஙீடவார் தொழ ஈசனைத் தானும் தொழுகிருள். வாயார வாழ்த்துகிருள். அன்னையரைக் கூவித தேர் மீதில் என்னை இவர் பாகத்து இருத்தும் என்கிருள். அதற்கு அவர்கள் உமையைப்போல் நீ அவர் பக்கலில் அமரத் தகுந்தவளோ என, ஏன் சென்னியில் மற்ருேர் பெண்ணைவைத்திருக்கும் இவ்வீசன் என்னை ஏற்கானே என்கிருள். சிவனது பக்கத்தே வீற்றிருக்க வேண்டும் என்னும் அவா அவளுடைய விருப்பத் தொடக்கத்தையும் தோழியரின் சமாதானத்தால் அவ்விருப்பம் முற்றுப் பெருமையையும புலப்படுத்துகின்றன.

கண்ணி 252 முதல் 280 வரை மங்கைப்பருவத்தாளின் உடலுறுப்பின் வருணனையும் அவள் செயல்களும் கூறப்படுகின்றன.

இவள் இலக்குமிக்கு நிகரானவள் என்றும், பஞ்சாக்கரச் சுனையில் படும் பாசி நிகர் குழலாள் என்றும், அமுதமும் விடமும்

தோய்ந்த கண்ணினுள் என்றும், தாளத்தைப் போன்ற குவிமுலையாள் என்றும், இளைஞரை வெருட்டும் நடையழகை உடையவள் என்றும் வர்ணிக்கப்படுகிருள்.

இவள் அம்மானையாடும் அளவிலே வாட்போக்கி நாதன் கொடி நெடுந்தேர் அணுக இவளும் ஆடலைவிட்டு பூத்தூவி வந்திக்கிருள்.

இவ்விறைவனை நான் எவ்வாறு அடைவது என இவள் கேட்க மாதாயர், கேதாரி மங்கையான உமை தவம் செய்து இவரையடைந்தாள்; கன்ருப்பூர் மங்கைக்கு அவள் நித்தம் தொழுததினுல் இவர் கட்டுத்தறியில் காட்சி கொடுத்தார்; பட்ட மங்கை எனும் பதியில் ஒரு பெண் துதித்ததனுலேயே இவரைப் பெற முடிந்தது; ஆகையால் நீயும் தொழுதால் அவனைப் பெறலாம் என்கின்றனர். அவ்வளவில் ஈசனுர் தேர்மீதில் அடுத்த வீதிக்கு எழுந்தருளினமை கூறப்பெறுகிறது.

மடந்தையின் உடலமைப்பும் செயல்களும் 281-ஆம் கண்ணி முதல் 314-ஆம் கண்ணிவரை கூறப்படும்.

பின்னி முடித்த அவள் கூந்தலும் அதில் அணிந்திருந்த பிறை என்னும் அணியும், மேகத்தையும் அதன் நடுவில் ஒளிவிடும் மின்னலையும் ஒத்திருப்பதையும், அவள் தன் நெற்றியில் இட்ட பொட்டை நோக்கி இளையோர்கள் தினம் வட்டமிடும் வனப்பினுள் என்றும், மதன் அம்பு போன்ற நயனத்தாள் எனவும், கேடகம் போன்ற தோடிட்ட காதினுள் என்றும், அவள் அணிந்துள்ள மூக்குத்தியின் ஒளி, சந்திரனே வந்து மூக்கில் அமர்ந்தானே எனத் தோற்றுதலையும், முல்லை நகையும், இதழ்போன்ற உதடுகளும், செவ்வாயும், கமுகின் பாளை போன்ற கழுத்தமைப்பும், செங்கையும், பூரித்தெழுந்த தடமுலையும், வலஞ்சுழித்த உந்தியும், சிற்றிடையும், நண்டுபோன்ற முழந்தாளும், வரால் போன்ற காலும், சிலம்பொலிக்கும் பாதமும் வர்ணிக்கப்படுகின்றன.

இந்த நலங்களையுடைய மங்கை யாழைமீட்ட எதிராகப் பாங்கியர் பண் பாடுதலை 296-297 கண்ணிகளில் கூறுகிருர்.

விண்ணிலும், மண்ணிலும், பிற உலகங்களிலும் காண்பதற்கு அழகிய தலைவரை ஆய்ந்து கூறுங்கள் எனமடந்தை தோழியர்களை வினவ, பிருந்தை எனும் பெண்ணையணைவதற்காகச் சுடுகாட்டில் அவள் இறந்த உடலைப் புல்லிய மாலும், தன் மனைவியான சரஸ்வதி தக்கயாத்தில் மூக்கிழந்தும் அவளை நாவில்வைத்துள்ள பிரமனும், கோதமமுனிவன் சாபத்தால் உடல் முழுவதும் பங்கமுற்ற இந்திரனும், தன் மனைவியை ஒரு குளிகையாகத் திரட்டிக் கையில்

வைத்துள்ள தேவனும், மற்றும் தக்கயாகத்தில் கலைதேய்ந்த சந்திரனும், பல்போன சூரியனும் இவனுக்கு நிகராவனோ என்று பாங்கியர் கூறுவது 297 முதல் 302-ஆம் கண்ணிகளில் காணப்படுகின்றன.

கண்ணிகள் 303 முதல் 306 வரை தேர்மேல் வருபவன் பெண்ணுக்கும்ஆணுக்கும் பேரழகன்,கண்ணுக்கினியவாட்போக்கியான், நமனை மார்க்கண்டனுக்காக ஆகத்திலே உதைத்தவன், தக்கயாகத்தில் தேவர்களைச் சிதைத்தவன், மாணிக்க மலைக் கொழுந்தாக அமர்ந்து நாகத்தின் பூசையை ஏற்றவன், காவிரியின் நீரால் ஆட்டப் பெறும் சடையையுடையவன், என்று பாங்கியர் கூற்று பேசப்படுகிறது. அப்படி அணுகி வந்த இறைவனை மடந்தை பாதமுதல் முடிவரை உற்று நோக்கித் தொழுகிருள். நீதி வழுவாத நீர் எங்கள் நிறையைக் கவர்வது தகுமோ; ஆற்றைத் தலையில் உடைய நீர் எங்களுக்கு ஆறுதலைச் செய்யீரோ; முன்னர் மன்மதனை அடக்கக்கண்படைத்த நீர்,எங்கள் காமத்தை அடக்கக் கண்படைக்காதது என்ன என்று பேசும் அளவில், இறைவனது பொற்றேர் தெருவினின்றும் அகன்றது. இப்படி வினவிடையாக அமைந்துள்ள பகுதி இவ்வுலாவின் சிறப்பு அம்சமாகும்.

315 முதல் 343-ஆம் கண்ணி வரை அரிவையின் இலக்கணம் கூறப்படும். இவள் அங்கவனப்பு முதல் 12 கண்ணிகளில் வர்ணிக்கப்படுகிறது.

மாதரார் அழகெல்லாம் திரட்டி அலங்காரத் தூரிகையால் பிரமன் வடித்த உருவமோ, அவள் குழல் யுகாந்தகாலத்திற்றோன்றும் இருட் பிழம்போ, மேருவையே தனுவாக வளைத்திட்ட புருவமோ என்று திகைக்கிருர் ஆசிரியர். ஒளிர் கண்ணும், சிறுநகையும், வனமுலையும், துடி இடையும், அரவு நாணும் அல்குலும், அரவிந்தம்நேர் பாதமும் உடையவர் இத்தெரிவை. மாமாதரோடு கூடியிருந்த இவள் மாணிக்கக் கூத்தனை மையலிடைப்படுத்தும் உபாயம் யாது என அவர்களைக் கேட்க, அவர்களும் உன் கண்ணினைக் கண்டு அவர் கனிவார்; அந்தப் பேரழகன் முன் நீ உன் முழு அழகையும் காட்டினால் காமித்து அணைவர் என்கிருர்கள். நாணம் மிகுந்த தெரிவையும் சாம்பசிவன் கண்பட்டால் போதும் அவனை வசமாக்கிக் கொள்வேன் என்று கூறிப் பெண்பட்டங் கட்டி மதன் போருக்குப் புறப்படுகிருள். கூந்தல் பின்னணியாய்ப் பிறழ, அல்குல் தேரை முன்னணியதாக்கி, முலையானையை முன்னே செலுத்தி, தானை (சேனை, சேலை)யொடு நடந்து தாக்குகிருள். இப்படித் தாக்குங்கால் பாங்கியர் அவளை அணுகி மன்மதனையே கண்ணால் எரித்தவர் உன்னைக் கண்டு மலைப்பாரோ; செங்காட்டங்

குடியில் மகவைக் கொன்றவர் உன்னை ஏற்பரோ; சரப பக்ஷியாக உருக்கொண்டு நரசிங்கத்தையே கீண்டவர் உன்னைக் கண்டு திகைப்பாரோ; புலியின் அங்கத்தையே உரித்தவர் அஞ்சுவரோ; பொங்கி எழுந்து எதிர்வந்த யானையையே கிழித்து அதன் தோலை ஆடையாக அணிந்து கொண்டவர் உன் படையைக் கண்டு மயங்கு வரோ? மானே உன் அணிவகுப்பால் ஆவது என்ன, வா என்று அவர்கள் தேற்றுமளவில், இரத்தினகிரி ஈசனின்தேர் மறைந்து சென்றது. கதிரவன் மறைந்து மாலை வந்து இவளை வருத்தத் தொடங்கியது. இருள் என்ற நீல நெருப்பும் நிலாச் சொரியும் வெண்ணெருப்பும் இவளை அணுக பிரமைபிடித்தவள் போல் நின்றாள்.

344-ஆம் கண்ணி முதல் 367-ஆம் கண்ணிவரை தெரிவையின் உடற்பொலிவு, அவள் செயல்கள் இவை கூறப்படும்.

முன் பாற்கடல் கடைந்தபோது இலக்குமி உண்டானாள்; இன்று அலங்காரம் என்னும் கடலில், மெய்ந் நலம் எனும் மந்த ரத்தை நாட்டி, பேரழகு என்ற கயிற்றினால் கடைய பெண்ண முதாய் வந்துதித்தவள் இவள்; காமரசம் என்னவென்பதை நன்கறிந்தவள்; வேல் விழியாள்; ஒயில் நடையாள்; கருங்குழ லாள்;கச்சு அறவே மின்னும் தனத்தாள்;மின்னல் போன்ற சிறுத்த இடையாள்;ஆடல்மகளிரான திலோத்தமையும் மயங்கிடும்படியாக நடனநடைபோடும் பாதத்தாள்; மோகினிதான் மறுமுறை வந்தா ளோஎனப் பொலிவு பெற்றவள். தெரிவை உடல் முழுதும் அணிக லன்களைப் பூண்டு தன்னை நன்குஅலங்கரித்துக் கொண்டு சிவனாரின் கீர்த்தியைப் புகல் என்று தான் வளர்த்துவந்த கிள்ளையைக் கேட்க அதுவும் ஈசனார் பெருமையை எடுத்து உரைக்க, மலரணை மேல் அமர்ந்து ஒரு முகூர்த்த நேரம் ஒரு யுகம் ஆனதுபோல கேட் டிருந்தாள். நன்கு குரலெடுத்துப் பாவலர் போல் பாடினாள். வாட் போக்கி ஈசன் என் எதிர் வருவார் என்று மகரயாழைக் கைக் கொண்டு சந்த இசைபாடும் சமயத்தில் அம்பலத்திலே நடனம் ஆடி ஆடி பாதத்தழும்பும், வேதநூல்களை ஓதி வாய்த்தழும்பும், வைகைநாடன் கைப்பிரம்பால் அடித்த புறத்தழும்பும், யமனைக் காலால் உதைத்ததனால் ஏற்பட்ட கால் தழும்பும், கம்பா நதிக்கரை யில் உமை தழுவ அதனால் மார்பிலே பதிந்த முலைத் தழும்பும், முதுகிலே பதிந்த வளைத் தழும்பும், தேவர்கள் தினம் வணங்கு தலால் அவர்கள் முடிதாக்கிய அடித்தழும்பும், இரத்தினகிரியில் ஆரிய அரசன், இடி, நாகம் இவர்களால் ஏற்பட்ட தழும்பும் ஏற்றி ருக்கும் பெருமான் சித்திரமணித் தேரேறித் தெருவணுக இவளும் தன் வீணையைப் புறத்தே எறிந்தாள். பாணபத்திரர் நள்ளிரவில் கூடற் பெருமான் முன், எலும்பினைஉருக்கும் அமுத இசையினைப்

பொழிந்ததைக் கேட்டுநவமணி இழைத்த பொற்பலகை இட்ட சிவ பெருமான் முன்சென்று, தேவாரப் பாடல்களைச் செவி மடுத்து சுந் தரருக்குப் பொன்னிட்ட நீர், என் மார்பில் (தேமலை) பொன்னை அழைக்கப் பின்னிடுவது ஏன்; நக்கீரனுர் வேண்ட சரீரத்தையே உதவிப் பெரும் தியாகி எனப்பேர் கொண்ட நீர், என் போன்ற மாதர் மொழி கேளாவகை ஏது என்றெல்லாம் இறைஞ்ச, மன்மத னும் இவள் விரகக் கனலை மேலும் தூண்டிவிட, மாமணித் தேர் தெருவகன்றது. தெரிவையும் அழகிய மாடமொன்றில் புகுந் திட்டாள்.

368 முதல் 408-ஆம் கண்ணி வரை பேரிளம்பெண்ணின் உடற்பாங்கும் குண நலன்களும் கூறப்படுகின்றன.

தேவமாது போலுள்ள இவள் அவர்களுக்கு முன் உதித்தவள் எனலாம். பாகுபோல் இனிய மொழியாள், வசீகரம் உடையவள், அங்கமெல்லாம் பூரணமாக முதிர்ந்து அழகு தேங்கும் மெய்யினுள், கல்வியும் அதற்கேற்ப ஒழுக்கமும் கூடிப் பண்பட்ட நிலையாள், மலையம் போன்று தடையின்றி வளர்ந்ததால் இப்போது சரிந்து விழுந்ததோ, இடை சிறுத்த சிங்கத்தை நோக்கி வணங்குதற்கே மதயானை சிந்தித்ததோ, மேலைநாள் கட்டுண்டு மிகவும் கசங்கினம் என்று கவலைப்பட்டு முகம் சாய்ந்திருந்ததோ, எல்லா மலைகளும் பூமியின் மேல் நிலைத்திருக்க நாம் மட்டும் அந்தரத்தில் நில்லோம் எனத் தாழும் நீர்மையோ எனவெல்லாம் அவள் சரிந்த தனங் களைப் பற்றிச் சமத்காரமாகக் கூறுகின்றுர்.

இப்போது சிற்றின்ப நினைவில்லாமல் பேரின்பம் எய்துதற்கே முற்பட்ட பண்பினுள், ஆரியராசனைக் காத்தபிரானின் கனிவு நிறைந்த பார்வையை மேற்கொண்டாள், நளினமான இரு பாதத்தை உடையவள், தேவர்களும் காண இயலாத மலைக் கொழுந்தைக் கண்டு பணியும் பணி ஒன்றே தான் பூணுகின்ற ஆபரணம் என நினைக்கும் பெற்றியாள் ஆகிய இப்பேரிளம் பெண், நிலா வெறிக்கும் முற்றத்தே தோழியர் தந்த பலகையை வைத் துக் காசுபரப்பி, நவரத்தினங்களைக் கொண்டு பலன் பார்க்கும் நெறியைக் கைக்கொண்டு, முதலில் முத்தொன்றைக் கண்டு இது வேய்முத்து என்ருள். மடவார் உடனே என்ன நீ கண்டாய் என வும், அடுத்துப் பவளத்தைப் பார்த்து இதனினும் அரன் வேணி (செஞ்சடை) சிறந்தது இதுவும் சரியல்ல எனக்கூறி இரத்தினத்தை நோக்கி இது கொன்றையணிந்த சிவனுரின் தேகமே என்று அம்மாமணியைத் தழுவ நினைத்த எல்லையில் சூரியனைப் போல ஒளி வீசித் தேரில் அமர்ந்து மலைக் கொழுந் தன் அங்கு அணுகுதலும், பாங்கியரைப் பிரிந்து தனியளாய்

வந்து கும்பிட்டாள். அன்பே, பொருளே, அருட்கடலே, சிவமே, முழுமுதலே என்று இறைஞ்சும் பிறரைப் பாராமல், இன்னமும் பாராமுகமே பண்ணுவீரோ, ஆரா அமுதே என்று அடி பணிந்தாள். இறைவனைப்பார்த்து 'கலைக்கொழுந்து (பிறைச் சந்திரன்) சூடக் கருதும் நீர் என் முலைக் கொழுந்து சூட ஏன் மயங்குகிறீர்? காவேரி நீரால் கனிவாகும் நீர், என் அதர நீரை ஏற்க ஏன் மறுக்கிறீர்? சுரும்பார் குழலியின் சொல்லைக் கடக்க விரும்பாத நீர் என் வாய்க் கரும்பு போன்ற, குழலிசை போன்ற சொல்லை விரும்ப ஏன் தயங்குகிறீர்? என்னைச் சற்றே திரும்பியாகிலும் பாரீரோ' என்று தேரைத் தொடர்ந்து செல்லும் அளவில், கசனமடவாரும் பூதல மின்னாரும் புடைசூழ. மாணிக்கமலை யீசன்தேர் வீதி விட்டு அகன்றது என முடிக்கிறார்.

இவ்வுலாவிற் சிவபெருமானை : அகண்டன் (70) அஞ்செழுத்தின் ஆணையான் (57) அடலைமிகுங் காடேறி (248) அடியர் சகாயன் (270) அடையாதவர்பால் அடையான் (195) அண்டகூடத்தான் (236) அண்டர்தமைச்சிதைத்தான் (305) அண்ணல் (356) அத்தன் (181) அபேதன் (268) அம்பலவன் (70) அமரேசன் (63) அமலன் (200, 213, 270) அரன் (321, 386) அரிபிரமர் காணு அமலன் (388) அருட்கடல் (400) அருணசலன் (391) அரூபன் (270) அன்பரைக் காயாதருளும் கண்மணி (240) ஆகத்தான் (58) ஆசையுடையான் (306) ஆடும் பதத் தழும்பர் (358) ஆத்தன் ( 5) ஆரண நூல் வாய்த்தழும்பர் (358) ஆராவமுது (401) ஆலநிழற் பயிலும் ஆனந்தன் (390) ஆவணத்தான் (234) ஆவணியான் (66) உத்தரகோசமங்கையான் (276) உம்பர் முடிவைத்துறைத் தழும்பர் (360) உமாபதி(156)உயர்வேதாந்தன்(268)உரகேசன்(408)எம்பிரான்(380) எல்லாவுயிர்க்குமிறை (252) ஏகாம்பரவுடையான் (394) ஏத்துசபை ஆடியான் (66) ஏரான் (405) கங்காள ரூபன் (390) கண்ணுதலார் (353) கண்டம் கரிய கரி உடையான் (60) கபாலன் (267) கம்பா நதியில் அணைந்த மெய்த்தழும்பர் (360) கருணகரன் (391) கல்லாலன் (267) காமமிகும் பெண்ணுக்கும் ஆணுக்கும் பேரழகன் (303) காலகாலன் (390) காலால் முனியும் நமன் ஆகத்தில் உதைத்தோன் (305) கிரீசன் (63) கூத்தாடி (248) கூர்மத்தின் ஓடணிந்தான் (197) கூற்றையுதைத்த குலைத்தழும்பர் (369) கொக்கிறகு சூடினன் (197) கொன்றையார் மாலையான் (257) சடையோன் (183) சந்தியான் (235) சிங்கத்தைக் கீண்டார் (340) சிவபெருமான் (354) சுதானன் (69) சுருதி முடிக்கு எட்டாமல் வாழ்ந்த சிவன் (147) சூலப் படையான் (19[illegible]) சொரூபன் (69) ஞானத் திருவாசலான் (232) திதிவாரன் (62) திருத்தழும்பர் (359) துழனியான் (208) தெய்வச் சிகாமணி (240) தெய்வப் பராபரம் (1) நடனத் தாண்டவன் (389) நமனுக்கு ஆனியான் (65) நவகோட்டையான் (230) நாகீசன் (267) நாகேசன் (389) நாதன் (268, 318) நாதாந்தன் (268) நிதானன் (69) நிமலன் (391) நீங்காத சோதி நிருமலம் (நீண்ட) 6 அலங்கலான் (231) நேரலர்க்கேசேயன் (240) பஞ்சகர்த்தா (226) பஞ்சாங்கன் (63) பரத நவில் பாதன் (267) பரமன் (390) பராபரன் (313) பவளச் சடையான் (195) பழமறைக் கீதன் (268) பாணிச் சடைமுடியான் (64) பாணியான் (64) பாம்பணிந்தார் (333) பார்வைக் குளன் [குளம - நெற்றி] (150) பிறைச் சடையான் (394) புரிசடையில் நீர்முகந்தான் (306) புவனி ஆண்டவன் (389) மகமேரு

வில்லி (155) மகேசன் (69, 267, 392) மணிவண்ணன் (169) மலை வாசன் (269) மன்மதனைக் காய்ந்தார் (339) மனக்கேத்திரன் (62-3) மாகத்தெழுந்தான் (305) மாதேவன் (389) மின்னிருவர் மோகன் (269) முயலகனை மிதித்தார் (196) முன்னோன் (320) மூலத்தே மன்னும் முதற்பொருள் (5) மெய்ஞ்ஞான ஆதிக் கடகமதத்தான் (53) மேருச் சிலைவளைத்தார் (333) மைவளருங் கண்டர் (203) யோக கரணன் (62) வசந்தத்தியாகர் (176) வரதன் (267) விடைப்பாகன் (279) விண்ணுக்கும் மண்ணுக்கும் வேரும் உலகிற்கும் கண்ணுக் கினியான் (297) விநோத அரூபன் (69) விமலன் (270) வீரகேசன் (408) விரூப கணேசன் (69) வெண்தலையான் (196) வெம்புலியின் அங்கத்தினையுரித்தார் (340) வேணியான் (64) வேதத் தலைகிளைத்தார் (333) எனக் குறிப்பிட்டுள்ளார்.

வாட்போக்கி நாதனை : கண்ணுக்கினிய வாட்போக்கியான் (304) சிவாயநகர் ஆதி (150) மலைக்கொழுந்தர் (201) மலைக் கொழுந்தான் (305) மலைக்கொழுந்து (381, 395.) மாணிக்கக் கூத்தர் (157) மாணிக்கக் கூத்தன் (64, 65, 329), மாணிக்க மலைக் கொழுந்தன் (149) மாணிக்கமலை மேவினோன் (197) மாணிக்கமாமணி (241) முடித்தழும்பு பூண்டபிரான் (26) மெய்தந்த முடித்தழும்பன் (149) முத்தழும்பரான முடித்தழும்பர் (361) வேம்பை விரும்புவார் (170) எனவும் புகல்வார்.

இறைவியை: அமலை (61) வடிவாள்(242) எனவும் வாட்போக்கி அம்பிகையை, சுரும்பார் குழல், (194, 404) சுரும்பார் குழலி (39, 342) எனவும்

திருமாலை: (அரிபிரமர் (388) கமலமலர்க்கண்ணன் (392), பாற் கடலோன் (128), மால் (54, 194) வலம்புரி கைக்கொண்டோன் 109) விடை (202)

அயனை: அயன் (54) அரிபிரமர் (388) திசைமுகத்தோன் (316) பன் இருவர் (அயன், மால் 393) மறையோன் (128) வேதன் (318, 352, 192) வேதா (45).

விநாயகரை: விநாயகன் (129) அரிவரிசேர் கார்க்குஞ்சரமுகன் (காப்பு)

முருகனைச் சேய் (129) எனவும் கூறுகின்றார்.

மன்மதனை: அனங்கன் (327) கார்மதன் (204) சித்தசன் (207) மதன் (278) மதன் அம்பு அஞ்சும் (87) மதன் கேடகம் (284) மதன் சிலையிற் பூட்டும் கணை (283) மதனன் மண்டபம்சேர் கதலி (293), மதனும் சந்தித்தான் (272) மதன் சிலையிற் பூட்டும் கணை (283) மதனை முன் பார்த்தகண் (312) என உரைக்கின்றார்.

வாட்போக்கி: நகரை காகம் அனுகாக்கிரி (46) சிவாய நகர் (காப்பு, 57, 73, 139) தென் சிவதை (236, 408) நிம்பவனம் (41) மணியாற் செய்குன்று (261) மாணிக்கமலை (58, 97, 149, 197) மாணிக்கவெற்பு (12, 75) ரத்னசலம் (175) வாட்போக்கி (13, 139, 165), எனக் குறிப்பிடுகின்றார்.

இறைவன் திருவுலா வந்த தேரை: அழகு மணித்தேர் (242) ஆழி மணித்தேர் (278) உலகரதம் அனைய செமபொன் மணித்தேர் (123) கனகத்தேர் (307) சித்ரமணித்தேர் (362) நீடுமணித்தேர் (397) பொற்றேர் (313) பொன்மணித்தேர் (203) மணித்தேர் (156, 237, 245) மாமணித்தேர் (367) வாம்பரித்தேர் (335) வெற்றிமணித் தேர் (199) என வர்ணிக்கின்றார்.

வாட்போக்கி நகரத் தீர்த்தங்களை: உரோமச தீர்த்தம் (35) குலிச நற்றடம் (33) தெய்வத் திருச்சுனை (38) சதாகதி நற்றடம் (33) நாக தீர்த்தம் (34) கதிர் வீசும் சுடர்த்தடம் (34) போதக தீர்த் தம் (35) விந்தைப் பொய்கை (36) ப ரத்துவாசத்தடம், (36) பஞ்சாக்கரச்சுனை (37) பஞ்சாக்கரமடு (255) வராகத் தடஞ்சுனை (39) என இசைத்துள்ளார்.

வாட்போக்கிப் புராணச் செய்திகளை: ஆரியவரசனுக்கு அருளிய செய்தி 21ஆம் கண்ணிமுதல் 26 கண்ணிகளிலும், ஆயிரங்குடம் (22) ஆரியற்கு முத்தி கொடுத்தான் (334) ஆரியன் முன் ஆன அரன் (148) ஆரியனைக் காத்தபிரான் (378) இறைவன் (361) பொசிவாசி (164) பொசிவாசிக்கணக்கு (23) பொசிவாசி கொள்வார் (330) முடித்தழும்பு (77) முடித்தழும்பு பூண்டபிரான் (26) மெய்தந்த முடித்தழும்பன் (149) என்றும்,

வாயுவும் ஆதிசேடனும் பூசித்த செய்தியை: கன்னி, துற்கை, நாகம், கடவுளர்கோன், கால், இரவி, இடி மாமுனிவர் (406) என்ற கண்ணியிலும் இடிநாகம் (361) குலவரையைக் காவி டந்தே (48), நாகேசன் (389) நாகத்தின் பூசை (306) வந்திக்கும் மாருதத்தை (31) எனவும்,

இந்திரன் பூசித்த செய்தியை: ஆயிரங் கோசங்களும் கண்ணாகத் தொகுத்திட்டோன் (19, 406) மடுத்த வினை நீத்த புரு கூதன் (78) என்ற கண்ணிகளிலும்,

இடிபூசித்த செய்தியை: இடியேறு அபிடேகம் செய்ய வரம் அருளினோன் (18, 361 406) கண்ணிகளிலும்,

துற்கைக்கருளிய செயலை: ஏமவடிவாள் (28) காளி வடுகன் சாத்தன் (131) சந்திரகாசவாள் (49) துற்கை (49) பிரமத்தி விட்டினது (50, 223)

உரோமசமுனிவர் பூசித்த செய்தியை: ஒரு முனிவன் (14) என்ற கண்ணியிலும்,

சூரியன் பூசித்துப் பேறுபெற்றதை, செங்கதிரோன் தானவர் செய்திமை தமையொழிய (17) எனவும்,

அகத்தியர்க்கருளிய செய்தியை கும்பயோனிக்கெதிர் போய் கூறிய பஞ்சாக்கரத்தின் விம்பமாய் என்றும் விளங்கு வோன் (20) எனவும்

சிற்ருயர்க்கருளிய செய்தியை ஆகமெலி ஆயனுக்காய் அன்றெரித்த நாள் முதலாய்'' (46) எனவும்,

வைரப்பெருமாளுக்கு அருளிய செய்தியை, "சேயினையே தங்கைக்களித்தால் தலையளிப்பேன் என்றவன்பால் அங்கத் தியா கம் அருளினேன்'' (43, 44)எனவும்.

சுந்தரருக்கு இறைவன் இத்தலத்தில் பொன்னிடும் பாறையில் பொன்னைச் சொரிந்த செய்தியை 'பொன்னிடு பாறைக்கயலே போந்தருளி' (118, 364) எனவும்,

செட்டிமாரிடம் பன்னிரண்டாம் பங்கு பெற்ற செய்தியை (118-121) கண்ணிகளில் 'கூட்டுப் பதினொன்ருன கோநகரத்தார் முன்போய்...பன்னிருவராகிப்பலதிசையும் கீர்த்தி செல மன்னியே வாழும் வணிகர்' எனவும்,

மேலும் 'பன்னிருவர் என்னுடனே' (393), 'பன்னிருவர் கூட்டம் பணி செய்ய' (198), 'பன்னிருவர் ஈசன்' (269), என நூலில் பல இடங்களில் விரவிவரச்செய்துள்ளார்.

ஆயினும் இத்தலத்தைப்பற்றிய செய்திகளைக் கூறும் போது, 'நேரியர் கோன் பெண்டிருக்குப் பொன்ஞரம் காட்டினுன்' (30) என்றும், 'நீலகண்டச் சோழன் பணிவிடைக்கே கதி நல்கும் இயற்கையான்' (42) என்றும், 'முருகேசனிட்டத் தூண்டாமணி யின் சுடர் விளக்கோன் (32) என்றும் குறிப்பிடுகிருர். ஆனல், இங்குக் குறிக்கப்பெற்ற வரலாறு விளங்கவில்லை. மேலும், இறைவனது மணித்தேரைச் சூழ்ந்து வரும் பெரியோர்களைக் குறிக் கும்போது, 'வாட்போக்கிப் பண்டிதர்' (139) 'தியாக விநோதக் குரு' (140) 'மாணிக்கவாசக தேசிகர்' (141) 'தட்சிணுமூர்த்தி பண் டிதர்' (141) 'கம்பையனும் செங்கோல் செலுத்திவர' (143) 'வேலாயுத முகில்' (144) எனக் கூறுகிருர். இவர்களும் வாட் போக்கி நகரில் இவ்வுலாவாசிரியர் காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இவர்களைப் பற்றிய பிற விவரங்கள் அறியக் கூடவில்லை.

வாட்போக்கி நாதருக்குக் காவிரியிலிருந்து அபிடேக தீர்த்தம் கொண்டுவருபவர்கள் 'திருமஞ்சனப்பண்டாரம்' என்றழைக்கப் பெறும் செய்தியை 'பண்டாரநாமம் பரித்தோரும்' (144) என்று விளக்கியுள்ளார்.

இந்நூலில் பெரிய புராணச் செய்திகளை கண்ணி 185 (திருக் குறிப்புத்தொண்டர்), (134) திருஞான சம்பந்தர் (எலும்பைப் பெண்ணுக்கியது), (134-A) அப்பூதியடிகளின் புதல்வனை நாவுக்கரசர் உயர்ப்பித்தது,(135)முதலையுண்ட பாலனைச் சுந்தரர் அழைத்தது, (180) திருஞான சம்பந்தரிடம் தோற்றுச் சமணர்கள் மதுரையில் கழுவேறியது, (137) சண்டேசர் தன் தந்தை இருகால்களையும் தடிந்தது, (249) 339) சிறுத்தொண்டர் பிள்ளைக்கறியமுதை இறைவனுக்கிட்டது, இவை கூறப்பெறுகின்றன.

திருவிளையாடற்புராணச்செய்திகள் ஆங்காங்கே குறிக்கப் பெறுகின்றன. வலை வீசிய திருவிளையாடலை 'அலைக்கே வலை வீசும் அம்மான்' (264), என்றும் வளையல் விற்ற திருவிளையாடலை 'கூடலிலே மேவி வளை பகர்வீர் (164) என்றும், பாணபத்திரருக்கு இறைவன் பலகையிட்டதை 'காரிருளில் பாடிய பாணர்க்கே பலகையிட்டார்' (363) என்றும், கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்னும் செய்தியை 'தென்னவர்கோன் ஏற்கை மணம் நாட எழுந்தென்றல்' (215) என்றும் பேசுகிறுர்.

கந்தபுராணச் செய்திகள் பல இந்நூலில் குறிக்கப் பெறுகின்றன. தக்கயாகத்தில் தலையிழந்த தன் மாமனுன தக்கனுக்கு ஆட்டுத் தலை அளித்ததை 'ஆட்டுத் தலைபடைத்த அம்மான்' (263) என்றும், கலைமகள் தக்கயாகத்தில் மூக்கிழந்ததை (299), சந்திரன் தன் கலை தேயப்பெற்றதை (302), சூரியன் தன் பற்களை இழந்ததை (302) குறிப்பிடுகிறுர்.

இவை தவிர, ஆங்காங்கே சிவபுராணச் செய்திகளையும், காஞ்சி புராணம், கன்றுப்பூர் புராணம், உத்தரகோச மங்கை புராணம், திருக்காளத்தி புராணம் போன்ற இதர புராணச் செய்திகளையும் கூறுகின்றுர்.

நூலாசிரியர் இவ்வுலாவில் ஏழுபருவமகளிரின் இயல்புகளையும் நயம்பட பல புதுமைகளுடன் கூறியிருப்பதை ஆங்காங்கு சுவைத்துணரலாம்.

## இந்நூலில் வரும் புராணக் கதைகள் சில

### இந்திரன் சாபம் நீங்கப் பெற்றது

கௌதம முனிவரின் பத்தினியாகிய அகலிகையின்பால் இழைத்த பிழைக்காக இந்திரன் அம்முனிவரால் சபிக்கப் பெற்றுன். வாட்போக்கி இறைவனைப் பிரார்த்தித்து அச்சாபம் நீங்கப் பெற்றுன் (கண்ணி 19. 78)

*திருமால் வராக அவதாரம் செய்தது*

இரணியாக்ஷன் என்னும் அசுரன் இவ்வுலகத்தைக் கடலில் ஆழ்த்தவே, திருமால் வராக அவதாரம் செய்து தன் கொம்பினுல் உலகத்தை மறுபடியும் மீட்டுவித்தார். (க. 39)

*மாலும் அயனும் காணு வடிவினன்*

சிவபெருமான் விசுவரூபம் எடுத்த பொழுது, அயன் (பிரமன்) அன்னப்பக்ஷிவடிவம் எடுத்துப் பறந்து அவன் முடியைத் தேட முற்பட்டான், திருமால் வராக ரூபம் எடுத்து அவன் அடியைத் தேட முனைந்தான், முடிவில், இருவரும் பரமனின் முடியையும் அடியையும் காணுமல் திரும்பினர். (க. 54, 115, 194)

*சிவன் யானைத் தோல் போர்த்தது*

தாருகவனத்து முனிவர்கள் தாம் இயற்றிய யாகத்திலிருந்து தோன்றிய யானையைச் சிவபெருமான் மேல் ஏவ, அவரும் அதை அடக்கி அதன் தோலையுரித்து ஆடையாக அணிந்து கொண்டார். (க. 60, 93)

*கபாலத்தில் பலி ஏற்றது*

சிவனைப் போலவே தனக்கும் ஐந்து தலைகள் உண்டெனத் தருக்கித்துப் பேசிய பிரமன் தலையைப் பரமசிவன் கொய்யவே, அவனைப் பிருமகத்தி தோஷம் பற்றிக்கொண்டது. அது அகல, மண்டையோட்டைக் கையிலேந்தி, சிவன் யாசித்து அச்சாபத்தைப் போக்கிக் கொண்டான். (க. 64)

*கண்டம் கரியதானது*

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அதிலிருந்து அமுதம் எழுந்தது அதை உண்டனர் தேவர். உலகமெல்லாம் அழிக்க எழுந்தது வாசுகிப் பாம்பின் விஷம். அதைச் சிவன் உண்டான். அதைப் பராசக்தி தன் கையினுல் அவன் கண்டத்தோடு நிறுத்தினுள். சிவனுடைய கண்டமும் கரியதானது. (க 60, 99)

*சிவன் கங்கையைத் தலையில் சூடியது*

பகீரதன் என்னும் அரசன் பலகாலம் தவம் செய்தமையால் கங்கை சிவபெருமான் சடை வழியாகப் பூமிக்கு வந்தது. இதன் நீரால் பகீரதனின் முன்னோர்களான சகர புத்திரர்கள் அறுபதினாயிரவரையும் பரிசுத்தமாக்கிச் சுவர்க்கம் புகச் செய்தான். (க. 5. 9, 64, 91, 161)

*சுவாயம் புவமனு*

பிரமதேவரது மெய்யின் ஒரு பாகத்திற் றேன்றியவர். சதரூபை என்பாளை மணந்து, எழுபத்தொரு சதுர்யுகம் பூமியை ஆண்டார்.

*கஜேந்திரன்*

இந்தயானை, ஒரு தடாகத்தில் தாமரை மலரைக் கொய்யப் போய் தன்னைப்பற்றி முதலையை இழுக்கவும், முதலை இதனை இழுக்கவும் ஆயிரம் ஆண்டு போர் நடந்தது. யானை தன் பலம் ஒய்ந்து துதிக்கையை நீட்டி 'ஆதிமூலமே என்று' ஓலமிட்டு நிற்கையில் இதன் அழைப்பைக் கேட்ட திருமால் இது இருக்கும் குளக்கரையை அடைந்து தன் சக்கரத்தை வீசி முதலையைக் கொன்று யானையை விடுவித்தார்.

*திருக்குறிப்புத்தொண்டர்*

இவர் ஒரு சிவனடியார். காஞ்சிமாநகரத்தில் துணிவெளுக்கும் பெருவண்ணார் குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய உண்மைத் தொண்டினை அறிய சிவபெருமான் ஒருநாள் ஒரு கந்தையுடுத்து இவர் முன் தோன்றினர். திருக்குறிப்புத்தொண்டர் சிவனர் உடுத்துள்ள கந்தையின் அழுக்கினைப் போக்கித் தருகிறேன்; தந்தருள்வீர் என்றார். தனக்கு இந்த ஒரே கந்தை உளதாகவும், அன்று பகலவன் மறைவதற்குள் அதைத் துவைத்து உலர்த்தித் தருவதானல் தருகிறேன் என்றலும் அப்படியே காலந்தாழ்க்காமல் ஆடையைத் தோத்து அந்திப் பொழுதிற்குள் தருவதாக இசைந்து அதை வாங்கிப் போனர். தொண்டனர் ஆடையை தோய்த்து உலர்த்துவதற்குமுன் பெருமழை பெய்ய இவர் அதை உலர்த்தி, சிவனடியாருக்குக் கொடுக்க இயலாமல் போயிற்று. சிவனடியார் குளிரால் வாடுவரே என்று வருந்தி தான் செய்த குற்றத்துக்காகத் தன் தலையைத் துணி தோய்க்கும் கற்பாறையில் முட்டி மோதிக் கொண்டார். அச்சமயம் அக்கற்பாறையின் பக்கத்திலிருந்து அழகிய வளைத்தழும்புபட்ட ஏகாம்பர நாதரது மலர்ச்செங்கையானது வந்து எழுந்து, முட்டிக்கொண்ட தொண்டனரின் தலையைப் பிடித்து நிறுத்தியது. சிவபெருமான் உமாதேவியாருடன் அவர் முன் தோன்றிக் காட்சி தந்தருளினர்,

*எலும்பைப் பெண்ணுருவாக்கியது*

திருமயிலாப்பூரில் சிவநேசச் செல்வர் என்னும் பெருவணிகர் பூம்பாவை என்னும் தன் பெண்ணை திருஞானசம்பந்தருக்கே மணமுடித்துக் கொடுப்பது என்னும் உறுதி கொண்டிருந்தார். ஒருநாள் பூம்பாவை தோழியர்களோடு பூஞ்சோலையில் விளையாடுகையில் பாம்பு கடித்து இறந்தார். சிவநேசர் எவ்வளவு முயன்றும் அவளை

உயிருடன் எழுப்ப முடியாமற் போகவே, அவள் உடலைத் தகனம் செய்து எலும்பை ஒரு குடத்திலிட்டுச் சேமித்து வைத்திருந்தார். ஞானசம்பந்தர் திருவொற்றியூரினின்றும் திருமயிலாப்பூருக்கு எழுந்தருளி, சிவநேசரின் வேண்டுகோளுக்கிணங்க, எல்லோர் முன்னிலையிலும் 'மட்டிட்ட புன்னை' என்ற பதிகம் பாடி, எலும்புரு வாய் இருந்த பெண்ணை மறுபடியும் பாவையார் வடிவு பெறச் செய்தார்.

*அப்பூதியடிகள் புதல்வன் விடம் நீங்கியது*

திருநாவுக்கரசரைக் காணுமலே அவரிடத்துப் பெருங்காதல் கொண்ட அப்பூதி அடிகளார் திருநாவுக்கரசருக்குத் திருவமுது படைக்கத் தம் மகனை மூத்த திருநாவுக்கரசரை தோட்டத்தி லிருக்கும் வளமான வாழைக் குருத்தினை அரிந்து வரும்படி அனுப் பினுர். அவனும் வாழைக் குருத்தை அரியும் போது ஒரு பாம்பு அவனைத் தீண்ட, விஷம் தலைக்கேறி, கீழே விழுந்திறந்தான். திருநாவுக்கரசர் அங்கு நிகழ்ந்த உண்மை இன்னதென அறிந்து கொண்டு, கருணை கூர்ந்து 'ஒன்று கொலாம்' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருள, தலைக்கேறிய விஷம் நீங்கவே அப் புதல்வன் உயிர்பெற்றெழுந்தான்.

*முதலையுண்ட பாலனை அழைத்தது*

சுந்தரமூர்த்தி நாயனுர் சேரநாட்டை நோக்கித் தலயாத்திரை செய்து கொண்டே அவிநாசியை வந்தடைந்தார். அங்கு சில ஆண்டுகளுக்குமுன் ஐந்து வயதுடைய ஒரு சிறுவனை அவ்வூர் மடு விலிருந்த முதலையொன்று இழுத்துச் சென்று விழுங்கி விட்டது. புதல்வனை இழந்த பெற்றேர் சுந்தரரையணுகி வணங்குகையில், 'இன்ப மகனை இழந்தவர்கள் நீங்களோ' என்று வினவ அவர்கள் பெருந் துயரோடு தோன்றவே, சுந்தரர் அம்மடுவையணுகி 'எற்ருன் மறக்கேன்' என்று தொடங்கும் பதிகம் பாடவே, பெரு வாய் முதலையொன்று அப்பிள்ளையைக் கரையில் கொணர்ந்து சேர்த்தது.

*சண்டேசர் தந்தைதாள் எறிந்தது*

விசாரசருமர் என்னும் சண்டேசர் ஆனிரைகளை மேய்த்து வருங்கால், மண்ணியாற்றங்கரையிலுள்ள ஆத்தி மரத்தின் கீழே, சிவபெருமான் உருவமாகிய லிங்கத்தை மணலால் அமைத்து அதற்குப் பாலபிஷேகம் செய்து மகிழ்ந்து வந்தார். இவர் இப்படிச் செய்வதைக் கண்ட அயலான் ஒருவன் பழிகூறி, சண்டேசருடைய தந்தையிடத்து இதைக் கூற அவரும் ஒருநாள் ஆனிரைகளின் பின் சென்று குராமரம் ஒன்றின் மேல் ஏறி, தன் மகன் செயலைக் கண்ணுரக் கண்டார்; அங்குச்சென்று அங்குள்ள பாற்குடங்களைக் காலினுல் இடறிச் சிந்தினுர். சண்டேசர் இறைவனுக்கென்று வைத்திருந்த பாலைக் காலால் உதைத்த தன் தந்தையின் இரு கால்களையும் அங்கிருந்த ஒரு கோலைக் கொண்டு துணித்து வீழ்த் தினுர். தந்தையும் மண்ணில் வீழ்ந்திறந்தார். சிவபெருமான் அங்குத்தோன்றி சண்டேசர் தந்தைக்குக் கயிலாயப் பதவியை அளித்தருளினுர்.

2 FEB 1985
MADRAS

APPENDIX I

# MADRAS DISTRICT GAZETTEERS (1907)

## TRICHINOPOLY

By

F. R. HEMINGWAY - INDIAN CIVIL SERVICE

(Page 284)

**Ratnagiri**: Five miles south-south-west of Kulittalai. Is a hamlet of Sivayam, (population 3, 338) and takes its name from the curious bare conical rock (the Ruby Hill) which there rises suddenly from the surrounding plain. This is 1, 178 feet high and is ascended by a flight of 952 steps which are said (in an inscription in the temple on the top) to have been built in 1783 A.D.

The temple on the top is a handsome, though small building, and an admirable view is obtained from it. On the walls are numerous inscriptions, two of which copied by the Government Epigraphist (Nos. 102-03 of 1892) belong to the Hoysala king Vira Somesvara who occupied much of the district in the 13th century.

The god is known as Ratnagirisvarar (the lord of the Ruby Hill) or, more popularily, Sokkar. Like the deity of Kadambarkoil near Kūlittalai (q.v.) the god is said to have been worshipped by Agastya, and his sacred days are Mondays in Kartigai and the Tai-pusam day. Thunder is said to come and worship the god once every twelve years, and a crevice in the roof is pointed out as the place through which the thunder made its entry in order to do so.

The water for the god's bath is brought by a caste of non Brahmins known as Tirumanjana Pandarams, who fetch it every day from the Cauvery. They say they are descended from the Aryan king who came to the god with the hope of getting rubies from him. The god, in the guise of a brahmin, tested his devotion by making him fill a magic vessel with Cauvery water. The vessel would not fill, and the Aryan stranger in a fit of anger cut off the Brahmin's head. The dead body at once turned into a

lingam and the Aryan was ordered to carry water for the temple till eternity. A figure of him is carved in the prakaram (arcade) of the temple.

There are two shrines subordinate to the Ratnagiri god, namely that to Vaira Perumal at the foot of the hill and the small belly-god temple half way up the hill. Vaira Perumal is said to have been a man of the weaving caste from Conjeevaram who cut off his own head here in fulfilment of a vow and was deified accordingly. His image has no head. He is worshipped with animal sacrifices, and oaths sworn before him are held to be particularly binding. The belly-god is called 'the watcher of the crows'. It is said that he cursed the crows for upsetting a devotee's milk-pot, and that they dare not now come near the temple. The bites of snakes and venomous reptiles are said te be innocuous on this hill.

The Ratnagiri temple is held specially sacred by two small communities; namely, the Malai-kanda Vellalans (the Vellalans who watch the hill), who never leave the neighbourhood and must gaze at the hill every morning when they get up; and the twelfth Chettis referred to in the account of Mahadanapuram above. It was the god of Ratnagiri who took the twelfth share of their property.

## MADRAS DISTRICT GAZETTEERS
## STATISTICAL APPENDIX
## FOR
## TRICHINOPOLY DISTRICT
## VOL. II
## 1931

Page 285 : Add at the end of the page the following :

The trustees of the temple are members of the "Twelfth Chetti" caste, whose office is at the flight of steps leading to the shrine on the hill. The community contributes a twelfth of the income of its members to this temple, and this is devoted to daily worship and to various acts of charity at festival time.

APPENDIX II

# MADRAS DISTRICT GAZETTEERS
# TRICHINOPOLY

by

## F. R. HEMINGWAY - INDIAN CIVIL SERVICE

(Page 281)

**Mahadanapuram**: Eight miles west of Kulittalai. Population 6, 545. Contains a railway - station, a private choultry (where all castes are given accommodation, but Brahmans alone are fed) and a saltpetre refinery. The village is said to have been given by Krishna Udaiyar of Mysore to some Brahmans. Hence its name, which means village of the great gift. It possesses a hamlet called Palayasengadam.This name is supposed to be a contraction of Palaya-Jayanconda-Cholapuram in the Udayarpalayam taluk. The latter name means 'the town of the victorious Chola, and Palayasengadam is locally believed to have been once a Chola capital. It contains some Jain remains, the ruins of an expensive camp and a beautifully constructed stone tank, which lend some support to this theory of departed greatness.

In this hamlet is a well-known and blood-thirsty village goddess called Alahanachi Amman, in whose honour a festival is celebrated every two years in Panguni (March - April). The goddess conveys her assent to the performance of the festival by the chirping of the lizards round her shrine.

Palayasengadam is the head-quarters of a section of the Chettis called the Pannirendam (twelfth) Chettis. These are supposed to be descended from eleven youths who escaped long ago from Kaveripatnam, a ruined city in Tanjore. A Chola king, says the legend, wanted to marry a chetty girl, whereupon the caste set fire to the town and only these eleven boys escaped. They rested on the Ratnagiri hill to divide their property; but however they arranged it, it always divided itself into twelve shares instead of eleven. The god of Ratnagiri then appeared and asked them to give him one share in exchange for a part of his car. They did so; and they now call themselves the 'twelfth' Chettis, from the number of the shares, and at their marriages they carry the bridegroom round in a car. They are said to be common in Coimbatore district.

## இந்நூலில் மேற்கோளாக எடுத்துக் காட்டிய நூற்பெயர்களின் முதற் குறிப்பகராதி.

கம்ப—கம்பராமாயணம்
குலோத். உலா—குலோத்துங்கன் உலா
குற்ருலத்தலபுரா—திருக்குற்ருலத்தலபுராணம்
சிலப்—சிலப்பதிகாரம்
சீகாளத்திப்—சீகாளத்திப் புராணம்
சீவக—சீவக சிந்தாமணி
சுந்தர—சுந்தரமூர்த்தி நாயனுர்
தமிழ்நா —தமிழ் நாவலர் சரிதை
திருக்கயிலாய உலா—திருக்கயிலாய ஞான உலா
திருக்கா உலா—திருக்காளத்திநாதர் உலா
திருஞா—திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர்
திருநா —திருநாவுக்கரசு நாயனுர்
திருமுருகு —திருமுருகாற்றுப்படை
திருவா —திருவாசகம்
திருவிளை—திருவிளையாடற் புராணம்
திவ்—திவ்யப் பிரபந்தம்
தேவா—தேவாரம்
புறநா—புறநானூறு
பெரிய—பெரிய புராணம்
மணி – மணிமேகலை
முத்—முத்தொள்ளாயிரம்
முத்துக்குமார.பி.த—முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

MADRAS

# வாட்போக்கி

என்னும்

# இரத்தினகிரி உலா

### விநாயகர் காப்பு

*சீர்உலா வீதிச் சிவாயநகர் ஆள்வார்தம்*
*பேர்உலா நாளும் பிறங்கவே - நேரலார்*
*ஆர்க்குஞ் சரமுகன்நேர் ஆன அரிவரிசேர்*
*கார்க்குஞ் சரமுகனே காப்பு.*

## நூல்

*சீராரும் ஞானச் சிறப்பின் கதிர்படைத்த*
*பாராருந் தெய்வ பராபரமாய் - யாராலும்* 1

## குறிப்புரை

### காப்பு

*சீர் உலா* - அழகு விளங்குகின்ற. *சிவாயநகர்* - இரத்தினகிரி. இத்தலம் 'சிவாயநகர்' எனப்பெயர் பெற்ற வரலாற்றை இந்நூல் 50-51-ஆம் கண்ணிகளிற் காண்க. *ஆள்வார்* – ஆட்சி செய்பவர், அரசராக இருப்பவர், இரத்தினகிரி நாதர், (ராஜலிங்கர் என்பது இறைவன் திருநாமம்). *பேர் உலா* - பெருமை பொருந்திய உலாப் பிரபந்தம். *நாளும் பிறங்க* - எந்த நாளிலும் கெடாது நின்று விளங்குதற்கு. *நேரலார் ஆர்க்கும் சரமுகன் நேரான* - தன்னை வணங்காதவர் எவர்க்கும் அம்புமுனையை ஒத்து இடையூற்றை விளைக்கின்ற 'குஞ்சரமுகன்' என முடிக்க. (சரம் - அம்பு). அரி வரிசேர் குஞ்சரமுகன், கார்க்குஞ்சரமுகன் எனக் கூட்டுக. *அரிவரி சேர்* - வண்டுகள் மொய்க்கப் பெற்றதும் வரிகளை உடையதுமான (யானை முகத்தையுடையவன்). *அரி* - அழகு, வண்டு. *வரி* - புகர், புள்ளி, கோடு. *கார்* - மழை; இது மதநீரைக் குறித்த சிறப் புருவகம்; *கார்க்குஞ்சரம்* – மேகம் போன்று கருமையான திரு மேனியை உடைய யானை முகன்.

### நூல்

**கண்ணி 1.** *சீர்* - மேன்மை. *ஞானச் சிறப்பின் கதிர்* - ஞான மாகிய சிறப்பையுடைய ஒளியை என்றது ஞான ஒளியை. *சீரா*

காணு வடிவமதாய்க் காண்பானும் காட்சியுமாய்ப்
பூண் ஆபரணப் பொருளேயாய்ச் - சேணுகி 2

ஆனந்தம் ஆகி அறிவாய் அளவுபடாத்
தான்அந்தம் இல்லாத் தனிமுதலாய் - வான்அந்தம் 3

இல்லா நிலையத் (து) எழுந்துபரி பூரணத்தின்
சொல்லாய் அகண்ட துரியமதாய் - எல்லாம்ஆம் 4

காலத்தின் எல்லை கடந்துபர நாதத்தின்
மூலத்தே மன்னும் முதற்பொருளாய் - ஞாலத்துள் 5

ஓங்காரம் ஆகி உணர்வாய் உணர்வதற்கு
நீங்காத சோதி நிருமலமாய்ப் பாங்கான 6

---

ரும் என்பது பராபரம் என்பதன் அடை. பாராரும் - உலகெங்கும் நிறைந்த. தெய்வ பராபரம் - தெய்வங்களின் நாயகன்.

2. காட்சி - காணப்படும் பொருள். இவ்விரண்டிலும் இறைவன் அவையேயாய் ஒற்றுமைப்படக் கலந்து நிற்கின்ருன் என்க. பூண் ஆபரணம் - அணியத்தக்க அணிகலம்; யாவரும் விரும்பிக் கொள்ளத்தக்க பொருள்; மாணிக்கமாதலால். சேண் - நெடுந் தூரத்திலுள்ள பொருளாகி.

3. அளவுபடா அறிவாய் எனக் கூட்டுக. ஓர் அளவிலும் அடங்காத இறைவன் அந்தமில்லாத் தனிமுதலாய் நின்ருன்.

4. வான் அந்தம் இல்லா நிலையம் – ஆகாயமாகிய எல்லையில்லாத இடம் என்றது ஐம்பூதங்களுக்கும் அப்பாற்பட்டது என்றபடி. அகண்டம் - கண்டப்படாத தனிமுதல் நிலை. பரிபூரணத்தின் சொல் என்றது பிரணவத்தை. துரியம் - தேற்றம், நிலை, இறுதி என்னும் மூன்றையும் கடந்த நான்காவது நிலை. இனிக் காலமும் அவ்வாறு நிற்பதாகலின் அதனையும் கடந்தது என்பதனை அடுத்துக் கூறினர்.

5. பரநாதம் - நவந்தரு பேதங்களில் மூலமானது. நவந்தரு பேதங்களாவன - சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்பன. இவற்றுள் முதலில் சொல்லப் பட்ட சிவம் என்னும் நிலையே பரநாதம். அதன் மூலத்தில் மன்னும் முதற்பொருளே பரசிவம்.

6. 'உயிர்கட்கு உண்டாகின்ற உணர்வுகள் யாவும் பிரணவத்தினுலே உண்டாகும்' என்பது மெய்ந்நூல் முடிவாகலின் 'ஓங்காரமாதி உணர்வாய்' என்ருர். 'உணர்வதற்கு உணர்வாய்; நீங்காத

தற்பரமாய் வேருய்ச் சகளமதாய் நிட்களமாய்ச்
சிற்பரமே ஆன சிவபெருமான் - கற்பனையால் 7

உன்னும் அளவில் உயர்குடிலைப் பாற்ருேன்றி
மின்னும்நா தத்திடை விந்துதித்தே - அன்னதுதான் 8

சாருமிடத் (து) ஓங்குபஞ்ச சாதாக்கி யத்துள்ளே
ஒரு மகிமை உருத்திரர்கள் - மேருமுதல் 9

**தலச் சிறப்பு**

வெற்பெல்லாம் நோக்கியந்தவெற்பிலுயர்வெற் (பு) எதுவென்று
அற்புதமாய் நோக்கும் அளவிலெதிர் - கற்பமொரு 10

---

சோதியாய்; நிர்மலமாய்' என இயைக்க. நிருமலம் - மலம் (அறியாமை) இன்மை. பாங்கான - இறைவனுக்கு இயல்பான.

7. தத்பரம் - 'தத்' (அது) என்று பொதுவாய்க் கூறப்படும் பரம் பொருள். இவ்வாறு பொதுப்படக் கூறுதல் அறிதற்கு அரிது ஆதலினுல். வேருய் - இவ்வாறு அறிதற்கு அரிதான நிலையினின்றும் வேறுபட்டு. சகளம் - உருவம், வடிவுடையது. நிட்களம் - அருவம், வடிவில்லாதது. இவற்றைக் கூறவே, 'நிட்கள சகளம்' எனப்படும் அருவுருவமும் கொள்ளப்படும்; வடிவும் வடிவில்லாததுமாயது. சித் + பரம் = சிற்பரம்; சித் - அறிவு. கற்பனை - நினைவு; இதனை 'சங்கற்பம்' என்பர். இறைவன் நம்மைப்போலச் செயல்களைக் கரணங்களால் செய்யாது சங்கற்பத்தாலே செய்வான் என்க.

8. குடிலை - சுத்தமாயை. இதனின்றும் முறையே தோன்றும் தத்துவங்கள் நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்துமாம். குடிலைப்பால் தோன்றி - சுத்த மாயையினிடத்தில் தோன்றி. அன்னது தான் - அந்தவிந்துவே.

9. சாதாக்கியம் - சக்தியுடன் சேர்ந்த பரமசிவம்; இது ஐந்து வகையாயிருக்கும். அவை சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம். இவற்றுள்ளே அணுசதாசிவர்கள், மந்திர மகேசுரர்கள், வித்தியேசுரர்கள், உருத்திரர்கள் முதலாகப் பலர் அடங்கியிருப்பார்கள். அவர்களில் இங்கு உருத்திரர்கள் குறிப்பிடப்படுகிருர்கள். 'உருத்திரர்கள்' என்பதனை 'நோக்குமளவில்' (10) என்பதனேடு முடிக்க. ஒரும் மகிமை - எல்லாராலும் எண்ணப்படும் பெருஞ்சிறப்பு.

10. கற்பம் ஒரு காலத்து - கற்பம் என்னும் பெயருடைய அந்த ஒரு காலத்திலே; இஃது உலகம் அழியும் காலமாகும். இக்

காலத் தெழும்பரிதி கால்வீசி மண்டலமேற்
சீலத் திருந்த செயலெனவே - பாலுற்றோர் 11

தன்மயம (து) ஆகத் தயங்குகதிர் வீசிநின்ற
மின்மயமாம் மாணிக்க வெற்பணுகிப் - புன்மையெலாம் 12

மாற்றிஅடி யார்க்கருள வாட்போக்கி யாம்எனவே
ஏற்றமுறு நாமம் இசைந்தபிரான் - கூற்றுலகுஞ் 13

செல்லாப் பிரேதகனைச் செல்கென் (று) ஒருமுனிவன்
சொல்லாற் பணியுந் துரந்தரனை - வல்லாளன் 14

ஆக்கியே சின்னாள் அரசுசெய்வித் (து) அந்தியத்தில்
நோக்குசிவ லோகமுற நோக்கினோன் - தாக்கமரில் 15

---

காலத்தில் இயற்கைப் பொருள்கள் தம்தம் ஆற்றலை அளவுகடந்து வெளிப்படுத்தும் என்பர். எதிர்தல் - தோன்றுதல்.

11. பரிதி - சூரியன். கால்வீசி - கதிர்களைப் பரப்பி. மண்டலம் - மண்தலம், பூமி. சீலத்து - சிறந்த பண்போடு. சூரியனே பூமியில் வந்துதித்தாற் போல ஒளிவீசி. பால் - தன்பால், தன்னிடத்தில் வந்தவர்கள்.

12. தயங்கு - விளங்குகின்ற. 'உருத்திரர்கள்' (9) 'நோக்கும் அளவில்' (10), 'கதிர் வீசிநின்ற மாணிக்க வெற்பு அணுகி' (12) 'இசைந்த பிரான்' (13) என்க. மாணிக்க வெற்பு - இரத்தினகிரி.

13. புன்மை - குற்றம். அடியார்களின் புன்மையெலாம் மாற்றி அருள்வது வாட்போக்கி ஆகும் என்றபடி. 'வாட்போக்கி' என்பது மலைக்கேயன்றி அதிலுள்ள இறைவனுக்கும் உரியதாக இங்குக் கூறப்பட்டது. 'காளத்தியை' என்பது போல.

14 - 5. கூற்றுலகு - எமபுரம். சமரவேலன் என்னும் அரசன் லோகாயதம் என்ற வாம மதத்தில் வீழ்ந்து பல பாதகங்களையும் அஞ்சாமற் செய்த காரணத்தால் நரகத் துன்பத்தை அனுபவித்த பின்பும், பிசாசாய்த் திரிந்து கொண்டிருக்கும் பொழுது, ஏதோ நல்வினையால் உரோமச முனிவரை அடைந்து வேண்ட, அவர் அவனை வாட்போக்கிக்கு அழைத்துச் சென்று, காவிரியில் மூழ்குவித்து, இறைவனைத் தரிசிப்பித்தார். இறைவனும் அங்குத் தோன்றி அருள்புரிந்து இழிவுகள் யாவும் நீக்கி அவன் பேரரசனாய் உலகை ஆண்டிருந்து பின் சிவலோகம் அடையுமாறு அருள் செய்தமை குறிப்பிடப்பட்டது. இவ் வரலாறு இத்தலபுராணம் உரோமசர் பூசித்த சருக்கத்தில் உள்ளது. பிரேதகன் - பேய் வடிவினன். இப்படிச் செல்க என்று சபிக்கப்பட்டது தேவர்களால். ஒரு

உள்ளங் குழையா (து) உயர்மறையோர் சந்தியின்நீர்
வெள்ளம் பெருகி விலக்கவே - தள்ளிவரும் 16

செங்கதிரோன் தானவர்செய் தீமை தனையொழியச்
சங்கரவென் றேத்துந் தகைமையான் - பொங்குகனல் 17

ஆனஇடி யேறும் அபிடேகஞ் செய்யவரந்
தானருளி நின்ற தலைமையான் - வானவர்கோன் 18

அன்றுமுனி யாற்படைத்த ஆயிரங்கோ சங்களும்மெய்
துன்றியகண் ணாகத் தொகுத்திட்டோன் - ஒன்றிவரும்} 19

---

முனிவன் - உரோமசமுனிவன்; உரோமசர் அருளினால்தான் மன்னன் நற்கதியடைந்தது. துரந்தரன் - அரசன்; இங்கு சமரவேலன். வல்லாளன் - மேன்மையுடையவன். அந்தியம் - முடிவு. நோக்கினேன் - அருளிய வாட்போக்கி நாதன்.

16-8. தாக்கு அமரில் - அசுரர் சூரியனைத் தாக்கிப் புரிகின்ற போரில். சந்தியின் நீர் - சந்தியா காலத்தில் அர்க்கியம் கொடுக்கும் தண்ணீர். தானவர் (17) - அசுரர். சங்கர - நன்மையைச் செய்பவனே.

ஏத்தும் - சூரியன் துதிக்கும். தகைமையான் (17) - தன்மையினால் சூரியன் உதயமாகும் பொழுதும் அத்தமிக்கும் பொழுதும் அசுரர் சிலர் அவனைத் தடுத்துப் போர் புரிகிறார்கள் என்பதும், அட போரில் வெற்றி கண்டு அவர்களைக் கடந்து செல்லும் ஆற்றல் சூரியனுக்கு உண்டாகும் பொருட்டே அந்தணர்கள் சந்தியாகாலங்களில் அர்க்கிய நீரை இறைக்கின்றனர் என்பதும் புராணக் கருத்துக்கள். இந்த அசுரரை வெல்லும் ஆற்றலைச் சூரியன் தன் தம்பி இடியின் வாயிலாக வாட்போக்கி இறைவனைப் பூசிக்கச் செய்து பெற்றான் என்பது வாட்போக்கிப் புராணம் 'இடி பூசித்த சருக்கத்'தில் உள்ளது. இவ்விரண்டு செய்திகளும் இக் கண்ணிகளில் குறிக்கப்பட்டன. இடியேறு - இடிக்கடவுள். தலைமையான் - ஈசன்.

19. இந்திரன் அகலிகையை வஞ்சனையாற் கூடினமையால் கௌதம முனிவரால் இடப்பட்ட சாபத்தை அவன் வாட்போக்கி இறைவனைப் பூசித்து நீக்கிக் கொண்டான் என்னும் இத்தலபுராண வரலாறு இக்கண்ணியில் குறிக்கப்பட்டது. வானவர்கோன் - இந்திரன். முனி - கௌதமன். கோசம் - ஆண்குறி. இந்திரன் உடம்பெல்லாம் ஆண்குறிகளாக ஆகும்படி முனிவர் சபித்ததாயும் ஒருவரலாறு உண்டு என்கின்றது பிரபோத சந்திரோதயம்.

கும்பயோ னிக்கெதிர்போய்க் கூறியபஞ் சாக்கரத்தின்
விம்பமாய் என்றும் விளங்குவோன் - அம்புயம்நேர் 20

கையதனால் மாணிக்கம் காமித் (து) எடுக்கவரும்
வெய்யவனும் ஆரியன்முன் மேவியிதை - அய்யநீ 21

வேண்டினையேல் பொன்னியறல் மிக்ககுடம் ஆயிரந்தான்
ஈண்டு தருதியேல் ஈவமென - ஆண் (டு) அவன்போய்க் 22

கொண்டுவரும் ஆயிரத்தைக் கூறுந்தொள் யாயிரமாய்க்
கண்டுபொசி வாசிக் கணக்குரைத்தே - மிண்டுகள்போற் 23

பன்னுநூ றுங்குடத்திற் பத்திலதாய் வாங்கியதில்
உன்னுகுடம் ஒன்றில் உழக்கிலதாய் - அன்னதுநீ 24

தாவெனவே உள்ளம் தரியாமல் வாளுருவி
ஆவெனவே வெட்டும் அவனெதிரே - சேவினொடு 25

---

20. இத்தலத்தில் அகத்திய முனிவர் இறைவனைப் பூசித்துப் பஞ்சாக்கர உபதேசத்தைப் பெற்றார் என்பது இத்தல புராணத்திற் கூறப்பட்டது. கும்பயோனி - கலசத்திற் பிறந்தவர்; அகத்தியர். கூறிய - உபதேசம் செய்த. விம்பம் - வடிவம்.

21-26. ஆரியராசன் என்னும் அரசனுக்கு அருள் பண்ணுதற் பொருட்டு வாட்போக்கி இறைவன் அவனது மணிமுடியை மறைத்தருள, அதனால் வருந்திய அரசனது கனவில் அவ்விறைவன் தோன்றி, 'வாட்போக்கிக்கு வருக' எனப் பணித்து மறைந்தருள, அங்ஙனமே மாணிக்கமலையையடைந்த அவ்வரசன் முன் இறைவர் யாரோ ஒரு வேதியர் போலத் தோன்றி, ஒரு கொப்பரையைக் காட்டி, 'இதில் காவிரி நீர் ஆயிரம் குடம் கொணர்ந்து கொட்டினால் உனது முடியைக் கொடுப்பேன்' என்றார். அரசன் அவ்வாறே கொணர்ந்து நிரப்பியபின், அவ்வேதியர் அந்தக் குடத்தாலே அந்நீரை அளந்து பார்த்தபொழுது நூறுகுடநீர்குறைந்திருக்க வேதியர், 'இப்பொசிவாசியை நிரப்புக' என்றார். பின்பு அரசன் நூறுகுடம் நீர் கொணர்ந்து கொட்டியபின் அவர் பின்னும் அளந்து பார்க்கப் பத்துக் குடநீர் குறைந்திருந்தது. பின்பு பத்துக் குடத்தில் ஓர் உழக்கு நீர் குறைந்துவிட்டது. இதில் வேதியர் ஏதோ ஏமாற்றல் செய்ததாகக் கருதிச் சினங்கொண்ட அரசன் தனது வாளை உருவி அவரது தலைமேல் வெட்டினான். வெட்டினை ஏற்ற இறைவர் இடப வாகனத்தின் மேல் அவனுக்குக் காட்சியளித்து முத்தி கொடுத்தருளினார் என்ற இத்தல வரலாறு இங்குக் குறிக்கப்பட்டது. காமித்து - விரும்பி. மாணிக்கம் - (தான் இழந்த) மாணிக்கமுடி. வெய்யவன் - கோபத்தையுடையவன். ஆரியன் - ஆரிய அரசன்;

காணவந்து முத்திக் கபாடந் திறந்தருளிப்
பூணு முடித்தழும்பு பூண்டபிரான் - வேணபடி 26

சொன்னபொசி வாசியறி தூநலத்தால் எவ்வுலகும்
மன்னுபொசி வாசியென வைகினோன் - கன்னிமார் 27

எண்ணினது தான்முடிக்க ஏமவடி வாளெதிரே
நண்ணி அருளும் நலத்தினன் - புண்ணியமெய்த் 28

தொண்டர் குழாமிருந்து தூயதவம் செய்வதற்கே
கண்டதெனும் பஞ்சாக் கரக்குகையான் - அண்டியே 29

---

மேவி - (முன்னே) சென்று. பொன்னி அறல் - காவிரி நீர். ஈவம் - கொடுப்போம். ஆயிரத்தை - ஆயிரம் குடநீரை. பொசிவாசி - ஒழுகி, கசிந்து போனமையால் ஏற்பட்ட குறைவு. மிண்டுகள் - கொடியவர்களைப் போல். உழக்கு - உழக்களவு நீர். எனவே - என்று இறைவன் சொல்ல. சே - இடபம். கபாடம் - முத்திக்குரிய கதவு. அரசன் வெட்டிய வெட்டினால் இலிங்கத்தின் முடி பிளந்து, இரத்தம் சொரியப் பின்பும் அத்தழும்பு நீங்காதாயிற்று என்க. 'வாட்போக்கி' என்னும் பெயருக்கு இதுவும் ஒரு காரணமாகும். இத்தலத்து இறைவனுக்கு 'முடித்தழும்பன்' என்பது ஒரு பெயர். வேணபடி - வேண்டியபடி என்பதன் மரூஉ.

27. பொசிவாசியறிந்து நிரப்பச் செய்த பெருமானை, 'பொசி வாசி' என்றே உலகம் கூறுவதாயிற்று

28. துர்க்கையைத் தலைவியாகக் கொண்டு சென்று மகிடாசுரனை அழித்த கன்னிமார் அனைவரையும் அவ்வசுரன் பிரம்மகத்தி வடிவாய் வந்து தொடர்ந்து துன்பம் செய்ய அவர்கள் யாவரும் வாட்போக்கியை அடைந்த பொழுது இறைவன் கொடுத்த வாளினைப் பயன்படுத்தி அப்பிரம்மகத்தியைத் தொலைத்தமை இதில் குறிப்பிடப்பட்டது. இவ்வரலாறு இத்தலபுராணம் 'வாட் போக்கிச் சருக்கத்'தில் உள்ளது. எண்ணினது - (பிரம்மகத்தி அகலவேண்டுமென்று) விரும்பியது. நண்ணி அருளும் - (கன்னி மார் பெறும் படியாக அவர்கள் முன்னே) அணுகி அருளும். ஏம வடிவாள் - பாதுகாப்பாகிய கூரிய வாள். 'எண்ணினது தான் முடிக்க எதிரே நண்ணி ஏமவடிவாள் அருளும் நலத்தினன், எனக் கூட்டுக.

29. இத்தலத்தில் அக்கினி திசையில் பஞ்சாக்கர தீர்த்தமும் மலையில் பஞ்சாக்கர குகையும் உள்ளன என்பதை இத் தலபுராணம் மாணிக்க மலைச்சிறப்புரைத்த சருக்கத்தில் காண்க. கண்டது - நிறுவப்பட்டது.

பேதலிக்கும் நேரியர்கோன் பெண்டிர் உளங்கனிந்து
காதலிக்கும் பொன்னாரம் காட்டினான் - தீ (து) அகல 30

வந்திக்கும் மாருதத்தை மன்னுநிச ருபமதாய்ப்
பந்திக்கும் நீர்மை பகர்ந்திட்டோன் - சிந்தித்தே 31

வேண்டாது வேண்டி விரும்புமுரு கேசனிட்ட
தூண்டா மணியின் சுடர்விளக்கோன் - சேண்தாவு 32

தீர்த்தச் சிறப்பு

தன்மலையின் கீழ்பால் சதாகதியின் தீர்த்தம்அயல்
நன்மை தரும்குலிச நற்றடமும் - தன்மமிகும் 33

---

30. பேதலிக்கும் பெண்டிர் - மயங்கும் பெண்டிர். நேரியர் கோன் பெண்டிர் - சோழன் மனைவியர்; நேரியன், நேரி வெற்பன், நேரிறை என்பன சோழனைக் குறிக்கும். நேரி - சோழ நாட்டகத்த தோர் மலை. சோழன் மனைவியர் பொன்னாரத்தை இழந்து இரத் தினகிரி ஈசன் அருளால் மீண்டும் பெற்றமை கூறப்பட்டது. இது பழைய வரலாறு போலும்.

31. இத்தல புராணத்தில், வாயுபூசித்த சருக்கத்தில் வாயு தேவன் வாட்போக்கி நாதரைப் பூசித்து, ஆதி சேடனோடு மாறு பட்டு மேருமலையின் சிகரங்கள் பலவற்றை உடைத்தெறிந்த பாவத் தினின்றும் நீங்கியதோடு, உயிர்களின் உடலில் உதானன் முதலிய பத்து வாயுக்களாய் நின்று உலகைப் புரக்கும் வரத்தையும் பெற் றனன் எனக் கூறப்பட்டுள்ள வரலாறு இங்குக் குறிக்கப்பட்டது. வந்திக்கும் மாருதம் - (தான் செய்த பாபங்கள் விலகும்படி இறை வனை வந்து) பூசித்த வாயுதேவனை. பந்திக்கும்-கட்டுக்கு உட்படுத் தும். நிசரூபம் - பிராணன், அபாநன், உதாநன், வியாநன், சமாநன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ் செயன் என்னும் பத்து வகை வாயுக்களாக வடிவெடுத்து.

32. முருகேசன் - ஓர் அன்பர். இக்கண்ணியில் குறிக்கப் பெற்ற வரலாறு தெரியவில்லை

33-39. தீர்த்தங்களின் சிறப்பு.

33. சேண்தாவும் - ஆகாயத்தை அளாவும். தன் மலையில் - மாணிக்க மலையில். சதாகதி - வாயு தீர்த்தம். அயல் - தென் கிழக்காகிய அக்கினி திக்கில். குலிசத்தடம் - வச்சிர தீர்த்தம்.

தென்றிசையி லேநாக தீர்த்தமுடன் தென்மேற்கே
துன்றுகதிர் வீசும் சுடர்த்தடமும் - என்றுமுயர் 34

மேற்றிசைக்குப் போதகமும் மேவுவட மேற்குமறை
சாற்றும் உரோமசரன் சார்தடமும் - சீற்றம் 35

பொருதவட பால்விந்தைப் பொய்கையும் ஈசானம்
தருபரத்து வாசத் தடமும் - பெருகியே 36

அட்டதிக்கும் மேவ அணுகினோர் பாவமெலாம்
கட்டறுக்கும் பஞ்சாக் கரச்சுனையும் - தொட்டவுடன் 37

வல்வினையை நீக்கி மறுசென்மம் ஆக்கியருட்
செல்வநல்கும் தெய்வத் திருச்சுனையும் - தொல்லைநாள் 38

ஓங்குகடல் ஆழ்ந்த உலகையொரு கோட்டதனுல்
தாங்கும் வராகத் தடஞ்சுனையும் - பாங்குறவே 39

சூழ்ந்துதனை வாழ்த்தும் சுரும்பார் குழலியிடம்
வாழ்ந்து பிரியா மகிமையான் - தாழ்ந்தவர்க்கே 40

---

34. நாக தீர்த்தம் - ஆதிசேடதீர்த்தம். தென்மேற்கில் கதிர் வீசும் சுடர்த்தடம் - சூரியதீர்த்தம்.

35. 'மேற்றிசைக்கண்' என்று பாடம் ஓதுதல் சிறக்கும். போதகம் - கஜதீர்த்தம். உரோமசரன் சார்தடம் - உரோமச தீர்த்தம்.

36. விந்தைப் பொய்கை - துர்க்கா தீர்த்தம். ஈசானம் - வடகிழக்கு.

37. பஞ்சாக்கரச் சுனை - பஞ்சாக்கரதீர்த்தம். அட்ட திக்கும் மேவ - எட்டுத்திக்குகளிலும் (வாயு தீர்த்தம் முதலியன) பொருந்த.

38. தெய்வச் சுனை - தேவதீர்த்தம். தொல்லைநாள் - பண்டு.

39. ஒருகோடு - ஒரு கொம்பு. வராகத்தடஞ்சுனை - வராக தீர்த்தம், இது வராக அவதாரத்தின் போது திருமால் உண்டாக்கியது என்பர்.

40. சுரும்பார் குழலி - இத்தலத்து அம்பிகைதிருநாமம். தாழ்ந்தவர்க்கே பணிந்தவர்களுக்கும்; ஏகாரம் உம்மைப் பொருளது. தாழ்ந்தவர்க்கு - நிலையில் தாழ்ந்தவர்களுக்கு, நிழலாய் நின்ருர் தமக்கு - நிழல் போல் உதவும் அன்பர்களுக்கு. ஒரு நிழலாய் - தான் ஒப்பற்ற நிழல்போல் நின்று அருளும். 'நின்ருன் தனக்கும்' என்று பாடம் கொண்டு தாழ்ந்தவர்க்கும் தான் நிழலாய் நின்ருன்;

தானிழலாய் நின்ருர் தமக்கும் ஒருநிழலாய்
மாநிழல்செய் நிம்ப வனத்தினன் - பானுகுலம் 41

தோன்றுதிரு நீலகண்டச் சோழன் பணிவிடைக்கே
ஏன்றுகதி நல்கும் இயற்கையான் - மூன்றுலகும் 42

மேயதவத் தோரெண்மர் வேண்டியே பூசிக்கத்
தூயவரம் ஈய்ந்தருளுய் தோன்றலான் - சேயிணையே 43

தங்கைக் களித்தால் தலையளிப்பேன் என்றவன்பால்
அங்கத் தியாகம் அருளினேன் - பங்கயத்து 44

வேதா அமைப்பும் விலகுமெனச் சார்ந்தவர்க்கு
மாதானம் முற்றும் வழங்குவோன் - தாதாரும் 45

---

தனக்கும் ஒரு நிழலாய் நிம்ப மரத்தை உடையவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

41. நிம்பம் - வேம்பு, தலவிருக்ஷம். இத்தலத்திற்கு நிம்ப வனம் என்றும் ஒரு பெயர் உண்டு.

42. பானுகுலம் - சூரிய குலம். 'திருநீலகண்டன்' என்னும் பெயருடைய சோழன் இத்தலத்திற்குப் பல திருப்பணிகள் செய்து நற்கதி பெற்ருன் என்பது இக்கண்ணியால் உணரப் பெறுகின்றது. வேறு விவரம் தெரியவில்லை.

43. தவத்தோர் எண்மர் - எட்டு முனிவர்.

44. தன் தங்கைக்கு மகப்பேறு உண்டாளுல் தன் தலையைத் தருவதாக நேர்ந்து கொண்ட வயிரப்பெருமாள் என்பவர் அங்ஙனமே தலையை அளித்த பொழுது, அந்தத்தலை இத்தலத்து இறைவர் திருவடியை அணுகித் தோத்திரம் செய்து விட்டுப் பின்பு வேம்படியில் சென்று இலிங்க உருவமாயிற்றுஎன்று இத்தலபுராணம் 'வயிரப்பெருமாள் மலை காவல் பெறு சருக்க'த்தில் கூறும். அங்கத் தியாகம் அருளினேன் - தன்னுடைய வடிவமாகிய சிவலிங்க உருவைக் கொடுத்தவன்.

45. பங்கயத்து வேதா - தாமரை மலரில் வசிக்கும் வேதங்களை அருளிய பிரமன். வேதா அமைப்பு - பிரமன் எழுதிய எழுத்து, விதி. பிரமன் இன்னபடி என்றெழுதிய தலைவிதியையும் மாற்றிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் சார்ந்தவர்க்கெல்லாம் பெரும் பதவி அருளுபவன்.

## தசாங்கம்

*கிரி*

*ஆகமெலி ஆயனுக்காய் அன்றெரித்த நாள்முதலாய்க்*
*காகம் அணுகாக் கனகிரியான் - மாகநிறை* 46

*ஆறு*

*கற்பகப்பூங் காவெனவே காமித் ததுகொடுக்கும்*
*அற்புதமாங் காவேரி யாற்றினன் - பொற்பமரும்* 47

*நாடு*

*கோட்டினல் ஓங்கு குலவரையைக் காலிடந்தே*
*நாட்டியிடும் குன்றுசூழ் நாட்டினன் - வாட்டினர்* 48

*நகர்*

*கற்கரைய வீசுசந்த்ர காசவாள் பெற்றதனல்*
*துற்கைதான் மாறித் தொடர்ந்தெதிரே - நிற்கும்* 49

---

46–58. இறைவனுக்குரிய தசாங்கங்கள். தாது ஆரும் ஆகம் மகரந்தப்பொடி படிந்த உடம்பு. மெலி - மனவருத்தத்தால் தரையில் புரண்டழுது இளைத்த. ஆயர் குலத்துத் தோன்றிய அன்பர் ஒருவர் இத்தலத்து இறைவனுக்காக வைத்த பாற்குடத்தைக் காக்கையொன்று கவிழ்த்துவிட்டதுகண்டு புலம்பிய அவர்முன் இறைவன் தோன்றிக் காட்சி வழங்கி அக்காக்கையை எரித்து அவருக்கு முத்தி அளித்தான் என்று இத்தலபுராணம் 'சிற்றுயர் அருள்பெறு சருக்கம்' சொல்லுகிறது. அன்று முதல் மாணிக்கமலை 'காக்கை அணுகாமலை' ஆயிற்று. மாகநிறை விண்ணுலகில் அடர்ந்து விளங்குகின்ற.

47. காமித்தது - விரும்பியதை.

48. பொற்பு அமரும் - அழகு பொருந்திய. கோடு - சிகரம் குலவரை - மகாமேருமலை. கால் - காற்று, வாயுதேவன். குன்று - மேருமலையின் சிகரம். இதில் குறிக்கப்பட்ட வரலாறு இத்தல புராணம் 'வாயு பூசித்த சருக்க'த்தில் உள்ளது. இடந்து - (மேருமலையினின்று வாயுதேவன்) பெயர்த்து. நாட்டியிடும் - ஊன்றச் செய்த. குன்றுசூழ் நாடு - இரத்தினகிரியைச் சூழ்ந்துள்ள நாடு. கல்வெட்டில் குறுநகர் நாடு எனக் காணப் பெறுகின்றது.

49-51. வாட்டினர் கல்கரைய - பகைவர்களுடைய மலை பிளக்கும்வண்ணம். சந்திரகாசவாள்-சந்திரகாசம் என்னும் பெயர் பெற்ற வாள். பெற்றதனல் - பெற்று அதனல். மாறி - மாறுபட்டு. வரம் அந்திமம் ஆம் - தான்பெற்ற வரங்களெல்லாம் இறுதியையடைந்த,

வரமந் திமமா மயிடா சுரன்மெய்ப்
பிரமத் தியானை பிளிற - உரமுற்று 50

மண்ணஞ்ச வீட்டுநாள் வானோர் சிவாயவென
நண்ணும் சிவாய நகரினன் - விண்ணவர்க்குள் 51

குதிரை

வாசியான் எவ்வுயிர்க்கும் மன்னுமிடை பிங்கலையூர்
வாசியான் என்றுரைக்கும் வாசியான் - பாசநிலை 52

யானை

சேதிக்கும் நாற்கரணத் தின்முடிசேர் மெய்ஞ்ஞான
ஆதிக் கடக்கமதத் (து) ஆனையான் சோதிக்கும் 53

---

'பிரமகத்தி' என்பது 'பிரமத்தி' எனத்தொகுத்தல் விகாரமாயிற்று. இதனை 'யானை' என்பது உருவகம். கண்ணி 28 குறிப்புப் பார்க்க. உரம்உற்று - (யானை பிளிற அதன்) மார்பைப் பிளந்து என்க. வீட்டு நாள் - வீழ்த்திய பொழுது. வாட்போக்கிப் பெருமான் தந்த வாளா யுதத்தைப் பயன்படுத்தித் துர்க்கை பிரம்மகத்தியை ஒழித்த பொழுது தேவர்கள் 'சிவாய' எனச் சொல்லித் தங்கள் அச்சத் தினின்றும் நீங்கிய காரணத்தினுல், வாட்போக்கித் தலம் 'சிவாய நகர்' எனப் பெயர் பெற்றதென்று இத்தல புராணம் 'வாட்போக்கிச் சருக்கம்' கூறும். துர்க்கைதான் வாள் பெற்று அதனுல் வீட்டும் நாள் எனக் கூட்டுக.

52. 'வாசி' மூன்றில் முதலாவது வேறுபாடு; அதாவது விண்ணவர்க்குள் வாசியான் - தேவர்களுக்குள் தனியான சிறப் புடையவன். வாசி இங்கே சிறப்பு. இரண்டாவது சுவாசத்தைக் குறித்தது. இடை பிங்கலை - இடைகலை, பிங்கலை என்னும் நாடி கள்; ஊர் - அவற்றில் செல்லும். வாசி - யோகம். மூன்ருவது குதிரையின் மறுபெயராய் நின்றது. வாசியான் குதிரையை உடையவன்; யோகமாகிய குதிரை. யோகத்தையே குதிரை யாகக் கொண்டவன் என்றபடி.

53. சேதித்தல் - அழித்தல், இங்கே அடக்குதலைக் குறித் தது. நாற்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள். அந்தக் கரண ஒடுக்கத்தின் முடிவில் மெய்ஞ்ஞானம் தோன்றும் என்றவாறு. 'மெய்ஞ்ஞானமாகிய யானை' என்க. ஆதி - பழமை. கடகம் - யானைப் படை. ஞான மாகிய மூலத்தில் தோன்றிய படையிலுள்ள யானை; மதத்தை யுடைய யானை.

மாலை

மாலயனும் காணு வடிவில் புனைந்தருளும்
மாலையினும் பொன்னிதழி மாலையான் - காலதென 54

முரசு

மூலத் திடைகிளைத்து மும்மண் டலங்கடந்துள்
ஆலிக்கும் நாதத் (து) அணிமுரசான் - ஞாலத்தைச் 55

கொடி

சுட்டழல தாக்கும் சுடலையினும் தற்பிரியாக்
கொட்டமிகும் ஏற்றுக் கொடியினன் - மட்டலாப் 56

ஆணை

பிண்டமும் நாதாந்தப் பெருவெளியும் பல்கோடி
அண்டமுமாம் அஞ்செழுத்தின் ஆணையான்-ஒண்டொடியார் 57

---

54. சோதிக்கும் - தேடிய. மாலையெனும் - செவ்வந்தி வானம் என்று சொல்லும். பொன் இதழிமாலையான் - பொன் போன்ற நிற முடைய கொன்றை மாலையை உடையவன்.

55. கால் என - பிராணன் என்னும் காற்றுவடிவமாய். (கால்-காற்று). மூலம் - மூலாதாரம். கிளைத்தல் - தோன்றுதல். மும் மண்டலம் கடந்து - சூரிய மண்டலம், சந்திரமண்டலம், அக்கினி மண்டலம். இவை உடம்பில் அமைந்தவை: அங்கு நாதமாகிய திருவடிச் சிலம்பொலி கேட்கப்படும் என்பர். ஆலிக்கும்-ஆரவாரிக்கும், ஒலிக்கும். நாதமாகிய முரசையுடையவன். நாதத்து - 'அத்து' வேண்டாவழிச் சாரியை-

56. 'சுடலை' என்றது எல்லாம் அழிந்த நிலையை. தற்பிரியா தன்னைப் பிரியாத (ஏறு). கொட்டம் - களிப்பு. ஏறு - இடபம். அறமே விடையாகலின் உலகம் அழிந்த பொழுதும் (அறம் அழியாது ஆதலின்) அதுதான் அழியாது இறைவன் அருகில் நிற்பதாயிற்று. மட்டலா - அளவுக்குள் அடங்காத.

57. பிண்டமும் - உடம்புகளும். நாதாந்தப் பெருவெளி - நாதத்தின் முடிவிலுள்ள பரமாகாசம். ஐந்தெழுத்தாகிய ஆணை.

### இரத்தினகிரியீசனின் பெரும்புகழ்

ஆர்க்குமா ணிக்கமலை ஆகத்தான் - போற்றுமிசை
யார்க்குமா ணிக்கமலை யாகத்தான் - பார்க்குள் 58

மதிக்கவரு மாறு மலையான் சடையில்
மதிக்கவரும் ஆறு மலையான் - துதிக்கவரும் 59

கண்டங் கரிய கரியுடையான் நீலமணிக்
கண்டம் கரிய கரியுடையான் - தொண்டின் 60

அமலையொரு பாகத் (து) அணைவான் பிறவா
தமலை யொருபாகத் (து) அணைவான் - சமரமுக 61

---

58-61. நான்கு கண்ணிகளில் 'மடக்கு' என்னும் சொல்லணி அமைக்கப்படுகின்றது.

58. மாண் இக்கு அமலை ஆக - பெருமை பொருந்திய கரும்பு வில்லினது போர் உண்டாகுமாறு. தான் - அசை. இசை ஆர்க்கும்- இசைகள் ஆரவாரிக்கின்ற. மாணிக்கமலை ஆகத்தான் - மாணிக்க மலை போன்ற (அழகிய, ஒளி வீசும்) உருவத்தை உடையவனாய் இருப்பவன்.

59. மதிகவருமாறு மலையான் - மனம் அலமரும்படி யாரையும் வருத்துதல் இல்லாதவன். மதிக்கவரும் ஆறுமலையான் - யாவரும் மதிக்க வருகின்ற ஆகாயகங்கையைச் சடையில் தரித்துள்ளவன். முதலில் வந்த 'மதிக்க வரும்' என்றதில் ககர ஒற்று விரிந்தது. இரண்டாவது 'மலையான்' என்றது, மலைதலை (சூடுதலை) உடையான் என்றவாறு.

60. கண் தங்கு அரியகரி உடையான் - அடியவரது கண்களில் பொருந்தி நிற்கின்ற, பிறர்க்கு அரிதாகிய சாட்சியை உடையான். 'சாட்சி' என்றது உருவத்தை. நீலமணி கண்டம் - நீலமணி போலக் கரிய கண்டம். கரி உடையான் - யானைத் தோலாகிய போர்வையை உடையாக உடையவன்.

61. ஒருபாகத்து - ஒருபால். தொண்டின் அமலை அணைவான் - தன்னை வணங்குபவர் செய்யும் தொண்டின் ஆரவார நிகழ்ச்சிகளிலே ஈடுபட்டிருப்பவன். பிறவாத அமலை ஒருபாகத்து அணைவான் - அம்பிகையைத் தனது இடப்பாகத்தில் பொருந்தி உள்ளவன்.

வீரன்மார்த் தாண்டன் விதிமுதலோர் போற்றுதிதி
வாரன் சிவயோக மாகரணன் - ஒருமனக் 62

கேத்திரன்பஞ் சாங்கன் கிரீசன்அம ரேசனென்று
தோத்திரஞ்செய் வேதத் துழனியான் - பாத்திரங்கம் 63

பாணியான் வேணியான் பாணிச் சடைமுடியான்
காணியான் வாணியான் காணியான் - மாணிக்கக் 64

கூத்தன்மா சித்திரையான் கூறினவை காசியான்
ஆத்தன் நமனுக்கே ஆனியான் - ஏத்துசபை 65

---

62. திதி, வார, நட்சத்திர, யோக, கரணமாகிய பஞ்சாங்கங்களையும்கூறத்தொடங்கி, நட்சத்திரம் ஒழிந்த நான்கையும் கூறுகிறார். வீரன் - வீரபத்திரர். மார்த்தாண்டன் - சூரியன். விதி - பிரமன். இது முதலாகச் சில இடங்களில் ஒரு பொருட்குரிய சொல்லால் அப்பொருள் தோற்றுவிக்கப்படாது பிறிதுபொருள் தோற்றுவிக்கப்படுகின்றது. இதுவும் ஒருவகை 'ஒட்டணி' என்பர். இருபொருள் கொள்ளாது ஒரு பொருளே கொள்ளுதலின், சிலேடை என்றல் பொருந்தாது. திதிவாரன் - நிலைபெற்ற அன்புடையவன். திதி - ஸ்திதி, நிலைபேறு. காத்தலும்ஆம். சிவயோக மாகரணன் - சிவயோகம் பயில்கின்றவர்களுடைய உயர்ந்த உள்ளத்தில் இருப்பவன். இதில் திதி, வாரம், யோகம், கரணம் என்பன வேறு பொருள் தந்தன.

63. ஒரும் - எண்ணுகின்ற. மனக்கேத்திரன் - மனமாகிய க்ஷேத்திரத்தில் (தலத்தில்) இருப்பவன். பஞ்சாங்கன் - சிரசு, முகம், இருதயம், குய்யம், பாதம் என்னும் ஐந்து உறுப்புகளை உடையவன். அங்கம் - உறுப்பு. துழனி - ஒலி, கோஷம் (வேதகோஷம்).

64. கம் - தலை, பிரமகபாலம். பாத்திரம் - பிக்ஷாபாத்திரமாக. பிரம கபாலமாகிய பாத்திரத்தைக் கையில் உடையவன். 'பாணி' இரண்டில் முன்னது கை; பின்னது நீர். வேணி - சடை. அச்சடையில் பாணியை (கங்கையை) உடையவன் என்க. காணியான் - எல்லா உலகங்களையும் தனக்கு உரிமையாகக் கொண்டவன். வாணியான் காணியான் - நாமகள் தலைவனாகிய பிரமனால் கண்டு வணங்கப்படுபவன்.

65. இங்கு நின்றும் மாதத்தின் பெயர்கள் வேறு பொருளில் அமைக்கப்படுகின்றன. மாசித்திரையான் - பேரழகுடையவன். கூறின - (இறைவனுக்கே பிரணவப் பொருளைக்) கூறிய. வைகாசியான் - விசாகனைக் குமாரனைப் பெற்றவன். ஆத்தன்

ஆடியான் ஆவணியான் ஆன புரட் (டு) ஆசியான்
மூடிமால் ஐப்பசியான் முத்தமிழ்க்கே - நாடிவருங் 66

கார்த்திகையான் கொன்றையினுங் காமிக்கும் மார்கழியான்
வார்த்தை மிகுதையான் மாசியான் - மூர்த்திகமாம் 67

விம்பங் குனியான் விரும்புபல மாதத்தான்
நம்பு வருட நகுமுகத்தான் - பம்பு 68

---

ஆப்தன், நண்பன். நமனுக்கு ஆனியான் - யமனுக்கு அழிவை உண்டாக்கியவன்.

66. ஏத்துசபை ஆடியான் - போற்றுகின்ற அம்பலத்தில் ஆடுகின்றவன். ஆ அணியான் - இடபத்தை அங்கமாக உடையவன். ஆன புரட்டு - பொய், சூது, வஞ்சம் ஆகிய மாறுபட்ட தன்மைகளை; ஆசியான் - விரும்பாதவன். (ஆசித்தல் - விரும்புதல்). மாலே மூடி பசியான் - திருமாலை ஒரு பாகத்தில் கொண்டு அதனால் பசுமை நிறத்தையும் உடையவன். 'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே' (தேவா. திருவை.), 'ஒருபாதி மால் கொள' (காளமேகம்).

67. கார் மேகம். முத்தமிழை முகக்கவரும் மேகங்கள் புலவர்கள். திகையான் - அவர்கட்கு அதனை வழங்கத் தயங்க மாட்டான். 'கார்க்குத் திகையான்' என்க. இனி, திகை - திசையுமாம் ஆதலின் 'அவர்கள் வருகின்ற திசையில் எதிர் நிற்பான்' என்றலுமாம். கொன்றை இனும் காமிக்கும் மார்கழியான் - கொன்றை மாலையை இன்னும் யாவரும் விரும்பத்தக்க தன் மார்பினின்றும் நீக்காதவன். அதாவது எப்போதும் கொன்றை மாலையை அணிந்தவன் என்றவாறு. 'மார்பு' என்பது 'மார்' என மருவிநின்றது. தைமிகு வார்த்தையான் எனக் கூட்டி உரை கொள்க. தை - அலங்காரம், (அணி). நிறைந்த வார்த்தையான் - தோத்திரங்களை உடையவன். மாசி - மாசீ எனக் கொண்டு பெரிய செல்வம் என்க. விபூதி. 'ஸ்ரீ' என்னும் வடசொல் தமிழில் 'சீ' என நிற்கும். அஃது இங்குக்குறுக்கல் விகாரம் பெற்றது. மூர்த்திகம் - உருவாய பொருள்.

68. விம்பம் (பிம்பம்) - உருவம், திருமேனி. குனியான் - வளையாதவன். இது, முதுமை எய்தாமையைக் குறிக்கும். மாது - பெருமை. விரும்பும் பல பெருமைகளையுடையவன். நம்பு - விரும்புகின்ற. வருடம் - அன்புக் கண்ணீரின் தாரை, கண்ணீர்த் தாரையைக் கண்டு மலர்ந்த முகத்தையுடையவன். இங்கு மாதம், வருடம் என்னும் சொற்கள் வேறுபொருள் தந்தன. பம்பு - நிறைந்த.

சொரூபநி தான சுதான மகேச
விரூபக ணேச விநோத - அரூப 69

நிரம்பிய கண்ட நிறைந்து பரந்த
அரன்பரன் அம்பலவன் அன்று - திருந்தலரை 70

வாட்டுஞ் சுவா யம்பு மனுச்சித் திரைமாதம்
ஓட்டுதிரு நாளில் உகந்தொருநாள் - நாட்டியபூ 71

## பவனி

### காப்பணிதலும் கொடியேற்றமும்

மண்டலமே லூற்றிரவி மண்டலம்புக் காமெனவே
விண்டலந்தோய் மண்டபத்தில் வீற்றிருந்தே -
தொண்டருக்கு 72

---

69. சொரூபன் - உருவத்தையுடையவன், எங்கும் நிறைந்திருப்பவன். நிதானம் - அமைதி, சாந்தம். பம்பும் தான சொருபன் என்க. சுதானன் - நல்ல கொடையை உடையவன். விரூப கணேசன் - இயற்கைக்கு மாறான வடிவங்களையுடைய சிவ கணங்களுக்குத் தலைவன். இவைகளைப் பண்பியாகக் கூருது, பண்பாகக் கூறி, 'இவையெல்லாம் நிரம்பி' என்கின்றார். 'அரன்' (70) என்பதில் முடிக்க.

70. அகண்டம் நிறைந்து பரந்த - எல்லையில்லாத இடமெங்கும் (பூரணமாக) நிறைந்து வியாபித்து. பரன் - மேலானவன். அம்பலவன் - அம்பலத்து ஆடுவோன். திருந்தலர் - பகைவர்.

71. 'சுவாயம்புவமனு' என்பவனது காலத்தில் நிகழ்ந்த சித்திரை மாத விழாவில் இரத்தினகிரிநாதர் உலாப்போந்ததாகக் கூறுகின்றார். ஓட்டு திருநாள் - தேரோட்டவிழா. 131-ஆம் கண்ணியில் 'செம்பொன் மணித்தேரேறி' எனவருவதால் 'ஓட்டுநாள்' என்பது தேரோட்டும் திருநாள் என்பது தெளிவு. இதுமுதல் 151-ஆம் கண்ணி முடிய இரத்தினகிரிநாதர் பவனி வருதலைக் கூறுகிறார்.

72. பூமண்டலம் - பூமி. இரவி மண்டலம் - சூரிய மண்டலம். பூமியில் நிறுவப்பட்டு சூரியமண்டலம் புக்கதாம் எனும்படி விண்தலம் தோய்கின்ற மண்டபம். இறைவன் ஆகாயத்தைமுட்டும் மண்டபத்தில் வீற்றிருந்தார் என்க.

மெய்க்காப் பருள விரும்புசிவா யந்நகரில்
கைக்காப் பணிந்து கருணையுடன் - மிக்க 73

கொடியேற்றி வீதி குலவியபின் அந்தப்
படியே யெழுந்தருளிப் பானு - நெடிதான 74

கேசாதி பாதமாக அணிகள் அணிந்த வகை

மாணிக்க வெற்பை வலஞ்செய்து பொன்மலையைப்
பூணிக்கை யாய்த்தொழவே போனதற்பின் - காணிக்கை 75

வாங்குமணி நீலம் மலர்க்கரத்தி லேயிருந்து
வீங்குசுடர் மேலுற்ற விம்பமென - ஓங்கு 76

முடித்தழும்பின் சோரிதுள்ளி முன்னுறைந்த தென்ன
அடுத் (து) எதிரே நின்றங் கழகாய் - மடுத்தவினை 77

---

73. மெய்க்காப்பு - உண்மையான பாதுகாவல். பெருவிழாத் தொடங்கும் முன் காப்பணிதல் மரபு. 'சிவாயந் நகரில்' என்பதில் 'ந்' செய்யுளோசைக்காக மிகுந்தது.

74. முதல் நாள் காப்பு, கொடியேற்றம், பகல் விழா முடிந்த பின் சூரியன் மறைந்ததை இருகண்ணிகளில் கூறுகின்றார். மிக்க - சிறப்பான. வீதி குலவிய பின் - பிரகாரத்தில் உலா வந்தபின்; வீதி - கோயிலின் உள் வீதி.

75. சூரியன் கடலுள் மூழ்குவதாகவும், மலையில் மறைவதாகவும் கவிகள் கூறுவர். 'மாணிக்க வெற்பை வலம் செய்து' 'வலன் ஏர்பு திரிதரு ஞாயிறு' (திருமுருகு. 1-2). பூணிக்கை - நீங்காத கடமை.

76-80. முகத்தில் அணிந்த கருஞ்சாந்துத் திலகம் வருணிக்கப்படுகின்றது. காணிக்கை வாங்கு மணிநீலம் - தேவர் முதலியோருள் ஒருவர் காணிக்கையாகக் கொடுத்த நீலமணி போன்ற திருச்சாந்து என முடிக்க.

77. ஓங்கி முடித்தழும்பின் சோரிதுள்ளி முன் உறைந்தது என்ன - முன் ஆரிய அரசன் அடித்த பொழுது, இறைவனது தலையிலிருந்து பெருகிய இரத்தம் துளியாகச் சிந்தி அவன் நெற்றியில் உறைந்தது போலவும்.

நீத்தபுரு கூதன் நிழலெனவே வானவரைக்
காத்தமறு மேல்போய்க் கசிந்ததெனப் - பார்த் (து) எரிசெய் 78

காகமே லின்னங் கனற்கண் புகைந்ததெனப்
பாகபரஞ் செவ்வி படிந்ததென - மேகமுடன் 79

தெள்ளு திருச்சாந்து திலகமணிந் தேகொடிய
புள்ளுலவா முன்றிலிடை போய்த்திரும்பி - வெள்ளியென 80

மின்னும் பசுங்கிரண வெண்பட்டு மேற்சாத்தித்
துன்னுங் கடுக்கைத் தொடைசாத்தி - மன்னுங் 81

கலவைக் குளிர்சாத்திக் கற்பூரஞ் சாத்திச்
சலவைச் செழுஞ்சாந்து சாத்தி - உலகுதொழு 82

---

78. மடுத்த வினை நீத்த - தனக்குண்டான சாபம் நீங்கப் பெற்ற. புருகூதன் - இந்திரன். இந்திரனுடைய நிழல் போன்ற வானவரை என்க. வானவரைக் காத்த மறு - நஞ்சுண்ட கண்டத்துக் கருமை. இக் கருமை மேல்போய்க் கசிந்தது போலவும்.

79. எரிசெய் காகம் மேல் - முன்னரே எரிக்கப்பட்ட காகத்தின் மேல். கனற்கண் - நெற்றியில் உள்ள நெருப்புக்கண் (இன்னும் புகைவிட்டுக் கொண்டிருப்பதைப் போலவும்). பாகபரம்- பரிபாகம் ஆதற்குரிய உயிர்களின் ஆணவமலம் அங்ஙனம் பரிபாகமாகி இறைவனிடத்தில் வந்து அடங்கி நின்று விட்டது போலவும்.

80. மேகமுடன் தெள்ளு திருச் சாந்து - மேகத்தோடு வைத்து ஒப்பு நோக்குதற்குரிய திருச்சாந்து. விம்பமென (76), சோரிதுள்ளி உறைந்ததென (77), மறு மேல்போய்க் கசிந்ததென (78), கனற்கண் புகைந்ததென (79), பாகபரம் படிந்ததென (79), மேகமுடன் தெள்ளு திருச் சாந்து என முடிக்க. கொடியபுள் - 'கொடி' என்னும் பெயரை உடையதாகிய காக்கை. 'கொடுமையான காக்கை' என்பது நயம். கொடி - காகம்.

81. துன்னும் - நெருக்கமாகத் தொடுத்த. கடுக்கைத் தொடை - கொன்றைமாலை (சாத்தி).

82. கலவைக் குளிர் - குளிர்ந்த பனிநீரால் பல வாசனைத் திரவியங்களைச் சேர்த்துக் குழைத்த சந்தனம். 'நயந் திகழும் நல்லுறுப்புக் கூட்டி' - (திருக்கயிலாய உலா). சலவை - வெள்ளை. செழும் சாந்து - செந்நிறச் சந்தனம். குங்குமப்பூவைக் கலப்பதால் வெள்ளைச் சந்தனம் சிவப்பாக மாறுவதாம். 'சலவையாகிய செழும் சாந்து' என்க. 'சலவை' என்றது இயற்கை நிறத்தைச் சுட்டி.

மாமுதுவர் வெண்சா மரையிரட்ட வாணுதலார்
தாமும் பலகீதந் தான்பாடக் - காமருபூந் 83

தென்றற் கொழுந்துலவச் செந்தீப ராசியுடன்
நின்றுச்சி விண்ணின் நிலவெறிப்ப - முன்றிலிடைப் 84

புங்கவர்கள் சூழ்ந்து புகழ்ந்துவரப் போந்தழகாய்
அங்கண் இனிதுற் (று) அருளியபின் - பொங்கியெழும் 85

அவ்வியந்தீர் சைவத்து அருமறையோர் ஆகமத்தின்
திவ்வியமாம் பூசை செலுத்துதலும் - எவ்வமதன் 86

அம்பஞ்சும் அஞ்சா (து) அடல்புரிய அஞ்சுவர்போல்
செம்பொன்செய் பள்ளியறை சேர்ந்தணுகி - வம்பஞ்சும் 87

அம்மை முலைபுல்லி அகிலாண் டமும்புரக்குஞ்
செம்மை யொடுங்களபச் சேருடி - மும்மையுந்தான் 88

---

83. மாமுதுவர் - பெரியோர், அந்தணர். மா - இலக்குமி; முதுவர் - ஞானம் மிக்க அறிவுத்தெய்வமாகிய நாமகள். சாமரை இரட்டியவர் பூமகளும் நாமகளும் போன்றவர்கள் என்க. காமரு பூம் - அழகிய பூமணத்துடன் கூடிய (தென்றல்)

84. தென்றல் கொழுந்து - இளந்தென்றல். ராசி - கூட்டம். உச்சி - (இறைவனது) முடியில். விண்ணின் நிலவு எறிப்ப - வானத்திற் போலவே பிறை தனது கதிர்களை வீச. முன்றில் - வாயிலுக்கு முன்னே உள்ள இடம்.

85. புங்கவர்கள் - உத்தமர்கள். மண்டபத்தில் வீற்றிருந்து (72), திலகமணிந்து (80), வெண்பட்டணிந்து (81), கடுக்கைத் தொடை சூடி (81), கலவை, கற்பூரம், செழுஞ்சாந்து பூசி (82), அலங்கரித்துக் கொண்டு இனிதுற்ற பின் (85), என முடிக்க.

86. அவ்வியம் தீர் - அழுக்காறற்ற. ஆகமத்தின் - ஆகம முறைப்படி. எவ்வமதன் - துன்பத்தை விளைக்கின்ற மன்மத னுடைய.

87. அம்பு அஞ்சும் - மலரம்புகள் ஐந்தும். இறைவனைப் பள்ளி யறையில் சேர்ப்பதைக் கூறுகிறார். அடல் புரிய - சமர் புரிய. அஞ்சுவர் போல் - அஞ்சி ஒளிபவரைப் போல நடித்து மன்மத னின் கணைகளுக்கு எதிரே நின்று போர் செய்ய அஞ்சுவான் போல சிவன் பள்ளியறை சேர்ந்தான் என்பது தற்குறிப்பேற்றம். மன்ம தனுடைய ஐந்து அம்புகளாவன : வனசம் (தாமரை); சூதம் (மா); அசோகு, முல்லை, நீலம். வம்பு - கச்சு. வம்பஞ்சும் அம்மை முலை, அகிலாண்டமும் புரக்கும் அம்மைமுலை எனக் கூட்டுக.

88. மும்மை - முக்காலம்.

சீலித் தறியுஞ் சிவயோகம் உட்கிளர
ஆலித் துறங்கும் அனந்தலினைக் - காலத்தே 89

வந்தெழுப்பு மாயிரவி வானவன்கை நீட்டுதலுங்
கந்தமல ரோதியுடன் கண்மலர்ந்தே - அந்தரத்துக் 90

கங்கைநீ ராதிக் கடவுளர்போய்க் கொண்டுவருஞ்
செங்கைநீர் மல்குந் திருச்சடைமேல் - முங்கினோர் 91

துக்க மயலகற்றும் தூயபொன்னி நீராடி
மிக்கநவ பூசை விதிகொண்டு - திக்குடைதான் 92

கட்டுண்டு மாவின் கலைகரிய (து) ஆப்பொறிமேற்
பட்ட புலியாடை பழுதென்றே - விட்டெறிந்து 93

செம்பொற் கலையுடுத்தே தேசு பெறுமகிலங்
கம்பித் திடாதமரும் கச்சசைத்தே - உம்பருக்குள் 94

---

89. சீலித்து - ஆராய்ந்து. 'இறைவன் கொண்டது யோக நித்திரை' என்பார், 'சிவயோகம் உட்கிளர' என்றார். ஆலித்து - களித்து. அனந்தல் - உறக்கம்.

90. மா இரவி வானவன் - சூரியக் கடவுள். கைநீட்டுதல் - என்றது சிலேடை. ஓதி - கூந்தல். மலர் ஓதி - அன்மொழித் தொகை. கந்தமலர் ஓதி - வாசனை மலர்களைச் செருகிய கூந்தலை யுடைய (சுரும்பார் குழலி) அம்மை.

91. 'கடவுளர் போய்க் கொண்டுவரும் கங்கை நீராதிச் செங்கை நீர்' என்க. செங்கை - சிவந்தகைகள்; இவை கடவுளரு டையன. கடவுளர் இறைவனைப் பூசித்தல் கூறியவாறு. முங்கி னோர் - முழுகினோர், (காவிரியில்) நீராடியவர்கள்.

92. நவம் - புதுமை. 'பூசை' என்றது அபிடேக வகைகளை. பொன்னிநீர் முதலியவற்றை அந்தணர் அபிடேகித்தனர் என்க.

93. இறைவன் உடை அணிதலைக் கூறுகிறார். திக்குஉடை - திசைகளாகிய உடை. கட்டுண்டு - கட்டுண்டது, எல்லைக்குட் பட்டது. மாவின்கலை - யானைத் தோலாகிய ஆடை. பொறி - புள்ளி கள்; புள்ளிகளையுடைய புலித்தோல். திசைகளாகிய உடை எல்லைக் குள் கட்டுண்டது; யானைத் தோல் கருமை நிறமுடையது; புலித் தோல் புள்ளிகளை ஏற்று நின்றது என இவைகளை 'விட்டெறிந்து' என்றார் சமத்காரமாக.

94. அகிலம் கம்பித்திடாது அமரும் கச்சு - பூமியானது அசை யாது அமரும் இடம், ஆதிசேடனாகிய கச்சு. இது செம்பொற்கலை

ஓங்குபொருள் மூன்றும் ஒருபொருளாய் நின்றதென
வாங்கும் உபவீதம் மார்பணிந்து - பாங்குடனே 95

கேசாதிபாதம்

எல்லா நிறைபொருளும் எய்தி முடிவிடத்தே
வில்லார் மணிமகுடம் வேய்ந்தருளிக் - கல்லாரம் 96

மிக்கமா ணிக்கமலை வேழத்தின் ஓடையெனத்
தக்கநுதற் பட்டம் தரித்தருளி - எக்கியபண் 97

பாடும் இருவர் பயிலிடத்தே பொற்குழையும்
தோடும் அணிந்து துலங்கவே - ஓடியதன் 98

மங்கை விடத்தால் மணிக்கந் தரம்பிடித்த
செங்கையிற்பொன் மாலை சிறக்கவே - அங்கணுயர் 99

---

யின் மேல் உடுத்திய உதரபந்தனம். அசைத்து - கட்டி. 'கட்டிய மாசுணக் கச்சைபாடி' (திருவா. 9:19).

95. மூன்று பொருள் - மும்மூர்த்திகள். நின்றது தொழிற் பெயர். 'ஓங்கு பொருள் மூன்றும் ஒரு பொருளாய் நின்றதென'; 'மூவுருவும் ஒன்றுதல் காட்டும் உபவீதம் மார்பணிந்து' (காளத்திநாதர் உலா - 144).

96. 'போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே' (திருவா. 7:10). 'பொன்றுத தொல்லைப் பொருளெல்லாம் சென்று முடியுமிடத்தே முடிபுனைந்து'. (காளத்திநாதர் உலா 144 - 5) ஆதலால் மகுடம் அணிந்த இடத்தை இவ்வாறு கூறினர். வில்ஆர் - ஒளி பொருந்திய. கல்லாரம் - நீலோற்பல மலர். செங்கழுநீர் - கருங்குவளை. இவை சுனைகளில் உள்ளவை என்க.

97. 'இறைவன் அணிந்த நெற்றிப்பட்டம் யானைக்கு அணியும் நெற்றிப்பட்டம் போல உள்ளது' என்கின்றவர், மாணிக்க மலைத்தலத்தில் உள்ள யானையையே சுட்டிக் கூறினர். ஓடை - யானையின் நுதற் பட்டம். தக்க - ஏற்ற. எக்கிய - நுண்ணிய; நுட்பமான பண்களைப் பாடும்.

98. பண்பாடும் இருவர் - அசுவதரன் கம்பளன் என்னும் கந்தருவர்கள். இவர்கள் இறைவன் காதில் அணியாய் அமர்ந்து இசை பாடிக் கொண்டிருக்கின்றனர் என்பது மரபு. ஒரு காதிற் குழையும் மற்றொன்றில் தோடும் அணிந்து ஈசன் உமையொரு பாகனாய் வீற்றிருந்தான் என்பது குறிப்பு.

99. தன் மங்கை - உமை. 'விடத்தால் ஓடிய' என மேலே கூட்டுக; கந்தரம் - கழுத்து. 'மங்கை கையில் பொன்மாலை

வேய்முத்துக் கண்டசரம் வேண்மார்பி லேயிலக
வாய்முத்த மிட்டு வசீகரிக்க - சேய்முத்து 100

கந்தரநீ லத்தையொளி காணப் புறமொதுங்கி
வந்ததெனக் கேயூரம் வாள்விதிர்ப்ப - மந்தரமாய்த் 101

தொக்கமணி ஒன்பதிஞற் சூழ்ந்துசுடர் கால்துருவச்
சக்கரநேர் தோள்வலையந் தான்பிறங்க - மிக்க 102

உருக்கொண்டு பல்கதிரும் ஒன்ருன தென்னத்
தருக்கு மணிப்பதக்கந் தாழ - நெருக்கியணி 103

---

சிறக்க, முத்தமிட்டு வசீகரித்தாள்' (100) என்க. மங்கை செங்கையினுல் அணிவித்த பொன்மாலை முன்னமேயே விடம் ஓடாமல் பிடித்த கழுத்தில் சிறக்க என்க.

100. வேய் முத்து - மூங்கிலில் தோன்றும் முத்து. 'கழுத்தில் அணிவதே கண்ட சரம்' எனப்படுமாயினும் இங்கு மார்பில் அணிவதனை அப்பெயரால் கூறினுர். வேள் - விரும்பப்படுகின்ற. வசீகரிக்க - ஈர்க்க. இங்கு அணைத்தலைக் குறித்தது. சேய் முத்து - சேய்மையில் உள்ளதனை 'சேய்' என்ருர். சேய் - செம்மை, நன்மை; நல்முத்து என்றலுமாம்.

101. 'நீலத்தை' என்பது 'நீலத்தது' எனக் கொள்க கேயூரம் - தோளில் அணியும் வளை. இது முத்துக்கள் பதிக்கப் பட்டது என்க. 'சேய்முத்துக்கேயூரம், கந்தர நீலத்தின் ஒளியைக் காணப் புறமொதுங்கி வந்ததென' எனக் கூட்டுக. உமாதேவியின் பற்களின் அழகை, முத்துஒன்று புல்லக்கு என்னும் மூக்கணியாய் அமைந்து பார்க்க விழைந்தது போலவும், பவளம் அவள் கையில் வளையாய் அமைந்து உதட்டழகைக் காண விழைந்தது போலவும் (பிரபுலிங்கலீலை) என்க. வாள் விதிர்ப்ப - ஒளிவீச. மந்தரமாய் - மலைபோல.

102. சுடர்கால் - ஒளி வீசுகின்ற. துருவச்சக்கரம் - இரவு பகல்களை உண்டாக்குவதாகக் கருதப்படும் வான சக்கரம். அதைப் போன்ற தோள் வலையம்.

103. உருக்கொண்டு - அழகுடன் விளங்கும். பல்கதிரும் - பல (பன்னிரு) ஞாயிறும். தாழ - தொங்க. நெருக்கி அணி - செறித்து அணிகின்ற.

பொற்பாந்தள் ஈன்ற புதியமணி மாலிகையும்
வெற்பாந் தகைய வெயிலெறிப்பக் - கற்பாந்த 104

வெள்ளந் தனையுறிஞ்ச வெம்பசிகொண் டேயிருந்த
கள்ளமழு வோர்செங் கரமருவத் - துள்ளுசடைத் 105

திவ்வியமாம் பச்சைச் செழும்புற் கொழுந்ததனைக்
கவ்வுவபோல் ஓர்கைக் கலைகுதிக்க - எவ்வுயிர்க்கும் 106

புண்டரிகத் தாளே புகலிடமாம் என்பதனைக்
கண்டறியும் ஈங்கெனவோர் கைநீட்ட - எண்டிசைக்கும் 107

காட்சி தருஞ்சமையங் காணிதுவென் றேயுணர்த்துஞ்
சூட்சியொடு செங்கைத் துடிதுடிக்க - மாட்சி 108

வலம்புரிகைக் கொண்டோன் மலர்க்கணுறு தாள்மேற்
சிலம்பலம்பி மோதிச் சிலம்ப - அலம்பு 109

---

104. பொற்பாந்தள் - அழகிய பாம்புகள். பிற நாகங்கள் தந்த இரத்தினத்தை இனம் பற்றி இறைவன் அணிந்த நாகங்கள் தந்தனவாகவே கூறினர். வெற்பாம் தகைய - அம்மாணிக்கமலை போன்று (ஒளிவீச).

105. மழு - சிவன் வலக்கையில் ஏந்தியுள்ள பரசாயுதம் மழுவுக்குக் கள்ளமாவது, காலம் பார்த்திருத்தல்.

106. புற்கொழுந்து - இறைவன் தலையில் சூடிய அறுகம் புல்லின் கொழுந்தை. 'அறுகால் பீடுயர் முடியார்' (திருவிளை. பா. 30). கலை - இறைவனின் இடக்கையில் அமர்ந்துள்ள மான். 'மான் இடவன்'. குதிக்க - தாவ.

107. ஓர் கை - வரம் தரு கை. எண் திசைக்கும் - எட்டுத் உள்ளார்க்கும்.

108. சமையம் - சமயம் - (போலி), காலம். சூட்சி - சூழ்ச்சி; கருத்து. துடி - உடுக்கை. இஃது ஒலித்தலை 'துடித்தல்' என்றார்.

109. வலம்புரி கைக்கொண்டோன் - திருமால். சக்ராயுதம் வேண்டி, திருமால் இறைவனை மலர்கொண்டு அருச்சிக்கும்போது ஒருமலர் குறைய, தன் கண்ணை இடந்து சிவன் பாதத்தில் இட்ட வரலாற்றை இக்கண்ணி குறிக்கின்றது. துடி துடிக்க என்றாற் போல், சிலம்பு சிலம்ப என்றார். சிலம்ப - ஒலிக்க.

தலைமாலை யாடச் சடையும் பிறையும்
அலைமோதி யாட அணியும் - மலரிதழி 110

மாலை துவண்டாட மாமறைகொண் டாடவன்பர்
வேலை பரந்து மிடைந்தாடப் - பாலனைய 111

சங்கம் அதிரத் தடாரி முழவதிரத்
துங்க முரசத் தொகையதிர - எங்களம்மை 112

காவிக் கிரணமலர்க் கண்ணுகந்து காக்கவே
தாவித் திருவாடு தண்டேறி - மூவுலகும் 113

உற்றமதன் ஆடற் குதவிசெய வேநிலவும்
கொற்ற மதிவெண் குடைநிழற்றச் - சுற்றியெழுந்(து) 114

இன்னமுநா டன்னம் எதிர்வந்து காண்பதென
வன்னமலி வெண்சா மரையசையத் - தன்னையே 115

---

110. அலம்பு தலைமாலை - இயல்பாகவே அசைகின்ற தலை மாலை 'திருவாடுதண்டு ஏறுங்கால் மேலும் ஆட' என்றார். அலை மோதி, அலையொடு மோதி என உருபு விரிக்க. அலை - கங்கை. சடை, பிறை, கங்கை இவை மூன்றும் ஒன்றோடொன்று மோதி ஆட என்க.

111. மலர் இதழி மாலை-கொன்றைப்பூ மாலை. கொண்டாட - புகழ. அன்பர் வேலை - தொண்டர்களின் கடல். மிடைந்து - நிறைந்து.

112. தடாரி - ஒருவகை தாள வாத்தியம். முழவு - மத்தளம். துங்கம் - சிறந்த. முரசத்தொகை - பல முரசங்கள்.

113. காவி - நீலோற்பலம். 'காவிமலர்' என இயையும். கிரணம் - ஒளி. 'காக்க' என்றது - அம்மை இறைவனை இடைவிடாது நோக்க என்றவாறு. திருவாடுதண்டு - தண்டினால் தாங்கப்படுகின்ற மஞ்சம்; சிவிகை - பல்லக்கு வகை. ஆடுதண்டு - ஆடி ஆடிச் செல்லும் சிவிகை. அலங்காரம் செய்து கொண்டு முன்றிலில் வீற்றிருந்த மூர்த்தி, இங்கு தலைமாலை முதலிய ஆடும் வண்ணம் திருவாடுதண்டுக்கு எழுந்தருளுகிறார்.

114. குடை முதலிய விருதுகள் தொடரவருதல். உற்றமதன் ஆடற்கு உதவி செய்யும் மதியைப் போன்ற வெண்கொற்றக்குடை நிழற்ற. நிழற்ற - நிழல் செய. 'சுற்றியெழுந்து அசைய' (115) என்க.

115. இன்னமும் நாடு அன்னம் - இறைவனின் முடியை இன்னமும் தேடியலைகின்ற பிரமனாகிய அன்னம் போல வெண்

மோசமறக் கண்டோர் முடியா விஜயகல
வீசுவபோல் ஆலவட்டம் வீசவே - தேசுலவும் 116

விம்பமணிக் களாஞ்சி மிக்க அடைப்பைவரச்
செம்பொற் பிரம்பு சிலரேந்த - அம்பரமும் 117

பொன்னிடுபாறைக்கயலே வந்து மணித் தேர் ஏறுதல்

மன்னுமணிக் கோபுரத்தின் வாசல் பலகடந்து
பொன்னிடுபா றைக்கயலே போந்தருளி - முன்னொருநாள் 118

கூட்டுபதி னொன்ற‌ன கோநகரத் தார்முன்போய்
நாட்டுமிதி னுமோர் நகரமெனத் - தேட்டமதாய் 119

ஈசனுர் சொல்ல இசைவுகொண்ட நாள்முதலாய்
மாசிலாது ஓங்கு மகிமையுடன் - தேசமேற் 120

---

சாமரை அசைய. வன்னமலி · அழகு நிறைந்த. தன்னை - இறைவனை.

116. மோசம் அற - வஞ்சனைகள் நீங்க. ஆலவட்டம் - விசிறி போன்ற வட்டமான அலங்காரப் பொருள்.

117. தேசு உலவும் - ஒளி வீசும். விம்பம் - எதிர் காணும் வடிவங்களைப் பிரதிபலிக்கும். 'களாஞ்சி' என்பது நீண்டது; களாஞ்சி - தம்பலம் உமிழும் கலம். 'உறுப்பசி களாஞ்சி தாங்க' (குற்றுலத்தல புரா. திருமணி 131)· மிக்க அடைப்பை வர - பல அடைப்பை ஏந்துபவர்கள் உடன் வர. பிரம்பு - கடவுள் முன் ஏந்திச் செல்லும் கோல். இதுவும் விருதுகளில் ஒன்று. இவ்விருதுகளைத் தாங்கி வருபவர் இன்னொரெனக் கூறவில்லை.

118. அம்பரம் மன்னும் கோபுரம் - ஆகாயத்தை அளாவி நிற்கும் உயர்ந்த கோபுரம். உம் - சிறப்பு. கோபுரத்தின் வாசல் பல கோபுரங்களில் உள்ள வாயில்கள். பொன் இடு பாறை - இது சுந்தரருக்கு இறைவன் இத்தலத்தில் பொன்னைச் சொரிந்தபாறை என்பதை இத்தல புராணம் 'பொன்னிடும் பாறைச் சருக்க'த்தில் காண்க.

119-120. காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்ட காலத்து அங்கிருந்து இங்குத் தப்பிவந்த வணிக குலத்தினைச் சேர்ந்த பதினொருவர் தங்களோடு கொண்டு வந்த பொருட் செல்வங்களை இரத்தினகிரிமலையில் பொன்னிடுபாறை என்னும் இடத்தில் வைத்துப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஆளுக்கொரு பங்காகப் பதினொரு பங்காகப் பலமுறை பிரித்தும், அச்செல்வம் பன்னிரண்டு பங்குகளாகத் தானகவே பிரிந்தது. எத்துணை முறை பாகம்பிரித்த

பன்னிருவ ராகிப் பலதிசையுங் கீர்த்திசெல
மன்னியே வாழும் வணிகரன்பால் - பின்இயற்றும் 121

ஆதவனும் சந்திரனும் ஆழி வடிவமதாம்
மாதம் அயனம் வருடமுதல் - ஓதுபல 122

உம்பர்களும் மெய்யாம் உலக ரதமனைய
செம்பொன்மணித் தேரேறித் தேவியுடன் - பம்பை 123

### வாத்தியங்களின் முழக்கம்

தடாரி துடிதிமிலை தண்ணுமை கைத்தாளம்
விடாத முரசுமணி மேளங் - குடமுழா 124

சங்கு திமிரி தவில்பட நாகசுர
மங்கல கீதமுதல் வாத்தியமும் - பொங்கியெழ 125

---

போதிலும் பன்னிரண்டு பங்காகவே அமைய அவர்கள் திகைத் திருக்கையில் அவர்கள் முன் போய் 'உங்களிலே நானும் ஒரு நகரத்தான்' என்று இறைவன் நிச்சயித்துக் கூற அவர்களும் இசைந்து அன்று முதல் அந்தப் பன்னிரண்டாம் பங்கை இறைவனுக்கே அளித்தனர். அது முதல் அவர்களுக்குப் 'பன்னிரண்டாம் செட்டிமார்' என்ற பெயர் வழங்கலாயிற்று. அவர்கள் உலகெங்கும் சென்று வாணிபம் செய்து வாழ்ந்து வரலாயினர். அவர்களுடைய சந்ததியினர் பின்னர் செய்தளித்த செம்பொன் மணித்தேர் என்க. வணிகர் அன்பால் - தன வணிகர் உள்ளன்புடன். பின் இயற்றும் - பின்னர் அமைத்த (பொன்மணித்தேர்)என்க

122-3. இவற்றில் இறைவன் திரிபுரம் எரிக்க ஏறிச் சென்ற தேரின் இயல்பு கூறப்படுகின்றது. இத்தேருக்கு சூரியனும் சந்திரனும் ஆழி வடிவமாகவும், மாதம், அயனம் வருடம் முதலிய மற்றைய தேவர்கள் வேறு உறுப்புகளாகவும் அமைந்தனர். மெய் யாம் - உறுப்புகளாகவும். கோபுர வாயில்களைக் கடந்து வெளியே வந்த பின்பு, இறைவன் மஞ்சத்தை விட்டுத் தேரில் ஏறினன் என்க. 'தேவியுடன் மணித் தேரேறி' என்க.

124-5. வாத்தியங்களின் முழக்கம் கூறுகிருர். பட - (மேற் கூறிய வாத்தியங்கள்) ஒலிக்க. நாகசுர மங்கல கீத வாத்தியம் - நாகசுரமாகிய மங்கலகீதம் ஒலிக்கும் வாத்தியம். முதல் - முதலியன.

*பிச்சம் முதலிய சின்னம் சூழ்ந்து வரல்*

மாமணிக்காற் பிச்ச வணிகள் பிறங்கியிடத்
தூமணிவெள் ளேற்றுத் துவசமுறச் - சோமனெனும் 126

வெண்சந் திரவட்டம் மேலசைந்து தாழ்வதெனத்
தண்சந் திரவட்டை தான்சுழற்றப் - பண்சருவிப் 127

*பிரமன் முதலியோர் தத்தம் வாகனங்களில் வருதல்*

பாடுமறை யோனனமும் பாற்கடலோன் புள்ளேறும்
நாடுமுனை வீரன் நவில்விடையும் - நீடொளியாய் 128

விண்டவழு மிக்கோர் விமானமணித் தேர்மிசையின்
அண்டவி நாயகன்சேய் ஆகுமயில் - எண்டிசையோர் 129

---

**126-7.** பிச்சம் முதலிய சின்னங்கள் சூழ்ந்து வருதலைக் குறிக்கிறார். பிச்ச அணிகள் - வெண்குடைகளின் வரிசைகள். பிச்சம் - மயிற்பீலிக் குடை. துவசம் - (ரிஷபக்) கொடி. சோமன் எனும் - 'சோமன்' என்று ஆண்பாலாகச் சொல்லப்படுகின்ற சந்திர மண்டலம். சந்திரவட்டை - சந்திர வட்டக் குடை. சுழற்ற - சுழற்றப்பட. பண்சருவிப்பாடும் மறை - பண்ணோடு பொருந்தி இசைக்கும் வேதகீதம்.

**128.** இது முதல் பிரமன் முதலியோர் தத்தம் வாகனங்களில் வருதலைக் கூறுகிறார். மறையோன் - பிரமன். புள்ளேறு - கருடன். முனைவீரன் - போர் முனையில் சிறந்து விளங்கும் வீரபத்திரன்; இவனது ஊர்தியும் விடை.

**129-30.** விண் தவழும் மிக்கோர்-வானத்தில் உலாவும் தேவர். இவர்கள் விமானங்களிலும் ஆகாயத்தேர்களிலும் தங்களுக்கு ஏற்றபடி வந்தனர் என்க. அண்ட - அருகில் வந்து சேர. விநாயகனும், சேயும் (செவ்வேளாகியமுருகனும்) முறையே ஆகுவையும், மயிலையும் ஊர்திகளாகக் கொண்டனர். ஆகு - பெருச்சாளி; ஆகுவாகனன் - விநாயகர். எண்திசையோர் - எட்டுத்திக்குப் பாலகர். அவர் வந்த வாகனங்களாவன. இந்திரன் - மா (ஐராவதம்) அக்கினி - மறி (ஆடு). யமன் - கடா (எருமை). நிருதி - பூதம். வருணன் - மச்சம். வாயு - இரலை (மான்). நகு - ஒளிவீசுகின்ற. தேமருவு - தெய்வத்தன்மை பொருந்திய. குபேரன் - புஷ்பரதம். ஈசானன் - சே (இடபம்). யானை முதலியவற்றை இந்திரன் முதல் ஈசானன் ஈருக முறையே பொருத்திக் கொள்க.

மாமறிக டாப்பூத மச்ச மிரலைநகு
தேமருவு புட்பரதஞ் சேவினிலுந் - தாமுறவே 130

காளி வடுகன் கனலனைய சாத்தனிவர்
ஆளி ஞமலி யடுகளிறும் - வாளியங்கட் 131

சத்தகன்னி மாரெண்மர் சாற்றும் பதினொருவர்
நித்திய மாமிருவர் நீதியொடுந் - தத்தம் 132

விமான மிசையேற விஞ்சையர் கந்தர்ப்பர்
உமாபதியென் றேத்தி உவப்பக் - குமாரியென 133

அத்தியை யும்பாவை யாக்கினார் பண்பாடி
முத்துச் சிவிகையின்மேல் முன்னடக்க - எத்திசையுங் 134

---

131. காளியின் வாகனம் ஆளி (சிங்கம்). வடுகன் - வயிரவன்; பைரவன் - ஞமலி (நாய்); சாத்தன் - சாஸ்தா (ஐயனார்). யானை, ஆளி முதலிய ஊர்திகளும் நிரல்நிறை. வாளி - அம்பு. கண்ணுக்கு உவமை.

132. சத்த கன்னிமார் - ஏழு கன்னியர்; சப்த மாதர்கள். அவர்கள் - பிராமி, மயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, உருத்திராணி. எண்மர் - அட்ட வசுக்கள். அநலன், அநிலன், ஆபச்சைவன், சோமன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன், பிரபாவன். இவர்கள் ஒளிவீசும் மேனியராகலின் வசுக்கள் எனப்பெற்றனர். (வசு - ஒளி). பதினொருவர் - ஏகாதசருத்திரர். [மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் (Tamil Lexicon)]. இருவர் - அசுவினிதேவர். நீதியோடு - நியதியோடு, தத்தமக்கு உரியதாகிய.

133. விமானம் - ஊர்தி. விஞ்சையர் - வித்தியாதரர். கந்தர்ப்பர் - கந்தருவர். இவ்விருசாரரும் இசைவல்லுனர். ஏத்தி - உமாபதி! என்று துதிபாடி.

134. அத்தி (அஸ்தி) - எலும்பு. பாவை - பூம்பாவை என்னும் பெண். எலும்பு பெண்ணுரு பெறும்படி பாடியவர் திருஞானசம்பந்தர். 'பண்பாடி அத்தியையும் பாவைக் குமரியென ஆக்கினார்' என மாறிக் கூட்டுக. முன் - சமய குரவர்களில் முதலாவதாக. [இதற்கடுத்த கண்ணி திருநாவுக்கரசரைப் பற்றியதாக இருத்தல் வேண்டும்; அது மூலத்தில் காணப்படவில்லை. இவரைப் பற்றிய கண்ணி திரு. மு கோ. ராமனால் யாப்பப்பெற்று எண்ணிடாமல் பகரவளைவில் சேர்க்கப்பட்டுள்ளது.]

[போற்றும்அப் பூதி புதல்வன் அராவிடமே
பாற்றும்அவர் தேவாரம் பாடிவரச் - சாற்றும்]

கரா நுங்குஞ் சேயினையுங் காமித் தழைத்தார்
இராசசின்ன மோடுற் றிறைஞ்சத் - தராபதிமுன் 135

வாம்பரிய தாக வனநரியைக் காண்பித்தார்
காம்பினர வாகனத்(து) அணுக - ஏம்பலுடன் 136

தந்தையிரு தாள்தடிந்த சண்டேசன் கேடகத்தில்
வந்தருள அன்பர் வணங்கவே - எந்தை 137

ஆதிசைவக் குருமார் முதலியோர் ஏத்திச் சூழ்ந்து வரல்

பரவைமணக் கேகப் பரவுதமிழ் வேந்தன்
மரபதனி லுதித்து வந்தே - குருவடிவு 138

---

அராவிடம் பாற்றும் அவர் - பாம்பின் விஷத்தைப் போக்கிய திருநாவுக்கரசர்; தேவாரம் பாடிவர - இத்தலத்து இறைவன் மீது இவர்பாடிய 'கால பாசம்' என்று தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகம் மட்டுமே உள்ளமையால் 'தேவாரம் பாடிவர' எனப் பெற்றது.

135. கராம் நுங்கும் சேய் - முதலை உண்ட பாலன். காமித்து - விரும்பி. 'முதலையுண்ட பாலனை அழைத்ததும், (திருவிளை.) நரசிங்க முனையரையர் என்னும் அரசரால் வளர்க்கப் பட்டமையின் அரசர்க்குரிய சின்னங்கள் இயல்பாகவே இவருக்கு அமைந்துவிட்டன என்பதைக் குறிப்பிடுகிறார். தராபதி - அரசன்; அரிமர்த்தன பாண்டியன்.

136. வாம்பரி - தாவிச் செல்லும் குதிரை (இங்கு, மாணிக்க வாசகரைக் குறிக்கின்றார் என்பது தெளிவு). 'இந்நால்வரும் சிவிகையில் அணுக' என்க. காம்பு - பட்டினால் போர்த்த. நரவாகனம் - சிவிகை; இதைத் தாங்கிச் செல்பவர்கள் நரர்களா கையால் இது நரவாகனமாயிற்று. காம்பு - மூங்கிலுமாம்.

137. ஏம்பல் - வருத்தம். சண்டேசுரர் 'தந்தை தாளொடும் பிறவித் தாளெறிந்த மைந்தர் (திருவிளை. கடவுள்வாழ்த்து 23) இருதாள் என்றது கால்களாகிய தாள் என்பதுடன் பிறவியாகிய தாளை (தளையை) யும் நினைந்து என்க. கேடகம் - மஞ்சம். உற்சவ விக்கிரகங்களை ஏற்றிச் செல்லும் விமானம்.

138. கீழ்வரும் கண்ணிகளில் இத்தலத்தில் ஆதிசைவ மரபி னராய் உள்ள ஆசாரியர்கள் (குருமார்கள்) இறைவனை ஏத்திச் சூழ்ந்து வரல் கூறப்படுகின்றது.

கொண்டு சிவாய நகர்க் கோயி லிடத்துறையும்
பண்டிதராம் வாட்போக்கிப் பண்டிதரும் - எண்டிசைமேற் 139

செல்லும் புகழ்சேர் தியாகவிநோ தக்குருவுஞ்
சொல்லும் பழைய சுருதியுணர் - வல்லமையான் 140

மண்டலஞ்சேர் மாணிக்க வாசகநற் றேசிகரும்
முண்டகனேர் தட்சணு மூர்த்தியெனும் - பண்டிதருஞ் 141

சைவ சிவாகமத்துத் தாநிகராம் வேதியரும்
தெய்வ மறையோரும் திரண்டேத்த - வையமெலாம் 142

பேரான கீர்த்திப் பெரியோர்பாற் கம்பையனும்
சீரான செங்கோல் செலுத்திவரப் - பாரோரும் 143

விண்டாரும் மாதவரும் வேலா யுதமுகிலும்
பண்டார நாமம் பரித்தோரும் - கொண்டாடிக் 144

கொத்தடிமை யானேருங் கோயிற் கணக்கருடன்
உத்தமமாங் கூல முடையாரும் - நித்தியமும் 145

---

141. முண்டகன் - பிரமன். நேர் - ஒப்பான.

142. தாம் நிகராம் - தமக்குத் தாமே நிகராகின்ற. வேதியர் - சிவவேதியர்; ஆதிசைவ அந்தணர் (குருக்கள்மார்). மறையோர் - வைதிக அந்தணர். வாட்போக்கிப் பண்டிதரும் (139), தியாக விநோதக் குருவும்(140 , மாணிக்கவாசக தேசிகரும்(141), தட்சணு மூர்த்தி பண்டிதரும் (141) வேதியரும் தெய்வமறையோரும் (142), எனக்கூட்டுக. தானிகராம் வேதியர் எனக்கொண்டு கோயில் காரியங்களைக் கண்காணிப்பவராகிய சைவ ஆகமங்களில் வல்ல சிவ வேதியரும் எனலுமாம்.

143. கம்பையன் என்பவன் வாட்போக்கி நகரத்து அதிகாரி.

144. விண்டார்-துறவிகள்; மாதவர்-துறவிகளிற் சிறந்தோர். விண்டு ஆரும் மாதவரும் எனக்கொண்டு வைணவத் தவசிகளைக் கூறினர் எனினுமாம். வேலாயுத முகில் – வேலாயுதர் என்னும் வள்ளல். பண்டார நாமம் பரித்தோர் - திருமஞ்சனப் பண்டாரம். இவர்கள் ஆரிய அரசனின் வழிவந்தோர். பரித்தோர் - தாங்கினோர்.

145. கொத்தடிமையானோர் - குடிமுழுதும் வழிவழி இறைவனுக்கு அடியராய் இருப்போர் (தில்லைவாழந்தணர் திருக்கூட்டம் போல). கூலம் உடையாரும் - பல்பண்டம், பலசரக்கு வாணிகரும். நித்தமும் - நிருத்தமும்; நாட்டியமும்.

கல்லுங் கரையக் கனிந்தவிசை பாடிவரும்
முல்லை நகையார் முதல்அடிமை - எல்லவரும் 146

### திருச்சின்னங்கள் கட்டியங்கூறல்

சூழ்ந்து வரவே சுருதிமுடிக் கெட்டாமல்
வாழ்ந்தசிவன் வந்தான் வழிவிலகித் - தாழ்ந்தகுறை 147
தீரவே நாளுந் தினகர்சகா யன்வந்தான்
ஆரியன்முன் ஞன அரன்வந்தான் - பார்அறிய 148
வந்தமா ணிக்க மலைக்கொழுந்தன் வந்தான்மெய்
தந்த முடித்தழும்பன் றன்வந்தான் - எந்தமெதிர் 149
சென்றபிரான் வந்தான் சிவாயநக ராதிவந்தான்
கொன்றையணி பார்வைக் குளன்வந்தான் - என்றுதிருச் 150

### மகளிர் குழாங்கள்

சின்னங்கள் ஆர்ப்பத் திகந்தமட வாருடனே
மன்னுங் ககன மடந்தையருங் - கின்னரர்தம் 151

---

146 இசைபாடிவரும் முல்லை நகையார் - தளிப்பெண்டுகள்; தேவதாசிகள்.

147. இனித் திருச்சின்னங்கள் கட்டியங்கூறி ஆர்த்தலைக் கூறுகின்றார். கட்டியம் - அரசர் முதலியோரைக் குறித்துச் சொல்லும் புகழுரை.

148. 'தினகரன்' என்பது 'தினகர்' எனக் குறைந்து நின்றது. தினகரன் - சூரியன். சூரியனுக்கு அவுணரை வெல்லும் ஆற்றலைக் கொடுத்ததனால் 'சூரியசகாயன்' என்றார். ஆரியன் முன் ஆன அரன் - ஆரிய அரசன் முன்னே தோன்றிக் காட்சியளித்த அரன்.

149. முடித்தழும்பன் - முடியிலே தாங்கிய தழும்பையுடையவன். இது இத்தலத்து இறைவன் திருநாமங்களில் ஒன்று.

150. எம்தம் எதிர் சென்ற - எங்கள் முன்னே காட்சி தந்த. பார்வைக்குளன் - கண்ணையுடைய நெற்றியை உடையவன். குளம் - நெற்றி. நெற்றிக்கண்ணன்.

151. இனிக் குழாங்கள் சூழ்ந்து வருதலைக் கூறுகின்றார். திகந்த மடவார் - திசைகளின் எல்லையிலுள்ள பெண்கள்; திக்குப் பாலகரின தேவியரின் பரிவாரங்கள். ககன மடந்தையர் - வானுலக மங்கையர்.

கன்னியரும் நாகரிளங் கன்னியரும் விஞ்சையர்கள்
கன்னியரும் சித்தரிளங் கன்னியரும் -- மின்னனைய 152

மாநிலமின் ஞர்தம் வடிவமெடுத் தேகனக
மேனிலை மாடத்து மேடையினும் - வானளவு 153

மண்டபத்தும் சாளரத்தும் மாளிகையும் சூளிகையும்
விண்டடவு கோபுரத்தும் மெய்த்ததேப் - புண்டரிக 154

வல்லி யனைய மடவார் மகமேரு
வில்லி யெதிரேபோய் விரகமதாய் - நில்லுமென 155

ஓடுமணித் தேர்மேல் உமாபதியைப் பார்த்(து) எவருஞ்
சூடுமலர்க் கையாற் றெழுதிடுவார் - தேடரிய 156

---

152. கன்னியர்களாவார் மணமாகாத மகளிர். இக்கன்னியர் எல்லாம் மாநிலப் (பூமியில் உள்ள மனிதப்) பெண்களைப் போல வடிவமெடுத்து வந்தனர் என்க.

153. கனக மேநிலை மாடம் - பொன் வேய்ந்த உயர் மாடம். மேடை - மாடி.

154. சாளரம் - சன்னல் என்றது அவை அமைந்துள்ள இடத்தை. சூளிகை - மாடங்களின் நெற்றி. நிலா முற்றம். 'மாடமலி சூளிகையிலேறி மடவார்கள் பாடலொலி செய்ய' (தேவா 324. 2). மெய்த்ததே - உண்மையான தெய்வத்தன்மையுடைய.

155. புண்டரிகவல்லி அனைய மடவார் - இலக்குமி போன்ற எழிலுடைய பெண்கள். மகமேரு வில்லி - திரிபுர சங்கார காலத்தே மகாமேருவை வில்லாக வளைத்த ஈசன். விரகமதாய் - விரகதாபம் உடையவராய்.

156. சூடுமலர்க்கையால் - சிரமேல் கூப்பிய கையராய்.

மாணிக்கக் கூத்தரே மாரா வளிமுத்தங்
காணிக்கை யோசொற் கடிதெண்ணீர் - பூணுற்ற 157

பச்சை வடிவம் பசலைநிற மாமெமைப் போல்
இச்சையிற்பூண் டீரோ வெனக்கேளீர் - கச்சரவப் 158

பாம்பை யணைவீர் பகருமல்குற் பாம்பணையச்
சோம்ப லேதென்று துதித்திடீர் - வீம்பின் 159

விடநுகர்வீர் காம விடமகற்ற வேறூர்
இடமறியீ ரோவென் றிசையீர் - சடையிலொரு 160

மானைச் சுமந்தீர் மடமா னனையார்முன்
ஏனிச்சை யில்லார்போல் எய்தினீர் - போன 161

---

157. 'மார் ஆவளி முத்தம்' என்பது மார்பில் பலவடங்களாக அணிந்துள்ள உண்மையான முத்துமாலையையும், முத்துப் போலச் சிந்தும் கண்ணீர்த்துளிகளையும் சிலேடை வகையால் குறித்து நின்றது. காணிக்கையோ - உமக்குக் காணிக்கையாதற்குத் தகுதி உடையனவோ. 'எம்சொல்' என ஒரு சொல் வருவிக்க. 'எண்ணீரோ' என்பதில் வினாப்பொருட்டாகிய ஓகாரம் தொகுத்தலாயிற்று.

158. பசலையின் நிறம் வெண்மை; முன்னிருந்த நிறம் விரக தாபத்தால் வேறுபட்டு விளர்த்திருத்தலின். இறைவன் திருமேனியும் திருநீற்றால் வெண்மையடைந்துள்ளது. இச்சையிற் பூண்டீரோ - நீரும் விரகதாபமேலீட்டினால் இந்நிறத்தைப் பூண்டீரோ? கேளீர் - கேளீரோ? கச்சரவு அணைவீர் - பாம்பைக் கச்சாக (உதர பந்தனமாக) அணைவீர்.

159. 'எம் அல்குற் பாம்பை அணியத் தாமதம் ஏன்?' சோம்பல் - தாமதம். வீம்பின் - வீம்புக்காக; வீண்பெருமைக்காக.

160. வீண்பெருமைக்காக ஆலகாலவிடத்தைத் தம் கண்டத்தில் தேக்கிய நீர், எமது காமவிடத்தைத் தேக்க ஒரு இடம் அறியீரோ என்றவாறு. எனக்கேளீர் (159), என்று துதித்திடீர் (160), என்று இசையீர் (கேளுங்கள்) என்பன மகளிர் தம்மில்தாம் கூறிக் கொண்டவை. இனிவருவன - அவர்கள் இறைவனை நோக்கிக் கூறுவன. எனவே, 'இசையீர்' என்பதன் பின் 'என்பார்' என ஒருசொல் வருவிக்க.

161. சடையில் ஒருமான் - கங்கை. எய்தினீர் - எய்தி நடிக்கின்றீர் என்றவாறு.

பொசிவாசி கொள்வீர் புனலுகவே கண்கள்
கசிவாசி தீரக் கருதீர் - இசையும் 162

முலைத்தழும்பு பூண முயங்காமல் வீணே
தலைத்தழும்பு பூண்பாரோ சாற்றீர் - கலைச்சியெதிர் 163

மெய்வளையக் கூடலிலே மேவி வளைபகர்வீர்
கைவளையை வாங்கக் கடவீரோ - பொய்வளையா 164

வாட்போக்கி யாளும் மதன்போர் களையாமல்
நாட்போக்கி வீணை நவிற்றினீர் - தீட்பினுடல் 165

வெண்ணீற தாக வெளுப்பான தென்மடவார்
கண்ணேறு பட்டதோ காணென்பார் - புண்ணேறி 166

---

162. வாட்போக்கி இறைவன் பொசிவாசி கொண்ட வரலாறு பற்றி கண்ணி 21, 26 குறிப்பில் காண்க. கசிவாசி - கண்ணிற் கசிகின்ற புனல் கூறும் குறையை.

163. 'யாரேனும் பூண்பாரோ' என்க. வாட்போக்கி இறைவன் தலைத்தழும்பு பூண்ட வரலாற்றையும் மேற்குறித்த குறிப்பில் காண்க. 'அடித்தழும்பு புறத்திருக்க, ஆரியர் கோமகன் கொடுத்த முடித்தழும்பும் கொண்டனை, வெம்முலைத்தழும்பிற் சீரியதோ' வாட்போக்கிக் கலம். பக். 3.

164. 'கலைச்சி' என்றது எல்லாக்கலைகளின் வடிவமாகிய உமாதேவியை. மெய்வளைய - உடல் கூனிக் குறுகி. இறைவன் மதுரையில் வளையல் விற்ற வரலாறு திருவிளையாடற் புராணம், 32-ஆம் படலம். 'வாங்கக்கட வீரோ' என்றது கூடலில் மேவி வளை விலை பகர்வீர் இங்கு எங்கள் கைவளைகளை வாங்க (நழுவி விழும்படி)ச் செய்வீரோ என்றபடி. பொய்வளையா - பொய்த்து தோற்று) வளையாத.

165. வாட்போக்கி - எதிரியின் வாட்படையை அழித்தவன்; (இஃது இங்குக் கொள்ளப்படும் பொருள். வீணை நவிற்றினீ என்றது சிலேடை. திட்பின் உடல் - வலிமை மிகுந்த உடல். திட்பு, தீட்பு என வந்தது எதுகை நோக்கி. 'மதன்போர்க் கிளையாமல்' என்றும் பாடம்.

166. 'என்பார்' என்றதை முன்னும் பின்னும் ஏற்குமிடங்களில் கூட்டிக் கொள்க.

எய்த்தாரைக் காப்பீ ரெனவந்தும் எம்மிடத்தில்
கைத்தாய ரால்வீணை கற்பித்தீர் - பைத்த 167

பணியா பரணம் பதைக்க வந்தார் மாலால்
தணிவாரோ வென்று தளர்வார் - மணிவண்ணன் 168

கண்ணிடந்தும் நெஞ்சங் கனியா (து) இருந்தவர்க்குப்
பெண்ணிடத் (து) ஏதன்பென்று பேசுவார்-விண்ணவர்க்கு 169

மெய்ப்பாக வேம்பை விரும்புவார்க் குக்கரும்பு
கைப்பாகு மோவென்று கண்பிசைவார் - எய்ப்பை 170

அறியார் கரத்தூசல் ஆட்டுவர்போல் ஓடிப்
பிறியார் அவரிலொரு பேதை - வெறிகமழும் 171

---

167. புண்ணேறி எய்த்தாரை - வருத்தமுற்று இளைத்தவர்களை. கைத்தாயர் - செவிலித்தாயர். 'வீணை கற்பித்தீர்' என்பது இங்கும் சிலேடையாய் நின்றது. இச்சிலேடையில் ஐகாரம் உருபாமிடத்தில் சந்தி வல்லொற்று தொகுக்கப்பட்டதாகக் கொள்க. எம்மிடத்தில் - எமக்கு (கைத் தாயர் மூலம் வீணை கற்பித்தீர்) பைத்த - படத்தோடு கூடிய.

168. பணி - பாம்பு. 'பாம்பை ஆபரணமாக ஆட அணிந்தவர், பிறிதொருமயக்கத்தால் அடங்குவாரோ' என்பது இக்கண்ணியின் பொருள்.

169. மணிவண்ணன் - (நீல) மணி போலும் வண்ணத்தை உடையவன் (திருமால்).

170. மெய்ப்பாக - மெச்சும்படி. 'கரும்பு' என்றது இன்பத்தைத் தரும் மகளிரை. 'ஆகுமோ' என்பதில் ஓகாரம் ஐயப் பொருட்டு.

171. எய்ப்பை அறியார் - எங்கள் இளைப்பை அறியாத பேதைப் பெண்கள். கரத்து - தங்கள் கைகளால். ஊசல் ஆட்டுவர் போல் - ஊசலை ஆட்டுவார் போல முன்னும் பின்னும் ஓடிப் பிரியாதவர்கள். ஒருபேதை - பேதைப் பருவத்தை உடையாளாகிய ஒருத்தி.

### பேதை

கற்பகப்பூங் காவீன்ற காமக் குருத்தெனலாம்
அற்புதமாய்த் தோன்றும் அபரஞ்சி - தற்பரனைக் 172

கண்டுவலஞ் செய்யக் கருதுமுகி லைக்குறித்து
மண்டலமே லாடா மடமஞ்ஞை - தொண்டருக்குள் 173

நேசம் பெருக நிமலருல காம்பரத்து
வாசந் தொடுக்கா மலர்க்கண்ணி - மூசுநிழற் 174

சாலைநிகர் ரத்ன சலக்குருவின் அங்கைசேர்
மாலை புகுதா மருக்கொழுந்து - கோலமதன் 175

---

172. ஐந்து முதல் எட்டாண்டு வரை பேதைப் பருவம். உலாப் போந்த இறைவனைக் கண்டதும், மையல் கொண்டு தடுமாறிய மாதர்தம் செய்தி எல்லாம், 'குழாங்கள்' என்னும் பகுதியில் பொதுமையில் கூறினார். இனி, பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக உள்ள பெண்டிரின் செய்திகளைத் தனித்தனி கூறத் தொடங்கி, முதலில் பேதைப் பருவப் பெண்ணொருத்தியின் நிலைமையைப் பேசு முகத்தால் அப்பருவ அணங்கனார் யாவரையும் அதனுள் அடக்கிக் கூறுகிறார். அபரஞ்சி - புடமிட்டெடுத்த கலப் பற்ற பொன். அபரஞ்சி போல்வாள். முதலில் பேதையின் தோற் றத்தைப் பொதுப்படக் கூறுகிறார்.

173. வானத்தில் தோன்றும் மேகத்தைக் கண்டு ஆண்மயில் நிலத்திலே ஆடுதல் இயல்பு. இங்கு, மாணிக்க மலை இறைவனைத் தேரில் கண்டவுடன் மயில் போல் சாயல் உள்ள 'மடமஞ்ஞை' யாயினும், பெண் ஆதலின் 'ஆடா மஞ்ஞை' என்றார். (ஆட இய லாத பெண் மயில்). மண்டலம் - மண் தலம்; பூமி.

174. பேதையாதலின் - வாசம் புகாமலர் என்றார்.

175. பிறவி வெப்பத்தை நீக்குதல் பற்றி இரத்தினகிரியை 'நிழலோடு கூடிய சாலை' என்றார். மூசுதல் - மொய்த்தல். குரு - குருக்கள்; இறைவனுக்கு அலங்காரம் செய்து பூசனைபுரியும் உரிமை பெற்றவர். அவருடைய அங்கையில் பொருந்திய மாலையில் சேரத் தகுதியில்லாத மருக்கொழுந்து என்றது இவளுடைய பேதைப் பருவத்தை வலியுறுத்த. 'தண்கயிலையாரைத் தழுவும் சிவகோ சன், வண்கைப் புகுதா மருக்கொழுந்து' (காளத்திஉலா - 249).

தேடா வசந்தத் தியாகரா சர்க்கெதிர்போய்க்
கூடா (து) உலவும் குளிர்தென்றல் - பாடாமுன் 176

பாவலர்க்கே செம்பொனிடு பாறையிடஞ் சென்றபிரான்
ஆவற் கடல்படியா ஆரமுதம் - யாவர்க்கும் 177

தாயிற் சிறந்தார்தன் தாயகமாய் வந்துதித்த
வேயிற் பிறவா விளைமுத்தம் - நாயனார்க் (கு) 178

ஆட்டுபுனற் காவேரி யாற்றின் அறலெனவே
கூட்டி முடியாக் குழலினாள் - மேட்டிமையாய்ச் 179

---

176. 'மதன் தேடாத்தென்றல், குளிர்தென்றல்' எனத் தனித்தனி இயைக்க. 'வசந்தத் தியாகராசர்' என்றதும் இரத்தின கிரிநாதரை. 'கூடாது உலவும் தென்றல்' - பருவம் வாயாதவளை மன்மதன் அழைத்தலும், அவளைத் துணையாகச் சிவன் மேல் அம்பு எய்யச் சொல்லுதலும் இல்லை என்க. மதன் தன் படைகளாகிய மகளிரைக் கொண்டு மலரம்பு தொடுப்பது மரபு. 'பாடாமுன்' என்றது சுந்தரர் இத்திருத்தலத்திற்குத் தேவாரப்பதிகம் பாடவில்லை என்ற குறிப்பு.

177. பாவலர் - சுந்தரர். கண்ணி 118 குறிப்புப் பார்க்க ஆவல் - காதல்; பேதைப் பருவத்தாள் ஆதலின் காதலை அறியாதவளாயினாள்.

178. வேய் - மூங்கில். சிவபிரான் மூங்கிலில் தோன்றிய வரலாற்றைத் திருநெல்வேலிப் புராணத்துட் காண்க. முத்து மூங்கிலும் பிறக்கும் என்பது குறிப்பு.

179. 'புனல் ஆட்டும்' எனக் கூட்டுக. அறல் - கருமணல். இது மகளிர் கூந்தலுக்கு உவமை கூறப்படுவது. ''போற்றும் பரமனார் பொன் கொழிக்கும் பொன் முகரியாற்றின் அறல் போல் அளகத்தாள்' (காளத்தி உலா 258). முடிநீண்டு வளராமையால் கூட்டி முடிக்க முடியாததாயிற்று. 'பூக்குழலும், பாடவந் தோன்ற முடியாள்' (திருக்கைலாய உலா 79-80). 'கூழைச் சுருள் முடிக்கக் கூடுவதும் கூடாதாம்' (குலோத். உலா. 127) மேட்டிமை-பெருமை.

சம்பந்த னோடெதிர்த்தே தாழ்ந்துகழு வேறுதற்கு
வெம்பந்த மானோர் விரதம்போல் - எம்பிரான் 180

தத்துவநீத் தோன்மகத்தில் சாரும் சுரர்வீர
பத்திரன்முன் ஏந்தும் படையெனவும் - அத்தனார் 181

எல்லாம் ஒருவடிவாம் என்னக் கொலைசிறிதும்
கல்லா நிலைபடைத்த கண்ணினாள் - செல்லாகத் 182

தாங்குசடை யோன்உகந்து தானிருக்கும் கம்பைநதி
மாங்குயிலும் ஒவ்வா மழலையாள் - ஈங்(கு) அமலன் 183

சேல்வாய்த் திடாதமரும் தெய்வங்கள் போல் இறந்தே
ஏல்வாய் முளைக்கும் எயிற்றினாள் - மால்வாய்வைத் (து) 184

---

180-182. சமணர் கொல்லாவிரதிகளாதலை நினைக. 'கூடலிலே வெங்கழுவிற் புக்கார் விரதம் போல்' (காளத்தி உலா. 251) தத்துவம் - உண்மை; மெய்ம்மை. நீத்தோன் - மறுத்தவன்; தக்கன். மகம் - வேள்வி. வீரபத்திரர் முன் சென்ற தேவர்களது படைக்கலங்கள் கொலை செய்ய மாட்டாவாயின என்க. 'சொல்லா மகத்தில் சுரர் எடுத்த ஆயுதம் போல்' (காளத்தி உலா. 252). அத்தனார் - இறைவன். அத்தனார் எல்லாம் ஒரு வடிவாம் என்ன என்பதற்கு ஆப்தமானவர்கள், தொண்டர்கள் எல்லோரும் ஒரே இயல்புடையவர் என்றும் கொள்க. பேதையின் கண், கொல்லுதலைக் கல்லாமைக்கு மூன்று உவமைகள் கூறினார்: சமணர் விரதம்; சுரர் படைக்கலம்; அடியார்களின் தன்மை.

183. செல் - மேகம். சிவபிரானது சடையில் மேகம் இருத்தலைத் திருவிளையாடற் புராணம், நான் மாடக் கூடலான படலத்திற் காண்க. கம்பை நதி - காஞ்சியில் உள்ள நதி. இத்தலத்திற்கு மாமரம் சிறந்ததாகலின் அங்குள்ள குயிலையே சிறந்தெடுத்துக் கூறினார். மழலை - குதலைச் சொல்.

184. 'செல்' என்பது முதல் நீண்டது செல் - செலவு. ஆணை - இறைவனது ஆணையாவது அவனது அளவில்லாத ஆற்றலே. சிவபிரானைத் தவிர ஏனைய தெய்வங்கள் இறந்து பிறப்பன ஆதலின், அவைபோல இப்பொழுதுள்ள பல் நிலைத்திராமல் விழுந்து முளைக்கும் என்றார். ஏல் - இயல்பாக. 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள' (முத்துக்குமார பி. த. செங்கீரை 5).

உண்டபகி ரண்டமதாய் ஓங்கும் திருக்குறிப்புத்
தொண்டர்க்(கு) அடங்குந் துணைக்கரமாய்த் - தெண்டிரையுள்

மோது சுதைக்குடமாய் முன்வந் தெழுந்தினிமேல்
சூதுபெறத் தோன்றும் துணைமுலையாள் - தாதுசெறி 186

செந்தா மரைமலரும் செந்தீபம் ஆமெனவே
நொந்தாங் (கு) அணுகி நுவலுவாள் - நந்தாத 187

அன்னையரை நோக்கி அணிபுனைய வேயெனக்கு
வன்னமுலை காட்டுமென மாழ்குவாள் - தன்னுருவம் 188

நேராய்அணுகு நிழலையொரு பாங்கியெனச்
சீரார் மனைபுகுந்து தேடுவாள் - பார்ஏழும் 189

மின்னும் மணிக்கிரணம் மிக்கமணி ஆடரங்கில்
தன்னைநிகர் ஆயம் தழுவவே - பொன்னுமணி 190

---

185. மால் - திருமால். அவன் உண்டது மண் (உலகம்) அந்த உலகத்திலும் பெரிதாய் ஓங்கி நிற்பவன் இறைவன். அவன் தன் மிகப் பெரிய வடிவத்தைக் கரந்து திருக்குறிப்புத் தொண்டரின் தலையைச் சிதறவிடாமல் தன் இரு சிறு கரங்களாலும் பற்றிக் கொண்ட வரலாறு கூறப்பட்டது. அதுபோல, பின்பு பெரியனவாய் பூரிக்கத் தகுந்த கொங்கைகள் இப்பொழுது கைக்குள் அடங்குவனவாய் அடையாள மாத்திரமாய் உள்ள மார்பினை உடையாள் என்றார் இக் கண்ணியில். திரை - பாற்கடல்.

186. மோது - அலைந்து எழுந்த. சுதை - அமிர்தம். எழுந்து - வளர்ந்து. 'இனிமேல் குடமாய் முன்வந்து எழுந்து தோன்றும் துணை முலையாள்' என்க. 'சூதுபெற' என்றது சிலேடை. வஞ்சனையாக, அதாவது மறைந்து நின்று என்பது ஒரு பொருள்; சூதாடு கருவியோடு ஒப்புமை பெற என்பது மற்றொரு பொருள். 'சூதும் பங்கயமுகையும் சாய்த்து' (பெரிய. தடுத்தாட். 21). தாது - மகரந்தம்.

187. குளத்தில் தோன்றும் செந்தாமரை மலர்களைச் சுடரும் விளக்கு என நுவலுபவளாகிய இப்பேதை. நொந்து ஆங்கு அணுகி - கூட்டத்தில் நெருக்குண்டு அன்னையரை அணுகி. நந்தாத - கெடாத.

188. வன்னமுலை - அழகிய தனம். மாழ்குவாள் - வருந்துவாள்.

190. ஆயம் - தோழியர் கூட்டம். 'பொன்னு' - உகரம் சாரியை.

யால்அமைத்த சிற்றிலிடை ஆர்க்குமணற் சோறருந்த
வாலமதி யால்விருந்தை வாவெனுமுன் - சீலமிகும் 191

அண்ட கடாகத் தவர்முழக்கும் மானதஞ்சேர்
புண்டரிக வேதன் புகல்முழக்கும் - பண்டை 192

மறைமுழக்கும் பேரி மணிமுழக்கும் வானோர்
முறைமுழக்கும் முன்னே முழங்க - நிறைதவத்தால் 193

கோலும் சுரும்பார் குழல்பால் இருந் (து) எவரும்
மாலும் தெரியா வடிவத்தான் - சூலப் 194

படையான் விடையான் பவளச் சடையான்
அடையா தவர்பால் அடையான் - இடையிலும்பர் 195

அத்தி தரித்தான் அதிர நகு வெண்டலையான்
தத்தி முயலகனைத் தான்மிதித்தான் - கொத்தவரும் 196

---

191. வாலமதி - (பாலமதி) வெள்ளை உள்ளம். சிற்றிலில் மண்சோறு சமைத்து நின்று, விருந்தை வாவென அழைக்கும் முன், பல முழக்கங்களுடன் இறைவன் தேர் மீதில் தெருவில் வந்து விடுகிறான்.

192. முழக்கங்களின் வரிசை. அண்ட கடாகம் - அண்ட கோளத்தின் மேற்பகுதியிலுள்ள தேவர்கள் முழக்கு. மானதம் - மானச சரோவரம். கயிலையின் பாலுள்ள நீர்நிலை.

193. பேரிமணி - முரசமும் மணியும் முழங்கல்.

194. கோலும் தியானித்திருக்கும். சுரும்பார் குழல் - சுரும் பார் குழல் அம்மை (இத்தலத்திறைவி). எவரும் மாலும் - இதர தேவர்களும், திருமாலும்.

196. இடையில் - மற்ற அணிகலன்களுக்கு இடையே. உம்பர் அத்தி - தேவர்களுடைய எலும்புகளை அணியாக அணிந் தான். அத்தி - ஹஸ்தி; எலும்பு. அதிர நகு வெண் தலையான் - ஏளன நகை செய்த பிரமனுடைய கபாலத்தை ஏந்தியவன். தத்தி- குதித்து; நடனம் செய்து.

கொக்கிறகு சூடினுன் கூர்மத்தின் ஓடணிந்தான்
மிக்கமாணிக்கமலை மேவினுன் - திக்கெலாம் 197

கொண்டாடும் பன்னிருவர் கூட்டம் பணிசெய்யக்
கண்டோர் சரணங்காண் என்னவே - விண்தாவு 198

வெற்றிமணித் தேர்மீதில் மேவுதலும் ஈங்கிவளும்
சிற்றில் ஒழிந்து தெருவணுகிச் சுற்றிவரும் 199

அன்னையர்போல் தானும் அடியில் பணிந் (து) அமலன்
பொன்னுருவை நோக்கிப் புதுவிருந்தாய் - என்னருகில் 200

வாராரோ இந்த மலைக்கொழுந்தர் தாம் எனலும்
ஆரா வமுதே அமரருக்கும் - பேரான 201

விண்விருந்து செய்தார் விடைக்கலது நீசமைத்த
மண்விருந்து தேடி வருவாரோ - கண்விருந்து 202

செய்வதே போதுமெனச் செம்பொன்மணித் தேர்கடவி
மைவளரும் கண்டர் மறைந்திடலும் - பெய்வளையைத் 203

---

197. கொக்கிறகு சூடினுன் - கொக்குருவாய்க் குத்த வந்தவன் குரண்டாசுரன். கூர்மத்தின் ஓடு - கூர்மாவதாரம் எடுத்த திருமாலின் ஓடு. 'என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க' (தேவா. கோளறு 4.) கூர்மம் - ஆமை.

198. பன்னிருவர் கூட்டம் - பன்னிரண்டு செட்டிமார் சமூகம்.

201. மலைக் கொழுந்தர்-மாணிக்கமலை ஈசன் திருப்பெயர்களில் ஒன்று. அமுதே - ஏ அசை; விண்விருந்து செய்தார் - அமுதத்தைத் தேவர்கட்குப் பகிர்ந்தளித்தார். விடத்தைத்தான் உண்டு தேவர்க்கு அமுதத்தைக் கொடுத்தவன் சிவபிரான். அப்பெருமானது இடப ஊர்தி திருமால்; ஆகவே 'மண்விருந்தை அவ்வூர்திக்குக் கொடுப்பதல்லது தான் உண்ண வருவானே' என்றவாறு. திருமாலை 'மண்ணுண்டவன்' என்பார்.

203. என - என்று சொல்லும் பொழுதில். கடவி - செலுத்தி பெய்வளையை - வளையலணிந்த பேதையை (தாங்கிக் கொண்டு). கைத்தாயர் - ஐவகைச் செவிலியருள் ஒருவர். மன்மதன் பேதைப் பருவத்தாள் மேல் தனது மலர்க்கணையை விடான் என்க.

தாங்கியகைத் தாயர் தமதகம்புக் கார்மதனும்
பூங்கணையை ஏவாமல் போயினன் – பாங்கொருத்தி 204

## பெதும்பை

மன்னும் எழிற்பெதும்பை வைகறையில் பக்குவமாய்ப்
பன்னுமுகை யன்ன பருவத்தாள் - முன்உதய 205

வெய்யோன் அகலநிலா வேட்டெழுமுன் பார்க்கின்ற
மையார் சகோரத்தின் வண்மையாள் - தொய்யாத 206

சித்தசன் செங்கோல் செலுத்தற் (கு) இளவரசாய்
வைத்தபிடே கஞ்செய் வனப்பினள் - நித்தியமும் 207

போற்றியே தான்வளர்த்த புட்களினல் காமரசம்
தோற்றியே சொல்லும் துழனியாள் – சாற்றியசெம் 208

பொன்னு பரணம் புழுகுசவ்வா (து) இன்னதெனத்
தன்னல் அறியத் தகுப்வாயாள் – முன்னன 209

---

205. எட்டுமுதல் பதினொன்று ஆண்டளவும் பெதும்பைப் பருவம். பக்குவமாய் - மலரும் பக்குவத்தையடைந்த. பேதையைக் குருந்தென்றுர்; பெதும்பையை முகையென்றுர்.

206. சகோரம் - நிலாமுகிப் பறவை. இது சந்திரனது நிலா ஒளியைப் பருகி வாழும் என்பர். இங்குப் பெதும்பைப் பருவத்தாளது கொங்கைக்கு, நிலவு தோன்றுமுன் சிறிதே தலைநீட்டிப் பார்க்கின்ற சகோரப் பறவை உவமையாகக் கூறப்பட்டது. மையார் வண்மையாள் - இளமை பொருந்திய அழகுடையவள். தொய்யாத-துவளாத 'வனப்பினள்' என்று முடிக்க.

207. சித்தசன் - மன்மதன். அவனுக்குப் படை பருவம் வாய்ந்த மங்கையர். அதனல் பெதும்பை இளவரசாவதற்கே உரியவளானுள் என்க.

208. புட்கள், கிளியும் நாகணவாய்ப் பறவையும். இவை மங்கைப் பருவத்து மகளிர் சொல்லும் காமரசச் சொற்களைச் சொல்லுவனவாம். துழனி - ஆரவாரம்.

209. வாயாள் - பருவத்தை உடையவள்.

கும்பமுலை மாதர் குறிப்பறிந்து கூடுவள்போல்
விம்பவிதழ் நோக்கும் விரகினள் - நம்பரால் 210

வந்தமுனிக் (கு) அஞ்சி மறைந்தெட்டிப் பார்க்கின்ற
விந்த மொசித்தெழுந்த மென்முலையாள்-செந்தமிழ்நாட்(டு) 211

ஆடலார் ஏவுமுகில் அன்றுநான் மாடமேற்
கூடல்போற் கூடுங் குழலினள் - நாடியினி 212

மேலமலன் ஏவ வெளியிலுரு ஆழியெனக்
கால நிலையறியும் கண்ணினள் - பாலனைய 213

கன்னியிளம் பேட்டெகினக் காலின் நடைசிறிது
தன்னடையிற் காட்டும் தகைமையினள் - தென்னவர்கோன்

---

210. மற்றைய மகளிரது இதழ்களை அழகுபற்றி நோக்குகின்ற இவள், தானும் அவர்கள் கூட்டத்தில் ஒருவராகக்கூடுவாள்போலக் காணப்படுகிறாள். விம்ப இதழ் - கொவ்வைப் பழம்போன்ற இதழ் (விம்பம் - கொவ்வை). விரகினள் - உற்சாகமுடையவள்.

211. நம்பர் - சிவபெருமான். அவரால் தென்திசைக்கு அனுப்பப்பட்ட முனிவர் அகத்தியர். அவர் அங்ஙனம் வரும் வழியில் வானளாவி வளர்ந்திருந்த விந்தமலையைத் தமது கையால் அழுத்திப் பாதலத்தில் வீழ்த்தினார் என்பது புராணம். 'அகத்திய முனிவர் போய் விட்டாரா' என்று அந்த விந்தியமலை சிறிதே தலையை நீட்டிப் பார்ப்பது போன்ற தனங்களை உடையாள் என்க. ஒசித்து - அழுத்தப்பட்டு.

212. ஆடலார் - அறுபத்து நான்கு திருவிளையாடலைச் செய்த சொக்கலிங்கக் கடவுள். நான் மாடக் கூடலான திருவிளையாடல் இக்கண்ணியில் குறிக்கப்பட்டது. கூடும் குழல் - கூட்டி முடிக்கத் தகுந்த கூந்தல். முகில் கூடல் போலக் கூடும் குழலினள்.

213. அமலன் - தோஷமற்றவன்; இறைவன். ஆழி - கடல். அறிதல் - நோக்கியிருத்தல். காலம், தனக்குப் பருவம் வரும் காலம். திருவிளையாடல் கடல் சுவற வேல் விட்ட படலம் இங்குக் குறிக்கப்பட்டது. கடல் மகளிர் கண்ணுக்கு உவமையாவது. இங்கு, சுவறவிட்டகடல் மீண்டும் பழைய நிலையை அடைய காலத்தை எதிர் நோக்கி இருப்பது போல. இவள் கண்ணும் தனக்குப் பருவம் வரும் காலத்தை நோக்கியிருந்தது.

214. எகினம் - அன்னப்பறவை. பேட்டெகினம் - பெட்டை அன்னம்.

ஏற்கைமணம் நாட எழுந்தென்றல் வந்துலவிக்
காக்க நறைகமழ்பூங் காவனத்தே - தீர்க்க 215

மயில்கண்டு சாய மழலைக் (கு) ஒதுங்குங்
குயில்கண்டு கூவக் குலாவி - அயல்வண்டும் 216

வாஞ்சித் (து) அணுக மணிக்கிரணம் ஊடாடும்
பூஞ்சித்ர மண்டபத்தில் போய்ஏறிக் - காஞ்சிபுனை 217

சிற்றிடை ஆயஞ் செறிய இருந் (து) அதிலோர்
பொற்றொடியை நோக்கிப் புரிகுழலே - வெற்றிபெற 218

ஆடும் கழங்கினைநாம் ஆடுதுமென் (று) அங்கையினால்
நாடும் கிரண நவமணியும்—தேடி 219

எடுத்திமையோர் வேள்வி இருந்த வலன் அங்கம்
தடுத்தமணி ஈதெனவே தள்ளி - அடுத்துவளர் 220

---

215. 'இயற்கை' என்பதை 'ஏற்கை' என மரூஉ வாக்கி ஓதினர். 'எழும்' என்றது 'அன்று எழுந்த' என்றவாறு. காக்க - காவல் புரிய. நறைகமழ் - தேன் மணக்கின்ற. 'பூங்கா ஆகிய வனம்' என்க. தீர்க்க மயில் - நீண்ட தோகையை உடைய மயில்.

216. சாய - இவள்பால் (பெண் மயிலென்று) சாய. குலாவிக் கூவ என்றது பெண் குயில் என்று இவளை எண்ணி.

217. வாஞ்சித்து - விரும்பி (வண்டு அணுக). காஞ்சிபுனை மேகலாபரணம், எண்கோவைமணி அணிந்த. சிற்றிடை, அன்மொழித்தொகை; இதையுடைய பெதும்பை.

218. ஆயம் செறிய இருந்து - பல தோழியர்களுடன் கூடியிருந்து.

219. கழங்கு - ஏழுகாய்களைக் கொண்டு ஆடும் ஆட்டம். அங்கையினால் எடுத்து (220) என இயைக்க.

220. வலன் - வலன் என்னும் அசுரன். இவன் பசு உருக் கொண்டு இந்திரன் செய்த வேள்விக்கு உதவிய பொழுது அவனுடைய அங்கங்கள் நவரத்தினமாயின (திருவிளை. புராணம்). எனவே, வலன் என்னும் அசுரனின் உடலில்தோன்றியவை இவை என அந்நவமணிகளைத் தள்ளி. தடுத்த - தன்னுட் கொண்டிருந்த.

மாமலைமா ணிக்க மலையதனில் ஏழுமணி
தாமலையா (து) ஏந்திச் சராசரமும் - காமுறவே 221

ஒன்றென் (று) அகில உகாந்தத் திறுங்கிளைத்து
நின்றபெரு வேம்பின் நிழல்பாடி - ஒன்றும் 222

இரண்டென் (று) இருவகையாய் எய்து பிரமத்தி
பரந்ததனை வீட்டினது பாடி - இரங்குதற்கே 223

மூன்றென்று நாவலர்சொல் முத்தமிழ்கேட் (டு) அம்பொனிடத்
தோன்றிய பொன்பாறைத் தொழில்பாடி - அன்றவற்கு 224

நாலென்று நாலாய் நகுபதமும் ஈவமினி
மேலென்று நின்ற விதம்பாடிச் - சீலமுடன் 225

---

221. தாம் மலையாது - தாம் மாறுபடாதபடி.

222. கழங்கு ஆடும் பொழுது முதலில் ஒவ்வொரு காயாக எடுத்து மேல் எறிந்து, பின்பு இரண்டிரண்டு காய்களாக எடுத்து எறிந்து, இவ்வாறே ஏழு வரையில் எறிந்து, மேலே சென்ற காய் கீழே விழுவதற்குள் மற்றொரு பகுதியை மேல் எறிந்து விட்டுக் கீழ் வந்த காயைத் தரையில் விழாமல் பிடித்து ஆடினால், ஆடினவரே தொடர்ந்து ஆடலாம். கீழ்வந்த காய் தரையில் விழுந்து விட்டால், ஆட்டம் மற்றவர்களுக்கு உரியதாகிவிடும். இவ்வாறு ஆடும் பொழுது, ஒவ்வொன்றாகக் கழங்கை மேலே எறிகையில் ஒற்றைப் பொருளையும், இரண்டிரண்டாக எறியும்பொழுது இரட்டையாய் உள்ள பொருளைப்பாடியும், இவ்வாறே ஏழுவரையில் பாடி ஆடுவர். அம்முறை, இதுமுதல் ஏழு கண்ணிகளில் கூறப்படுகிறது. ஒற்றைப் பொருள், இரத்தினகிரி வேம்பு.

223. ஒன்றும் - பொருந்திய. இரண்டு - இரு நிகழ்ச்சிகள். துர்க்கையை பிரமகத்தி பற்றியதும், வாட்போக்கி இறைவர் நீக்கியதும். (கண்ணி 28 குறிப்புப் பார்க்க).

224. கண்ணி 118 குறிப்புப் பார்க்க. இரங்குதற்கு - இறைவன் இரங்கி அருள் புரிய.

225. நாலுபதம் - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யம். நகு - விளங்குகின்ற. பதம் - தானம், பதவி.

அஞ்சென்று மேனுள் அமைத்ததொழில் ஆற்றுதற்கே
பஞ்சகர்த்தா ஆன பயன்பாடி - இன்சொல்லால் 226

ஆறென்று காவேரி யாறதனை யேவிரும்பும்
மாறிலா நேச வளம்பாடி - வீறுடனே 227

ஏழென்று (று) அடியார் எழுபிறப்பும் மாற்றியருள்
ஆழியென வைகும் அவைபாடித் - தோழிமார் 228

முன்னமே ஆட முகமலர்ந்து போதுமினி
அன்னமே என்னும் அளவிலே - சொன்னநவ 229

கோட்டையான் அன்பர் குறிப்பின் நிலையகழான்
தாட்டியவான் விண்கொத் தளத்தினன் - காட்டியசீர் 230

நீங்காத கொம்மையான் நீண்ட அலங்கத்தான்
ஓங்காரம் சூழ்கலார் உட்படியான் - பாங்கான 231

---

226. தொழில், இறைவன் செய்யும் ஐந்தொழில். 'கர்த்தாக்கள்' எனற்பாலதனை, 'கர்த்தா' என்றே ஓதினர். பஞ்ச கர்த்தாக்களாவார் - பிரமன், மால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்போர். இவர் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் தொழிலைச் செய்வர்.

227. 'ஆறு' என்னும் எண்ணுப் பெயர், சிலேடை வகையால் நதிக்குக் கூறப்பட்டது.

228. எழு பிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம். ஆழி - அருட்கடல். அடியார் அவை பாடி எனக்கொண்டு அடியார்கள் கூட்டத்தினைப் பாடி என்க.

229. ஒன்று முதல் ஏழளவும் விடாமல் தொடர்ந்து ஆடினள் என்க.

230. இதுமுதல் கோட்டை, கொத்தளம் முதலியவற்றைக் கூறுகின்றார். சொன்ன நவக் கோட்டையான் - தங்கத்தாலாகிய புதிய கோட்டையை யுடையவர். அகழான் - நீக்கான். (அகழியான்). தாட்டிய - விசாலமான. கொத்தளம் - கோட்டையின் மேல் தளம். இது வானமாய் அமைந்தது.

231. கொம்மை-இளமை, அழகு.(மதில் உறுப்பும் ஆம்). அலங்கத்தான் - அலங்கத்தை உடையவன்; அலங்கம் என்பதும் மதில் உறுப்பு. உட்படியான் - மனத்தில் தங்கான். (உட்படி என்பதும் கோட்டையின் உறுப்பாய் அதனுள் இருப்பது).

திண்ணகத்தான் ஞானத் திருவாச லான்சலதிக்
கண்ணகத்தான் ஒல்கு கபாடத்தான் - எண்ணரிய 232

கோபுரத்தான் ஆடுங் கொடியந் திரமுடையான்
தாபதற்குள் எட்டாத் தடமதிலான் - மாபுலவன் 233

முற்றுமாள் ஆவணத்தான் முத்திதர மறுகான்
சற்றுநயந் தோரைத் தான்முடுக்கான் - பற்றிலர்முன் 234

சந்தியான் ஓதும் சதுக்க மனையிலக்காய்ச்
சிந்தியான் பாகத் தெருவையான்—வந்தியார் 235

---

232. திண்அகத்தான் - உறுதியான உள்ளம் உடையவன். (உறுதியான உள்ளிடம் கோட்டைக்குள் இருப்பது). ஞானமாகிய வாசல் என்றது உருவகம். சலதி - கடல். சலதிக்கண்ணகத்தான் - திருமால். ஒல்கு - தளர்தல். கபாடம் - வாயிற்கதவு. திருமாலும், எளிதில் புக முடியாத வாயிலை உடையவன் என்க. (கபாடமும் கோட்டையின் உறுப்பு)

233. எண்ணரிய கோபுரத்தான் - பல கோபுரங்களை யுடையவன்.(கோபுரம்,கொடி,யந்திரம் இவைகோட்டையில் இருப்பன). தடம் - வழி. தடம் அது இல்லான் - வழியில்லாதவன்; எனவே, தவத்தவர்க்கு எட்டுகின்ற வழியை உடையவனும். (தடமதில் - பெரிய மதில்; இது கோட்டைக்கு உரியதாதல் அறிக). தாபதர் முனிவர்.

234. 'புலவன்' என்றது சுந்தரரை. ஆவணம் - ஓலை (கடைத்தெரு என்பது மற்றொரு பொருள்). முற்றும் ஆள் - வழிவழி ஆட்கொள்ளும். 'புலவனை' என உருபு விரிக்க. மறுகான் - வருந்தமாட்டான் (மறுகு-தெரு என்பது மற்றொரு பொருள்). முடுக்கான் - வெருட்டி ஓட்டாதவன். (முடுக்கு - முச்சந்தி கூடும் இடம் என்பது மற்றொரு பொருள்).

235. சந்தியான் - எதிர்ப்பட மாட்டான் (சந்தி - இரண்டு தெருக்கள் சேரும் இடம்). சதுக்கம் என்பதற்கு நான்கு எனப் பொருள் கொள்ளுகின்றார். 'நான்கு வேதங்களை ஓதுகின்ற வீடுகளுக்கு இலக்காய் நிற்க நினைக்கமாட்டான்' என்கிறார், வேதங்களுக்கு எட்டாத பெருமானுதல் பற்றி. 'தெரிவை' 'தெருவை' என்றார், நயங்கொள்ளுதற் பொருட்டு. (சந்தி, சதுக்கம், மனை, தெரு - இவை வேறு பொருள் உடையனவாதல் அறிக')

மாடத்தான் எல்லாம் மருவி வளரண்ட
கூடத்தான் தென்சிவதைக் கோயிலான் - நாடித்தான் 236

இம்பர் அணுகும் இலகுமணித் தேர்கடவி
உம்பரொடு மேவ உடனெழுந்தே - அம்புயநேர் 237

கைக்கழங்கை மேலோர் களங்கம் எனவெறிந்தாள்
மெய்க்களங்கம் நீத்தமதி விம்பமெனத் - திக்களந்த 238

மூர லொடுமடவார் முன்போய்த் தொழத்தொழுதாள்
வேரல் மணிமுகத்தாள் விண்மணியை - நேரலர்க்கே 239

சேயான தெய்வச் சிகாமணியை அன்பரைக்
காயா (து) அருள்பொழியும் கண்மணியை - வாயால் 240

---

236. மாடம் - சுவரில் அமைப்பது. தன்னை அன்பாய் வணங்காதவர்கள் வீட்டில் படிமை அளவில் இருப்பவன். அண்ட கூடத்தான் - அண்டமுகட்டில் இருப்பவன் (மாடம், கூடம் என்பன வேறு பொருள் தருவன). சிவதை - சிவாயநகர்; வாட்போக்கி. 'கோயில்' என்பதற்கு ஒரு பொருளே கொள்ளப்பட்டது.

237. இம்பர் - இவ்வுலகத்தோர். உம்பரொடு மேவ - தேவர்களோடு எழுந்தருள. உடன் எழுந்து - பெதும்பை விரைந்தெழுந்து.

238. அம்புயம் நேர்கை - தாமரை போன்ற கைகளிலுள்ள (கழங்குகளை). கைமேலோர் களங்கம் என - கைமேல் உள்ளதோர் மரு (களங்கம்) என்று. எறிந்தாள் - வீசி எறிந்தாள். மெய்க்களங்கம் நீத்தமதி விம்பம் எனமுன் போய் (239) எனக் கூட்டுக. முழுமதிக்குக் கூட களங்கம் உண்டு; இவள் (மதிவிம்பம்) சந்திரனது வடிவம் போல்வாளானலும், மெய்யில் கறை படாதவள் என்றது நயம்.

239. திக்களந்த மூரலொடு - நாற்றிசையிலும் ஒளிவீசும் நகைப்புடன் (போய்த் தொழுதாள்). வேரல் மணி - மூங்கிலில் தோன்றுகின்ற மணி; முத்து (வேர்வைத்துளிகள் அரும்பும் முகத்தாள் எனினுமாம்).

240. 'சேய்மையை', 'சேய்' என ஓதினர்.

வழுத்திஞள் மாணிக்க மாமணியின் மார்பில்
அழுத்தமுலை போதாதென் (று) ஆய்ந்தாள்-விழுத்தகைய 241

அன்னையரை நோக்கி அழகுமணித் தேர்மீதில்
என்னையிவர் பாகத் (து) இருத்துமென - முன்னம் 242

மலையா னவர்க்கு மலைகொடுத்த மான்போல்
நிலையா னவளோ நிகழ்த்தாய் - குலமயிலே 243

என்பாரை நோக்கிநீர் ஏதறிவீர் சென்னியிலோர்
மின்பாரீர் என்று விளம்புதலும் - முன்பாகச் 244

சென்றமணித் தேரின் சிரோமணியைப் பார்த்தெவரும்
ஒன்றியபே ராசை யுடையீரே - இன்றெமது 245

கையதனை நீங்காத கன்னிக்கும் பேராசை
செய்யவோ வந்தீர் சிவனேநீர் - துய்ய 246

---

241. மாணிக்க மாமணி - மாணிக்கமலை இறைவன். போதாது - போதிய திண்மை உடையதன்று. 'போதாது' பன்மை ஒருமை மயக்கம்.

242. மலையானவர்க்கு - மாணிக்கமலையீசன்; அண்ணுமலையான் எனலுமாம். மலை கொடுத்த மான் போல் - இமயமலை பெற்றளித்த பார்வதியைப் போல்.

244. மின் - மின்னல் போன்ற பெண். 'உமையைத் தவிர வேறு பெண்ணை விரும்பார்' என்பது போலச் சொல்லிய கைத்தாயருக்கு, இறைவனது சடையில் மற்றொரு பெண் இருத்தலைக் காட்டினுள் என்க.

245. பேராசை - பெரிய திசைகள். உலகம் முழுதும் என்றவாறு.

246. கையதனை நீங்காத கன்னி - கைக்குள் வளரும் (அன்னையர், செவிலியர் பராமரிப்பிலிருக்கும்) பெதும்பை. பேராசையைத் தூண்டவோ வந்தீர் என்றபடி.

வடிவாள் இடத்திருந்தும் வாளுருவி வெட்ட
முடிதாழ்த் திருந்த முறையோ – அடலைமிகுங் 247

காடேறிக் கூத்தாடிக் கண்ட விடநுகர
மாடேறி யோடு மதியோதான் - கோடேறி 248

ஏசு கபாலத் (து) இரந்தடியான் சேயிறைச்சி
கூசியிடா துண்ணக் குறித்ததோ - காசினிமேல் 249

என்சொல்வோ மானலும் எத்தவே கற்றீரென் (று)
இன்சொலா ளோடுமனைக் (கு) எய்தினர் - வஞ்சமதன் 250

கண்டுமறி யாதவன்போல் கைக்கரும்பை உள்ளடக்கி
விண்டகல்வான் போலயலே மேவினன் - மண்டலத்தில் 251

மங்கை

எல்லா உயிர்க்கும் இறையைத் திறைகொள்ள
வல்லாள் எனவுதித்த மாமங்கை – உல்லாச 252

---

247. துய்ய வடிவாள் - தூய்மையான அழகு பொருந்திய உமை (உம் பக்கலில் இருந்தும்). 'கூர்மையான வாள்' என்பது நயம் ஆரிய அரசன் வாளுருவி வெட்ட, இறைவர் முடிதாழ்த் திருந்தமையைக் கண்ணி 21, 26 குறிப்பிற் காண்க. அடலை - இறப்பு. இது மிகுந்த காடு சுடலை. இருந்த - இருந்தது என்ற முற்றுப்பொருளில் வந்தது.

248. 'கண்ட இடத்திலே உண்பதற்கு மாட்டின் மேல் ஏறி ஓடினர்' என நயம்படக் கூறியவாறு. கோடு ஏறி - கீற்றுக்கள் மிகுந்து.

249. அடியான் சேய் இறைச்சி - சிறுத்தொண்டர் மகவின் ஊன் உணவு.

250. எத்தவே - ஏமாற்றவே.

251. 'அகல்வான் போலக் காட்டி அருகில் இருந்தான்' என்க. அருகில் இருந்தது, தனக்கு உரிய காலம் தொலைவில் இல்லை என்னும் கருத்தினால் என்க.

252. பன்னிரண்டு, பதின்மூன்றும் ஆண்டுகள் மங்கைப் பருவமாம். திறைகொள்ளல் - பணியச் செய்தல், வசப்படுத்தல். மாமங்கை - அழகிய மங்கை. மா - அழகு.

மங்கையர்கட் (கு) எல்லாம் மனோரதமாய் உற்பவித்த
செங்கமலம் மேவாத் திருமங்கை - இங்கிதத்தால் 253

வீறும் பெருமிதமும் மிக்ககல்வி நன்னலமும்
கூறுமநு ராகக் குறிப்பினாள் - மாறிலாக் 254

கைவலனோர் பஞ்சாக் கரமடுவில் வந்துதித்த
சைவலத்தை ஒப்பான தாழ்குழலாள் - மெய்வலத்தால் 255

அன்றிருபால் ஆன அமுதம் விடம்இரண்டும்
இன்றொருபால் உற்ற (து) எனுங்கண்ணாள் - கொன்றையணி

மாலையான் கூத்தில் மருவுவான் தாளத்தின்
கோலம் அனைய குவிமுலையாள் - ஞாலமெல்லாம் 257

சேமித் திடமருட்டும் திவ்வியம்போ லேயிளையோர்
காமித் திடநடக்கும் காட்சியாள் - வாமத்தின் 258

---

253. மனோரதம் - மனத்திற்கு இன்பம். 'செங்கமலம் மேவாத் திருமங்கை' என்றது 'உண்மைத் திருமகளின் வேறான மற்றொரு திருமகள்' என்றவாறு. இங்கிதம் - குறிப்பு, இனிமை.

254. 'பெருமிதம் முதலிய பலவும் அவளது காதற் குறிப்பையே புலப்படுத்தி நிற்கின்றன' என்பதாம். அநுராகம் - ஆசை.

255. கைவலன் ஓர் - (நீந்துவாரது) கைவன்மையை அளக்கின்ற மடு என்க. மடு - இங்கே பஞ்சாக்கரச்சுனை; மாணிக்கமலையில் உள்ளது (கண்ணி 37). சைவலம் - பாசி; பாசிபடர்ந்ததன்ன கருங் குழலாள். மெய் வலத்தால் - (அசுரர்களும் தேவர்களும் தங்கள்) கைபலத்தால் (அன்று கடைந்த). வலம் - பலம்.

256. இருபால் - இருபிரிவு. அவள் கண்களில் அமுத நோக்கும் விடநோக்கும் ஒருங்கே காணப்பட்டது. 'இருநோக்கு இவள் உண்கண் உள்ளது; ஒருநோக்கு நோய் நோக்கு, ஒன்று அந்நோய் மருந்து'. (குறள் 1091).

257. தாளத்தின் கோலம் அனைய - தாளத்தின் வடிவு போன்ற.

258. சேமித்திட - கவர்ந்து கொண்டு போய் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் தோன்றும்படி. திவ்வியம் - அழகின் உருவம். காமித்திட-விரும்ப.

அந்தரங்க மான அடல்மதன நூல்படிக்க
வந்தரங்கில் ஏறி வயங்குவாள் - முந்தி 259

மறம்பொசிந்த பார்வை வகுக்காமுன் காமம்
புறம்பொசிந்து காட்டும் புதியாள் - நிறம்பொசிந்து 260

வீசு கதிர்பரப்பி விண்ணும் புவியுமொரு
தேசு பெறமணியாற் செய்குன்றில் - நேசமுடன் 261

வந்தபல மாதர் வளைய நடுவிருந்தே
அந்த மிகுமதுரை அம்மானைச் - சொந்தமதாங் 262

கூட்டுத் தலையாய்க் கொடுத்ததலை ஈதெனவே
ஆட்டுத் தலைபடைத்த அம்மானை - வீட்டி 263

அலைக்கே வலைவீசும் அம்மானை நாளும்
மலைக்கே துறையாம்அம் மானை - நிலைப்பாய் 264

---

259. அந்தரங்கம் - இரகசியம். வயங்குவாள் - தோன்றுவாள்.

260. மறம் பொசிந்த - கொடுமை ததும்புகின்ற. புதியாள் - (மங்கைப் பருவத்திற்கேற்ற) புதியதொரு தோற்றத்தை உடையவள். நிறம் பொசிந்து - நிறம் வெளிப்பட்டு.

262. அந்தமிகு மதுரை அம்மான் - அழகு மிகுந்த சொக்கலிங்கப் பெருமான். இக்கண்ணி முதல் 266-ஆம் கண்ணி முடிய இவள் அம்மானை ஆடுவதைக் குறிக்கிறார்.

263. தக்கயாகத்தில் தலையிழந்த தன் மாமனை தக்கனுக்கு ஆட்டுத்தலை தந்த அம்மான் என்றார்.

264. அலைக்கே - அலையில்; கடலில். (திருவிளை. புரா. வலை வீசுபடலம்.) மலைக்கே துறையாம் - மலையையே இருப்பிடமாகக் கொண்டவன்.

அட்டி புரிபாச்சி லாச்சிரமத் தேபுணரக்
கொட்டமிகு மானைக் கொடுத்தருளும் - செட்டியெனும் 265

அம்மானை யும்படைத்த அம்மானைப் பாடியிவள்
அம்மானை யாடும் அளவிலே - பெம்மான் 266

கரதலமார் சூலன் கபாலன்கல் லாலன்
வரதன் நா கீசன் மகேசன் - பரதநவில் 267

பாதன் அபேதன் பழைய மறைக்கீதன்
நாதனுயர் வேதாந்தன் நாதாந்தன் - போதமிகும் 268

பன்னிருவ ரீசன் பகரு மலைவாசன்
மின்னிருவர் மோகன் விடைப்பாகன் - மின்னும் 269

அமலனருள் நேயன் அடியர் சகாயன்
விமலன் அருபன் விருபன் - திமிலமிகு 270

---

265-266. திருப்பாச்சில் ஆச்சிரமம் என்பது திருச்சிராப் பள்ளிக்கு அண்மையில், லால்குடி தாலூக்காவில் உள்ள சிறந்த தலம். திருவாசி என்றும் வழங்கப்பெறும். திரு+பாச்சில்+ஆச்சி ராமம் என்ற மூன்று சொற்கள் சேர்ந்த தொடர் இது. பாச்சில் என்பது கொள்ளிடத்தின் வடபகுதியில் உள்ள ஓரிடம். ஆச்சி ராமம் என்பது பெரியோர் வாழும் இடம். எனவே, சிறந்த பாச் சில் கூற்றத்தைச் சேர்ந்த, பெரியோர்க்கும் பெரியோனை பெரு மான் உறையும் பகுதி என்பது பொருளாகின்றது. கொல்லிமழவன் புதல்வியின் முயலக நோயைத் திருஞானசம்பந்தர் தீர்த்தருளிய தலம். இதுவன்றி, சிவபெருமான் கமலன் என்ற ஒரு வைசிய னின் புதல்வியைத் திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடை யது. செட்டியெனும் அம்மானை - செட்டியாகிய மாமனை.

267. நாகீசன் - நாகத்தை அணியாக உடையவன்.

269. பன்னிருவர் ஈசன் - நகரத்தார் பன்னிருவருக்கு ஆன் மார்த்தமான மூர்த்தி. மின்னிருவர் - மின் போன்ற உமையும் கங்கையும்.

270. விருபன் - வேறுபட்ட வடிவத்தை உடையவன், திமிலம் - ஓசை.

கூத்தாடல் கொள்ளுங் கொடிநெடுந்தேர் மீதுறலும்
பார்த்தாடல் விட்டி வரும் பாங்கணுகிப் - பூத்தூவி 271

வந்தித்தாள் அங்கே மதிமருட்ட வேமதனும்
சந்தித்தான் அந்தச் சமையத்தே - முந்தித்தான் 272

மாதா யரைப்பார்த்து மற்றிவர்தாம் மங்கையரை
ஏதால் அணைவார் இசையுமெனக் - கேதாரி 273

மங்கைக்கே மோக மயலகற்றி னாதுவுஞ்
செங்கைப்பூ வாலே தினம்பரவிச் - சங்கையுடன் 274

வாழ்த்தியிடுங் கன்ருப்பூர் மங்கைக்கே அன்றுசெவி
தாழ்த்திருந்தார் அந்தத் தகைமையும் -.வீழ்த்தி 275

வருமுத் தரகோச மங்கைக் கயலே
தருபட்ட மங்கை தனக்கும் - நிருமித்த 276

---

271. கூத்தாடல் கொள்ளும் தேர் - அசைந்து ஆடி வரும் தேர். ஆடல்விட்டு - அம்மானை ஆடலை விட்டு விட்டு.

273. மாதாயர் - செவிலித்தாயர் (அன்னையர், செவிலித் தாயர், கைத்தாயர் என மூவர் குறிக்கப்பட்டுள்ளார்). ஏதால் - எதைவிரும்பி. கேதாரி - திருக்கேதாரத்தில் உள்ளவளான உமை. இது அம்மை பூசித்த தலம்.

274. அதுவும் - அப்படி அகற்றியதுவும்.

275. கன்ருப்பூர்த் தலத்தில் பெருமான் பசுக்கன்றைக் கட்டும் தறியிலேநின்று, ஒரு பெண்ணின் வழிபாட்டை ஏற்றருளின மையை அத்தல வரலாற்ருல் அறிக. வீழ்த்தி வரும் - பாபத்தைப் போக்கிவரும்.

276. பட்டமங்கை - ஒருதலம். இங்குச் சிவபெருமான் சாபத்தால் ஆலமரத்தினடியில் கற்களாகக் கிடந்த ஆறு இயக்க மகளிர்க்கு அட்டமாசித்தி உபதேசித்த வரலாற்றைத் திருவிளை யாடற் புராணத்துட் காண்க. 'பட்ட மங்கையிற் பாங்காயிருந்து அங்கு அட்டமா சித்தி அருளிய அதுவும்' (திருவா. கீர்த்தி 62-63). நிருமித்த வண்ணமும் நீ கேட்டு - இயக்க மகளிர்க்கு அட்டமா சித்தி அருளிய வண்ணமே உனக்கும் அருள வேண்டி அவனைக் கேட்டு என்றபடி.

வண்ணமும் நீகேட்டு மங்கையே யானுலுன்
எண்ணம் முடித்தி எனலுமெதிர் - நண்ணும்அரன் 277

ஆழிமணித் தேர்கடவி ஆங்ககன்ருன் அவ்வளவில்
வாழி மதன்பகழி மாரிபெய்ய - ஊழிநாள் 278

வந்ததோ என்ன மயங்கிமட வாருடனே
இந்துதோய் மாடத் தினிற்புகுந்தாள் - சந்ததமும் 279

*மடந்தை*

மோகரச தாழி முளைத் (து) அதனி லேகனிந்த
நாகரிக யோகம் நவில்மடந்தை - வாகுடனே 280

பின்னிவிட்ட கூந்தல் பிறையுந் திகழுமுகில்
மின்னிவிட்ட தான விநோதத்தாள் - தன்னுதலில் 281

இட்டபொட்டை நோக்கி இளையோர்கள் வந்துதினம்
வட்டமிட்டுப் பார்க்கும் வனப்பினுள் - துட்டமதன் 282

கைச்சிலையில் பூட்டுங் கணையெனவே வையமெலாம்
நச்சி அளக்கும் நயனத்தாள் - உச்சிதமாம் 283

---

277. எண்ணம் முடித்தி - நீ ஈசனை அணையும் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்.

279. 'வந்துதோ', என்று எதுகை நோக்கி ஓதினுர். இந்து - சந்திரன்.

280. பதினுன்கு முதல் பத்தொன்பதாண்டளவும் மடந்தைப் பருவம். மோக - விரும்பி உண்ணும். ரசதாழி - ஒருவித இனிமையான வாழை. தாளி, தாழியாயிற்று. யோகம் - சையோகம் (புணர்ச்சி). நாகரிகமாக நவில் - பேசுகின்ற. வாகு - அழகு.

281. பிறை - பிறை வடிவமான தலையில் அணியும் ஆபரணம். அது மின்னி ஒளிவிடுகின்றது என்க. கூந்தல் முகிலுக்கும் பிறை மின்னலுக்கும் உவமை.

283. மகளிர் கண்ணுக்கு உவமையாகச் சொல்லப்படுகின்ற அம்பினை, இங்கு கண்ணை மன்மதனது அம்பாக குறித்தார். மதன் கைச் சிலையில் பூட்டியகணை மலராகும்; இவள் நயனமும் அம் மலரை யொத்திருந்தது என்கிறுர், நச்சி - விரும்பி. உச்சிதம் - உசிதம்; மரூஉ; பொருத்தம் என்பது பொருள்.

284. 'கேடகம் நேர் தோடு' என்க. விதிர்க்கும் - அசையும்.

போர்க்குமதன் ஏந்திப் புடைவிதிர்க்குங் கேடகநேர்
காக்குமணித் தோடிட்ட காதினுள் - சேர்க்கும் 284

புதியமணி மூக்குத்தி பொற்குமிழின் வந்து
பதியுநிலா வீசப் பயில்வாள் - மதியனைய 285

முல்லைநகை யீன்ற முளரிக் கலங்கரித்த
மெல்லிதழ்ச்செவ் வாய்மலரின் மேன்மையாள் - வல்லபஞ்சேர்

புட்குரல்கள் ஒரெட்டும் பூணு பரணமெனக்
கட்குலவு பூகநேர் கந்தரத்தாள் - உட்கனிவால் 287

எம்பிரான் நாமம் இசைத்தபசுங் கிள்ளைசேர்
செம்பொனுர் சூடகத்தின் செங்கையாள் - பம்பிப் 288

புடைபரந்து விம்மியே பூரித் திறுகித்
தடையிலா (து) ஓங்கும் தனத்தாள் - மடமையற 289

ஓங்கும் இளைஞர் உயிர்சுழிக்க வேசுழித்துள்
வாங்கியிடும் உந்தி வலஞ்சுழியாள் - தாங்கரிய 290

---

285. குமிழ் - நாசி. (சிகப்பு நிறமான குமிழம்பூ நாசிக்கு உவமை).

286. மதியனைய - சந்திரன் போன்ற முகம். அது, முளரி - தாமரை. முல்லை நகையை ஈன்றுள்ளது: முல்லை போன்ற பற்களைப் பெற்றுள்ளது. நகை - பற்கள். இதழ் - பூவிதழ் உதடு- இதழ் போன்ற உதடுகளையுடைய வாய்' என்க. வல்லபம் - வல்லமை.

287. புள் - பறவை. எண்வகைப் புட்களாவன: கிளி, குயில் கோழி, காடை, கௌதாரி, மயில், அன்னம், புறு. 'என அமைய' என ஒரு சொல் வருவிக்க. கள்குலவும் - தேன் சிந்துகின்ற பூகம் நேர் - கமுகம்பாளை போன்ற. கந்தரம் - கழுத்து. கமுகின் பாளையின் புறத்தோற்றம் பெண்கள் கழுத்துக்கு உவமை.

288. சூடகம் - கைவளை. அவள் கையில் வளை அணிந்துள்ளாள்; அங்குக் கிளிப் பிள்ளையையும் வைத்துள்ளாள் என்றவாறு.

289. பம்பி - அழகுமிகுந்து; எழுந்து.

290. சுழிக்க - சுருண்டு வீழும்படி. உள்வாங்குதல் - பள்ளமாதல்.

காமநூல் அன்ன கனகமணி மேகலையின்
சேமநூல் பூணுற்ற சிற்றிடையாள் - தாமரையின் 291

வட்டமதாய் ஆடரவ வாயென வேயுலகைத்
தெட்டியிடும் அல்குற் சிறப்பினுள் - கட்டுபசும் 292

பொற்கதலி நேராய்வெம் போர்மதனன் மண்டபஞ்சேர்
சொற்கவினும் மோகத் துடையினுள் - கற்கடக 293

மேலாம் வராலடியில் மின்னுமணி நூபுரத்தின்
பாலான செம்பொற் பதாம்புயத்தாள் - மாலாதி 294

இந்திரரும் மோகித் (து) இனிதிறைஞ்ச வாள்விதிர்க்குஞ்
சந்திர காந்தத் தலத்தினிடை - வந்திருந்தே 295

ஆங்கு மணிமகதி யாழ்வீணை மீட்டியெதிர்
பாங்கியர்பண் பாடப் பரவசமாய்ப் - பூங்குழலீர் 296

விண்ணுக்கும் மண்ணுக்கும் வேரும் உலகுக்கும்
கண்ணுக் (கு) இனிதான காவலரை - எண்ணித்தான் 297

---

291. 'மேகலை மணியின் நூல்' என்க. தாமரையின் - தாமரை மலரைப் போல, ஆடரவ வாய் - பாம்பின் படம் போன்ற அல்குல். தெட்டியிடும் - (ஆடவரை) வஞ்சிக்கும்.

293. கட்டு - (மண்டபத்தில்) கட்டிய. கதலி - வாழை; என்றது அதன் தண்டினை. 'வாழைத் தண்டையொத்த துடையினுள்' என்க. 'மதனன் மண்டபம்' என்பது இடக்கரடக்கல் 'மண்டபம் சேர்துடை' என்க. கற்கடகம் - நண்டு; இது முழந்தாள் மூட்டிற்கு உவமையாகச் சொல்லப்படும்.

294. வரால் அடி - ஒருவகைமீன் (வரால்) போலும் கணைக் கால். நூபுரம் - பாத கிண்கிணி; காற்சிலம்பு.

295. 'மாலாதி இந்திரரும் இறைஞ்ச' என்பது மடந்தையை இந்திரர் - தேவர். வாள் விதிர்க்கும் - ஒளி வீசுகின்ற சந்திரகாந்தக்கல்லால் அமைந்த மண்டபத்திடை என்க.

296. 'மகதியாழ்' எனப்படுகின்ற வீணை நாரதர் வீணை 'தும்புரு நாரதர் மகதி விபஞ்சி நரம்புளர' (பிரமோத். 2, 62). பெதும்பை கழங்காடலையும், மங்கை அம்மானை ஆடுதலையும் மடந்தை வீணை மீட்டுதலையும் குறிக்கின்றார். பரவசமாய் என்றது மடந்தையை.

297. காவலர் - தலைவர்.

சொல்லுவீர் என்னத் துணைவிக்கா ஈமத்தைப்
புல்லுவான் ஆண்மை புகலவோ - இல்லவள்தன் 298

மூக்கிழந்தும் வாழ்தன் முகமிழந்தும் மோகிக்கும்
வாக்கிளையான் மேன்மை வகுக்கவோ - நோக்கரிய 299

அங்கமெலா மாதர் அழகுகுறி பூண்டதனற்
பங்கமுறு வானைப் பகரவோ - செங்கைபோய் 300

இன்னமுறநாம் மேவி யிடக்குளிகை யாய்த்திரட்டிப்
பன்னியைவைத் தான்மகிமை பன்னவோ-முன்னரியற்றும் 301

மாமகத்தில் தேய்ந்தானை மன்னியபல் போனானைத்
தாமுரைக்க லாகுமோ தாரணியில் - காமமிகும் 302

பெண்ணுக்கும் ஆணுக்கும் பேரழகன் என்பதுதான்
எண்ணிற் சிவனேகாண் ஏந்திழையே - கண்ணுக் (கு) 303

இனியவாட் போக்கியான் இன்பநலம் எய்தக்
கனிவுசெய் யாயெனலும் காலால் - முனியுநமன் 304

---

298. துணைவிக்கா ஈமத்தைப் புல்லுவான் - மனைவியை அடையவேண்டி (காமவிகாரம் கொண்டு) சுடுகாட்டில் புரண்டவன்; திருமால். இது, சலந்தராசுரன் மனைவியாகிய பிருந்தை மேல் கொண்ட காதலால் விளைந்தது என்பதைக் கந்தபுராணம் தட்ச காண்டம், ததீசி உத்தரப்படலம் - 292 - இல் 'ஆங்கவள், அக்குறு சுடலைநீருடி வாடினன் மைக்கடல்' என்பதினால் அறியலாம். ஈமம் - சுடுகாடு. இல்லவள் - இங்கு, கலைமகள்.

299. கலைமகள் மூக்கிழந்தது தக்கன் வேள்வியில். முகம் - வாய். 'முகமிழந்தாள்' என்பது நயம். 'நாமகள் நாசி...பட' (திருவாச. திருஉந்தியார் 13. திருத்தோள் 11). வாக்கு இளையான் - இளையாத, சோர்வுபடாத வாக்கினையுடையவன். வேதன் (cf. காளத்தி உலா-கண்ணி 436)

300. அங்கமெலாம் மாதர் அழகுகுறி பூண்டவன் இந்திரன்.

301. பன்னி - பத்தினி. இந்தக் கண்ணி குறிக்கும் புராண வரலாறு தெரியவில்லை.

302. தக்கன் மகத்தில் தேய்ப்புண்டவன் சந்திரன். பல் இழந்தவன் சூரியன்.

303. எண்ணில் - ஆராய்ந்து சொல்லுங்கால்.

304. 'எனலும்' என்பதை 307-ல் உள்ள 'பவனிஎய்த' என்பதோடு கூட்டுக. காலால் உதைத்தான் (305) எனஇயைக்க. முனியும் நமன் - மார்க்கண்டனை அவன் அணைத்திருந்த இலிங்கத்தோடு, பாசத்தால் கோபத்துடன் இழுத்த யமன்.

ஆகத்தி லேயுதைத்தான் அண்டர் தமைச்சிதைத்தான்
மாகத் தெழுந்தான் மலைக்கொழுந்தான் - நாகத்தின் 305

பூசை உகந்தான் புரிசடையின் நீர்முகந்தான்
ஆசை யுடையான் அருட்கொடையான் - தேசு 306

பெருங்கனகத் தேர்மேல் பிரான்பவனி எய்த
இருமருங்கி னாரோடும் எய்தி - விருந்தினையே 307

சாதிக்கும் பாத சரோருகமும் மாமுடியும்
சோதிக்கு மாறு தொழுதிட்டாள் - நீதிக்குள் 308

நீங்கா நிலையீர் நிறைகவர்வ தென்னெனவே
பூங்காவி பாயப் புழுங்கினாள் - பாங்காக 309

ஆறு தலையுடையீ ரானால் இனியெனக்கோர்
ஆறுதலைச் சொல்ல லாகாதோ - வீறுடனே 310

---

305. அண்டர் - தேவர். அவர்களைச் சிதைத்தது தக்கன் வேள்வியில். மாகத்து - ஆகாயம் அளாவ. மாணிக்கமலையாய் எழுந்தான் என்றபடி. நாகத்தின் - ஆதிசேடனுடைய. இவன் பூசித்த வரலாற்றை இத்தல புராணத்திற் காண்க.

306. ஆசையுடையான் - திசைகளை உடையாக உடையவன். 'அவா' என்பது நயம்.

307. இருமருங்கினார் - பக்கத்தில் உள்ள தோழியர். எய்தி - மடந்தையானவள் எய்தி என்க. விருந்தினையே - அமுதம் போன்ற மோக்ஷத்தை.

308. சாதிக்கும் - வழங்கும். சோதிக்குமாறு - ஆராய்வாள் போல என்றது 'உற்று நோக்கி' என்றவாறு. முன்னர் பிரமனும் மாலும் சோதித்தது போல என்க.

309. பூங்காவி - அழகிய நீலோற்பலமலர். இது கண்களைக் குறித்தது. பாய - இவைகளில் நீர் ஒழுக. பாங்காக - அழகுடனே.

310. ஆறு தலையுடையீர் - கங்கையை முடியிலே வைத்தீர். 'சங்கரர்க்கும் ஆறுதலை' என்பது காளமேகப் புலவர் தனிப்பாடல். வீறுடனே - பக்தி மிடுக்குடனே.

சார்ந்தாரைக் காத்தவரே சஞ்சலத்தால் வந்தருகு
சார்ந்தாரைக் காக்கத் தயவிலையோ - நீந்தாமல் 311

முன்பார்த்த கண்ணால் முனிமதனை இன்றடக்கப்
பின்பார்த்தல் ஒண்ணாதோ பேசுமென - அன்பால் 312

பரவும் அளவில் பராபரன்பொற் றேரும்
தெருவகல மாதர் செறிந்தே - உருவிலிகைத் 313

தூற்றும் பகழித் தொடைமடக்கி உள்வாங்கப்
போற்றுமணி மாளிகையில் புக்கினார் - ஆற்றலுடன் 314

அரிவை

மேனாள் அமைத்த வினோத வடிவமெலாந்
தானாதிக் கந்தான் தனிசெலுத்த - மானார்தம் 315

அங்கமெலாம் நோக்கி அலங்காரத் தூரியத்தைச்
செங்கையிலே ஏந்தித் திசைமுகத்தோன் - சங்கை 316

பிதிரா (து) எழுதிப் பிரமிக்க விட்ட
அதிருப மான அரிவை - மதிதிறம்பா 317

---

311. சார்ந்தாரை - அடியவர் பலரை. நீந்தாமல் - கடக்காமல்.

312. பின் - மீட்டும்; பின்னும் ஒருமுறை.

313. மாதர் - தோழியர். உருவிலி - அனங்கன், மன்மதன்.

314. புக்கினார் என்பதைப் 'புகுவித்தார்' என்ற பொருளில் பிறவினையாகக் கொண்டுள்ளார்.

315. இருபது முதல் இருபத்தைந்து ஆண்டளவும் அரிவைப் பருவம். மேனாள் அமைத்த - முற்காலங்களிலே படைத்த. வடிவம் - பெண் வடிவம். ஆதிக்கம் - அதிகாரம். இதற்குமுன் போந்த மடவார் வடிவம் எல்லாவற்றையும் விஞ்சி நிற்க என்றவாறு.

316-317. தூரியம் - எழுதுகோல். திசை முகத்தோன் - பிரமன். சங்கை பிதிராது - ஐயம் (தோன்றாமல்); அளவு சிதறாமல்; தெளிவான மனத்துடன்.

வேதன் முதலனந்த விண்ணவரும் பல்லுயிரும்
பாதத் (து) அடங்கப் பரிந்தொடுக்கி - நாதனுர் 318

ஏகீ பவித்தாடும் எல்லை யிருட்பிழம்பின்
வாகின் றனைய மலர்க்குழலாள் - ஆகாயம் 319

முற்றும் அளவாக முன்னேன் வளைத்திட்ட
பொற்றனுவே அன்ன புருவத்தாள் - வெற்றிபெறச் 320

சங்கார காலந் தனித்திருந்து தூண்டுமரன்
உங்கார மேபோன் றெளிர்கண்ணுள் - மங்காத 321

முப்புரமு நீருக முன்னகைத்தார் மூரலெனச்
செப்புரமே செய்யுஞ் சிறுநகையாள் - துப்புரவு 322

மூட்டுபகி ரண்ட முகட்டையிடித் தேபொருப்பை
வாட்டும் புளக வனமுலையாள் - தீட்டியபொன் 323

---

319. ஏகீபவித்து - தனியாய் நின்று (ஊழிக் கூத்தாடும்.) எல்லை - சமயத்துத் தோன்றும். இருட்பிழம்பு என்றது - பிரளய காலத்தில் தோன்றும் அந்தகாரம்; பேரிருள். வாகு - அழகு.

320. முன்னேன் - சிவன். பொற்றனு - பொன் மயமான மேருவை வளைத்து வில்லாகக் கொண்டது; அவ்வில் போன்ற புருவத்தாள்.

321. அரனது உங்காரம் உயிர்களை அழிப்பது; இவளுடைய ஒளிர்கண்ணும் ஆடவர் உயிரைக் கவர்வது.

322. மூரல் என - திரிபுரத்தைச் சங்காரம் செய்த சிரிப்புப் போல. செப்பு உரமே செய்யும் - சொல்லப்படுகின்ற வலிமையைப் புலப்படுத்துகின்ற. இவளது நகை, இளைஞர்களது உடலை வெதுப்பும் என்க.

323. துப்பு - வலிமை. துப்புரவு மூட்டும் வனமுலையாள் என்க மூட்டுதல் - குவித்தல். புளகம் - பூரிப்பு. பொருப்பை வாட்டுதலாவது, மேருமலையும் இதுபோல் நாம் இல்லையே என்று வாடும்படி செய்யும் வனமுலையாள்.

தூரியத்தில் வாயாத் துடியைத் துடியெனவே
வாரியற்கை பூண்ட மருங்குலாள் - நீரணியைப் 324

பூசித் திடநேர் புகழ்சே டனும்பதறி
ஆசித் திடமருட்டும் அல்குலாள் - தேசத்தோர் 325

பூவுலகம் என்பதனைப் பூவாம் எனச்செறிந்து
பாவுமர விந்தநேர் பாதத்தாள் - யாவருக்கும் 326

அற்புதம தான அனங்கள் அதிகாரம்
கற்பிக்கும் மோகக் கருத்தினள் - பொற்பமரும் 327

காமா லயம்போல் கனகமணி மண்டபத்தில்
மாமாத ரோடு மகிழ்ந்திருந்தே - பூமானும் 328

---

324. தூரியத்தில் வாயாத்துடி - எழுது கோலுக்கு எழுத வராத உடுக்கை போலும் இடை. துடி என - இடை சிறிது ஆதலின் ஒடிந்து விடும் எனக்கருதி, கொங்கையாகிய சுமையை வாரிட்டுக் கட்டியவள் என்க. வார் - கச்சு. 'வாரினை இயற்கையாய் அமைந்தது போல அணிந்த' என்றபடி. மருங்குல் - இடை. நீரணி - கங்கையை அணிந்த சிவபெருமான்.

325. நேர் புகழ் சேடன் - நேரில் நின்று துதித்த ஆதிசேடன் (இரத்தினகிரி நாதரை ஆதிசேடன் பூசித்த வரலாற்றைத் தல புராணத்துட் காண்க). பதறி - திடுக்கிட்டு. யாசித்திட - இரங்கி ஒதுங்கி நிற்கும்படியாக அமைந்து.

326. பூவுலகம் - மண்ணுலகம். பூவாம் என - பூ என்று நினைத்து. செறிந்து - பொருந்தி. பாவும் - பரவும். யாவருக்கும் கற்பிக்கும் (327) என இயையும்.

327. அனங்கன் - அங்கமில்லாதவன்; மன்மதன். அவனது அதிகாரம் காமநுகர்ச்சி. மோகக் கருத்தினள் - இளைஞருக்கு மோகக் கருத்தை உண்டு பண்ணுபவள். பொற்பமரும் - பொலிவு பொருந்திய. பொற்பமரும் கனகமணிமண்டபம் என்க.

328. காமாலயம் - மன்மதன் இருப்பிடம் போல் அழகு பொருந்திய, மகிழ்ந்திருந்தது அரிவை. பூமானும் - 'புமான்' என்பது எதுகைநோக்கி நீண்டது. புமான் - ஆடவருட் சிறந்தவன்.

மாணிக்கச் கூத்தனை நாம் மைய விடைப்படுத்தப்
பாணித் (து) உபாயம் பகருமெனப் - பேணிப் 329

பொசிவாசி கொள்வார்க்குப் பூவையர்க ணீரே
விசுவாசம் என்றும் விடாதே - அசைவிலா 330

வேதண்டமும் பணியும் வெண்பிறையும் அங்கமதாய்த்
தீதண்டா மேனித் திருவழகை - மூதண்டம் 331

காணநீ காட்டினால் காமித் (து) அணைவரெனப்
பூணிளையார் தேற்றும் பொழுதவளும் - நாணினால் 332

மேருச் சிலைவளைத்தார் வேதத் தலைகிளைத்தார்
பாருக் கிடைமுளைத்தார் பாம்பணைந்தார் - ஆரியற்கு 333

---

329. பாணித்து - தாமதித்து; அதுஇங்கே நீள நினைதலைக் குறித்தது; சிந்தித்து. பாணி - அன்பு; பரிவு எனலும் ஆம்.

330. கணீர் - கண்ணீர். விடாதே - உண்மை என்று மதியார். தளர்ந்துவிடாமல் எனலுமாம்.

331. அசைவிலா வேதண்டம் - மலை; இங்கு கயிலைமலை இஃது உறைவிடமாதல் பற்றி இதனையும் 'அங்கம்' என்றாள். இன்னோரன்னவற்றை' உபாங்கம்' என்றல் மரபு. தீது அண்டா - தீமை பொருந்தாத' 'நன்றுடையானைத் தீயதில்லானை' (ஞான. தே. 1058) இறைவனுக்கு அங்கமாய் உள்ள மலை, பாம்பு, பிறை என்பன தலைவிக்கும் அங்கமாயிருத்தலைக் கூர்ந்துணர்க. 'உன் மலை போன்ற தனத்தினையும், பாம்பு போன்ற அல்குலையும், பிறை போன்ற நெற்றியையும் நீ மறையாது காட்டுவதே இவரை மயக்குவதற்கு வழி' எனப்பாங்கியர் கூறினர் என்க. மூதண்டம் - தொன்மையான உலகம்; இங்கு உலகினரைக் குறித்தது.

332. காமித்து - விரும்பி. 'நாணினால்' என்பதனை இரட்டுற மொழிந்து, அரிவைக்கும் இறைவற்கும் பொருத்திக் கொள்க. அரிவைக்கு ஆக்கும் பொழுது, 'நாணினால், கண்பட்டால் போதுமென' (336) என இயைத்துக் கொள்க.

333. பாருக்கிடை முளைத்தார் என்பதை இரத்தினகிரியில் தோன்றிய தன்மையைக் கொள்ளலாம். ஆரியற்கு - ஆரிய அரசனுக்கு.

முத்திகொடுத்தார் முனியா(து) எனையடுத்தார்
நித்த விதான நிதானத்தார் - பத்திமையால் 334

வாம்பரித்தேர் தூண்டி வரலுமட வாருடனே
பூம்பரித்தேர் அன்ன புரிகுழலாள் - சாம்பசிவன் 335

கண்பட்டாற் போதுமெனக் கைவசம தாக்குதற்கே
பெண்பட்டங் கட்டிப் பிறப்பட்டாள் - பண்பட்ட 336

பின்னணியாய்க் கூந்தல் பிறழஅல்குல் தேரதனை
முன்னணிய தாக்கி முலையானை - அன்னவர்பால் 337

தாக்க மதமீறித் தானை கொடுநடந்து
தாக்கினாள் அந்தச் சமருக்கே - நோக்கினாள் 338

மன்மதனைக் காய்ந்தார் மலைப்பரோ செங்காட்டில்
பின்மகவைக் கொன்றார் பிதற்றுவரோ - வன்மனத்துச் 339

---

334. நித்தம் - நாள்தோறும். விதான நிதானத்தார் - மேற் கட்டி அமைந்த மஞ்சத்தில் இருப்பவர். பத்திமை - அன்பு வணக்கம். இதைப் 'புறப்பட்டாள்' (336) என்பதுடன் கூட்டுக.

335. வாம் பரித்தேர் - தாவிச் செல்லும் குதிரைகள் பூட்டிய இரதம். தூண்டுதல் - செலுத்துதல். பூம்பரித்தேர் அன்ன - அழகிய, நன்கு அலங்கரிக்கப்பட்ட, தேர் போன்ற. 'புரி குழலாள்' என்பது பெண் என்னும் அளவாய் நின்றது; இங்கு அரிவை.

336. பட்டம் கட்டி - தலைமைச் செருக்குக்கொண்டு. 'புறப் பட்டாள்' என்பதை 'பிறப்பட்டாள்' எனத் திரித்து ஓதினார், மோனை வேண்டி.

337. பின்னணி - கூந்தல்; முன்னணி அல்குல்தேர்; முலை யானை - முலையாகிய யானை; இவை கொண்டு அவரைத் தாக்கத் தானையொடு புறப்பட்டாள் என்றவாறு. அன்னவர் - மேலே குறிப் பிட்டவர், இரத்தினகிரிநாதர்.

338. 'மதம் மீறித்தாக்க' எனக் கூட்டுக. தானை - படை, ஆடை. சிலேடை. அந்தச் சமருக்கே நோக்கினாள் - அந்தப் போருக்கே இறைவரும் வருவார் என்று எதிர்பார்த்தாள்.

339. மலைப்பரோ - போர் செய்வாரோ; மருண்டு விடுவாரோ. சிலேடை. பின் - பின்னொரு காலத்தில். 'மகவைக் கொன்றவர் இதனாலெல்லாம் பிரமித்து விடுவாரோ' என்றபடி.

சிங்கத்தைக் கண்டார் திகைப்பரோ வெம்புலியின்
அங்கத் திணையுரித்தார் அஞ்சுவரோ - பொங்கியெழு 340

மாவைச் செகுத்தார் மயங்குவரோ மானேயுன்
ஆவல் அணிவகுப்பால் ஆவதென்ன - வாவெனவே 341

சொல்லும் அளவில் சுரும்பார் குழலிபுணர்
வல்லவன்தேர் அங்கே மறைந்திடலும் - அல்லென்னும் 342

நீல நெருப்பும் நிலாச்சொரியும் வெண்ணெருப்பும்
மேலணுக வீணே வெளிநின்ருள் - சால 343

*தெரிவை*

அலங்கார மான அலைகடலில் மெய்யாம்
நலங்காணும் மந்தரத்தை நாட்டி - நிலஞ்சிறந்த 344

பேரழகி ஞல்கடையப் பெண்ணமுதாய் வந்துதித்த
ஆரமுதம் வாய்மை அறிதெரிவை - சாரும் 345

---

340. சிங்கம் - நரசிங்கம். சிங்கத்தைக் கண்டார் - சரபப் பட்சியாய் வந்து நரசிங்கத்தைக் கிழித்து அடக்கியவர். இந் நிகழ்ச்சி திரிபுவனத்தில் நடந்ததாகக் கூறுவர். புலி: தாருகா வனத்து முனிவர்கள் ஏவியது.

341. மா - யானை. ஆவல் அணிவகுப்பால் - பெருநம்பிக்கை யுடன் அணிவகுத்துப் போருக்கு வந்தமை.

342. சொல்லியவர் ஆயத்தார். அல் - இரவு.

343. நீலநெருப்பு இல்பொருள் உவமை. இருள் வந்திடலும் நிலவு என்னும் (விரக) வெண்ணெருப்பு இவளை அணுகிற்று என்ற வாறு. 'கருநெருப்பினிடை எழுந்த வெண்ணெருப்பே' (கம்ப. பால. மி. காட்சி. 76). (இருளிடையே தோன்றிய வெள்ளிய தண்ணிய சந்திரமண்டலம் காதல் நோயால் வருந்துகின்ற தனக்கு வெப்பத்தை மேன்மேல் மிகுவித்தலால்). வெளி - வெட்டவெளி; ஆதரவில்லாமல் என்றபடி.

344. இருபத்தாறு முதல் முப்பத்தொன்று ஆண்டளவும் தெரி வைப்பருவம்; உண்மையை உணர்கின்ற பருவம். 'வாய்மை அறி தெரிவை' (345), 'அலங்காரமான கடல்' என்றதும், 'மெய்யாம் மந்தரம்' என்றதும், 'பெண்ணமுதம்' (345) என்பது போல உருவ கங்கள். அலங்காரம் - செயற்கை அழகு. மெய் - உடம்பு.

345. அழகு - இயற்கை அழகு. ஆரமுதம் - வேறிடத்தில் கிடையாத அமுதம்.

சுரதரதி கேளி சுகோதயம தான
விரத வடிவேல் விழியாள் - சரசகுண 346

சல்லாப லீலா சனமருவு சையோக
உல்லாச மான ஒயில்நடையாள் - கல்லார 347

மாமாலி காபரண மண்டலஞ்சேர் கொண்டலெனக்
காமா லிகைசேர் கருங்குழலாள் - பூமேவு 343

வச்சிரவேள் சூடா மணிமகுட மாங்கனகக்
கச்சறவே விம்மும் கனதனத்தாள் - பச்செனவே 349

மன்னி உலகை மருட்ட ஒளித்திருந்த
மின்னனைய சூட்சி வெளியிடையாள் - பொன்னவிரும் 350

---

346. சுரத ரதி - காம இன்பத்தில் சிறந்த இரதி; மன்மதன் தேவி. கேளி - கேண்மையை உடையவள். 'ரதிக்குக் கேளி' என்க. 'விரதம்' என்பது குறிக்கோளினை. சுகோதயள் - (சுக உதயள்) சுகத்திற்கு ஆரம்ப இடமானவள். 'வம்பாரத் தனத்தி சுகோதயள்' (திருமந். 1052)

347. சல்லாப லீலாசனம் - உரையாடலாகிய விளையாட்டினை உடைய ஆடவர் கூட்டம். மருவு - அணுகுகின்ற. சையோக உல்லாசம் ஆன ஒயில் நடை - தழுவுதலாகிய மகிழ்ச்சி தோன்று கின்ற அழகிய நடை. கல்லாரம்-நவமணி மாலை.

348. மாமாலிகாபரணம் - சிறந்த வடமாகிய ஆபரணம் காமாலிகை - சோலையில் உள்ள பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை பலவகைப் பூக்களால் ஆகிய மாலையை அணிந்த கூந்தல். நவ மணி மாலையாகிய ஆபரணத்தைக் கொண்டு விளங்கும் மேகம் போல உளதென்க.

349. 'வச்சிரம்' என்றது பொதுவாக படைக்கலம் என்னும் பொருட்டாய் அம்பினைக் குறித்தது. கச்சு அறவே விம்மும் தனம் என்க. 'பளிச்சென' என்பது இடைக் குறைந்து 'பச்சென' என்று நின்றது.

350· சூட்சி - வஞ்சனை; என்றது அறியப்படாதிருத்தலை. வெளி இடையாள் - வெளி (ஆகாசம்) போன்ற இடையினுள். உண்டு, இல்லை எனும்படி.

தட்டெனலாய் ரோம சலாகைக் கெதிர்விரக
நிட்டை புரியும் நிதம்பத்தாள் - அட்டதிக்கும் 351

மோகிக்க வேதன் முடித்த திலோத்தமையும்
தாகிக்க ஊன்றும் சரணத்தாள் - மேகத்தின் 352

வண்ணமால் மோகினியாய்வந்து வளைந்ததெனக்
கண்ணுதலார் முன்னடக்கும் காட்சியாள் - நண்ணும் 353

அவயவமும் பூணும் அலங்கரித்தே நாளும்
நவவடிவம் ஆன நலத்தாள் - சிவபெருமான் 354

கீர்த்தி புகலெனவே கிள்ளை உரைக்கும் அந்த
வார்த்தை வினவி மலரணைமேல் - மூர்த்தமொன்றில் 355

எண்ணில் உகாந்தம் இறந்ததென வேயிருந்தாள்
பண்ணறிந்து பாவலர்போல் பாடினுள் - அண்ணலெதிர் 356

வந்தருள்வார் என்ன மகரயாழ் கைக்கொண்டு
சந்தவிசை பாடும் சமையத்தே - அந்தரமேல் 357

---

351. சலாகை - ஈட்டி. இது வயிற்று உரோம ஒழுங்கிற்கு உவமை. நிட்டை - (விரகத்தில்) நிலைத்து நிற்றல். பொன் தட்டுப் போன்ற நிதம்பம் என்க. அழகு பொருந்திய (நிதம்பமாகிய) கேடயம், உரோம ஒழுங்காகிய ஈட்டிக்கு எதிராக நிற்பது என்றவாறு.

352. முடித்த - அழகும் ஆற்றலும் ஒருங்கேபெற சிருட்டித்த. தாகிக்க - வேட்கை கொள்ள. ஊன்றுதல் - நடனத்தில் ஜதிக்கு ஏற்ப அடி பெயர்த்து வைத்தல். சரணம் - பாதம்.

353. மேகத்தின் வண்ண மால் மோகினியாய் வந்து அமுதத்தைப் பகிர்ந்தளித்ததைக் கூறினர். முன் நடக்கும் - இறைவன் முன் பெருமிதத்தோடு, பீடு நடைபோடும்.

354. அலங்கரித்தல், இங்கு திருத்துதல். நவம் - புதுமை

355-6. வினவி - தன் காது கொண்டு கேட்டு. மூர்த்தம் - முகூர்த்தம். ஒரு முகூர்த்த நேரம் சென்றதைப் பல உகாந்த காலம் சென்றதுபோலக் கருதி வருந்தினுள் என்க.

357. அந்தரம் மேல் - ஆகாயத்தில்; பரவெளியில்; சிதம்பரத்தில்; சிதம்பரம் ஆகாயக்ஷேத்திரம். "அந்தரத்தில் ஆடுகின்றார் வெண்ணிலாவே" (இராம. திருவருட்பா).

ஆடு பதத்தழும்பர் ஆரண நூல் வாய்த்தழும்பர்
ஏடெதிரே செல்ல எதிர்வைகை - நாடன்கை 358

மாற்றினல் அன்று வகுத்த திருத்தழும்பர்
கூற்றை யுதைத்த குலைத்தழும்பர் - போற்றுமுமை 359

கம்பா நதியில் கலந்தணைத்த மெய்த்தழும்பர்
உம்பர் முடிவைத் துறைத்தழும்பர் - அம்புவிமேல் 360

எத்தழும்ப ரேனும் இறைவனிடி நாகத்தால்
முத்தழும்ப ரான முடித்தழும்பர் - சித்ரமணித் 361

தேரதனில் ஏறித் தெருவணுக மற்றிவளும்
தாருலா வீணை தனையெறிந்தே - காரிருளில் 362

பாடியபா ணற்கே பலகையிட்டார் முன்னணுகி
நாடியே மூவர் நவில்வதற்கே - தேடரிய 363

---

358. ஆரண நூல் வாய்த்தழும்பர் - வேதம் ஓதி ஓதி உண்டான நாத்தழும்பு. வைகை நாடன் - பாண்டியன். ஏடு எதிரே சென்ற என்றது வைகைக்கு அடைமொழி.

359. கைமாறு - கைப்பிரம்பு. 'அடித்தழும்பு புறத்திருக்க' (வாட். கலம்.). குலை - மிகுதி. கொலைத்தழும்பர் என்று கொண்டு கொலை செய்த தோஷமாகிய தழும்பு என்க.

360. கம்பாநதியில் - கம்பா நதி பாயும் காஞ்சி நகரம். தழுவியது காமாட்சியம்மை. மெய்த்தழும்பு - உடலில் உள்ள தழும்பு, முலைத் தழும்பும், வளைத்தழும்பும் ஆம். 'அணிவளைத் தழும்பினோடு முலைச்சுவடணிந்தார் ஐயர்' (காஞ்சிப். தழுவக்குழைந்த 380). முடி - கீரீடம். 'வைத்த' என்பதில் அகரம் தொகுத்தல் ஆயிற்று உறை - உறைப்பு; தாக்குதல். உம்பர் வணங்குவதால் முடிபட்டு உண்டான பாதத்தழும்பு என்க.

361. எத்தழும்பரேனும் - வேறு இடங்களில் பெற்ற எந்தத் தழும்பை உடையவராயினும், இம் மாணிக்கமலையின் இறைவனுகிய ஆரிய அரசனுலும், இடிக்கடவுளாலும், ஆதிசேடனுலும் உண்டான தழும்பைக் கூறினர்.

362. தாருலா வீணை - தந்திகள் அசைகின்ற வீணை 357-ல் குறித்த மகரயாழ். இது காறும் பாடிவந்த வீணையைக் கைவிட்டு

363. பாணற்கு (பாணபத்திரருக்கு) இறைவன் பலகை இட்ட வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க. மூவர் - தேவாரமுதலிகளான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர். மூவர் நவில்வது - தேவாரம்.

பொன்னிடுவீர் ஆனல் புளகமுலைப் பொன்னழிக்கப்
பின்னிடுவ(து) என்ன பிரானேமுன் - பன்னுதமிழ்ச் 364

சங்கத்தோன் வேண்டச் சரீரத்தை யேயுதவித்
துங்கத் தியாகியெனத் தோன்றுமக்குச் – செங்கனிவாய் 365

மாதர் மொழிகேளா வகையே(து) எனலு(ம்)மதன்
தீதிலா நோக்கம் சில கொடுத்தே - சோதியாம் 366

மாமணித்தேர் வீதி மறைய இவளுமொரு
பூமருபொன் மாடம் புகுந்திட்டாள் - காமருபூம் 367

பேரிளம் பெண்

பொன்னுதிக்கு மாறுதித்த பொன்னுட்(டு) அரம்பையரும்
பின்னுதிக்க முன்னுதித்த பேரிளம்பெண் - நன்னயஞ்சேர் 368

---

364. முலைப்பொன் - பசலை

365. நக்கீரனுக்குத் தன் திருமேனியையே தியாகம் செய்த வரலாறு புராணங்களில் கூறப்படுகின்றது.

'கயிலை மலைபாதி காளத்தி பாதி
பயிலுமறை நூல்தெரிந்து பாடிச் - சயிலமிசை
அந்தாதி கீரனருளத் திருமேனி
இந்தாத் தியாக மெனத் தந்தோன்'

(காளத்தி உலா-53-54)

தோன்றும் உமக்கு என்பது தோன்றுமக்கு என்றுயிற்று. வெளிப் படுகிற—விளங்குகின்ற உமக்கு.

366. நோக்கம் - கண்; அம்பு; மன்மதனின் அம்பு, மலர். மதனது நோக்கம் சில - மலர்கள். இறைவன் தெரிவைக்குச் சில மலர்களைக் கொடுத்து அப்பாற் போனுன்.

367. பூமரு - அழகு பொருந்திய. காமருபூம் - அழகியபூ. தாமரை மலரில் உள்ள (பொன்-இலக்குமி).

368. முப்பத்திரண்டு முதல் நாற்பதாண்டளவும் பேரிளம் பெண்பருவம். பொன் - திருமகள். 'பொன் உதிக்குமாறு உதித்த பேரிளம் பெண்' எனவும், 'பொன்னுட்டு அரம்பையரும் பின்னு திக்க முன்னுதித்த பேரிளம் பெண்' எனவும் கூட்டுக. முன்உதித் தாள் என்றது சிறந்து நின்ருள் என்றவாறு. 'அரம்பையரெல்லாம் முதுமை எய்தாதிருக்க இவள் முதுமை எய்தினுள்; ஆதலால் 'முன் னுதித்தாள்' என்ருர்.

பாகு மொழியும் பலநடையும் கூட்டியொரு
வாகு புரியும் வசீகரத்தாள் – நாகரிக 369

வல்லி முதிர்ந்து மலரத் தழைந்ததென
மெல்ல அழகெறிக்கும் மெய்யினுள் - சொல்லும் 370

கலையும் மதியும் கலைபற்றி நின்ற
நிலையும் பிரியா நிலையாள் - மலையமெனத் 371

தானே வளர்ந்தால் சரிவும் தகுமெனவே
மேனுள் சரிந்து விழுந்ததோ - நானுவாம் 372

நூலிடையாம் சிங்கத்தை நோக்கி வணங்குதற்கே
கோலி மதயானை குறித்ததோ – மேலெல்லாம் 373

கட்டுண்டு வாராற் கசங்கினமென் றேகவலைப்
பட்டுமுகம் சாய்ந்திருந்த பான்மையோ – எட்டியே 374

---

369. நடை - செய்கை. வாகு - அழகு. பேச்சினுலும் அங்க அசைவினுலும்.

370. முதிர்ந்து - முற்றி. மலர - விரிவாகப்பரவ. மெல்ல எறித்தல் – வாசனை அளவாய்த் தோன்றுதல்.

371. கலை - கல்வி. மதி – அறிவு. 'சந்திரனது கலைகளும் சந்திரனும்' என்பது நயம். கலை பற்றி நின்ற நிலை – கல்விக்கேற்ற ஒழுக்கம்.

372. கொங்கை தளர்ந்து சாய நின்ற நிலை, ஆறு கண்ணிகளில் கூறப்படுகின்றது. 'வளர்ந்தால் பின் சாயவேண்டு வதுதானே' என்றபடி. நானுவாம் – தொங்குகின்ற நாவையுடைய (சிங்கம்). நால் – தொங்கும்

373. நூல் போன்ற மெல்லிய இடையாகிய சிங்கம். இடைக்குச் சிங்கம் உவமையாம், சிறுத்த இடைபற்றி. கோலி – வளைந்து, சரிந்து. யானை கொங்கைக்கு உவமை. சிங்கத்தை யானை வணங்குதல் இயல்பு. மேல் எல்லாம் முன் காலம் எல்லாம்

374. 'வாரால் கட்டுண்டு' எனக் கூட்டுக. 'எட்டியே பார்க்கும் (375) என இயையும்.

கும்பமதாய் வந்த குவலயத்தின் மேல்சீறி
வெம்பியே பார்க்கும் விதந்தானோ - அம்புவிமேல் 375

எல்லா வரையும் இருக்கநாம் அந்தரத்தே
நில்லோம் எனவிறங்கு நீர்மையோ - வல்லான 376

வெற்றி இனிநமக்கு மேவா(து) எனக்குழைந்து
முற்றியே வீழ்ந்த முலையினாள் - கற்றதனால் 377

நேருஞ் சுரத நிலையறிசிற் றின்பமெலாம்
பேரின்பம் ஆக்கும் பெருமிதத்தாள் - ஆரியனைக் 378

காத்தபிரான் கண்ணின் கருணையென வேகுளிரப்
பாத்தசீர் நீங்காத பார்வையாள் - பூத்(து)ஒளிரும் 379

கொம்பெனலாம் எம்பிரான் கோலா கலச்சரணம்
நம்பும் உபய நளினத்தாள் - உம்பர்களும் 380

---

375. கும்பம் - குடம், குடமாக ஆவது மண் ஆதலாலும், குடம் முன்புள்ளவாறே யிருக்க, அதுபோல இருந்த தாம் (தனங்கள்) தளர்ந்து வீழ்ந்தமையாலும், நிலத்தின் மேல் வெறுப்புக் கொண்டன என்க.

376. வரை - மலை. 'தம்மோடொத்த எல்லா மலைகளும் அழகிய நிலத்தின் மேல் அசையாது நிற்க, நாம் அந்தரத்தில் நிற்றல் கூடாது என எண்ணின போலும்' என்றபடி. வல் - சூதாடு கருவி. 'சூதாடு கருவி போலிருந்து பெற்ற வெற்றி இனிக்கிட்டாது' என்றபடி.

377. குழைந்து - தளர்ந்து.

378. சுரதம் - காமம். எல்லா நூல்களையும் கற்றதனால், முன்பு இன்பநூல் பற்றி 'இன்பம்' எனக்கொண்ட சிற்றின்பத்தை இப்பொழுது ஞான நூல்பற்றி பேரின்பத்தையே 'இன்பம்' எனக் கொள்கின்றாள் என்றவாறு. நேர்தல் - எய்திய. ஆரியன் - ஆரிய அரசன்.

379. வருத்தும் பார்வையின்றிக் குளிரச் செய்யும் பார்வை உடையாள் என்க. 'பார்த்த' எனும் சொல் எதுகை நோக்கி பாத்த என வந்தது.

379-80. பூத்து ஒளிரும் கொம்பு எனலாம் உபய நளினத் தாள்; எம்பிரான் கோலாகலச் சரணம் நம்பும் உபய நளினத்தாள் எனப் பிரித்துப் பொருள் கொள்க. கோலாகலச் சரணம்—நடன மாடும் பாதம். நம்பும் - விரும்புகின்ற. நளினம் - இனிமை, மென்மை, தாமரை (போன்ற பாதம்).

காணு மலைக்கொழுந்தைக் கண்டு பணியுமதே
பூணார மாய்நினையும் பொற்பினுள் - நாணுமல் 381

ஆறு பருவத்(து) அடங்கா ததுமுடிக்க
வீறுடனே எண்ணும் விபரத்தாள் - மீறியே 382

வீசு நிலா வெறிக்கும் வெண்ணிலா முற்றத்தே
பாசிழையார் தந்த பலகைவைத்தே - காசு 383

பரப்பியே கூடல் பயிலுமணி ஒன்பான்
நிரப்பியே பார்க்கும் நெறியை - விருப்பமிக 384

முன்னதாம் முத்தைவேய் முத்தென் றிடமடவார்
என்னநீ கண்டாய் எனமயங்கித் - தன்னை 385

மறந்து பவளத்தை வாழ்த்தி அரன்வேணி
சிறந்ததென மாதர் செறிந்தே - அறந்திறம்பா 386

மானே தகாதெனுமுன் மாமணியை நோக்கியிது
தேனார் இதழியார் தேகமெனத் - தானே 387

---

381. மலைக்கொழுந்தை - இரத்தினகிரியின் மேல் உள்ளவர். (இறைவன் திருநாமம்) பூண்ஆரம் - அணியக் கூடிய மாலை. பூண்- ஆபரணம்; இங்கு ஆபரணமும் ஆரமும் என்றலும் ஆம்.

382. ஆறுபருவம், பேதை முதலாக தெரிவை ஈருக உள்ளவை. அடங்காதது - முடியாத செயல். வீறுடனே - பெருமிதத்துடனே. விபரத்தாள் - தெளிந்த உள்ளத்தாள்.

383. பாசிழையார் - பசிய பொன்னாலாகிய ஆபரணத்தை அணிந்தவர், நன்கு அலங்கரிக்கப்பட்ட பெண்கள். காசு - இரத்தினம்.

384. கூடல் - மதுரை; இது. இறைவரே மாணிக்கம் விற்ற இடமாதலால் அங்கு நின்றும் கொண்ட மணிகளையே கூறினர். நெறியை - நெறியில், உருபு மயக்கம், 'நெறியில்' என்றே பாடம் ஓதுதலுமாம்.

385-87 முன்னதாம் - முதலில்: 'முத்தைக் கண்டு வேய் முத்தை (மூங்கிலில் தோன்றிய சிவ பெருமானை) நினைத்தாள்' எனவும் பவளத்தைப் பார்த்து, 'சிவபெருமானது சடை இதனினும் சிறந்தது என்றாள் எனவும்.

தகாது - (நீ இப்படி உவமிப்பது) ஒவ்வாது. மாணிக்கத்தைப் பார்த்து 'இது சிவபெருமானது திருமேனி' என்றாள் எனவும், இவளது கூற்றினைக் கேட்ட பாங்கியர் இவளுக்குப் பித்துப் பிடித்து விட்டதாக நினைத்து மறுப்புச் சொன்னார்கள் எனவும் அறிக. தேனார் இதழியார் - தேன்சொரியும் கொன்றை மாலையை உடையவர்,

மருவ மனங்கொண்டு மையலுறும் எல்லை
அரிபிரமர் காணு அமலன் - விரிபுவனி 388

ஆண்டவன்மா தேவன் அகில சபைநடனத்
தாண்டவன் நாகேசன் சராசரமும் - பூண்டவனும் 389

காலகா லன்பரமன் கங்காள ரூபனுயர்
ஆலநீ ழற்பயிலும் ஆனந்தன் - கோல 390

அருணு சலன்நிமலன் அற்புதம தானுன்
கருணு கரன்கமலக் கண்ணன் - சரணமலர் 391

வந்திக்கும் நேசன் மகேசன்மார்த் தாண்டனுளஞ்
சிந்திக்கும் யோக சிவவிரதன் - பைந்தொடியாய் 392

---

388. 'மாணிக்கத்தைப் பார்த்தவுடன் மாணிக்கமலைநாதரது திருமேனியாக நினைத்துத் தழுவ நினைந்தாள்' என்க.

389. அகிலசபை - எங்கும் உள்ள சபைகள் 'தாண்டவம்' என்பதை ஒருவகைக் கூத்தாகக் கொள்க. நாகேசன் - ஆதிசேடனுல் பூசிக்கப்பட்டவன்.

390. காலகாலன் - (காலனுக்கு காலன்). காலனைக் காலால் உதைத்தவனும். கங்காளரூபன் - எலும்பு மாலையைத் தாங்கிய வடிவுடையவன். 'கங்காள மலையாளன்' (தேவா. திருவை - பதிகம்) 'என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க' (தேவா. கோளறு - 4).

391. கருணுகரன் - கருணைக்கு இருப்பிடமானவன். 'கமலக் கண்ணன் வந்திக்கும் (392) என இயையும்.

392. மார்த்தாண்டன் - சூரியன். இவன் இரத்தினகிரி இறைவனைத் தியானித்து நலம் பெற்ற வரலாற்றை இத்தல புராணத்துட்காண்க. 'யோகவடிவம் பற்றி 'யோகசிவன்' என்றும், விரதன் என்றும் கூறினுர்.

பன்னிருவர் பாலுகந்த பன்னிருவர் போற்றியது
பன்னிருவர் வாழ்த்தவே பன்னிருவர் - என்னுடனே 393

என்று வருநடையான் ஏகாம் பரவுடையான்
துன்று பிறைச்சடையான் சூர்விடையான் - கொன்றை 394

மருக்கொழுந்து சூடி மலைக்கொழுந்தாய் நின்றுன்
திருக்கொழுந்து வீசும் தெருவில் - அருக்கரென 395

ஆடகத் தேர்மீதில் அணுகுதலும் ஆங்கமைத்த
கூடல் ஒழிந்துபோய்க் கும்பிட்டாள் - நீடுமணித் 396

தேரில் வருவார் திருவுளமுந் தஞ்செயலும்
பாரில் அறியும் படிநினைந்தே - மாரவேள் 397

பூங்கணையும் தென்றற் புலியும் மதிக்குடையும்
மாங்குயிலும் மேன்மேல் வருத்தாமல் - ஓங்கியெழு 398

---

393. பன் இருவர்பால் உகந்த - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற உமை, கங்கை என்னும் இருவரிடத்தும் விருப்பம் வைத்த செயல்களையும்; பன்னிருவர் போற்றியது - சூரியன் பன்னிருவரும் துதித்ததையும்; பன் இருவர் வாழ்த்த - எடுத்துச் சொல்கின்ற அயன்மால் இருவரும் துதிக்க, பன்னிருவர் என்னுடனே என்று - நகரத்தார் பதினொருவரும் என்னுடன் பன்னிருவரானார் என்று. வருநடையான் - வீதிஉலா வருகின்ற நடையை உடையவன்.

394. ஏகாம்பர உடையான் - ஒன்றாயுள்ள ஆகாயத்தை உடையாக உடையவன். சூர் - அச்சத்தைத் தருகின்ற.

395. திரு கொழுந்து வீசும் தெரு - செல்வத்தின் சின்னங்கள் மலிந்திருக்கும் வீதி; அருக்கர்என - சூரியன் பவனி வருவதுபோல்.

396. ஆடகம் - பொன். கூடல் - (கூடல் என்னும் விளையாட்டினை)மதுரைப் பொருளாகிய நவமணிகளைக் கைவிட்டு; ஆகுபெயர். கும்பிட்டாள் - (இங்கு) கரங்குவித்து அஞ்சலி செய்தாள்.

397. 'இறைவரது திருவுள்ளத்தையும், அவரது செயலையும் எவ்வாறு உள்ளன என்பதை அறியவேண்டிப் பணிந்தாள்' (401) என்க.

398. தென்றற்புலி - உருவகம். 'மன்மதனின்கணை, தென்றல், மதி, மாங்குயில் முதலியன வருத்தாவண்ணம் வந்த மணி, மந்திர, ஔஷதம் போல்பவரே' என்று இறைவனைப் புகழ்ந்தாள். 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, தீராநோய் தீர்த்தருள வல்லான்' (திருநா. தேவா),

மந்திரமே தேவே மருந்தே மணியேசொல்
தந்திரமே வாழ்வே தயாநிதியே - எந்திரமே 399

அன்பே பொருளே அருட்கடலே யாவர்க்கும்
முன்பே சிவமே முழுமுதலே - என்பார்முன் 400

பாராமல் இன்னம் பராமுகமே பண்ணுமோ
ஆரா அமுதென் (று) அடிபணிந்தாள் - நேராய்க் 401

கலைக்கொழுந்து சூடக் கருதும்நீர் என்றன்
முலைக்கொழுந்து சூட முயங்கீர் - அலைத்துவரும் 402

காவேரி நீரில் கனிவாம்நீர் என்னதரப்
பூவேறு நீரைப் பொருந்தீடீர் - மூவாச் 403

சுரும்பார் குழலிசைக்கும் சொற்கடவீர் என்வாய்க்
கரும்பார் குழலிசைக்குங் காவீர் - திரும்பிமுகம் 404

பாரீர் எனத்தொடரும் பைந்தொடிமேல் அன்புவைத்துக்
காரீர் எனுமென்னைக் கைவிடான் - ஏரான்அக் 405

---

399. தந்திரம் - நூல்; சாத்திரம். எந்திரம் - பூசிக்கப்படும் சக்கரவகைகள்.

400. பொருள் - நிதி. முன்பே - முன்னே உற்றவன். காலவாகு பெயர். 'என்பார்' எனத் தன்னையே பிறர்போலக் கூறினுள்.

401. ஆராஅமுது - தெவிட்டாத அமுதம் போன்றவர்.

402. கலைக்கொழுந்து - பிறைச்சந்திரன்.

403. கனிவாம் நீர் - கனிவுடன் இருக்கின்ற நீங்கள். அதரப்பூ - இதழாகியபூ. ஏறுநீர் - எயிற்றில் ஊறிஎழுகின்ற நீர். மூவா - முதுமை எய்தாத.

404. சுரும்பார் குழல் - இரத்தினகிரியில் உள்ள அம்பிகை. கரும்புஆர் குழல்இசை - கரும்பு போன்றயான் ஆர்க்கின்ற (இசைக்கின்ற) குழலிசை போன்ற மொழி. (இசைக்கு) 'உங்காவீர்' எனப் பிரித்து, பேச்சுக்கு அப்பாற் செல்வீர்; (உங்கு+ஆவீர்) கடந்து போவீர் என்றவாறு.

405. 'வா' என்பது அடியாக 'வாரீர்' என வருதல்போல, 'கா' என்பது அடியாக 'காரீர்' எனவரும் எனச் சிலர் கொள்வர். 'என்னை' என்று ஆசிரியர் தம்மைக் குறித்துவிட்டு, 'மாதர்களை நோக்காது போயினும் என்னைக் கைவிடாத அருளுடையவன்' என்று சொல்லிக்கொள்கின்ருர். அங்ஙனம் சொல்லிக் கொள்கின்றவர் தாம் தம் மாதர்களுக்காகப் பரிந்து 'அவர்களைக் காத்தருளுங்கள்' என்று கூறியதாகவும் சொல்கின்ருர். எனும், எனினும் என்பதின் சுருக்கம். ஏரான் - அழகுடையவன்.

கன்னிதுற்கை நாகம் கடவுளர்கோன் காலிரவி
மின்னிடிகொள் மாமுனிவர் வேண்டவே - கின்னரர்தம் 406

மாதர் ககன மடவார் திசைமடவார்
பூதல மின்னாரும் புடைசூழ - ஆதி 407

விரகேசன் தென்சிவதை வீதிதொறும் தேர்மேல்
உரகேசன் போந்தான் உலா. 408

வாட்போக்கியென்னும்
இரத்தினகிரியுலா முற்றியது.

*வாழி*

வாழி சிவாயநகர் வாட்போக்கி யார்வாழி
வாழிமா ணிக்க மலைவாழி - ஊழியினும்
தொண்டரெலாம் வாழி சுருதி சிவாகமமும்
மண்டலமும் வாழி மகிழ்ந்து.

*திருச்சிற்றம்பலம்*

---

406. 'கன்னியாகிய துற்கை' என்க. நாகம் - ஆதிசேடன் கடவுளர் தம்கோன் - இந்திரன். கால் - வாயுதேவன். இரவி - சூரியன். இடி - இடிக்கடவுள். முனிவர் - அகத்தியர், உரோமசர் முதலியோர். இவரெல்லாம் வாட்போக்கி நாதரைப் பூசித்து நலம் பெற்றமையை இத்தலபுராணத்துட்காண்க. இங்ஙனம் பேறு பெற்ற அவர்களும் இறைவன் உலாப் போம்பொழுது தோத்திரம் செய்து உடன் வந்தனர்; கின்னரமாதர் முதலிய தேவமாதர்களும் மானுடமாதர்களும் வந்தனர் என்க.

408. விரகேசன் - உயிர்களுக்கெல்லாம் காம இச்சையைப் படைத்த இறைவன். விரகம் - காமவேட்கை. சிவதை - சிவாய நகர்; வாட்போக்கி. உரகேசன் - ஆதிசேடனுக்கு அருளிய ஈசன் (உலாவந்தான்).

# பிற்சேர்க்கை 1

## தொண்ணூற்றுறு பிரபந்தப் பெயர்கள் அகராதி

(இவை 'இலக்கியக் கொள்கை' பாகம் 2 'சிற்றிலக்கியங்கள்' என்ற தலைப்பில் திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் கட்டுரையிலிருந்து தொகுக்கப் பெற்றன)

1. அகப்பொருட்கோவை
2. அங்கமாலை
3. அட்டமங்கலம்
4. அநுராக மாலை
5. அரசன் விருத்தம்
6. அலங்கார பஞ்சகம்
7. ஆற்றுப் படை
8. இணைமணி மாலை
9. இயன் மொழி வாழ்த்து
10. இரட்டைமணி மாலை
11. இருபா விருபஃது
12. உலா
13. உலாமடல்
14. உழத்திப் பாட்டு
15. உழிஞை மாலை
16. உற்பவ மாலை
17. ஊசல்
18. ஊர் நேரிசை
19. ஊர் வெண்பா
20. ஊரின்னிசை
21. எண் செய்யுள்
22. எழு கூற்றிருக்கை
23. ஐந்திணைச் செய்யுள்
24. ஒருபாவொருபஃது
25. ஒலியலந்தாதி
26. கடிகை வெண்பா
27. கடை நிலை
28. கண்படை நிலை
29. கலம்பகம்
30. காஞ்சி மாலை
31. காப்பியம்
32. காப்பு மாலை
33. குழமகன்
34. குறத்திப் பாட்டு
35. கேசாதி பாதம்
36. கைக்கிளை
37. கையறு நிலை
38. சதகம்
39. சாதகம்
40. சின்னப்பூ
41. செருக்களவஞ்சி
42. செவியறிவுறூஉ
43. தசாங்கத் தயல்
44. தசாங்கப் பத்து
45. தண்டக மாலை
46. தாண்டகம்
47. தாரகை மாலை
48. தானைமாலை
49. தும்பை மாலை
50. துயிலெடை நிலை
51. தூது
52. தொகைநிலைச் செய்யுள்
53. நயனப் பத்து
54. நவமணி மாலை
55. நாம மாலை
56. நாற்பது
57. நான்மணி மாலை
58. நூற்றந்தாதி
59. நொச்சி மாலை
60. பதிகம்

61. பதிற்றந்தாதி
62. பயோதரப் பத்து
63. பரணி
64. பல்சந்த மாலை
65. பவனிக் காதல்
66. பன்மணி மாலை
67. பாதாதி கேசம்
68. பிள்ளைக் கவி
69. புகழ்ச்சி மாலை
70. புறநிலை
71. புறநிலை வாழ்த்து
72. பெயர் நேரிசை
73. பெயரின்னிசை
74. பெருங்காப்பியம்
75. பெருமகிழ்ச்சி மாலை
76. பெருமங்கலம்
77. போர்க்கெழு வஞ்சி
78. மங்கல வள்ளை
79. மணி மாலை
80. முதுகாஞ்சி
81. மும்மணிக் கோவை
82. மும்மணி மாலை
83. மெய்க்கீர்த்தி மாலை
84. வசந்த மாலை
85. வரலாற்று வஞ்சி
86. வருக்கக் கோவை
87. வருக்க மாலை
88. வளமடல்
89. வாகை மாலை
90. வாதோரண மஞ்சரி
91. வாயுறை வாழ்த்து
92. விருத்த விலக்கணம்
93. விளக்கு நிலை
94. வீரவெட்சி மாலை
95. வெற்றிக் கரந்தை மஞ்சரி
96. வேனில் மாலை

# பிற்சேர்க்கை 2

## ஐயரவர்கள் தொகுப்பிலுள்ள உலாக்களிற் கூறப்படும் விஷயக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| அம்மானை | அரிவை | திருவானைக்கா உலா |
| அம்மானை | மங்கை | இரத்தினகிரி உலா |
| அம்மானை | மங்கை | காளத்திநாதர் உலா |
| அம்மானை | மங்கை | பூவணநாதர் உலா |
| ஊசல் | மங்கை | ஆரூருலா |
| ஊசல் | மங்கை | சொக்கநாதர் உலா |
| ஊசல் | மடந்தை | சங்கரசோழன் உலா |
| ஊசல் | தெரிவை | பெருவுடையார் உலா |
| ஓவியம் | தெரிவை | பூவணநாதர் உலா |
| ஓவியம் | பெதும்பை | பெருவுடையார் உலா |
| ஓவியம் பார்த்தல் | அரிவை | ஏகாம்பரநாதர் உலா |
| கழங்கு (1-7) | பெதும்பை | இரத்தினகிரி உலா |
| கழங்கு (1-7) | பெதும்பை | ஏகாம்பரநாதர் உலா |
| கழங்கு (1-7) | பெதும்பை | காளத்தி நாதர் உலா |
| கழங்கு (1-7) | பெதும்பை | திருவானைக்கா உலா |
| கழங்கு (1-7) | பெதும்பை | திருவேங்கட உலா |
| கழல் (1-7) | பெதும்பை | சேயூர் முருகன் உலா |
| களி | பேரிளம்பெண் | விக்ரம சோழன் உலா |
| கனவு | மங்கை | பெருவுடையார் உலா |
| கனவு | மடந்தை | காளத்திநாதர் உலா |
| கனவு | மடந்தை | சேயூர் முருகன் உலா |
| கிளி | அரிவை | பெருவுடையார் உலா |
| கிளி | பெதும்பை | குலோத்துங்க சோழன் உலா |
| கிளி | பேரிளம்பெண் | ஆரூருலா |
| குறத்தி | மடந்தை | பெருவுடையார் உலா |
| குறம் | பெதும்பை | சங்கரசோழன் உலா |
| தலவிருட்சங்கள் | அரிவை | சொக்கநாதர் உலா |
| தலைவன் பெருமை வினா விடை | அரிவை | காளத்திநாதர் உலா |
| தலைவன் பெருமை வினா விடை அந்தணன் | பேரிளம்பெண் | ஏகாம்பரநாதர் உலா |
| தலைவன் பெருமை வினா விடை | மடந்தை | இரத்தினகிரி உலா |
| நீராட்டு | அரிவை | இராசராசன் உலா |
| நீராட்டு | மங்கை | சொக்கநாதர் உலா |
| பந்து | மங்கை | ஏகாம்பரநாதர் உலா |

| | | |
|---|---|---|
| பந்து | மங்கை | திருவானைக்கா உலா |
| பந்து | தெரிவை | குலோத்துங்க சோழன் உலா |
| பந்து | மங்கை | திருவேங்கட உலா |
| பந்து | மங்கை | தேவை உலா |
| பந்து | மடந்தை | விக்ரம சோழன் உலா |
| பாணன் | தெரிவை | விக்ரமசோழன் உலா |
| பூவை | மங்கை | ஆதி உலா |
| பொழில் | அரிவை | குலோத்துங்க சோழன் உலா |
| பொழிலாட்டு | அரிவை | விக்ரம சோழன் உலா |
| பொழில் | தெரிவை | காளத்திநாதர் உலா |
| பொழில் | பெதும்பை | இராசராசன் உலா |
| பொழில் | மடந்தை | தேவை உலா |
| பொழில் தல விருட்சம் | பேரிளம் பெண் | திருவானைக்கா உலா |
| யாழ் | அரிவை | ஆரு ருலா |
| யாழ் | மடந்தை | ஆதி உலா |
| விறலி | அரிவை | சங்கரசோழன் உலா |
| விறலி | அரிவை | தேவை உலா |
| விறலி | தெரிவை | ஏகாம்பரநாதர் உலா |
| விறலி | மடந்தை | பூவணநாதர் உலா |
| விறலி | மடந்தை | ஆருருலா |
| விறலி | மடந்தை | திருவானைக்கா உலா |
| விறலி | மடந்தை | சொக்கநாதர் உலா |
| விறலி | பேரிளம்பெண் | சொக்கநாதர் உலா |

2 1 ... 1985

# பிற்சேர்க்கை

இதுவரை தெரியவரும் உலா
இங்கு அகர வரிசையில்

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 1 | அப்பாண்டை நாதர் உலா | தெரியவில்லை |
| 2 | அவிநாசி உலா | அருணாசலக் கவிராயர் |
| 3 | அழகியநம்பி உலா | தெரியவில்லை |
| 4 | ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை | நம்பியாண்டார் நம்பி |
| 5 | ஆனந்தக்கூத்தன் உலா | கனகராஜையர் |
| 6 | இரவிவர்ம பூபன் உலா | தெரியவில்லை |
| 7 | இராசராசசோழன் உலா | ஒட்டக்கூத்தர் |
| 8 | உண்மை உலா | தெரியவில்லை |
| 9 | ஏகாம்பரநாதர் உலா | இரட்டையர் |
| 10 | கடம்பர் கோயில் உலா | தெரியவில்லை |
| 11 | கயத்தாற்றரசன் உலா | அந்தகக் கவி வீரராகவ முதலியார் |
| 12 | கனகசபைநாதன் உலா | அம்மையப்பர் |
| 13 | காமராசர் உலா | அ. கு. ஆதித்தர் |
| 14 | காளி உலா | தெரியவில்லை |
| 15 | கீழ்வேளூர் உலா | அந்தகக் கவி வீரராகவ முதலியார் |
| 16 | குலசை உலா | தெரியவில்லை |
| 17 | குலோத்துங்கசோழன் உலா | ஒட்டக்கூத்தர் |
| 18 | குன்றக்குடி சண்முகநாதர் உலா | சிலேடைப் புலி பிச்சுவையர் |
| 19 | கோடீச்சுர உலா | சிவக்கொழுந்து தேசிகர் |
| 20 | சங்கர ராசேந்திரசோழன் உலா | தெரியவில்லை |
| 21 | சங்கரநயினார் கோயில் சங்கர லிங்க உலா | தெரியவில்லை |
| 22 | சிலேடை உலா | தத்துவராயர் |
| 23 | சிவகுரு உலா | தெரியவில்லை |

# 3

இலக்கியங்களைப் பற்றிய விவரங்கள்
தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

| காலம் நூற்றுண்டு | பிற குறிப்புகள் |
|---|---|
| தெரியவில்லை | சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு |
| 20 | அச்சானது |
| தெரியவில்லை | S. வையாபுரிப்பிள்ளை பதிப்பு 1932 |
| 9 | 11 ஆம் திருமுறை |
| 20 | அச்சானது 1957 |
| தெரியவில்லை | ஏட்டுச்சுவடி - குறைப்பிரதி; டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையம் |
| 12 | ஐயரவர்கள் நூல்நிலையப்பதிப்பு(மூவருலா) |
| தெரியவில்லை | தமிழ் இலக்கிய அகராதி |
| 15 | தெய்வீக உலா (வேறு பெயர்) |
| தெரியவில்லை | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1932) |
| 17 | —— |
| 17 | —— |
| 20 | —— |
| தெரியவில்லை | சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் |
| 17 | செந்தமிழ் தொகுதி 24 (அபூர்த்தி) |
| தெரியவில்லை | டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையப் பதிப்பு—1972 |
| 12 | ,, ,, (மூவருலா) |
| 19 | அச்சானது 1938 |
| 17 | (வேறு பெயர் : கொட்டையூர் உலா. இது கிடைக்கவில்லை |
| 13 | டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையப் பதிப்பு 1976 |
| 17 | வேறு பெயர்: வர ராசை உலா. டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு 1933 |
| 15 | —— |
| தெரியவில்லை | அச்சாகவில்லை; தெரிவைப்பருவம் வரை உள்ள குறைப்பிரதி |

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 24 | சிவசுப்பிரமணியர் திருமுக உலா | கபாலமூர்த்திப் பிள்ளை |
| 25 | சிவந்தெழுந்த பல்லவராயன் உலா | மல்லைச் சிற்றம்பலக் கவிராயர் (ஐயரவர்கள் குறிப்பு) |
| 26 | சிறுத்தொண்டர் உலா | தெரியவில்லை |
| 27 | சீகாழி உலா | " |
| 28 | சுந்தரர் உலா | தேனூர் வரகவி வே. செ. சொக்கலிங்கனார் |
| 29 | செப்பறை உலா | அழகிய கூத்த தேசிகர் |
| 30 | சேயூர் முருகன் உலா | சேறைக் கவிராச பிள்ளை |
| 31 | சேனைத்தேவர் உலா | தெரியவில்லை |
| 32 | ஞான உலா | சங்கராச்சாரியார் |
| 33 | ஞான உலா | சுவிசேடக் கவிராயர் வேதநாயக சாஸ்திரி |
| 34 | ஞானவினோதன் உலா | தத்துவராயர் |
| 35 | தஞ்சைப் பெருவுடையார் உலா | சிவக்கொழுந்து தேசிகர் |
| 36 | தத்துவகாமிய உலா | தத்துவராய சாமிகள் |
| 37 | தத்துவ வாக்கிய சிலேடை உலா | ,, |
| 38 | தருமை உலா | திருவம்பலத் தம்பிரான் |
| 39 | திருக்கடவூர் உலா | சுப்பிரமணியக் கவிராயர் |
| 40 | திருக்கழுக்குன்றத்து உலா | அந்தகக் கவி வீரராகவ முதலியார் |
| 41 | திருக்காளத்திநாதர் உலா | சேறைக் கவிராச பிள்ளை |
| 42 | திருக்குவளைதியாகராச சாமி உலா | தெரியவில்லை |
| 43 | திருக்குற்றாலநாதர் உலா | திரிகூடராசப்பக் கவிராயர் |
| 44 | திருக்குறுங்குடி அழகியநம்பி உலா | தெரியவில்லை |

| காலம் நூற்றுண்டு | பிற குறிப்புகள் |
|---|---|
| 19 | —— |
| 17 | தொல்பொருள் ஆய்வுத்துறையார் வெளியிடும் 'கல்வெட்டு' இதழில் மூலம் மட்டும் அச்சாகியுள்ளது 1975 |
| தெரியவில்லை | டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலைய ஏட்டுச்சுவடி |
| ,, | ,, ,, ,, ,, |
| 20 | அச்சானது |
| 19 | —— |
| 16 | அச்சாகவில்லை. டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலைய கையெழுத்துப் பிரதி |
| தெரியவில்லை | சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் |
| தெரியவில்லை | சென்னை ஓரியண்டல் மானஸ்கிரிப்ட்ஸ் நூல் நிலையத்தாரால் அச்சானது |
| 19 | அச்சானது. தமிழ் நூல்விவர அட்டவணை. |
| 15 | —— |
| 19 | அச்சானது வேறுபெயர்:பிரகதீசுரர் உலா |
| 15 | அச்சானது |
| 15 | ,, |
| 19 | அச்சாகவில்லை. டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலைய கையெழுத்துப்பிரதி |
| 19 | அச்சானது |
| 17 | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1938) |
| 16 | ,, ,, ,, (1904) |
| தெரியவில்லை | அச்சானது |
| 18 | டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலைய வெளியீடு (1955) |
| 17 | S. வையாபுரிப்பிள்ளை 1932 |

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 45 | திருக்கைலாய ஞான உலா | சேரமான் பெருமாள் நாயனுர் |
| 46 | திரிசிரகிரி உலா | தெரியவில்லை |
| 47 | திருச்சிறு புலியூர் உலா | ,, |
| 48 | திருச்செந்தூர் உலா | ,, |
| 49 | திருச்செந்தூர் உலா மடல் | ,, |
| 50 | திருத்தணிகை உலா | கந்தப்பையர் |
| 51 | திருத்துருத்தி உலா | தெரியவில்லை |
| 52 | திருப்பனந்தாள் உலா | எல்லப்பபூபதி |
| 53 | திருப்பாலைப்பந்தல் உலா | எல்லப்ப நயினுர் |
| 54 | திருப்புத்தூர் உலா | தெரியவில்லை |
| 55 | திருப்புறம்பயம் ஸ்ரீசாட்சி நாதசுவாமி உலா | தெரியவில்லை |
| 56 | திருப்பூவணநாதர் உலா | கந்தசாமிப் புலவர் |
| 57 | திருவாரூர் உலா | அந்தகக் கவி வீரராகவ முதலியார் |
| 58 | திருவானைக்கா உலா | காளமேகப் புலவர் |
| 59 | திருவிடைமருதூர் உலா | மீனுட்சிசுந்தரம் பிள்ளை |
| 60 | திருவிலஞ்சி முருகன் உலா | பண்டாரக் கவிராயர் |
| 61 | திருவெங்கை உலா | சிவப்பிரகாசசுவாமிகள் |
| 62 | திருவேங்கட உலா | தெரியவில்லை |
| 63 | தில்லை உலா | ,, |
| 64 | தென்தில்லை உலா | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் |
| 65 | தேவை உலா | பல பட்டடை சொக்கநாதப் புலவர் |
| 66 | நக்கீரர் உலா | தெரியவில்லை |
| 67 | நடுத்தீர்வை உலா | ,, |
| 68 | நெல்லை வேலவர் உலா | சரவண முத்துப் புலவர் |

| காலம் நூற்றுண்டு | பிற குறிப்புகள் |
|---|---|
| 8 | வேறு பெயர்: ஆதியுலா |
| தெரியவில்லை | குறைப்பிரதி |
| ,, | அச்சானது செந்தமிழ் தொகுதி 46 |
| ,, | குறைப்பிரதி (டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையம்) |
| ,, | ,, ,, ,, ,, |
| 18 | அச்சானது |
| தெரியவில்லை | இப்போது கிடைக்கவில்லை காப்புமட்டும் Dr. ஐயரவர்கள் குறிப்பில் உள்ளது |
| 16 | —— |
| 16 | கிடைக்கவில்லை (cf செந்தமிழ் Vol. 43-1946 பக்கம்-18 |
| தெரியவில்லை | அச்சாகவில்லை. (டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலைய கையெழுத்துப் பிரதி) |
| தெரியவில்லை | குறைப் பிரதி. டாக்டர் ஐயரவர் குறிப்புகள் அடங்கிய தமிழ்க் கருவூலம் (K) தொகுதியில் உள்ளது |
| 17 | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1904) |
| 17 | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1905) |
| 15 | மு. அருணசலம் பதிப்பு |
| 19 | அச்சானது |
| 18 | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1935) |
| 17 | அச்சானது |
| தெரியவில்லை | அச்சானது |
| ,, | குறைப்பிரதி டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலைய கையெழுத்துப் பிரதி |
| 20 | வேறுபெயர் ; வீரகோதண்ட ராமசாமி உலா |
| 18 | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1904) |
| தெரியவில்லை | குறைப்பிரதி (உலாஅன்று) |
| ,, | —— |
| 19 | குறிப்பு : Catalogue of the books written in Ceylon |

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் |
| --- | --- | --- |
| 69 | பரராச சேகரன் உலா | தெரியவில்லை |
| 70 | புதுவை உலா | சிதம்பர நற்றவ மாமுனிவர் |
| 71 | பேரூர் உலா | அருணைசலக் கவிராயர் |
| 72 | மகாராச பாப்பையபிள்ளை உலா மடல் | தெரியவில்லை |
| 73 | மதுரை சொக்கநாதர் உலா | புராணத் திருமலை நாதர் |
| 74 | மயிலத்து உலா | வேலைய தேசிகர் |
| 75 | மயூரகிரி உலா | சு. ச. சுப்பிரமணியன் செட்டியார் |
| 76 | மருங்காபுரி உலா | வெறிமங்கைபாகக் கவிராயர் |
| 77 | முப்பந் தொட்டி உலா | தெரியவில்லை |
| 78 | வாட்போக்கி உலா | சேறைக் கவிராச பிள்ளை |
| 79 | விக்கிரமசோழன் உலா | ஒட்டக்கூத்தர் |
| 80 | விருத்தாசல உலா | தெரியவில்லை |

அச்சாகாதவை : 6, 8, 11, 12, 14, 19, 22, 23, 24, 26, 27, 28, 29, 30, 34, 38, 46, 48, 49, 54, 55, 63, 66, 67, 68, 69, 70, 72, 76, 80

| காலம் நூற்றாண்டு | பிற குறிப்புகள் |
|---|---|
| தெரியவில்லை | —— |
| ,, | (புதுவை-புதுச்சேரி) ஐயரவர்கள் நூல் நிலைய ஏட்டுச்சுவடியில் உள்ளது. |
| 20 | அச்சானது |
| — | தெரியவில்லை |
| 16 | டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு (1931) |
| 17 | வேறுபெயர் : திருமயில உலா. (மயிலாசல முருகன் உலா என்ற சுவடி நூல் நிலையத்தில் உள்ளது.) |
| 20 | அச்சானது |
| 19 | —— |
| தெரியவில்லை | S. வையாபுரிப்பிள்ளை பதிப்பு (1934) |
| 16 | வேறுபெயர் : இரத்தினகிரி உலா |
| 12 | டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலைய வெளியீடு (மூவருலா) |
| தெரியவில்லை | டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையச்சுவடி |

குறிப்பு :- உலாக்கள் பற்றிய விவரங்கள் ந. வீ. செயராமன். எம். ஏ., அவர்கள் எழுதிய "உலா இலக்கியங்கள்" என்ற நூலிலிருந்தும், இந் நூல்நிலையச்சுவடிகளின் விளக்கங்களி லிருந்தும் எடுக்கப்பெற்றவை.

# பிற்சேர்க்கை 4

## உலாக்களின் விவரம்

### (ஆசிரியர் பெயர் அகர வரிசையில்)

1. *அந்தகக் கவி வீரராகவ முதலியார்*
   * கயத்தாற்றரசன் உலா
   கீழ்வேளூருலா
   திருக்கழுக்குன்றத்து உலா
   திருவாரூர் உலா

2. *அம்மையப்பர்*
   * கனக சபை நாதன் உலா

3. *அருணாசலக் கவிராயர்*
   அவிநாசி உலா
   பேரூர் உலா

4. *அழகிய கூத்த தேசிகர்*
   * செப்பறை உலா

5. *ஆதித்தர் அ. கு.*
   * காமராசர் உலா

6. *இரட்டையர்*
   * ஏகாம்பர நாதர் உலா

7. *எல்லப்ப நயினார்*
   ** திருப்பாலைப் பந்தல் உலா

8. *எல்லப்ப பூபதி*
   * திருப்பனந்தாள் உலா

9. *ஒட்டக் கூத்தர்*
   இராசராச சோழன் உலா
   குலோத்துங்க சோழன் உலா
   விக்கிரம சோழன் உலா

10. *கந்தசாமிப் புலவர்*
   திருப்பூவண நாதர் உலா

11. கந்தப்பையர்
திருத்தணிகை உலா

12. கபால மூர்த்திப் பிள்ளை
* சிவசுப்பிரமணியர் திருமுக உலா

13. கனகாரஜையர்
ஆனந்தக் கூத்தன் உலா

14. காளமேகப் புலவர்
திருவானைக்கா உலா

15. சங்கராச்சாரியார்
ஞான உலா

16. சரவணமுத்துப் புலவர்
* நெல்லை வேலவர் உலா

17. சிதம்பர நற்றவ மாமுனிவர்
* புதுவை உலா

18. சிவக்கொழுந்து தேசிகர்
** கோடீச்சுர உலா
தஞ்சைப் பெருவுடையார் உலா

19. சிலேடைப்புலி பிச்சுவையர்
குன்றக்குடி சண்முக நாதர் உலா

20. சிவப்பிரகாச சுவாமிகள்
திருவெங்கை உலா

21. சுப்பிரமணியக் கவிராயர்
திருக்கடவூர் உலா

22. சுப்பிரமணியன் செட்டியார் சு. மு.
மயூரகிரி உலா

23. சுவிசேடக் கவிராயர் வேதநாயக சாஸ்திரி
ஞான உலா

24. சேரமான் பெருமாள் நாயனார்
திருக்கயிலாய ஞான உலா

25. சேறைக் கவிராச பிள்ளை
 * சேயூர் முருகன் உலா
 திருக்காளத்தி நாதர் உலா
 வாட் போக்கி நாதர் உலா

26. தத்துவராய சுவாமிகள்
 தத்துவ காமிய உலா
 தத்துவ வாக்கிய சிலேடை உலா

27. தத்துவராயர்
 * சிலேடை உலா
 ** ஞான விநோதன் உலா

28. திரிகூடராசப்பக் கவிராயர்
 திருக்குற்றால நாதர் உலா

29. திருவம்பலத்தம்பிரான்
 * தருமை உலா

30. நம்பியாண்டார் நம்பி
 ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை

31. பண்டாரக் கவிராயர்
 திருவிலஞ்சி முருகன் உலா

32. பலபட்டடை சொக்கநாதப் புலவர்
 தேவை உலா

33. பின்னத்தூர் நாராயண சாமி ஐயர்
 * தென்தில்லை உலா

34. புராணத் திருமலை நாதர்
 மதுரைச் சொக்கநாதர் உலா

35. மல்லைச் சிற்றம்பலக் கவிராயர்
 சிவந்தெழுந்த பல்லவராயன் உலா

36. ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை
 திருவிடைமருதூர் உலா

37. வெறிமங்கை பாகக் கவிராயர்
 * மருங்காபுரி உலா

38. வேலைய தேசிகர்
 மயிலத்து உலா

---

குறிப்பு:- * இந்தக் குறியிட்ட நூற்கள் அச்சாகாத உலா நூல்கள்
 ** இந்தக் குறியிட்ட நூற்கள் கிடைக்கவில்லை.